
அஷ்ரஃப் சிஹாப்தீன்



# தீர்க்க வர்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை - கல்முனை

# பொது நூல் நிலையம்

1. இப்புத்தகம் கடைசியாக குறிப்பிட்டிருக்கும் திகதியன்று கொடுபடல் வேண்டும். பின் தங்கும் நாளொன்றுக்கு =/50 சத வீதம் அறவிடப்படும்.

2. இப்புத்தகத்தை பெறும் நீங்கள் அங்கத்தவருக்கோ அல்லது அங்கத்தவரல்லாதவருக்கோ இரவல் கொடுக்கக் கூடாது.

3. புத்தகங்களில் கீறிடுதல், எழுதுதல், பக்கங்களை மடித்து வைத்தல் போன்ற செயல்கள் தகாதவையென எச்சரிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத்ரா

# தீர்க்க வர்ணம்

(பல்சுவைப் பத்திகளின் தொகுப்பு)

---

அஷ்ரஃப் சிஹாப்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்க வர்ணம் - பல்சுவைப் பத்திகளின் தொகுப்பு - அஷ்ரஃப் சிஹாப்தீன்
உரிமை: அமீனா அஷ்ரஃப் - முதற் பதிப்பு: ஒக்டோபர் 2009
வெளியீடு: யாத்ரா
தொடர்பு: 37. ஸ்ரீ சித்தார்த்த மாவத்தை, மாபோலை, வத்தளை, ஸ்ரீலங்கா.
அலை பேசி: 0777 303 818 - விலை: 250.00

Theerka Varnam - Collection of Columns
© Ameena Ashroff - First Edition: October 2009
37, Sri Sidhartha Mawatha, Mabola, Wattala, Sri Lanka
Yaathra Publication
0777 303 818
yaathra@hotmail.com - ashroffshihabdeen@gmail.com
ashroffshihabdeen.yolasite.com
Price: 250.00
Printers: Talent Graphics
83B, Babapulle Place - Col.14
0773 974974

ISBN: 978-955-8448-04-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் அநித்தியத்தையும்
பிரிவின் வலியையும்
பால்யத்திலேயே உணர்த்திப்
பறந்து போன போதும்
நெஞ்சுக்குள்
காய்ந்து போகாத
ஒரு கண்ணீர்த் துளியாக வாழும்
மூத்த தங்கை
சித்தி பாயிஸாவின்
நினைவுகளுக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பு
C. No. 894.8111
வரவுப் பதிவு
Acc. No. 11925

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனது வர்ணம்...

இன்று பலர் தமிழில் பத்தி எழுத்துக்களில் ஈடுபடுவதை நான் கண்டிருக்கிறேன். அவை அநேகமாக, வாசகனை வாசிக்கத் தூண்டுவதிலிருந்து வழுவிப்போய் வெற்றுச் சுயவிளம்பரங்களாகவோ அல்லது இன்றைய ரியூற்றறிகளில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழங்கும் உப்புச் சப்பற்ற ரியூட்ஸ் கட்டுக்களாகவோ இருப்பதையே கண்டிருக்கிறேன். இதில் ஈடுபடும் எவருமே ஈர்ப்புடைய கலைப் பாங்கான வேலையாக அதைச் செய்யச் சிரமம் எடுத்துக் கொள்வதில்லை என்றே கூறலாம். இல்லை, அப்படியும் கூறமுடியாது. அவர்கள் எடுத்துக்கொண்ட சிரமத்தின் வெளிப்பாடுதான் அவர்கள் தரும் பத்தி ஆக்கங்கள், அதில் கலைப் பாங்கான செய்நேர்த்தி இல்லையெனில் அதற்கு அவர்கள் என் செய்வர்? மலடியைப் பிடித்துப் பிள்ளையைப் பெறு என்று சொல்லுகின்ற அபத்தமான ஒன்றை நாம் கோரக்கூடாது.

இப்பின்னணியில்தான் அஷ்ரஃப் சிஹாப்தீனின் பத்தி எழுத்துக்களின் தொகுப்பு - தீர்க்க வர்ணம் - என் பார்வைக்குக் கிட்டியது. பத்தி எழுத்து என்பது எப்படி வெற்றுத் தகவல் தரும் ஒன்றாக மட்டுமல்லாது வாசகரை வாராவாரம் படிக்க வைக்கும் ஈர்ப்புடைய கலைத் தூண்டல் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்று ஒரு தரமான வாசகன் நினைப்பானேயாகில் அந்த நினைவுக்குக் குந்தகம் நேராது 'தீர்க்க வர்ணம்' இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். இதற்குக் காரணம், இதன் ஆசிரியர் சிறந்த கவிஞராகவும் பலதரப்பட்ட விஷயங்களோடு பரிச்சயமுடைய எழுத்தாளுமை உடையவராகவும் இருப்பது தான் போலும்.

எதிர்வினைகளோடு சேர்த்து 69 விஷயங்களை உள்ளடக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவுள்ள இத்தொகுப்பின் முதல் பத்தியான 'வால் அளவு', ஆசிரியரின் முதல் கவிதை நூலின் வெளியீடு பற்றியும் அதன் ஒரு பிரதி அவருடைய சகோதரியின் மகனால் (சிறுவன்) எவ்வாறு எவ்வகையில் சமையலறையில் 'பேணப்பட்டது' என்பது பற்றியும் மிகுந்த நகைச்சுவையோடு கூறி நிற்க, 'வை.சேர்' என்ற இறுதிப் பத்தி 'வை.சேர்' என்று அன்புடன் அழைக்கப்பட்ட பண்பாளரும் கிழக்கில் நாவல், சிறுகதை, நாடகம் என்று எழுதிய படைப்பாளருமான வை. அஹ்மத் கண்ணிவெடியால் இறந்து போனது பற்றிக் கூறித் துன்பியலாய் முடிகிறது.

நான் எப்பொழுதும் ஒரு நூலை வாசித்தால் - குறிப்பாக சிறுகதை, கவிதை, கட்டுரைகள், விமர்சனங்கள் - அதன் ஆரம்பப் பகுதியைப் படித்து விட்டுத் திடீரென இறுதிப் படைப்புக்குச் செல்வதுண்டு. தீர்க்க வர்ணத்தையும் அப்படித்தான் பாரத்தேன். முதல் ஆக்கமான 'வால் அளவை'ப் படித்து விட்டுத் திடீரென 'வை. சேரை'ப் படித்த போது எங்கோ அடியிலிருந்தெழுந்து கவியும் மெல்லதிர்வு என்னில்! வாழ்க்கையின் இன்பம், துன்பம் என்கின்ற இருமுகங்கள். இந்த இருநிலைப்பட்ட பொருதலுக்கிடையே இவற்றின் கலவையான வாழ்க்கையின் தொடரோட்டம் தீர்க்க வர்ணம் மூலம் எமக்குத் தரிசனமாகிறது. இதைத் தரிசிக்க வைப்பவர் தரமான கலை இலக்கியவாதியாக இருப்பதால் பல கலை இலக்கியச் செய்திகள் மூலமாகவே இதைக் கலாபூர்வமாகச் செயற்படுத்துகிறார் எனலாம்.

'மறக்க முடியாத மரபுக் கவிதைகள்' என்ற பத்தியைப் படித்த போது நான் பல முஸ்லிம் கவிஞர்களை அறியாதிருந்தது தெரிய வந்தது. மற்றும் 'என்னுயிர்க் கண்ணம்மா', 'வராத வாப்பாவும் வற்றாத நதிகளும்' ஆகிய பத்திகளைப் படித்த போதுதான் ஏ.ஜி.எம். ஸதக்கா என்ற சிறந்த கவிஞரையும் வாழைச்சேனை அமர் என்ற சிறந்த சிறுகதை ஆசிரியரையும் தெரிய வந்தது எனக்கு உறுத்தலாகவே இருந்தது. மேலும் பல வகையான கதைகள் இங்கே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பக்கிரி கதை, வக்கீல் கதைகள், சீசன் சிறுகதைகள், அறுசொற் கதைகள், பொலீஸார் கதைகள், தபாற்காரர் கதைகள் என்று வாசகரைச் சிரிக்க வைக்கும் கதைகள் அநேகம். இதே போல் 'வில்லங்க வினாக்கள்' என்ற பத்தியைப் படித்தால் விலா எலும்பு அதிரவும் சிரிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் மத்தியில் உலகக் கலைஞர்களும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளனர். புன்னகையின் சூரியன் (மாயா ஏஞ்சலோ), டாக்காவின் வெளிச்சம் (ஷம்ஸூர் ரஹ்மான்), புலவன் வார்த்தை பொய்யா (கறுப்பினக் கவிஞர்கள்), இந்தத் தேகத்தைப்போல் வருத்தமில்லை (ஹரல்ட் சோனி லடூ), கண்ணீர்க் கோடுகள் (நஜீ அல் அலி) என்பவை இதற்கு உதாரணம்.. இவர்களைப் போலவே உள்ளூர்க் கலைஞர்களும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளனர். நாகூர்க் கனி, மீராவோடையூரான், வை.சேர், மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத் ஆகியோர் இதற்குச் சான்று. இவர்கள் மத்தியில் நமக்குள் இருக்கும் அரைகுறை வேக்காட்டு இலக்கியகாரர் (பாதி உலகம்) நெஞ்சம் விரியா இலக்கியச் சுயநலமிகள் (குறுக்குத் தெரு) இன்னும் காழ்ப்புணர்வில் வேகும் கலை இலக்கியக் கர்த்தாக்கள் (பொன்குஞ்சுகளும் பொறாமைக் குஞ்சுகளும்) என்று பலர் நம்முன்னே புட்டுப் புட்டு வைக்கப்படுகின்றனர். இந்த வகையறாக்களிலிருந்து தமிழ் நாட்டுப் 'பெரிய' எழுத்தாளர் சுஜாதா கூடத் தப்பவில்லை என்பது நமது 'குஞ்சு'களுக்கு ஆறுதல் தருவதாக அமையலாம்.

இவர்கள் மத்தியில் 'அதிமேதாவி' எழுத்தாளர்களாகத் தம்மைக் கற்பனை செய்து கொண்டு இயங்கும் சிறுகுழுவினர் பற்றிய பத்தியில் (விழலுக்கிறைத்தல்) அவர்கள் தொடர்பாக ஆசிரியர் 'மூன்று துயரங்கள்' என்று முன்வைத்துள்ளவை கட்டாயம் இன்றைய சகல இளந் தலைமுறையினரும் படிக்க வேண்டிய ஒன்றாகும். விஷயமறிந்தவர்கள் இதைப் படிக்கும் போது அவர்கள் இதழ்க் கடையில் முறுவல் வழியலாம். இவ்வாறே 'இலவச இறக்கைகள்' என்ற பத்தியும் இன்று சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள் என்று வைப்பவர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய ஒன்றாகும்.

❒ ❒ ❒

தீர்க்க வர்ணத்தின் இப்பொதுப் பின்னணியை முன்வைத்து இரண்டொரு ஆக்கங்களைக் கூர்ந்த பார்வைக்குட்படுத்துவது ஆரோக் கியமானதாகும். அதன் மூலம் ஓர் ஆளுமையுள்ள இலக்கியவாதியின் கையில் பத்தி எழுத்தென்பது எத்தகைய பன்முகத் தன்மைகளை எய்து கிறது என்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகைக் குணக் கலவைகளை வெளிக்காட்டும் இப்பத்திகள் சில என்னை லயிக்கவைத்துள்ளன. சில அதிர்ச்சியைத் தந்தவையாய் அமைந்தன. சில இன்துயரைக் கவியவைத்தன. 'கவிதை வாசல்' என்ற பத்தி உண்மையில் மகிழ்ச்சி கலந்த வியப்பையே ஏற்படுத்திற்று. இப் பத்தியை விளங்கிக் கொள்ள ஆசிரியர் கூற்றையே தருகிறேன்.

"அண்மையில் வாசித்த இலக்கியச் சிற்றேட்டில் ஓர் அம்சத்தில் அடங்கியிருந்த இரண்டு வரிகள் என் கவனத்தை ஈர்த்தன. 'வேப்ப மரத்தடியில் சந்தித்தோம். அது இனிப்பானது. கரும்புத் தோட்டத்தில் பிரிந்தோம். அது கசப்பானது.' இந்த இரண்டு வரிகளும் கவித்துவ மானவை. இவ்விரண்டு வரிகளையும் நான்காகப் பிரித்துப் போட்டால் புதுக் கவிதையாக மாறிவிடும். இந்த வரிகளை இன்னும் சற்று வித்தியாச மாகச் சொல்வதானால் இவ்வாறும் எழுதிக் கொள்ளலாம்.

*வேம்படியில் இனித்தன*
*நமது சந்திப்புக்கள்*
*கரும்புச் சோலைக்குள்ளும் கசந்தது*
*நம் பிரிவு*

என்று வெளிக்காட்டிய ஆசிரியர் இன்னொரு அருமையான ஓசை யிழைந்து வரும் கவிதையாக அதைப் பின்வருமாறு எழுதினார்.

*கசக்கும் வேம்பின் காலடியே நம்*
*கண்கள் கலந்ததடி - அக்*
*காலம் இனித்ததடி*
*கரும்புத் தோப்பில் கனவு கலைந்தது*
*கசந்து போனதடி - வாழ்க்கை*
*கவலை நிறைந்ததடி*

இத்தோடு அவர் நிற்கவில்லை. சீர், தளை பிழைக்காத வெண்பா விலும் இவ்வரிகளை இழைய விட்டதே அழகு! அந்த வெண்பா பின்வரு மாறு பேசிற்று.

*விரும்பி விழிமலர்ந்தோம் வேம்படியில் அன்பால்*
*அரும்பி இனித்ததுவே காதல் - கரும்புவிளை*
*தோட்டத்தில் நின்று துயருடன்பின் நாம் பிரிந்தோம்*
*வாட்டக் கசக்கிறதே வாழ்வு!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அவர் அதை இன்றைய புதுக்கவிதை வடிவிலும் தரப் பின்னிற்கவில்லை. அதை நான் இங்கு விரிவஞ்சித் தரவில்லை. வாசகரே அதைப் படிக்குமாறு விட்டு விடுகிறேன். இங்கே நாம் கவனிக்க வேண்டியது ஓர் ஆற்றலுள்ள கலைஞன் ஒரு நிகழ்வுக்கு எத்தனை வடிவங்களை ஏற்றிக் காண்பிக்கிறான் என்பதே. மேலும் மரபுக் கவிதையில் ஆசிரியருக்குள்ள ஆளுமைதான் போலும் எம்மை 'அவ்வை வழி' சென்று இன்புறவும் வைத்துள்ளது. தமிழில் இத்தகைய பத்திகள் அபூர்வமானவை.

'சிறு கதைகள்' பத்தியில் ஆசிரியர் 'மினிக் கதைகள்' எழுதும் சாந்தன் போன்றோர் பாவிக்கும் சொற்செட்டுப் பற்றிப் பாராட்டிச் சொல்கிறார். அது எமக்கும் உடன்பாடான ஒன்றே. ஆனால் 'காலத்தின் பயன்பாடு கருதிச் சிறுகதைகளைச் சின்னஞ்சிறு கதைகளாக எழுதும் நிலை எதிர்காலத்தே ஏற்பட்டு விடலாம்' என்றும் ஆசிரியர் அபிப்பிராயம் தெரிவிக்கிறார். எழுபதுகளில் சாந்தன் இத்தகைய கதைகளை எழுதிய போது பல்கலைக் கழகப் பேராசிரியர்மார் மினிச் சிறுகதை யுகம் வந்து விட்டதாக எழுதினர். பின்னர் அது தொடரப்படாது நாவல்கள் வந்த போது நாவல்கள் யுகம் வந்துவிட்டதாகவும் கூறினர். இக்காலத்தில் நாம் இவற்றின் வரலாற்றுத் தேவை என்னவென்றும் இவை வரலாற்றுத் தேவையின்பாற் பட்டவையா அல்லது ஒரு படைப்பாளியின் தரிசனப் பார்வையின்பாற்பட்ட வையா என்று கேள்வி எழுப்பிய போது (மல்லிகையில்) மௌனமாயினர். இக்காலங்களில் அற்புதமான மினிக் கதைகளை கவிதை நயத்தோடு எழுதிய Alexander Solzhenitsyn மாபெரும் நாவல்களான The Gulag Archipelgo மற்றும் Cancer Ward ஆகியவற்றை எழுதினார். இது எப்படி? உள் முகிழ்க்கும் ஓசைகளை நோக்கிய செவிமடுப்பாலா?

இதை நாம் இங்கே கூறியதற்குக் காரணம் உண்டு. இங்கே ஆசிரியர் பல்வகையான போக்குடைய கதைகளை அறிமுகப்படுத்தி எம்மைச் சிரிக்க வைக்கிறார், சிந்திக்க வைக்கிறார். ஆனால் இவரால் எழுதப்பட்டுள்ள உண்மைக் கதைகள் இக்கதைகளையெல்லாம் ஓரந் தள்ளி மேலெழுகின்றன. அது எவ்வாறு சாத்தியமாயிற்று? இங்கேதான் ஒருவனின் உள்முகிழ்க்கும் ஓசையின் செவிமடுப்பு நிகழ்கிறது. இதை நிரூபிப்பது போல் 'மீரா(ளா)வோடையூரான்' என்ற பத்தி நிற்கிறது. இது ஓடையூரான் என அறியப்பட்ட எஸ்.எம். தலிபா பற்றிய, அவரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்கிருந்த உறவு பற்றிய நினைவுகூரல். இவர் அதிக தூரம் நடக்க முடியாதவர். சிறு வயதிலேயே போலியோ நோயால் ஒரு கால் பாதிக் கப்பட்டவர். அதனால் நடக்கும் போது அக்காலின் முழங்கால் பகுதியில் கையூன்றி ஊன்றியே நடப்பார். அவர் அண்மையில் இறந்து போனார். நண்பர் ஒருவர் அச்செய்தியை அறிவித்தார். விசாரித்தபோது இரண்டு தினங்களுக்கு முன்னர் அவரது காலில் பாம்பு தீண்டி வைத் தியசாலையில் இருந்து மரணமானதாகச் சொல்லப்பட்டது. ஆனால் இப்பத்தியை முடிக்கும் போது 'நான் எந்தக் காலில் என்று கேட்கவில்லை' என்ற ஆசிரியரின் வார்த்தைப் பிரயோகங்களைப் படித்த போது, என் உள்ளங் காலில் உப்பு வைத்துச் சுட்ட மாதிரி ஓர் துயர் எழுந்து உச்சி வரை சென்று என் உடல் முழுவதும் வழிவது போல் இருந்தது. இது ஒரு உண்மைக் கதை (Faction). ஆனால் முக்கி முக்கிக் கற்பனை பண்ணி எழுதப்பட்ட கதைகளையெல்லாம் (Fiction) வெகு லேசாக ஓரந் தள்ளி விட்டு முன் செல்கிறது. இது எவ்வாறு நிகழ்கிறது? இது ஒவ்வொருவரின் சிந்தனைக்கு விடப்படுகிறது.

அடுத்ததாக, உலகக் கலைஞர்களை அறிமுகப்படுத்துவதும் இதில் இடம்பெற்றுள்ளதுபற்றி நான் ஏற்கனவே கூறினேன். இதில் 'புலவன் வார்த்தை பொய்யா' என்ற தலைப்பில் கறுப்பினக் கவிஞர்களை அறி முகப்படுத்திய பத்தியைப் படித்த போது அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டது. காரணம், என்னோடும் இப்பத்தி உரசிக் கொண்டு நின்றதே. ஆனால் இதை ஆசிரியர் அறிந்திருக்க நியாயமில்லை. எய்மீ சீசெயர் (Aime Ceasaire) என்பவரால் பிரபலப்படுத்தப்பட்ட 'நீக்ரோவியம்' (Negritude) என்ற இத்தகைய கவிதைகள் நம்மவர்கள் அறிந்திருக்க வேண்டியவையே. இதற்குள் ஆச்சரியம் விளைவித்தது, பெஞ்சமின் ஸபானியா (Benjamin Zephaniah) என்ற எனக்குப் பழக்கமான கவிஞரின் அறிமுகம். இவரே நான லண்டனில் வெளியிட்ட எனது A Country Entrapped (பொறியில் அகப்பட்ட தேசம்) என்ற ஆங்கிலக் கவிதை நூலை A Fantastic Poem என்று பாராட்டி விமர்சித்தவர். இந்நூலில் அவர் பற்றிக் குறிக்கப்பட்டிருப்பதை நான் கண்டது ஒரு சந்தர்ப்ப விபத்தா? அப்படியெனில் எல்லாமே சந்தர்ப்ப விபத்துத்தான். அதாவது பேரறிவின் இயக்கத்தில் எல்லாமே ஒன்றோடொன்று தொடர்புபட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையாடல் புரியும் பெரும் சந்தர்ப்ப விபத்துத்தான். இது மட்டுமல்ல, 'பிறையும் பிச்சைக்காரர்களும்' என்ற தலைப்பில் இத்தொகுப்பில் இடம்பெறும் பத்தி மீண்டும் என் உணர்வுகளைக் கிளறி விட்டது என்றால் திரும்பவும் சந்தர்ப்ப விபத்தென்பதா அல்லது நாம் ஏலவே கூறியது போல ஏகமாய் நிற்கும் ஒன்றின் சிந்தனையே சகலரிலும் பட்டுத் தெறிப்பதால் இந்த ஒருமையுறல் நிகழ்ந்து எம்மை வியக்க வைக்கிறது என்பதா? இப்பத்தியில் ஆசிரியர் 'பொன்னரிவாள்' என்று பிறையைப் புரட்சிக் கமால் கூறியதை நினைவூட்டி விட்டு இன்னொரு கவிஞர் 'முக்காற் பகுதியும் மண்ணுக்குள் மறைந்து கிடக்கும் தங்கக் காசு போன்றது இளம் பிறை' என்று கூற என்னுள் ஏதோ அருட்டி விடப்படுகிறது. அதைத் தொடர்ந்து 'இளம் பிறையே, உனது ஏழ்மை குறித்து வருந்தாதே. உனக்குள்தான் பூரண சந்திரன் புதைந்து கிடக்கிறான்' என்று மகாகவி அல்லாமா இக்பால் கூறியதை ஆசிரியர் ஞாபகப்படுத்திய போது நான் பிறை பற்றி 60களில் எழுதிய வரிகள் என்னுள் ஓடின.

கூத்தன் புனைந்துள்ள கூனல் பிறையாளின்
கீற்று நகை பின்னர் கிளர விருக்கின்ற
கும்பப் பொலிவைக் குறிக்கும் இளவட்டம்
பூநூலின் வெள்ளைப் பொருக்காய்த் தெரிகிறது

என்ற இக்கவிதை வரிகள் இக்பாலின் கவிதையோடு இணக்கம் கொண்டவையாக உள்ளன.

இறுதியாக, இதில் சொல்லி முடிப்பதற்குப் பொருத்தமானதாக இருப்பது 'தேசம் இழந்தவர்கள்' என்ற பத்தி. யுத்தத்தின் காரணமாக ஈராக்கிலிருந்து வெளியேறியவனுக்கு தன் சொந்த நாட்டுக்குத் திரும்ப முடியாத நிலை. ஷியா, சுன்னி என்று தமக்குள்ளே பிரிவுபட்ட நிலை, அந்நிய ஆக்கிரமிப்பு, யுத்தம் ஆகியவையெல்லாம் சேர்ந்து தேசாந்திரியாக அலைய வைக்கிறது அவனை. இலங்கையிலும் இதே நிலைதான். தமிழனோ, முஸ்லிமோ 'தம் தேசத்தை', தாம் குடியிருந்த நிலங்களை இழந்து வேற்றிடங்களில் வந்து குந்திக் குந்தியெழும்புவோரும் இத்தகையவர்தாம். என்னதான் ஒன்றிருந்து வாழ்தல் பற்றிப் பேசினாலும் இச்சந்தர்ப்பத்தில்தான் செவ்விந்தியத் தலைவன் ச்சீஃப்சியெற்றல்(Chief



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**seattle)**, தம் நிலங்களை அரசாங்கத்துக்கு விற்று விடும்படியும் அப்படி விற்றுவிட்டால் ஆக்கிரமிப்பாளர்களின் தொல்லை இருக்காதென்றும் ஏப்ராஹாம் லிங்கன் கேட்டுக்கொண்ட போது கூறியதை நாம் எமது சூழலுக்கு ஏற்றவாறு பின்வருமாறு தருகிறோம்:-

> மனிதன் உயிர்வாழ மூக்கினால் சுவாசிக்கிறான். மீன்கள் தம் தாடையால்சுவாசிக்கின்றன. மனித இனக் கூட்டமோ தாம் மகிழ்வுடன் உயிர்வாழத் தம் சுதந்திரத்தை, தமது மொழி, மதம், மண், கலை, கலாசாரத்தின் மூலமாகச் சுவாசிக்கிறது.

மொத்தத்தில் இந்நூல் ஒருவர் சலிப்புற்றிருக்கும் போது தன்னை உயிர்ப்புறவைக்கப் படிக்க வேண்டிய நூல். எவ்வாறு மேற்கு நாட்டு ஆதி இலக்கியங்களான கன்டபறிக் கதைகளும் டெகமறன் கதைகளும் நெடும் பயணம் செய்வோர் தம் பயணக் களைப்பகற்றி உயிர்ப்புறவும் சிந்திக்கவும் சிரிக்கவும் வைத்தனவோ அவ்வாறே தீர்க்க வர்ணமும் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை - உங்கள் வாழ்க்கைப் பயணத்தின் போது.

**மு.பொன்னம்பலம்**
தெஹிவளை
03.06.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது வர்ணம்...

தினகரன் வாரமஞ்சரியின் இலக்கியப் பக்கங்களில் கிட்டத் தட்டப் பதினாறு மாதங்களாக வாராவாரம் நான் எழுதி வந்த பத்திகளின் தொகுப்பு இந்நூல்.

ஓர் எல்லைக்குட்பட்ட அளவில் அல்லது வரையறை செய்யப் பட்ட வார்த்தைகளுக்குள் தங்களது கருத்துக்களைக் கவிதைக்குப்போல் பொறுக்கி எடுக்கப்பட்ட சொற்களூடாக எழுத்தாளர்கள் உலகெங்கும் மக்கள்முன் வைத்து வருகிறார்கள். தகவல்களைத் தருவதோடு மாத்திரம் நின்றுவிடாமல் வரிகளுக்கிடையில் உள்ளவற்றைச் சிந்திப்பதற்கான வாசிப்பு மேம்பாட்டையும் பத்தி எழுத்து உண்டாக்கி வருகின்றது.

தமிழில் உரை நடையின் வளர்ச்சி புதிய தளங்களில் பிரவேசித் திருக்கிறது. கவிதை நயங் கலந்த வார்த்தைகளில் ஒரு நல்ல கதையைச் சொல்லும் அழகோடு பல புதிய எழுத்துக்களை ஆங்காங்கு நாம் காண முடிகிறது. வீணான சொற்களையும் இழுபடும் வார்த்தைகளையும் தவிர்த் துச் சொல்ல வந்த விடயத்தைச் சுருக்கமாகவும் ரசனையோடும் சுவாரஸ் யமாகச் சொல்லும்போது அது வாசகரைப் பெரிதும் கவர்ந்து விடுகிறது. வாசிப்பின் மீதான ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் தூண்டிவிடுகிறது.

ஒரு செய்திப் பத்திரிகையின் இலக்கியப் பங்களிப்பும் சிற்றிலக்கிய இதழொன்றின் இலக்கியப் பங்களிப்பும் வேறுபட்டவை. செய்திப் பத்திரிகையொன்றின் வாராந்த இதழ் பரந்த, வெவ்வேறு விதமான வாசகர் களைக் கொண்டது. எனவே வாராந்தப் பத்திரிகையில் எழுதும்போது இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டாக வேண்டியிருக்கிறது. அரசிய லைத் தவிர எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்று எனக்கு வழங்கப் பட்ட அனுமதி இதற்கு இன்னும் வாய்ப்பாக அமைந்தது. என்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தவரை பல்வேறு வகையினரான வாசகர்களையும் மனதில் கொண்டு இதை எழுதுவதற்கு முயன்றிருக்கிறேன். ஒரு நகைச்சுவைக் கதையை விரும்பிப் படிக்கும் ஒருவர் அடுத்த வாரம் அதே பத்தியில் அவர் அறிந்திராத ஓர் அம்சத்தை வாசிக்க வேண்டியேற்படுவது அவருக்கு மற்றொரு தகவலைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்குகிறது.

இந்த எழுத்தை ஆரம்பித்த போது பழுத்த இலக்கியவாதிகள் முதற்கொண்டு சினிமாப் பகுதியோடு தனது வாசிப்பை முடித்துக் கொள்ளும் நபர் வரை - கிளிநொச்சி முதற் கொண்டு காலி வரை பல அன்பர்கள் நேரடியாகவும் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமாகவும் என்னுடன் அவ்வப்போது தொடர்பு பட்டிருக்கிறார்கள். இந்தத் தொடர்பு என்னை மிகவும் உற்சாகப்படுத்தியது. இந்த உற்சாகத்தை விடக் கள்ளப் பெயர்களில் பத்திரிகைக்குக் கடிதம் எழுதியவர்களும் என்னுடன் நேரடி யாகப் பேசத் தைரியமற்று நண்பர்களிடம் என்னைக் காரணமின்றி வைதவர்களும் கொடுத்த உற்சாகமே பெரிதாக இருந்தது. சில விடயங்கள் பற்றி எழுதப்படும் போது அது தன்னைத்தான் குறிக்கிறது என்று நினைத்த வர்களது கோமாளித்தனங்களும் கூட என்னை மேலும் தூண்டி விட்டன என்றும் சொல்லலாம்.

2003ல் என்று நினைக்கிறேன், ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் 'திரும்பி வரும் தெரு' என்று ஒரு பத்தியை எழுதி வந்தேன். அதற்குப் பிறகு தினகரன் வார மஞ்சரியில் 'தீர்க்க வர்ணம்' என்ற இந்நூலில் அடங்கிய பத்திகளை எழுதத் தொடங்கினேன். பத்தியை எழுத ஆரம் பிக்கு முன்னர் பத்திக்கு என்ன தலைப்பு வைக்கலாம் என்ற ஆலோசனை யின் போது, 'ரூம் டு ரீட்' நிறுவனத்தைச் சேர்ந்த சகோதரி லதா பத்துத் தலைப்புக்களை எனக்குத் தந்தார். அதிலிருந்தே 'தீர்க்க வர்ணம்' என்ற தலைப்பை நான் தேர்ந்தெடுத்தேன்.

ஞாயிறு தினக்குரலில் 'திரும்பி வரும் தெரு' பத்திகளை நான் எழுதிய வேளை, 'வாராவாரம் தவறாமல் எழுதுவது உன்னால் எப்படி சாத்தியமாகிறது?' என்று ஒரு மூத்த எழுத்தாளர் என்னைக் கேட்டார். அவரது ஆச்சரியத்தில் உண்மை இருக்கிறது. நமது வாழ்க்கை; தொழில், நாட்டுச் சிக்கல்களுக்குள் வாராவாரம் தொடர்ந்து எழுதுவது என்பது பெரும் பிரயத்தனம்தான். 'தீர்க்க வர்ணம்' எழுதிக் கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அதை என்னால் முழுமையாக உணர முடிந்தது. எழுதியே ஆக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்ட பிறகு அதற்கென வாரத்தில் ஆகக் குறைந்தது ஒரு மணி நேரத்தை ஒதுக்கியே ஆக வேண்டியிருந்தது. தவிர, அடுத்த வாரம் எதை எழுதுவது என்று தேடவும் படிக்கவும் வேண்டியிருந்தது. இந்தத் தேடல் முயற்சி பல்வேறு விடயங்கள் குறித்த அவதானத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்தது. தேடல் என்பது ஓர் இனிய போராட்டமாகும் என்பதை நான் உணரத் தொடங்கினேன். இந்த இனிய அனுபவம் காரணமாக எழுத நினைத்த விடயங்களைச் சிந்தையில் நிரப்பிக் கொண்டபடி வாரத்தில் ஐந்து நாட்கள் கழியும். அந்த ஐந்து தினங்களிலும் எழுதுகின்ற விடயத்தை எங்கே எப்படித் தொடங்கி எப்படி முடிப்பது என்று வார்த்தைகளுக்காக மனதுக்குள்ளேயே மற்றொரு தேடல் ஆரம்பமாகும்.

இவ்வாறு நான் சொல்வது கொண்டு நான் எழுதியிருப்பவை யாவும் உலகத் தரம் என்று உளறுவதற்கு முயல்கிறேன் என்று அர்த்த மாகாது. அந்தந்தக்கால மன நிலையில் வாழ்வின் போராட்டங்களூடு என்னால் முடிந்தவரை இயங்கினேன் என்பதையே சொல்ல விழைகிறேன். அதை இன்னொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் ஒரு சந்தோஷ மான இலக்கியச் சுகானுபவத்தை நான் அனுபவித்தேன் என்று சொல்ல லாம். இந்தப் பத்தி எழுத்து அனுபவம் இன்னும் இன்னும் என் மன வெளியை விசாலமாகத் திறந்து விட்டிருக்கிறது. ஒரு படைப்பாளியைக் கட்டிப் போடாமல் சுதந்திரமாக உலவ விட்டால் பல ஆயிரம் அனுபவங் களையும் காட்சிகளையும் உலகத்துக்குத் தர முடியும்.

இந்தப் பத்திகளைப் பல வேளைகளில் எழுதிய உடனேயே அனுப்பி வைத்தாக வேண்டிய நெருக்கடிகளும் எனக்கு அவ்வப்போது ஏற்பட்டுள்ளன. எழுதிச் சில நாட் கழித்து அதை மேலும் மெருகூட்டும் வேலைகளைச் செய்து வாராவாரம் பத்திரிகைக்கு எழுதுவது மிகச் சிரமமானது. இதனைப் புத்தகமாக வெளிக் கொணருகையில் அந்தக் குறையை ஓரளவுதான் என்னால் போக்க முடிந்திருக்கிறது. நான் எழுதி யிருக்கும் ஏதோ ஒரு அம்சத்தில் பின்னால் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின் றன என்று நான் உணர்ந்தவற்றைப் பொருத்தமான முறையில் திருத்தி யிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளில் ஒரு பக்கத்துக்கு மேற்படாமல் எழுத வேண்டும் என்ற மற்றொரு பெரிய சவாலும் என் முன்னாலிருந்தது. இந்தச் சவால் என்னையும் எழுத்தையும் மேலும் கூர்மைப்படுத்தவும் குறிப்பிட்ட வார்த்தைகளுக்குள் கருத்தைத் தெரிவித்துவிடவும் உதவியது என்று நான் நம்புகிறேன்.

இப்பத்தித் தொடரில் அவ்வப்போது இணையத்தில் நான் தேடிப் பெற்றுச் சேகரித்து வைத்திருந்த விடயங்களையும் கையாண்டிருக்கிறேன். பல பொதுவான தகவல்கள் அல்லது நகைச்சுவைக் கதைகள் பலநூறு இணையங்களில் கிடைக்கின்றன.

இறுதிப் பத்தியை எழுதிய பிறகு எழுத்தாளர் ரா.கி. ரங்கராஜன் எழுதிய பத்திக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் ஒன்று படிக்கக் கிடைத்தது. எனது பத்திகளில் நான் கையாண்ட சில நகைச்சுவைக் கதைகளை அவரும் கையாண்டிருந்தது கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். எழுதத் தெரிந்த நாம் அனைவருமே ஒரே விடயத்தையே திரும்பத் திரும்ப வெவ்வேறு வடிவங்களிலும் வார்த்தைகளிலும் எழுதிக் கொண்டிருக்கிறோமா என்ற ஒரு வலுவான சந்தேகம் எனக்குள் எழுந்தது.

ஒரு தொகுப்பு நூலை வெளியிடும் போது அதற்குள் அடங்கும் சிறந்தவை என நூலாசிரியர் கருதும் விடயதானத்தை முதற் பக்கங்களில் கொண்டு வருவது வழக்கம். இந்த நூலில் அதை நான் செய்யவில்லை. எழுத ஆரம்பித்த திகதியிலிருந்து பத்திரிகையில் தொடராக வெளிவந்த படியே இப்பத்திகள் நூலில் இடம்பெற்றுள்ளன. நூலொன்றை வெளியிடும் போது அதனுள் அடங்கும் சகல விடயங்களையும் பரந்த மனங் கொண்ட மூத்த படைப்பாளிகளுடன் நான் கலந்தாலோசிப்பது வழக்கம். அந்த அடிப்படையில் பத்திரிகையில் பிரசுரமான பத்திகளில் அவர்களின் ஆலோசனைக்கிணங்க சிலவற்றைத் தவிர்த்திருக்கிறேன்.

இடையிடையே நூல்கள் ஒன்றிரண்டைப் பற்றி எழுதிய போது பல நண்பர்கள் தங்களது நூல்களை எனக்கு அனுப்பி வைக்கத் தொடங்கினார்கள். நூல் விமர்சனத்துக்கான பத்தியாக இதை மாற்றிக் கொள்ள நான் விரும்பாத காரணத்தால் அவை பற்றிய குறிப்புக்களைத் தொடரவில்லை.

இப்பத்திகளைத் தொகுத்த பின்னர் நமது நாட்டிலும் நாட்டுக்கு அப்பாலும் பிரபல்யம் பெற்ற படைப்பாளியான மு.பொ. என அறியப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.பொன்னம்பலம் அவர்களிடம் கொடுத்து இப்பத்திகள் குறித்த அவரது கருத்துக்களை எழுதித் தருமாறு கோரினேன். தனது அவசரங்களுக்கிடையிலும் மனங்கோணாமல் ஏற்றுக் கொண்டு ஒரு வாரகாலத்துக்குள் அவர் எழுதித் தந்தார். அதற்காக அவருக்கும் நூலைப் பார்வையிட்டு உரிய ஆலோசனைகள் வழங்கிய கவிஞர் அல் அஸூமத், நண்பர் ஏ.ஜி.எம். ஸதக்கா ஆகியோருக்கும் நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தினகரனில் இப்பக்கத்துக்குப் பொறுப்பாக இருந்து இப்பத்தியை வாராவாரம் இடம்பெறச் செய்வதில் அக்கறை செலுத்தியவரும் நான் இப்பதியை எழுதுவதில் பெருங் கவனம் செலுத்தியவருமான சகோதரி வாசுகி சிவகுமார், நண்பர் அருள் சத்தியநாதன், பத்திரிகை ஆசிரியர் சிவா சுப்பிரமணியம் ஆகியோருக்கு நான் நன்றி சொல்ல வேண்டும்.

ஞாயிற்றுக் கிழமையானால் பத்தியைக் கத்தரித்து அழகுறக் கோப்புப்படுத்திய எனது மைத்துனர் எஸ்.எம்.எம். முர்ஷித் மற்றும் எம்.ஐ.எம். சிப்சீர், பாத்திமா ஆகியோரும் இதை அழகுற அச்சிட்ட முனாஃப் அஸீஸூம் என் அன்புக்குரியவர்கள்.

**அஷ்ரஃப் சிஹாப்தீன்**
16.06.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலவை


| | | |
|---|---|---|
| 01. | வால் அளவு ............................................................ | 001 |
| 02. | பிறையும் பிச்சைக்காரர்களும்.................................. | 004 |
| 03. | சுனாமி.................................................................. | 007 |
| 04. | விழலுக்கிறைத்தல்.................................................. | 010 |
| 05. | நூர்ஜஹானின் பாடல்கள்........................................ | 013 |
| 06. | வியத்தலும் இலமே................................................. | 016 |
| 07. | பாதி உலகம்........................................................... | 019 |
| 08. | ஆய்த எழுத்து........................................................ | 022 |
| 09. | சிரிக்க வைத்த கண்ணீர்த் துளி................................ | 025 |
| 10. | அடையாத தாள்....................................................... | 028 |
| 11. | அடைதல்................................................................. | 031 |
| 12. | குறுக்குத் தெரு....................................................... | 034 |
| 13. | கண்ணீர்க் கோடுகள்............................................... | 037 |
| 14. | ஆன்மாவின் காவலர்கள்........................................... | 040 |
| 15. | கவிதை வாசல்........................................................ | 043 |
| 16. | மெல்லச் சாகும்........................................................ | 046 |
| 17. | லஹில்ல லாஹில்லா................................................ | 049 |
| 18. | இறைவனின் இல்லம்................................................ | 052 |
| 19. | பெருவாய் மொழி.................................................... | 055 |
| 20. | அப்பாவிக் கோழியும் மூன்றாவது முட்டையும்.......... | 058 |
| 21. | பொன் குஞ்சுகளும் பொறாமைக் குஞ்சுகளும்........... | 061 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. மெய் எனும் பொய்........................................ 064
23. ராஜா மகளின் ரோஜா இதழ்.................................. 067
24. மாண்புறுவார் மகிமை.................................... 070
25. ஒரே ஒரு ஊரிலே.......................................... 073
26. கறுப்புத்தான் எனக்குப் புடிச்ச கலரு.......................... 076
27. என்னுயிர்க் கண்ணம்மா.................................... 079
28. தீக்குச்சிகள்............................................. 082
29. புன்னகையின் சூரியன்.................................... 085
30. அவ்வை வழி............................................. 088
31. பொன் செய்யும் மருந்து.................................... 091
32. பக்கிரி கதை............................................. 094
33. டாக்காவின் வெளிச்சம்.................................... 097
34. பொலிஸார் கதைகள்....................................... 100
35. ஆபிரிக்கப் பழமொழிகள்.................................. 103
36. கல்கியின் கனவு.......................................... 106
37. 'சிறு'கதைகள்............................................ 109
38. தன்னை ரசிக்காத நடிகன்.................................. 112
39. ஆஸ்பத்திரி ஜன்னல்...................................... 115
40. காலத்தை வென்ற கடைசி வார்த்தைகள்....................... 118
41. வில்லங்க வினாக்கள்...................................... 121
42. மீரா(ளா)வோடையூரான்.................................... 124
43. அறுசொற் கதைகள்....................................... 127
44. வக்கீல் கதைகள்......................................... 130
45. இலுப்பைப் பூச் சர்க்கரை.................................. 133
46. இலவச இறக்கைகள்....................................... 136




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. இலை மறை பழம்........................................ 139
48. சீசன் சிறுகதைகள்........................................ 142
49. செம்மறி ஆடுகள்........................................ 145
50. நவீன உலகின் ஏழைகள்........................................ 148
51. குறுந் தகவற் குசும்புகள்........................................ 151
52. பதறிச் சிதறுதல்........................................ 154
53. குப்பை மேட்டுக் குடிகள்........................................ 157
54. அரசனும் செம்படவனும்........................................ 160
55. இயந்திர மருத்துவம்........................................ 163
56. இந்தத் தேகத்தைப் போல் வருத்தமில்லை................ 166
57. குறுந்தகவற் கொழுந்துகள்........................................ 169
58. இதயத்தை அசைக்கும் இசை........................................ 172
59. வராத வாப்பாவும் வற்றாத நதிகளும்...................... 175
60. மூன்றாவது கண்........................................ 178
61. வித்தியாசமாக விரல்கள்........................................ 181
62. துணியிலா மனிதனாய்த் துடித்தல்.......................... 184
63. தேசம் இழந்தவர்கள்........................................ 187
64. மறக்க முடியாத மரபுக் கவிதைகள்........................ 190
65. கடுகு சிறிதானாலும்........................................ 193
66. புலவன் வார்த்தை பொய்யா........................................ 196
67. சிந்தைக்கு விருந்தான சம்பவங்கள்........................ 199
68. தபாற்காரரர் கதைகள்........................................ 202
68. வை.சேர்........................................ 205
69. எதிர் வினைகள்........................................ 208




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வால் அளவு

*1999*ம் வருஷம் ஆகஸ்ட்டில் எனது முதலாவது கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டது. அந்த வேளையில் அது ஓர் அழகான அமைப்பில் வெளிவந்துள்ளதாகப் பலரும் சொன்ன போது சந்தோஷ மாகத்தான் இருந்தது. அட்டைப் படத்தைத் தேர்ந்து தந்த ஷகீபையும் அதை அச்சிட்டுத் தந்த ஜெளஸகியையும் அவ்வேளைகளில் நன்றி யோடு என் மனம் நினைத்துக் கொள்ளும்.

கல்யாணத் தடபுடலில் பக்கத்து வீட்டுக்காரனுக்கு அழைப்பு விடுக்க மறந்து விடுவது போல எனக்கும் நடந்துவிட்டது. 'கவிதை களைத் தொகுத்து வெளியிட்டு விடு' என்று, காணுந்தோறெல்லாம் அன்புடன் நச்சரித்துக்கொண்டிருந்த நண்பன் மேமன் கவியினதும் மணிக்கவிதை எழுதத் தொடங்கிய போது போஸ்ட் கார்டில் நட்பு வளர்த்த நண்பன் ஸ்ரீதர் பிச்சையப்பாவினதும் சந்திக்கும்போதெல் லாம் பிளேன்ரியோடு கவிதைகள் பற்றிக் கதைத்த எம்.எச்.எம். ஷம்ஸினதும் பெயர்களை நூலில் குறிப்பிடத் தவறிவிட்டேன். உறுத்திக் கொண்டேயிருக்கிறது. அடுத்த கவிதை நூலை வெளியிடும் போது பிராயச்சித்தம் தேடிக் கொள்ளலாம் என்றிருக்கிறேன்.

கவிதை நூலை வெளியிடுவதென்பது ஒரு பெண்ணின் தலைப் பிரசவம் போல. கவிதைப் புத்தகம் என்றில்லை; புத்தகம் வெளியிட்ட எல்லோருக்கும் இந்த அனுபவம் இருக்கும். கவிதைப் புத்தகம் என்றால் அவஸ்தை சற்று அதிகமாகத்தான் இருக்கும். தனது நூலை வெளியிடும் தினத்தன்று கவிஞர்களுக்குக் கொஞ்சம் சந்தோஷமாக இருக்கும். பிறகுதான் பாரம் அழுத்தத் தொடங்கும்.

*1987, 88* காலகட்டத்திலேயே ஒரு தொகுதிக்கான கவிதைகள் என்னிடமிருந்தன. நூலை வெளியிடுவது சம்பந்தமான எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது ஏமாற்றத்தை நான் புத்தகத்தில் எழுதவில்லை. யாரை யாவது சஞ்சலப்படுத்தும் என்றால் தவிர்த்துக்கொள்வது எல்லா வகையிலும் உகந்தது.

புத்தகம் என்பது ஆகக் குறைந்தது அரை நூற்றாண்டுக்காவது நின்று நிலைக்கக்கூடியது. குப்பை என்று ஒரு நூல் பலராலும் புறக்கணிக்கப்பட்டாலும்கூட ஏதாவது ஒரு மூலையில் கிடந்து யாருடையதாவது வாசிப்புக்கு உட்படவே செய்யும். நூல் வெளியிடப் போகிறேன் என்று யாராவது என்னிடம் சொன்னால் அவசரமோ பதட்டமோ இன்றி மிகுந்த நிதானத்துடன் வேலைகளில் இறங்குமாறு நான் கேட்டுக்கொள்வதுண்டு. இப்படிப் பக்கம் பக்கமாக நான் பார்த்துப் பார்த்து இழைத்ததுதான் எனது புத்தகம்.

எனக்கு சகோதரிகள் இருவர். இருவருக்கும் நான்கு ஆண் குழந்தைகள். இளைய சகோதரிக்கு மூவரும் ஆண்கள். மூத்த சகோத ரிக்கு ஒருவன். இளைய சகோதரியின் மூத்த பையனான அப்ஸல் அலி யும் மூத்த சகோதரியின் பையனான அப்னாஸ் அலியும் கிட்டத் தட்ட ஒரே வயதொத்தவர்கள். விளையாடுவது, பாடசாலை செல்வது, டியூஷன் வகுப்புப் போவதெல்லாம் ஒன்றாகத்தான். இரண்டாம் ஆண்டில் ஒரே வகுப்பில்தான் படிக்கிறார்கள்.

எனது கவிதைப் புத்தகம் ஒன்றை வைத்துக் கொண்டு இருவரும் ஒருமுறை இழுபறிபட்டதாக அறிந்தேன். 'இது மாமாவின் புத்தகம் தா...' என்று ஒருவன் சொல்ல, 'அவர் எனக்கும் மாமாதான்' என்று மற்றவன் சொல்ல, கொஞ்ச நேரம் தர்க்கமும் சண்டையும் இடம்பெற்றுக் கடைசியில் அப்னாஸ் அலி வெற்றியடைந்து, அதை எடுத்துக் கொண்டு சென்று தங்கள் வீட்டுச் சமையலறைக்குள் வைத்துக் கொண்டான்.

அப்னாஸ் அலி - காற்று! பூமியில் அவன் நடந்து போவதைக் காண்பது அரிது. ஓட்டத்திலேயே எல்லாக் காரியங்களையும் பார்ப்பான். என்னை எதிர்கொள்ள மிகுந்த சங்கோஜப்படுவான். இவ்வளவு காலத்துக்கும் நேரெதிரே என்னுடன் கதைத்திருப்பது ஓரிரு வார்த்தைகள் தாம். அவற்றில் நான் அவனிடம் கேட்ட கேள்விகளுக்கு அவன் தந்த விடைகளே அதிகம்.

ஹஜ்ஜூப் பெருநாள் தினத்தன்று பெருநாளைக்கு என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடப்பட்ட நான்கைந்து முறுக்குகளை அப்னாஸ் அலி கைகளில் வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். திடீரெனச் சமையலறைக்குள் நுழைந்தான். எதையோ அவசர அவசரமாகத் தேடினான். அவனது கண்ணில் பட்டது எனது கவிதை நூல். விரித்து ஒரு தாளைச் ச்சர்... எனக் கிழித்துக் கைகளிலிருந்த முறுக்குகளை அதில் வைத்துச் சுற்றினான்; காற்றாய்ப் பறந்து போனான்!

இதனை அவதானித்துக்கொண்டிருந்த என் மனைவி, ஊரிலிருந்து கொழும்பு திரும்பிக் கொண்டிருந்த பயணத்தில் இதனை எனக்குச் சொன்ன போது முதலில் சிரிப்பு வந்தது.

அப்னாஸ் அலியின் செயல் குறித்துப் பிறகு சிந்தித்துப் பார்த்தேன். அவனுடைய வயதுக்குரிய சிந்தனையில் அவனுடைய அப்போதைய பிரச்சினை முறுக்குகளைச் சுற்றுவதற்கு ஒரு தாள் வேண்டும் என்பதே. எந்தப் புத்தகம் அவ்விடத்தில் இருந்தாலும் அவன் அதைக் கிழித்துத்தான் இருப்பான் என்ற முடிவுக்கு நான் வந்தேன்.

சிறுவர்கள்தானே, அப்படித்தான் நடந்து கொள்வார்கள்; இதையெல்லாம் எழுதுவது அவசியமா? என்று ஒரு கேள்வி உங்களுக்குள் எழலாம்.

கவிதைகள் பற்றிய விமர்சனங்களைச் செய்வோர் அவ்வப் போது அப்னாஸ் அலி போன்றும் நடந்து கொள்கிறார்கள் என்பதே அக்கேள்விக்கான எனது பதிலாகும்.

*19.08.2007*

குறிப்பு:

இது எழுதப்பட்ட பிறகு 2007ல் ஒரு மொழிபெயர்ப்புக் கவிதை நூலும் 2008ல் எனது இரண்டாவது கவிதைத் தொகுதியும் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறையும் பிச்சைக்காரர்களும்

மறைந்த முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.எச். குத்தூஸ் அவர்களின் அறிவிப்புக்களுடன் தொகுக்கப்பட்ட பெருநாள் பாடல்கள் அடங்கிய ஒலிநாடா ஒன்று இலங்கை ஒலிபரப்புப் கூட்டுத்தாபனத்தில் உண்டு.

இந்த ஒலி நாடாவில் உள்ள பாடல்கள் இரண்டு பெருநாள் தினங்களிலும் கால நேரத்தைக் கருத்திற் கொண்டு முழுமையாகவோ பகுதியாகவோ ஒலிபரப்பானதை நீங்கள் கேட்டிருக்கலாம். டப்பாங் குத்துப் பாடல்களுக்கு நீங்கள் விருப்பமுள்ளவராக இல்லாதிருந்தால் இவை உங்களுக்கு மிக இனிமையான பாடல்கள். எனக்கு அந்நாடாவி லுள்ள அனைத்துப் பாடல்களும் பிடித்தமானவை.

'பொன்னரிவாள் என்றே கவிஞன் புரட்சிக்கமால் சொன் னான்' என்று துவங்கும் ஒரு பாடல் அதில் உண்டு. அதாவது இளம் பிறையை கவிஞர் புரட்சிக் கமால் 'பொன்னரிவாள்' என்று சொன்னதை ரசித்துச் சிலாகித்து மற்றொரு கவிஞரான பாவலர் பஸீல் காரியப்பர் எழுதிய பாடல் அது.

முக்காற் பகுதியும் மண்ணுக்குள் மறைந்து கிடக்கும் தங்கக் காசு போன்றது இளம் பிறை என்று வர்ணித்து எழுதப்பட்ட ஒரு கவிதை வரியின் நயத்தைப் பற்றி நண்பர்கள் சிலருடன் நீண்ட காலத்துக்கு முன்னர் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்த ஞாபகம் இன்னும் மறவாமல் பசுமையாக நெஞ்சாங் கூட்டுக்குள் இனித்துக் கொண்டிருக்கறது.

'இளம் பிறையே உன் ஏழ்மை குறித்து வருந்தாதே.. உனக்குள் தான் பூரண சந்திரன் புதைந்து கிடக்கிறான்' என்ற அல்லாமா இக்பாலின் கவிதை வரிகள் உலகப் புகழ் பெற்றவை. அசட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனங்கள் இல்லாத எழுத்தாளர்களது கட்டுரைகளிலும் பேசத் தொடங்கி விட்டார்களெனில் சபையை நெளிய வைக்காமல் சற்றுத் தெளிவோடு பேசுகின்ற சிலரினது பேச்சுக்களிலும் இந்தக் கவிதை வரிகள் இடம் பெற்றிருந்ததை நான் அவதானித்திருக்கிறேன்.

'பிறைக் கொடி பறக்கும் இடங்கள் தோறும் வாழ்வோ ரெல்லாம் மற்றொரு சாரார்' என்று எம்.ஏ. நுஃமான் அவர்களின் 'தாத்தாமாரும் பேரர்களும்' என்ற நெடுங் கவிதையில் ஒரு வரி வருகிறது.

'பிறை' என்ற மகுடத்தில் தமிழ் நாட்டிலிருந்து சில காலங் களுக்கு முன் ஓர் இஸ்லாமிய சஞ்சிகை வெளிவந்து கொண்டிருந்தது பலருக்கும் நினைவிலிருக்கும்.

கவிதைப் பைத்தியம் பிடித்த மீசை அரும்பும் பருவத்தில் நான்கு ஐந்து வரிப் புதுக் கவிதைகள் பத்திரிகைகளிலும் ஒன்று அல்லது இரண்டு இதழ்களோடு நின்று போன சஞ்சிகைகளிலும் பிரசுரமாகி பூமியிலிருந்து ஓர் அங்குல உயரத்தில் நான் நடக்கத் தொடங்கிய காலத்தில் எனக்கொரு புனைப் பெயர் வேண்டும் என்று மிகத் தீவிரமாக யோசித்து நான் எனக்குச் சூட்டிக்கொண்ட பெயர் 'கூன்பிறைக் கொடியோன்!'.

முகம்மது நபி பிறந்த தினம் என்றால் குறிப்பாகக் கொழும்பில் குறிப்பிட்ட சில இடங்கள் வெள்ளைப் பிறையுடனான பச்சை நிறக் கொடிகளால் சோடிக்கப்பட்டிருக்கும்.

குர்ஆன் பாடசாலையில் 'அலிப்.. பே.. த்தே..' ஓதும் காலங்களில் பெருமானார் பிறந்த தினத்தில் ஒரடிக் குச்சியில் ஒட்டிய வெள்ளைத் தாள் கொடியில் பூத்திருக்கும் பிறையோடு ஸலவாத்துச் சொல்லியபடி ஊர்வலம் போன ஞாபகங்கள் உங்களுக்கும் உண்டா?

இவ்வருடம் ரபீஉல் அவ்வலில் ஊரில் நின்றிருந்த போது அந்த அழகிய காட்சியை மீண்டும் கண்டு களித்தேன். பிறைக்கொடி ஏந்திய வண்ணம் கலிமா முழங்க வெள்ளை உடையில் சிறாரின் ஊர்வலம். ஊர்வலத்தின் கடைசியில் எனக்கு உச்சக்கட்ட இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. ஒரு ட்ரக்டர் பெட்டி நிறைய கொடிகளை ஏந்திய குழந்தைகள்! நான் வியப்புடன் அதை எட்டிப் பார்த்த போது இரண்டாம் நிலை உஸ்தாது சொன்னார் - 'சேர், இதுக்குள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் போத்தல்கள்!' அக்காட்சி உண்டாக்கிய பரவசத்தில் நான் உருகிக் கொண்டிருந்தேன்.

இஸ்லாமிய உலகு, முஸ்லிம் சமூகம் என்பவற்றின் அடையாளக் குறியீடாக இளம் பிறை மதிக்கப்படுகிறது என்பதை எடுத்துச் சொல்ல இணையத்தை நோண்டவோ ஆங்கிலப் புத்தகங்களை அலசவோ அவசியம் இல்லை. மிக எளிய உதாரணங்கள் சிலவற்றை எடுத்தாண்டுள்ளேன்.

நமது இந்த இளம் பிறையைக் கவிக்கோ அப்துல் ரகுமான் 27.05.2007 அன்று சென்னையில் நடந்த இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கலைஞர் கருணாநிதிக்கு முன்னால் பிச்சைப் பாத்திரமாக ஏந்தி அகௌரவப்படுத்தி விட்டார்.

துன்பமாய் இருக்கிறது!

26.08.2007

- ஸலவாத் - நபிகளார் மீது சொல்லும் வாழ்த்து
- பெருமானார் - முகம்மது நபி (ஸல்)
- உஸ்தாது - ஆசிரியர்
- ரபீஉல் அவ்வல் - இஸ்லாமிய மாதம்
- அலிப், பே, தே... - அரபு அட்சரங்கள்
- கலிமா - இறைவன் மீதான உறுதிப் பிரமாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி

எனது நண்பரோடு வந்திருக்கவேண்டிய அவரது நண்பரது வருகை தாமதித்து விட்டிருந்தது.

அவர்கள் இருவரும் மாலை 8.00 மணிக்குக் குறித்த இடத்தில் இருக்க வேண்டும். என்து நண்பர் மதியமே கொழும்புக்கு வந்திருந்தார். எனது நண்பரின் நண்பரோ இரவு 8.00 மணிக்குத்தான் வந்து சேர்ந்தார். வாரத்துக்கு ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை வருவது போல கிழக்கில் அனுஷ்டிக்கப்படும் ஹர்த்தால் தினமாக அன்றும் அமைந்திருந்தது.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு அந்த அரச சார்பற்ற நிறுவனம் பிராந்தியங்களில் உள்ள ஒவ்வொரு அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்தும் சுனாமி சம்பந்தமான செயற்பாடுகள் குறித்துப் பேச ஒருவரை அழைத்திருந்தது. இந்த இராத் தங்கலுடனான கலந்துரையாடல்களில் கலந்து கொள்வதற்காகத்தான் நண்பர்கள் கொழும்புக்கு வந்திருந்தனர். ஏற்கனவே மூன்று மணி நேரம் இவர்கள் தாமதித்திருந்தார்கள். கொழும்பின் புறநகர்ப் பகுதியிலுள்ள நட்சத்திர ஹோட்டலுக்கு நண்பர்கள் உடனே சென்றாக வேண்டும்.

எனவே, எனது வானகத்தில் நண்பர்களை ஏற்றிக்கொண்டு கிட்டத்தட்டப் பறந்து போனேன். அங்கே சென்று கலந்துரையாடல் நடைபெறும் இடத்தைக் கண்டு பிடித்து உள்ளே நுழைந்தபோது, 'ஹாய்..', 'ஹவ் ஆர்யு', 'கொஹமத', 'எதில் வந்தீங்க' ஆகிய நிகழும் முதற்கட்டம் முடிந்து அநேகர் இராப் போசனத்துக்கான அறைக்குள் நுழைந்திருந்தனர். நண்பர்கள் ஏற்பாட்டாளர்களோடு சம்பந்தப்பட்ட ஒருவரைக் கண்டுபிடித்து தாமதத்துக்கான காரணம் சொன்னார்கள். அவர் 'நோ ப்ராப்ளம்' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நண்பரோ என்னைப் பலாத்காரப்படுத்தி இந்த இராப் போசனத்துக்குக் கொண்டு சென்று விட்டார். ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கே உரிய விதம் விதமான சாப்பாடு. 'ஓர் அமைப்பின் சார்பில் ஒருவரைத்தான் அழைத்தோம்; இடையில் நீ எப்படி வந்தாய்?' என்று யாரும் கேட்டுவிடப் போகிறார்களே என்கிற பயமும் சங்கோஜமும் என் அடி வயிற்றில் புரள, சாப்பாட்டைப் போட்டுக் கொண்டு ஒரு மேசையில் மூவரும் போய் அமர்ந்தோம். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது எமக்கு முன்னால் அமர்ந்திருந்த ஒரு இளைஞர் எங்களை நோக்கி விலாவாரியான விபரங்களை எதிர் பார்த்துக் கேள்விக் கணைகளைத் தொடுக்கத் தொடங்கினார். எனக்குத் திக்கென்றது. பக்குவம் இல்லாத அவரது வினாக்களுக்கு எனது நண்பர், 'உனது கேள்விகளைத் தவிர்க்க விருப்புகிறோம்' என்கிற பாணியில் ஒற்றைச் சொல்லில் பதிலளித்து வந்தார். ஆனால் அதை அவர் புரிந்து கொள்பவராக இருக்கவில்லை. கதையைத் திசை திருப்ப முயன்ற போதும் அவர் விடாக்கண்டராக இருந்தார்.

சாப்பாடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது இருவர் பேசத் தொடங்கினார்கள். ஒருவர் ஆங்கிலத்தில் பேச, அதனை ஒரு பெண்மணி, சிங்களத்தில் மொழியெர்த்துக் கொண்டிருந்தார். இப்படி யான இடங்களில் அப்பேச்சைத் தமிழில் மொழி பெயர்ப்பது அநாகரிகம் என்றோ அல்லது தமிழில் பேசுவது அவ்வளவு முக்கியத்து வம் வாய்ந்தது அல்ல என்றோ அல்லது தமிழ் பேசுவோர் ஆங்கிலம், சிங்களம், ஆகிய மொழிகளைப் படித்திருக்க வேண்டும் என்றோ அவர்கள் கருதியிருக்கக் கூடும். ஆயினும் அந்நிகழ்வில் மூன்றில் ஒரு பங்கினர் தமிழ் பேசுபவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு முகம் காட்டாமல் நான் அவர்களது பேச்சைக் காதில் வாங்கியபடியும் எதிரே இருந்த இளைஞனின் வினாக்களுக்கு எனது நண்பர் கொடுக்கும் விடைகளைக் கேட்டபடியும் மிக விரைவாகச் சாப்பிட்டுக் கொண்டி ருந்தேன். எனக்கு அவ்விடத்திலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்று தோன்றியது.

அதுவரை அந்த அரச சார்பற்ற இயக்கத்தில் ஆணி வேராக இயங்கிய நபர் அதனை விட்டுச்செல்கிறார் என்பதும் அவர் மிகவும் சிறந்தவர் என்பதுமே ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இருபது நிமிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் நிகழ்த்தப்பட்ட உரையின் சாராம்சமாகும். அந்த உரையிலும் கூட ஆங்கில நாகரிக வாடை பிரவகித்து அறையெல்லாம் நிரம்பியது. அதாவது இந்த நிறுவனத்தில் கிடைத்த அமெரிக்க டொலர்களிலான சம்பளத்தை விட அதிக சம்பளத்தைத் தரும் ஒரு நிறுவனத்துக்கு அவர் தாவிச்செல்கிறார் என்பதாக என்னால் விளக்கம் கொள்ள முடிந்தது.

சாப்பிட்டு முடித்துவிட்டுக் கைகளைக் கழுவிக்கொண்டிருக்கும் போது எனது நண்பர், இந்த நட்சத்திர ஹோட்டலில் சாப்பாட்டுக்கும் இராத் தங்கலுக்குமாக ஒருவருக்கான செலவு எவ்வளவு ஆகும் என்று கேட்டார். அங்கு வந்திருந்தவர்களுடைய தொகையைக் கணக்கிட்டால் இந்தக் கலந்துரையாடலுக்குச் செலவிடப்பட்ட தொகையைக் கொண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களது முழுவதுமான தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கலாம் என்று நான் நண்பருக்குச் சொன்னேன்.

*02.09.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழலுக்கிறைத்தல்

சஞ்சிகைகளின் உள்ளடக்கத்தில் இருக்கும் அம்சங்களை விட சில வேளைகளில் வாசகர் கடிதங்கள் சுவாரஸ்யமானவையாகவும் காத்திரமானவையாகவும் அமைந்து விடுவதுண்டு.

அக்கரைப்பற்றிலிருந்து வரும் 'பெரு வெளி' சஞ்சிகையின் மூன்றாவது இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்த பஹீமா ஜஹானின் கடிதம் அவ்வாறான ஒன்றாக எனக்குத் தோன்றியது. அது சொல்லும் விடயம் குறித்து உங்கள் கவனத்தையும் ஈர்க்கும் ஆர்வத்தை எனக்கு ஏற்படுத்தியது.

பஹீமாவின் கடிதத்திலிருந்து ஒரு பகுதியை முதலில் பார்க்கலாம். "எளிய சொற்களில் ஆழ்ந்த கருத்துக்களைக் கூறுவது என்னையும் கவர்ந்ததுதான். ஆனால் பெருவெளியில் உள்ள சில பிரதிகள் எளிய விடயங்களைக் கூற மொழியைக் கடினமான தொனியுடன் கையாண்டுள்ளன. உதாரணமாக - ● "இங்கு பொழுதுகளைக் குதறுபவர்களின் பொழுதுகளை அரங்கமும் சுவீகரித்துக் குதறி விடுவதன் மூலம் நிகழ்வு முற்றுப் பெறாமல் அரங்கம் உற்பத்தி செய்யும் அடைக்கலத்தினை குதறிகள் சுரண்டுவதனாலும் இதில் ஒரு சமச்சீர் போன்ற தட்டைத் தன்மை நிலவுகிறது."

வாசகனை ஏன் இப்படிப் பயமுறுத்த வேண்டும்? என்று கேள்வி எழுப்பும் ஓர் ஆசிரியையான பஹீமா, தனது கடிதத்தை இவ்வாறு தொடங்குகிறார். "கணிதப் பாடப் பரீட்சை விடைத் தாள்களைத் திருத்திக் கொண்டிருந்த வேளையில் பெரு வெளி கிடைத்தது. தலைப்புகளை மாத்திரம் பார்த்துவிட்டு அப்படியே வைத்து விட்டேன். கிடைத்த ஓய்வில் 'மு.பொன்னம்பலத்தை முன்னிறுத்தி முரணும் முரணிணைவும்', 'குதர்க்கங்களின் பிதுக்கம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றை வாசிக்க முனைந்த வேளை தலை தெறித்து விடும் போல் இருந்தது. கணித விடைப் பத்திரங்களைத் திருத்துவது அதை விடவும் சுகமாக இருந்தது."

இதைப் படித்துக் கொண்டிருந்த போது சாரு நிவேதிதாவின் 'கோணல் பக்கங்க'ளில் படித்த விடயமொன்று சட்டென்று என் ஞாபகத்துக்கு வந்தது. 'கனவில் வந்த கதை' என்ற தலைப்பில் எழுதப்பட்ட பத்தியில் அவர் குறிப்பிட்டிருந்ததை இங்கு எடுத்தாள விரும்புகிறேன். பின்வரும் பந்திகளைப் முதலில் படியுங்கள். இல்லை, படிக்க முயலுங்கள்.

● "ஞாபக ரம்யங்கள்தனில் பிரீதியுற்றே காலம் தயங்கத் தாமதித்து அவன் ஒரு போதும் இருந்ததில்லை. எண்ண அலைகள், க்ஷண இருப்பின் அற்பாயுள், உயிர் தொனியும் கிரண மிளிர்வு இவை யாவும் மேற்கவிந்து அவனை முற்றாகக் கழுவி தீர்த்தன..."

லூயிஸ் போர்ஹேஸ் என்பவர் ஸ்பானிய மொழியில் எழுத அன்ரூ ஹார்லே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த நாவலைத்தான் மேற்கண்டவாறு மொழிபெயர்த்திருக்கிறார் எழுத்தாளர் கோணங்கி. 'இதெல்லாம் என்ன? தமிழ்க் கொலை என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது?' என்று கேள்வி எழுப்பும் சாரு நிவேதிதா 'தாங்கள் எழுதுவதும் போர்ஹேஸ் எழுதுவதும் ஒன்று போலவே இருக்கிறது என்று நிரூபிப்பதற்காக நடக்கும் மோசடி வேலையே இது' என்கிறார்.

மேற்சொன்ன மொழிபெயர்ப்புக்குள்ளான நாவலின் ஆங்கிலப் பகுதியும் சாரு நிவேதிதாவின் நூலில் இடம் பெற்றுள்ளது. தமிழ் மொழிபெயர்ப்பை வாசிப்பதை விட ஓரளவு ஆங்கில அறிவு இருக்கும் வாசகனால் அகராதியொன்றின் துணையுடன் ஆங்கிலத் திலேயே முழு நாவலையும் படித்து விடுவது இலகுவாக இருக்கும் என்று தோன்றுகிறது.

கோணங்கி எழுதிய 'பாழி' நாவலிலிருந்து ஒரு சிறு பகுதியும் நூலில் இடம்பெற்றுள்ளது.

● "அவள் உந்தி முதல் சிரசு வரை நாத பூதங்களின் தேகங்களின் சாயல் பல தோன்றி குத்துவாளும் பலி ஈட்டியும் தீப்பந்தங்களுடன் குருதி தோய்ந்த தோல் முழவு அதிர ஈட்டிகள் பாயும் தாவர நகரின் குகைகளில் கூட்டமாய் நகரும் தாவரப் பெண்ணின் எலும்பு இசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகைக் கிளைகளில் ஊழையிடும் அலறல் துல்லியக் கோடாய் தந்திச் சுருள் ஒளி வெள்ளமாய் சிதறி வெளியெங்கும் இசை மீன்கள் கீழிறங்கி வால் துடித்து பலி வாலில் வீழ ....." (வசனம் இன்னும் முடியவில்லை.)

சில காலங்களுக்கு முன்னர் இவ்வாறான கடினமான வாக்கிய அமைப்புகளுடன் ஓர் ஓவியரைப் பற்றி எழுதப்பட்ட கட்டுரை யொன்று 'மூன்றாவது மனிதன்' இதழொன்றில் பிரசுரமாகியிருந்தது. இரண்டு முறை முயன்றும் எனக்கு அது புரியாமல் போகவே எனது மொழியின் போதாமையோ என்று கூட ஒரு சந்தேகம் எனக்கு ஏற்பட்டது.

'பெருவெளி' நண்பர்கள் பஹீமாவின் கடிதத்தைப் பிரசுரித்து தங்களது சஞ்சிகா தர்மத்தை வெளிப்படுத்தியமைக்குப் பாராட்டுச் சொல்லி இவ்வாறான எழுத்தின் பின்னணியில் நிகழும் மூன்று துயரங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கடினமான மொழிப் பிரயோக எழுத்துக்கள்தாம் உச்சக் கட்ட இலக்கியம் என்று எண்ணி அவ்வெழுத்துக்களைப் பற்றிய புரிதல் இன்றியே உளறுவதும் எழுதுவதும் முதலாவது. இவையே அற்புத இலக்கிய வெளிப்பாடு என்ற நம்பிக்கையோடு இவற்றை மாத்திரமே படித்து வளரும் சில இளைஞர்கள் சாதாரண சொற்களுக்கும் கூட கடின, மயக்கச் சொற்களை மண்டை காயக் காயத் தேடி வலிந்து புகுத்தி எழுதி விட்டு, 'புரியவில்லை' என்று சொல்பவனைப் பார்த்து மேதாவி மயக்கத்துடன் கேலியாய்ப் புன்னகைப்பது இரண்டாவது. இத்தகைய எழுத்துக்களை எழுதியவரும் அவரோடு சார்ந்தோரும் மாத்திரமே விளங்கிக் கொள்வார்கள் என்பதால் இவர்களது திறமைகள் ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளேயே அமுங்கிப் போய் விடுகின்றன என்பது மூன்றாவது.

இவற்றை நான் வெளிப்படையாகச் சொல்வது கொண்டு மேற்சொன்ன உச்சக் கட்டத்தைத் தாம் அடைந்து விட்டதாகக் கருதும் அன்பர்கள் பார்வையில் நான் ஒரு பத்தாம்பசலியாக, பிற்போக்கு வாதியாக, 19ம் நூற்றாண்டில் இருப்பவனாகத் தோன்றுவது குறித்து எனக்கு எவ்வித வருத்தங்களும் கிடையாது.

*09.09.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூர்ஜஹானின் பாடல்கள்

புகழ் மிக்க பாடகியும் வானொலி, தொலைக் காட்சிக் கலைஞையுமான நூர்ஜஹான் மர்ஸூக்கின் பாடல்கள் அடங்கிய 'அமல் விளக்கேற்றி' என்ற தலைப்பிலான ஒலித் தட்டு அண்மையில் கொழும்பு டவர் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அரசியல் தலைவர்கள், மற்றும் பல்துறைசார் கலைஞர்கள் பெருந் தொகையாகக் கலந்து கொண்டிருந்ததைக் காண மனதுக்கு இதமாக இருந்தது.

இஸ்லாமிய கீதங்களை உலகறியப் பரப்பியதில் பெரும் பங்கு இலங்கை வானொலிக்கு உண்டு. தென்னிந்திய இஸ்லாமிய கீதப் பாடகர்களது பாடல்களைக் கூட ஒலிபரப்பி அவர்களை புகழின் உச்சிக்குக் கொண்டு வந்ததும் இலங்கை வானொலி என்பதை நாம் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய கீதங்களைப் பாடியுள்ள இந்தியப் பாடகர்கள் வரிசையொன்றும் இலங்கைப் பாடகர்கள் வரிசை ஒன்றும் உள்ளது. இலங்கையைச் சேர்ந்தவர்களிலும் கூட பலரை நம்மவர்கள் அறிய வரவில்லை. தங்களது பாடல்களை அவ்வப்போது வானொலியிலோ தொலைக்காட்சியிலோ பாடியதோடு நிறுத்திக் கொண்டதால் ஏற்பட்டது இந்நிலை. இப்பாடகர்கள் பற்றி மட்டுமல்ல, இலங்கையில் தமிழில் பாடியவர்களைப் பற்றிய தகவல்கள் கூடச் சரிவர எங்கும் குறிக்கப்பட்டிருக்கவில்லை என்பது நமது அவதானிப்புக்கு உட்பட வேண்டியுள்ளது. தனது பாடல்களை வெளிக் கொணர்ந்த முதல் முஸ்லிம் பெண்மணியாக நூர்ஜஹான் மர்ஸூக் விளங்குகிறார்.

இஸ்லாமிய கீதங்களை எழுதியோர் பட்டியல் ஒன்றும் உண்டு. இஸ்லாமிய கீதங்களை எழுதுவதில் அதாவது சிறந்த நயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க பாடல்களைத் தருவதில் நாம் சற்றுப் பின்னிற்கிறோம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். தென்னிந்தியப் பாடகர் களின் பாடல்கள் பெற்ற வெற்றிக்கு இறையருட் கவிமணி அப்துல் கபூர், சமுதாயக் கவிஞர் தாஸிம் போன்றோரின் இலக்கிய நயம் மிக்க வரிகளும் துணை நின்றன.

ஒரு முஸ்லிம் பெண் பாடகி 40 வருடங்களாக இத்துறையில் ஒரு நட்சத்திரமாக ஜொலித்துக் கொண்டிருக்கிறார் என்றால் அதன் பின்னணியில் உள்ள அவரது தியாகங்களும் அவர் சந்தித்த சோதனைகளும் அதனால் அடைந்த வேதனைகளும் வார்த்தைகளில் சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போய்விடக் கூடியவை அல்ல. அவர் தன்னை எதிர் கொண்ட எல்லாத் தடைகளையும் தாண்டி வெற்றி பெற்றதற்காக அவரைப் பாராட்ட வேண்டும்.

அன்பொழுகும் கனிவான பேச்சு, சகலரையும் மதிக்கும் குணம், ஒரு பெயர் பெற்ற பாடகி என்ற பந்தாவோ பகட்டோ இல்லாத பண்பு, கலையகத்துக்குள் ஒலிவாங்கிக்கு முன்னாலும் கூடக் கலையாத முக்காடு, பாடும் போதும் நாடகம் நடிக்கும் போதும் தவிர வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் உச்சஸ்தாயிக்குப் போகாத குரல் - இதுதான் நான் அறிந்த நூர்ஜஹான். எதிர் கொண்ட தடைகளை அவர் எப்படி வெற்றி கொண்டு வந்துள்ளார் என்பதை விளக்குவதற்கு அவரது பண்புகளே ஆதாரமானவை. நூர்ஜஹானின் வெற்றிக்கு மற்றொரு காரணம் அவருக்கு வாய்த்த கணவர்.

தலைநகரில் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும் விழாக்களில் பிரதம அதிதியே நூர்ஜஹான்தான். பெயர் சூட்டும் விழாவில் நூர்ஜஹானின் பாடல் ஒலிக்கவில்லை என்றால் அதை ஒரு விழாவாக ஏற்றுக் கொள்ள மறுக்கும் பல தாய்மார் இருக்கிறார்கள். அதேபோல் அவரை விமர்சித்தவர்களும் இருக்கக் கூடும். அவ்வாறாயின் அதற்கு இரண்டே இரண்டு காரணங்கள் மட்டுமே இருந்திருக்க முடியும். ஒன்று- நூர்ஜஹானுக்கு இனிமையாகப் பாட முடிகிறது. இரண்டு - அவரை விமர்சித்தவர்களுக்கு அவரைப் போல பாட முடியவில்லை.

'அமல் விளக்கேற்றி' என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள குறுந்தகட்டில் நூர்ஜஹான் பாடியுள்ள பத்துப் பாடல்கள் அடங்கி யுள்ளன. 'பேரருளே பெருங்கொடையே' என்ற பாடல் என்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் கவர்ந்தது. உடலில் பலமும் உறுதியும் இருக்கின்ற காலத்தில் நூர்ஜஹான் பாடிய பாடல்களுக்கும் இந்தக் குறுந் தகட்டுக்காக 40 வருடங்கள் கடந்த பிறகு பாடியுள்ள பாடல்களுக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. இன்னும் பாடக் கூடிய நம்பிக்கை மிகுந்த சாரீரம் அவருக்கு இருப்பதை இக்குறுந்தகடு உறுதிப்படுத்துகிறது.

நூர்ஜஹான் - இந்தப் பெயர் மொகலாயர் காலத்தை நமக்கு நினைவுறுத்தும் பெயர். நூர்ஜஹான் மொகலாயர் காலத்தில் பிறந் திருந்தால் அவரது இனிய சாரீரத்துக்காகவும் பாடல்களுக்காகவும் ஒரு சமஸ்தானத்தையே பரிசாகப் பெற முடிந்திருக்கலாம். நம்மால் வழங்க முடிந்ததெல்லாம் சில பாராட்டு வார்த்தைகளே.

ஆனால் மனதார வாழ்த்தி வழங்கப்படும் பாராட்டுக்களைப் போல சமஸ்தானங்கள் நின்று நிலைப்பதில்லை என்பதை சகோதரி நூர்ஜஹான் ஏற்றுக்கொள்வார் என்று நம்புகின்றேன்.

*16.09.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியத்தலும் இலமே

'காலச்சுவடு' வெளியீடாக டிசம்பர் 2006ல் வெளிவந்த அ.முத்துலிங்கத்தின் 'வியத்தலும் இலமே' என்ற தலைப்பிலான பேட்டிகளின் தொகுப்பை அண்மையில் படித்து முடித்தேன். பேட்டி காணப்பட்டுள்ள இருபது பேரில் இரண்டொருவர் தவிர அனைவரும் மேல் நாட்டுப் புகழ் பூத்த எழுத்தாளர்கள். பட இயக்குனர், நாடக இயக்குனர், ஆய்வாளர், ஒரு மரதன் ஓட்ட வீராங்கனையும் கூட உள்ளடங்குகிறார்.

அர்ப்பணிப்பு என்ற பதத்தின் முழுமையான அர்த்தம் இவர்கள் அனைவரின் முயற்சிகளோடும் பின்னிக் கிடப்பதை உணரும் போது ஒரு வகையில் ஆச்சரியமாக இருக்கிறது. தாங்கள் எந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்களோ அந்தத் துறையோடு பின்னிப் பிணைந்து வாழ்கிறார்கள். கனடிய மற்றும் அமெரிக்கர்களான இவர்கள் முழு நேர எழுத்தாளர்கள். ஒரு கட்டுரைக்கு அல்லது கதைக்கு 5000 டாலர்களுக்கும் மேல் சன்மானமாகப் பெறுகிறார்கள். சிலர் பொது நிகழ்ச்சியொன்றின் மேடையில் தோன்றுவதற்கு 25000 டாலர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். சுருக்கமாகச் சொல்வதானால் ஒரு சினிமா நடிகருக்கு அல்லது நடிகைக்கு உள்ள அளவுக்கு மவுசு படைப்பாளிகளுக்கு அங்கு உண்டு. சில படைப்பாளிகளோடு விருந்து உண்பதற்கென்றே பலர் பெருந்தொகைப் பணத்தைச் செலுத்திக் கலந்து கொள்கிறார்கள்.

இப்படைப்பாளிகளின் அனுபவங்கள் வித்தியாசமானவை. நான் எழுதியதை அப்படியே அனுப்பி விடுவேன் என்கிறார் ஒருவர். எழுதியதைப் பலமுறை திருத்துகிறேன் என்கிறார் இன்னொருவர். அலங்கார வார்த்தைகள் எனது எழுத்துக்களில் வருவதை நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிப்பதே இல்லை; அவ்வாறு வருமாயின் அதை வெட்டி விடுவேன் என்கிறார் இன்னொருவர். பொதுவாக எல்லோருமே தங்களது எழுத்துக் குறித்து மிகத் தெளிவான பார்வையோடு இருக்கிறார்கள்.

ஆங்கிலத்தில் எழுதும் இந்தப் புகழ் பெற்ற படைப்பாளி களில் இருவர் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். ஒருவர் ஷ்யாம் செல்வதுரை. மற்றவர் மேரி ஆன் மோகன் ராஜ் என்ற பெண்மணி. மேரி ஆனின் எழுத்துக்கள் பாலியலோடு சம்பந் தப்பட்டவை. இணையத்தளத்தில் தினக் குறிப்பு எழுதி வருகிறார். அதனை முப்பது லட்சம் பேர் படிக்கிறார்களாம்.

இந்த நூலில் பொதுவாகத் தெரியவரும் சில விடயங்களுள் ஒன்று படைப்பாளிகள் தங்களது படைப்புகளை அவ்வப்போது ஆங்காங்கு மேடைகளில் படிப்பதற்கு அழைக்கப்படுகிறார்கள் என்பது. பல்கலைக்கழகங்களிலும் பொது இடங்களிலும் இவை நடந்து வருகின்றன. இதற்குப் பெருமளவில் மக்கள் கூடுகிறார்கள். அவற்றைக் கேட்டு ரசிக்கிறார்கள். படைப்புக்களைப் படித்துக் காட்டும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளப் படைப்பாளிகள் வருட மொருமுறை சுற்றுலா செல்கிறார்கள்.

இந்நூல் சொல்லும் இரண்டு விடயங்களை நேரடியாகத் தர விரும்புகிறேன். 1. எலிஸபெத் என்ற பெண் தனது 19 வயதில் 'மரியமின் துயரம்' என்ற நாடகத்தை எழுதிய அதே வருடம்தான் 40 வயதான வில்லியம் ஷேக்ஷ்பியர் 'ஒதெல்லோ' நாடகத்தை எழுதியிருக்கிறார் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு நாடகங்களுக்கு மிடையில் பல ஒற்றுமைகள் உள்ளனவாம். ஒதெல்லோவை எழுதுமுன் எலிஸபெத்தின் நாடகத்தை ஷேக்பியர் படித்திருக்க வாய்ப்புகள் இருந்திருக்கலாம் என்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் எலிஸபெத் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கிறார் என்பது மேலெழுகிறது.

2. எல்லோருக்கும் என்றைக்கும் பொருத்தமான ஆபிரிக்கப் பழமொழி ஒன்றைத் தந்திருக்கிறார் முத்துலிங்கம். ஆபிரிக்கக் காட்டில் சூரியன் எழும் போது மான் எழும்பும். அன்று வேகமாக ஓடும் ஒரு சிங்கத்தை விட அதி வேகமாக அது ஓட வேண்டும். இல்லா விட்டால் அது உயிர் பிழைக்காது. ஆபிரிக்கக் காட்டில் சூரியன் எழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது சிங்கம் எழும்பும். அன்று வேகம் குறைந்த ஒரு மானைக் காட்டிலும் அது வேகமாக ஓட வேண்டும். இல்லா விட்டால் அது உயிர் பிழைக்காது. நீ சிங்கமோ மானோ - சூரியன் எழும் போது எழு, ஓடத் தொடங்கு!

மேல் நாட்டுப் படைப்பாளிகளுக்கு உள்ள மரியாதையும் மவுசும் நமது படைப்பாளிகளுக்கு என்றைக்காவது கிடைக்காதா என்று ஓர் அற்ப ஆதங்கம் மனசுக்குள் எட்டிப் பார்க்கத்தான் செய்கிறது. இந்நிலையை எய்துவது குறித்துக் கருத்துப் பரிமாறுவதன் மூலம் தெளிவான சில முடிவுகளுக்கு நம்மால் வரமுடியும். அது எழுத்துச் சண்டையாக மாறும் சாத்தியமும் உண்டு.

எழுதுவதைத் தள்ளிப் போடுவதற்குரிய வேலைகளில் அடிக்கடி ஈடுபடுவதாக வெற்றிகரமான ஒரு மேல்நாட்டுப் படைப்பாளி சொல்லியிருக்கிறார். தமிழில் எழுதுவோரும் இந்த முறையைப் பின்பற்றினால் நன்றாக இருக்கும்.

*23.09.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதி உலகம்

*அங்கம் 1*

அண்மையில் ஆங்கிலப் படம் ஒன்றுக்குச் சென்றிருந்த வேளை படம் காண்பிக்கப்படுவதற்கு முன்னால் திரையிடப்படவுள்ள ஒரு படம் பற்றிய முன்னோட்டம் காண்பிக்கப்பட்டது. அதில் ஒரு பயங்கர மிருகம் ஒரு நகரத்தினூடாக நடந்து வருகையில் அம் மிருகத்தின் வால் பகுதியானது மாடிக் கட்டடங்கள் பலவற்றைச் சிதைப்பதைக் கண்ணுற்றபோது எனக்கு அந்த நபர் ஞாபகத்துக்கு வந்தார்.

நாகரிகம் அற்ற முறையில் தடாலடியாக படைப்புகளை விமர்சனம் செய்பவர் அவர். கலை இலக்கியப் பரப்பில் அவர் கரைத்துக் குடிக்காத அம்சங்களே இல்லை எனுந் தோரணையில் அவரது பேச்சு இருக்கும். குறிப்பாக உலகத்துத் தமிழ்க் கவிதைக்கான முழு அதிகாரமும் தனது கரங்களிலேயே இருப்பதாக அவருக்கு ஓர் எண்ணம். சில காலங்களுக்கு முன்னர் ஓர் பட்டினத்தில் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் அவர் ஆற்றிய உரையில் தன்னை விடச் சிறந்த கவிஞன் அப்பிரதேசத்தில் இன்னும் பிறக்கவில்லை என்று பேசினாராம். அந்தப் பட்டினத்தில் கண்ணிய மிக்க பல இலக்கிய விற்பன்னர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்; இன்னும் வாழ்ந்து வருகிறார்கள். ஓர் இளம் படைப்பாளி தான் நூலாக்கவுள்ள கவிதைகளை அவரிடம் ஒரு மரியாதைக்காகக் காட்டிய போது "நீங்கள் கவிதை எழுதாமல் இருப்பது நல்லது" என்று சொல்லி விட்டார். இளம் படைப்பாளி மனம் நொந்து போனார். கவிதைப் பெண்டிரெனில் காற்றலைகளில் கடலை விதைக்கப்படுகிறது என்கிறார்கள் நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கம் 2

இரண்டு இளம் படைப்பாளிகள் ஒரு புத்தகக் கடையில் சந்தித்துக் கொண்டார்கள். ஒருவர் மற்றவரிடம் எப்படி உங்களது எழுத்துப் பணிகள் என்று கேட்க அவர் அண்மையில் ஒன்றும் எழுதவில்லை என்று பதில் சொன்னார். பதில் சொன்னவர் உங்களது எழுத்துப் பணிகள் எப்படிப் போகிறது என்று மாறிக் கேட்ட போது "தோன்றுவதை அவ்வப்போது சொல்வேன்; நண்பர்கள் எழுதிக் கொள்வார்கள்!" என்று அவர் சொல்லிருக்கிறார்.

அதாவது கவி கண்ணதாசன் சொல்ல இராம. கண்ணப்பன் எழுதிக் கொள்வது போல! (உங்களுக்குப் புரிகிறதா?)

## அங்கம் 3

கிராமம் ஒன்றில் சிடீ வெளியீட்டு விழா. இலக்கிய உலக முக்கியஸ்தர் அச்சிடுவதற்காக எழுதித் தந்திருந்த தாளை விரித்த அச்சகக்காரர் அதில் **இருவட்டு** என எழுதப்பட்டிருந்ததை அவதானித்து அதனை **இறுவட்டு** என்று திருத்திப் பார்வைக்கான பிரதியை எடுத்து வைத்திருந்தார். அச்சிடுவதற்கு முன்னர் இறுதிப் பார்வைக்காக வந்த இலக்கிய உலக முக்கியஸ்தர் தான் எழுதிக் கொடுத்திருந்த இருவட்டு என்ற சொல் இறுவட்டாக மாறியிருந் ததைச் சுட்டிக் காட்டி **இருவட்டு** எனத் திருத்துமாறு கேட்டுக் கொண்டார். அச்சகக்காரர் இறுவட்டு என்பதே சரியானது எனவும் தெரிந்து கொண்டே பிழையாக அச்சிட முடியாது எனவும் வாதாடி னார். ஆனால் இ.உ.முக்கியஸ்தர் விடாக்கண்டராக இருந்தார். தான் சொன்னது சரி என்று நிலைநாட்ட அச்சகக்காரரின் முதுகில் செல்லமாகத் தட்டிச் சொன்னார், "நான் ஓ.எல்லில் (அதாவது க.பொ.த. சா.த) தமிழில் 'டி' பாஸ் எடுத்தவன். எனக்கு நீங்கள் சொல்லித் தருகிறீர்களா?" - வேறு வழியில்லாமல் அவர் சொன்ன படியே அச்சிட்டுக் கொடுத்தேன் என்றார் அச்சகக்காரர். இருவட்டு என்பது புட்டத்தையும் குறிக்கும் என்பதை ஓ.எல்லில் அவருக்கு ஆசிரியர் சொல்லிக் கொடுக்கவில்லைப் போலும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அங்கம் 4*

பத்திரிகை அல்லது சஞ்சிகைகளில் அச்சுப் பிழைகள் ஏற்படுவது இயல்பு என்பது சகலரும் அறிந்ததே. தள அமைப்பின் போது சில சொற்கள் விடுபட்டுப் போவதும் உண்டு. ஒரு சிறு சஞ்சிகையில் இடம் பெற்ற தனது படைப்பில் தனது பெயருக்கு முன்னால் உள்ள கவிஞர் என்ற சொல் விடுபட்டதை ஓர் இருட்டடிப்பு நடவடிக்கையாகச் சொல்லி அந்தச் சஞ்சிகையுடனான தொடர்பை நிரந்தரமாகவே அறுத்துக் கொண்டார் ஓர் அறிஞர் பெருமகன்.

*அங்கம் 5*

இவை போல இன்னும் உள்ளன.

*நீதி -*

நாம் சில கொடுமைகளையும் அனுபவித்துக் கொண்டுதான் வாழ்ந்தாக வேண்டியிருக்கிறது!

***07.10.2007***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்த எழுத்து

மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் எழுதிய 'மறக்க முடியாத என் இலக்கிய நினைவுகள்' என்ற அவரிடமிருந்த ஒரே ஒரு நூல் பிரதியை வாங்கிப் படித்துக் கொண்டிருந்த வேளையில் அவரது 'தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல்' என்ற 240 பக்கங்கள் கொண்ட நூல் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. வெளியிடப்பட்டது அவரது 11வது நூல். 'மறக்க முடியாத என் இலக்கிய நினைவுகள்' இரண்டாவது நூல். 31 அங்கங்களைக் கொண்ட இந்நூல் 1990ம் ஆண்டு வரையான அவரது இலக்கிய நினைவுகளைப் பேசுகிறது.

17 வருடங்களுக்கு முன்னர் வெளியான இந்நூல் ஒருவகையில் மணிப்புலவரின் வாழ்க்கைச் சரிதத்தின் முதற்பாகமாகவும் பத்திகளின் தொகுப்பாவும் கூடக் கொள்ளத்தக்கது. அன்றைய முக்கியத்துவம் பெற்ற அனுபவங்கள் எல்லாமே 17 வருடங்களுக்குப் பிறகு மற்றொரு நபருக்கு முக்கியத்துவமானவையாக இருக்காது என்பதால் வாசிப்பி னூடே ஒரு சிறு அலுப்புத் தோன்றினாலும் கூட அதை கீழே வைக்க முடியாமல் தொடர்ச்சியாக என்னை வாசிக்கத் தூண்டிற்று. மணிப் புலவர் அதை நகர்த்திச் செல்லும் விதமும் இந்த நூலுக்குள் அடங்கும் 110 பேர் பற்றிய தகவல்களும் அதற்குக் காரணம். இன்றைய தலை முறை அறிந்திராத பல விடயங்கள் நூலில் அடங்கியுள்ளன.

1975ம் ஆண்டு வானொலிக்காக ஒலிப்பதிவு செய்யப்பட்ட கவியரங்கில் எம்.ஏ.நுஃமான் அவர்களால் பாடப்பட்ட, அவ்வேளை பிரச்சினைக்குரியது எனக் கருதப்பட்ட கவிதை பற்றியும் அக் கவியரங்கு ஒலிபரப்பப் படாமலேயே போனதையும் அறியக் கிடைக்கிறது. அதேபோல கல்முனை தமிழ் எழுத்தாளர் சங்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனை தமிழ், முஸ்லிம் எழுத்தாளர் சங்கம் என்று அமைக்கப் பிரேரித்த வேளை அமரர் நீலாவணன் நீங்கள் பிரிந்து போவதை விரும்புவேனே தவிர சங்கத்தில் அப்பிரேரணையை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்றதால் (அப்பவே துவங்கிட்டாங்கய்யா!) சங்கம் இரண்டாகப் பிளவு பட்டதையும் கடைசியில் இரண்டுமே இயங்காமல் சிதைவுற்றதையும் அறிய முடிகிறது. இவ்வாறு பல விடயங்கள் நூலில் கிடைக்கின்றன.

அந்த நாட்களில் நிகழ்ந்த நல்ல பல அம்சங்களைப் போலவே இருட்டடிப்பு, கோஷ்டி கானம், ஒரு தலைப்பட்ச விமர்சனங்கள் போன்ற செயற்பாடுகள் பற்றியும் எவ்வித மறைப்பும் இல்லாமல் மிகத் தெளிவாகப் பேசுகிறார் நூலாசிரியர். அவர் தனது இலக்கிய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளும் போது அவர் பிரதான பாத்திரம் வகிப்பது தவிர்க்க முடியாதது. சற்றுத் தூக்கலாகத் தெரிந்தாலும் அவர் அதை மிக நாசூக்காகக் கையாண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்நூலில் மணிப்புலவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல வேண்டும். 1. ஆரம்பத்தில் எதையும் வாசிக்க லாம். பின் தெரிந்து வாசிக்க வேண்டும். அதன் பின் தேவைக்கு மட்டுமே வாசிக்க வேண்டும். 2. பொழுதைப் போக்கக் கூடாது; பொழுது போக வேண்டும். 3. நாமாவலி தயாரிப்பவர்கள் நன்றி இல்லாதவர்கள்; கோஷ்டி கானம் பாடுபவர்கள். எழுத்தை நேசிக்கின்ற ஒருவன் நாமாவலி தயாரிப்பவர்களை நம்பவே கூடாது. 4. காத்திரம் இல்லாத கலை, இலக்கியம் கால ஓட்டத்தில் கரைந்து விடக் கூடும்.

மணிப்புலவர் இயல்பிலேயே ஹாஸ்ய உணர்வும் கூர்மை யான பார்வையும் மிக்கவர். (நான் கண்பார்வையைச் சொல்லவில்லை!) சொல்ல வரும் விடயங்கள் எவ்வளவு பெரியவையாக இருந்தாலும் மிகச் சிறிய வசனங்களில் கோர்வை செய்து அழகாக ஒப்புவிப்பார். ஓர் அடிமட்ட வாசகனுக்கும் அவரது நூல்களை எந்தச் சிரமமுமின்றிப் படிக்க முடியும். இந்த நூலும் அதற்கு விதிவிலக்கு அல்ல.

இந்நூலின் 20ம் அங்கம் நலிந்து வரும் நாட்டார் பாடல்கள் என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது. 1995ல் அவர் எழுதி வெளியிட்ட 'மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்பு வரை' என்ற நூலிலும் இது பற்றிய தகவல்கள் இடம் பெற்றுள்ளதாகக் குறிப்பிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிப்புலவர் நாட்டார் பாடலில் மிகுந்த நாட்டம் கொண்டவர் என்பதை மிக அண்மையில் வெளிவந்த அவரது 'தென் கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல்' என்ற நூல் உறுதிப்படுத்துகிறது. இந்நூல் குறித்து நாம் தனியே பேச வேண்டும்.

மணிப்புலவர் இதே வேளை என்பதை இஃதே வேளை என்றும் இது இவ்வாறிருக்க என்பதை இஃது இவ்வாறிருக்க என்றும் இதே போல என்பதை இஃதே போல என்றும் 17 வருடங்களுக்கு முற்பட்ட நூலிலிருந்து அண்மைய நூல் வரை எழுதி வருகிறார். மிக அரிதாகவே பண்டிதர்களாலும் கூடப்பயன் படுத்தப்படும் ஆய்த எழுத்தை அழிந்து விடாமல் பாதுகாத்து வருவதற்காகவே மணிப் புலவருக்கு ஒரு பொன்னாடை போர்த்த வேண்டும் என்றிருக்கிறேன்.

*07.10.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிக்க வைத்த கண்ணீர்த் துளி

புகழ் பெற்ற கலைஞர்கள், தலைவர்களுள் ஒரு சிலரை அவர்களுடனான எந்தவித உறவோ தொடர்போ இல்லாமல் விருப்பத்துக்குரியவர்களாக நாம் வரித்துக் கொள்வதுண்டு. அவ்வாறு நான் வரித்துக் கொண்டவர்களுள் ஒருவர் நகைச்சுவை மேதை சார்லி சாப்ளின். நகைச்சுவை நடிப்புலகின் அடையாளம் அவர்.

1977ம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று உலகை நீத்த சார்லி சாப்லினின் உடல், இறந்து இரண்டு தினங்களின் பின்னர் (கடைசி 25 வருடங்களாக அவர் வாழ்ந்து வந்த சுவிற்ஸர்லாந்துக் கிராமம் ஒன்றின் எல்லையில் ஒடுக்கமான பாதையில் அமைந்துள்ள மையவாடியில்) அடக்கம் செய்யப்பட்டது. அவரது மறைவையொட்டி முழு உலகமும் கவலையில் ஆழ்ந்திருந்தது. அனுதாபச் செய்திகளால் பத்திரிகைகள் நிறைந்தன.

1978ம் ஆண்டு மார்ச் மாதம் 2ம் திகதி சுவிற்சர்லாந்துப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட ஒரு செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. புதைகுழியிலிருந்த அன்னாரின் பூதவுடலைக் காணவில்லை என்ற செய்திதான் அது. புதைகுழி வெறுமையாகவுள்ளதை சுவிஸ் பொலிஸார் உறுதிப்படுத்தினர். 'சார்ப்ளினின் மனைவியும் நாங்களும் அதிர்ச்சியில் இருக்கிறோம். உலகத்தை மகிழ்ச்சியிலாழ்த்திய இப்பெருந்தகைக்கு ஏன் இவ்வாறான கதி நேர்ந்தது' என்று சார்லியின் குடும்ப விவகாரங்களுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் துயருடன் கேள்வி எழுப்பியிருந்தார். சுவிஸ் பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். சம்பவ தின இரவு மையவாடிப் பக்கமிருந்து பிக்காசுச் சத்தம் கேட்டதாக ஒரு கிராமவாசி மாத்திரம் தகவல் தெரிவித்தார். விடயம் இன்டர்போல் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்லின் மீது கொண்ட அளவு கடந்த பற்றின் காரணமாக யாராவது உடலைத் திருடிச் சென்றிருக்கலாம் என்று பலர் கருதினர். தான் பிறந்த நாடான இங்கிலாந்திலேயே அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று ஒரு முறை அவர் தெரிவித்தமை பற்றிக் குறிப்பிட்டிருந்த - சார்லி பற்றிய நூலை எழுதியிருந்த பிரட்ரிக் சான்ட்ஸ் விசாரிக்கப்பட்டார். சுவிற்சர்லாந்தில் சார்லி அடக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்துப் பல நூறு கடிதங்கள் வந்ததாக அவர் தெரிவித்திருந்தார். சார்லி சாப்லின் யூத வம்சத்தைச் சார்ந்தவராதலால் அவரது பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டுப் பெருமைக்குரிய ஒரு பகுதியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் என ஹொலிவூட் வட்டாரச் செய்திகள் பேசின. வாழுகின்ற ஒரு சினிமா நட்சத்திரம் கடத்தப்படலாம். ஆனால் இறந்த உடலை ஏன் எடுத்துச் சென்றார்கள் என்ற முடிவற்ற வினா நீண்டு கொண்டே சென்றது.

சாப்ளினின் பூதவுடலைக் கடத்திய ஆசாமிகள் அகப்பட்ட தாக மே மாதம் 17ம் திகதி செய்தி வெளியாயிற்று. சில வருடங்களுக்கு முன்னர் சுவிஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் பெற்றவர்களான பல்கேரியர் ஒருவரும் போலந்து நாட்டவர் ஒருவரும் பொலிஸாரிடம் சிக்கி யிருந்தனர். போலந்துக்காரரான ரோமன் வர்தாஸ்தான் இந்தத் திட்டத்தின் சூத்திரதாரி. இத்தாலியில் நடந்த இவ்வாறான ஒரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே இதை மேற்கொண்டதாக வர்தாஸ் தெரிவித்தான். மார்ச் 1ம் திகதி புதைகுழியைத் தோண்டு வதற்கு இரண்டு மணித்தியாலங்கள் தேவைப்பட்டதாகவும் பூதவுடற் பேழையை 15 மைல்களுக்கப்பால் வேறு ஓர் இடத்தில் புதைத்திருப்ப தாவும் ஒப்புக்கொண்ட அவன் அவ்விடத்தில புதைப்பதற்கு முன்னர் இருவரும் புகைப்படம் எடுத்துக் கொண்டதாக வேறு ஒரு கொசுறுத் தகவலையும் சொன்னான்.

இவர்கள் சாப்ளினின் பூதவுடலைக் கடத்திய நாளிலிருந்து தொலைபேசி மூலமாக சாப்ளின் குடும்பத்திடம் பணம் கேட்டு மிரட்டியபடியிருந்தனர். சாப்ளினின் மனைவியோ நடைபெறும் துயர நிகழ்வுகளால் மனமுடைந்த நிலையிலிருந்ததால் கடத்தல்காரர் களுடன் சாப்ளினின் புதல்வியும் நடிகையுமான ஜெரால்டின் சாப்ளினே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்தார். பணம் கொடுக்காத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்சத்தில் ஜெரால்டினின் சகோதரியையும் சகோதரனையும் கொன்று விடப் போவதாக வர்தாஸ் மிரட்டினான். 330.000 பிராங்குகளைக் கப்பமாகக் கேட்ட அவர்கள் பிரச்சினை இழுபடுவதால் 136,000 பிராங்குகளுக்கு இறங்கி வந்தனர். மாற்றமேதுமின்றி அத்தொகையை ஒப்படைக்கத் திகதியையும் நேரத்தையும் குறித்தனர்.

ஆனால் பூதவுடல் கடத்தப்பட்ட தினத்திலிருந்து சார்லி சாப்ளினின் வீட்டுத் தொலைபேசியை ஒட்டுக் கேட்கத் தொடங்கியிருந்தது பொலிஸ். குறிப்பிட்ட தினத்தில் அப்பிரதேசத்தின் 200 தொலைபேசிகளை ஒட்டுக் கேட்ட பொலீஸ் இருவரையும் மடக்கிப் பிடித்தது. வர்தாஸுக்கு நான்கரை வருடக் கடூழியச் சிறையும் சகாவான கனேவுக்கு 18 மாத கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

சேர் சார்லி சாப்ளினின் பூதவுடற் பேழை மீண்டும் அதே கிராமத்தின் எல்லையில் அடர்த்தியான சைப்பிரஸ் மரங்கள் நிறைந்த நெருக்கமான சாலையில் அமைந்துள்ள மையவாடியில் அதே புதை குழியில் அடக்கம் செய்யப்பட்டது. இனிமேல் யாரும் தோண்டியெடுக்காதபடி எல்லாப் புறங்களிலும் சீமெந்துக் கலவையிடப் பட்டது.

சார்லி மீண்டும் ஒரு முறை உயிர் பெற்று எழுந்திருந்தால் தனக்கு நடந்த கதியை வைத்தே நம்மை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் படமொன்றைத் தந்திருப்பார். ஏன் நகைச்சுவை நடிப்பைத் தேர்ந்தெடுத்தீர்கள் என்று ஒரு முறை சார்லி சாப்ளினிடம் கேட்கப் பட்ட போது அவர் சொன்னார்:-

"எனது கண்ணீரை மறைப்பதற்காகத்தான்!"

*14.10.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாத தாள்

எவ்வளவு திட்டமிட்டு இலக்கு வைத்துத் தாக்கிய போதும் சிறு பிள்ளைகள் நிறைந்த அந்த மிஷனரிப் பாடசாலையிலும் சில மோட்டார்க் குண்டுகள் விழுந்து வெடித்தன என்கிறார் கேர்ணல் ஜோன் மன்ஸர். அமெரிக்க ராணுவத்தில் வியட்னாமில் கடமை புரிந்த போது நிகழ்ந்த சம்பவத்தை நினைவு கூருகையில் இவ்வாறுதான் அவர் ஆரம்பிக்கிறார்.

சம்பவத்தில் போதகர்களும் இரண்டொரு சிறார்களும் உயிரிழந்தனர். காயமடைந்த ஏராளமான பிள்ளைகளுள் ஓர் எட்டு வயதுச் சிறுமி ஆபத்தான நிலையில் இருந்தாள். அதுவோர் மருத்துவ வசதிகளற்ற சின்னஞ் சிறிய கிராமம். அமெரிக்க ராணுவத்தின் ரேடியோத் தொலைத் தொடர்பின் மூலம் அக்கிராம மக்கள் அண்மித்த நகரத்திடம் மருத்துவ உதவிக்காக மன்றாடினார்கள். அமெரிக்கக் கடற் படை வைத்தியர் ஒருவரும் ஒரு தாதியும் ராணுவ ஜீப் ஒன்றில் ஒரு வைத்தியருக்குத் தேவையான அளவு மருத்துவ வசதிகளுடன் அவ் விடத்தை வந்தடைந்தனர்.

மிக மோசமாகக் காயமடைந்திருந்த அச்சிறுமி மீது அவர்களது கவனம் சென்றது. அவசர மருத்துவக் கவனிப்புக் குள்ளாகவில்லை என்றால் அதிக இரத்த இழப்புக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாகியிருக்கும் அவள் இறந்து விடுவாள் என்பது புரிந்தது. அச்சிறுமியின் இரத்த வகை கிடைக்க வேண்டும் என்பது வைத்தியர் எதிர் கொண்ட முதற் சவால். அவர்கள் மிகத் துரிதமாகச் செயற் பட்டார்கள். எந்தவொரு அமெரிக்கரிடமும் அவ்வகை இரத்தம் இருக்கவில்லை. ஆனால் அப்பாடசாலையைச் சேர்ந்த காயமடையாத அனாதைச் சிறார்களிடம் அவ்வகை இரத்தம் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L. 11925



வைத்தியர் எதிர்கொண்ட இரண்டாவது சவால் இச்சிறாரிடமிருந்து இரத்தத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுடன் எந்த மொழியில் பேசி விளங்க வைப்பது என்பது. இருந்த போதும் அவர்கள் அனைவரையும் ஓர் மண்டபத்துக்கு அழைத்து மிக எளிதான ஆங்கிலத்தில் வைத்தியரும் தான் கற்றிருந்த பிரெஞ்சுப் பாஷையால் தாதியும் விளக்கமளித்தனர். இதற்கு மேல் தாமதித்தால் அச்சிறுமி இரத்தம் இல்லாமல் இறந்து போவாள் என்பதை பயத்தில் உறைந்து போயிருந்த அச்சிறார்களுக்கு சைகைகள் மூலமும் புரியவைப்பதில் தாதி மிகவும் பிரயத்தனம் எடுத்துக் கொண்டாள். பின்னர் உங்களில் யார் இச்சிறுமியைக் காப்பாற்ற இரத்தம் தரப் போகிறீர்கள் என்று கேட்டாள்.

நீண்ட கணங்கள் கழிந்த பிறகு ஒரே ஒரு பிஞ்சுக் கரம் மேலே எழுந்து கீழிறங்கிற்று. பிறகு அக்கரம் மற்றொரு முறை மேலெழுந்து இறங்கியது. தாதி நன்றி சொன்னாள். அக்கரத்துக்குரியவன் பாதிக்கப் பட்ட சிறுமியின் வயதொத்த ஒரு சிறுவன். பெயரைக் கேட்ட போது ஹெங் என்று சொன்னான். ஹெங் ஒரு மேசையில் படுக்க வைக்கப் பட்டான். இரத்தத்தைப் பெறுவதற்காக அவனது கரம் தொற்று நீக்கப்பட்டு நரம்பில் ஊசி செருகப்பட்டது. அவன் இறுக்கமான அமைதியுடன் காணப்பட்டான்.

சில நிமிடங்களில் அவனிடமிருந்து நடுக்கத்துடன் ஒரு விம்மல் வெளிப்பட்டது. சட்டென தனது முகத்தை மற்றைய கரத்தினால் மறைத்துக் கொண்டான். ஹெங்... உனக்கு வலிக்கிறதா? என்று கேட்டார் வைத்தியர். இல்லை*என்ற பாவனையில் அவன் தலையசைத்தான். ஆனால் சில வினாடிகளில் மீண்டும் ஒரு விம்மல் அவனிடமிருந்து வெளிப்பட்டது. மீண்டும் அவன் தனது அழுகையை மறைக்க முயற்சித்தான். 'ஹெங், கையில் குத்தப்பட்ட ஊசி உனக்கு வலிக்கிறதா' என்று வைத்தியர் அவனைக் கேட்டார். மீண்டும் அவன் இல்லை என்ற பாவனையில் தலையசைத்தான். ஆனால் வெடித்துக் கிளம்பும் விம்மலையும் அழுகையையும் இறுக மூடிய கண்களாலும் வாயினாலும் அவன் அடக்கிக்கொள்ளப் பிரயத்தனப்படுவதை வைத்தியர் கவனித்தார்.

வைத்தியக் குழு, எங்கோ ஒரு தவறு நேர்ந்து விட்டது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானத்துக்கு வந்தது. அதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருந்த வேளை ஒரு வியட்னாமியத் தாதி அங்கு வந்தாள். அவதியுறும் சிறுவனை ஆதரவுடன் பார்த்தாள். நிலைமையை விளங்கிக்கொண்டவளாக அச்சிறுவனை அணுகி வியட்னாமியப் பாஷையில் மிருதுவான குரலில் பாசத்துடன் உரையாடினாள்.

அமெரிக்கர்களைப் பார்த்து அந்த வியட்னாமியத் தாதி சொன்னாள்: - 'தான் இறந்து கொண்டிருப்பதாக ஹெங் நினைக்கிறான். அவன் உங்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறான். அவனது இரத்தம் அனைத்தையும் எடுத்து அந்தச் சிறுமிக்குக் கொடுக்கப் போவதாக எண்ணுகிறான்' என்றாள். 'அப்படியானால் எதற்காக அச்சிறுமிக்கு இரத்தம் கொடுப்பதற்கு அவன் முன்வர வேண்டும்' என்று அமெரிக்கத் தாதி ஆச்சரியத்துடன் வினவினாள். அக்கேள்வியை ஹெங்கிடம் வியட்னாமியத் தாதி கேட்ட போது அவன் சட்டெனச் சன்னமான குரலில் சொன்னான்: -

ஏனெனில் அவள் எனது நண்பி!

*21.10.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைதல்

■ முன்னொரு காலத்திலே ஆபிரிக்காவில் அதிக மக்கள் தொகை கொண்ட ஒரு பெரிய நாடு இருந்தது. அந்த நாட்டை மெபிக் கோமா என்ற அரசன் நீண்ட காலமாக ஆட்சி செய்து வந்தான். அந்த நாட்டின் ஒரு பகுதியில் நீர் கிடையாது. அப்பகுதி பாலைவன நிலப்பரப்புக்கு ஒப்பாக இருந்தது. ஒரு நாள் கடவுள், அரசன் முன் தோன்றி 'மெபிக்கோமா, நீ ஒரு நல்ல அரசன். உனக்குத் தேவையான ஒன்றைத் தரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். நான் உனக்கு ஓர் ஆற்றைப் பரிசாகத் தரப் போகிறேன். நீர்ப் பஞ்சமுள்ள ஒரு நாட்டுக்கு அது நல்லதுதானே? என்று கேட்க, மெபிக்கோமா மிக்க மகிழ்ச்சியுடன் 'மிகவும் நல்லது கடவுளே, நன்றி!' என்று பதில் சொன்னான்.

சில நாட்களின் பின்னர் திடீரென ஓர் ஆறு பெருக்கெடுத்துக் கரைபுரண்டு ஓடிற்று. ஆனால் அந்த ஆறு நீர்வளம் உள்ள பகுதி நோக்கிப் பாய்ந்தது. எந்தப் பிரதேசத்துக்கு நீர்த்தேவை உள்ளது எனக் கடவுளிடம் சொல்லாமல் விட்டு விட்டேனே என்று கவலைப் பட்டான் அரசன். உடனடியாக தனது படையினர் அனைவரையும் கடமையில் ஈடுபடுத்தி நீர்ப் பஞ்சம் நிலவிய பகுதிக்கு ஆற்றைத் திருப்பி விடுவதில் ஈடுபட்டான். அவர்களும் நீண்ட காலமாக ஆற்றைத் திருப்பி விடுவதிலேயே காலத்தைச் செலவிட்டனர். ஆனால் அந்த ஆறு விரைவிலேயே வற்றிப்போய் விட்டது. தனது வாழ் நாளில் ஒரு பகுதியை ஆற்றைத் திருப்பி விடுவதில் கழித்து விட்ட அரசன் ஆறு வற்றியதால் மிகுந்த துக்கத்துக்கும் ஆயாசத்துக்கும் ஆளானான். இறைவனை அழைத்துக் கதறினான்.

கடவுள் அவன் முன் தோன்றினார். 'நீ தந்த ஆற்றை நீயே எடுத்துக் கொண்டது ஏன்?' என்று அரசன் கடவுளிடம் கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளோ 'நான் அப்படிச் செய்யவில்லை' என்றார். 'அப்படியானால் எனக்குத் தந்த ஆறு எங்கே?' என்று அரசன் கேட்டான். 'நீதான் அதைப் பாலைவனத்துக்குப் பருகக் கொடுத்தாய். அந்தப் பிரதேசம் நீரின்றி வரண்டு கிடந்ததை நான் அறிவேன். நீ அறிந்திருக்கவில்லை' என்று கடவுள் பதில் சொன்னார். 'பாலைவனம் அத்தனை நீரையும் உறிஞ்சி விடப் போகிறது என்று தெரிந்திருந்தும் நீ ஏன் எனக்கு எச்சரிக்கை செய்யவில்லை. உனக்கு யாவும் தெரிந்திருந்தும் எனக்கு ஏன் அது பற்றிச் சொல்லவில்லை' என்று அரசன் கடவுளைக் கேட்டான். கடவுள் உற்றுப் பார்த்தார். முழு நாடும் ஒரு முறை அதிர்ந்தது. அவர் சொன்னார், 'மெபிக்கோமா, இதுதான் மனிதர்களாகிய உங்களோடு உள்ள பிரச்சனை. நீங்கள் எதையும் சரியாகப் பெற்றுக்கொள்வதில்லை!'

■ வயதான ஓர் அறபி தன்னிடமிருந்த 18 ஒட்டகங்களில் தனக்கு மிகவும் பிரியமான ஒன்றை மாத்திரம் தனக்கென வைத்துக் கொண்டு ஏனையவற்றைத் தனது மூன்று புதல்வர்களுக்கும் பிரித்துக் கொடுத்து விடத் தீர்மானித்தார். சரியாக அரைவாசியை மூத்த புதல்வனுக்கும் மூன்றில் ஒரு பங்கை அடுத்த புதல்வனுக்கும் ஒன்பதில் ஒரு பங்கை கடைசி மகனுக்கும் எனப் பிரிக்கலாம் என்று எண்ணினார். ஆனால் பதினேழு ஒட்டகங்களை அவ்வாறு பிரிக்க முடியாது போகவே தனக்கென வைத்துக் கொள்ள நினைத்த ஒட்டகத்தையும் மொத்தக் கணக்குடன் சேர்த்துப் பிரிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார். அதன்படி மூத்த மகனுக்கு 9 ஒட்டகங்களையும் இரண்டாவது மகனுக்கு 6 ஒட்டகங்களையும் கடைசி மகனுக்கு 2 ஒட்டகங்களையும் கொடுத்தார். கடைசியில் ஒரு ஒட்டம் மீதமிருந்தது. தனக்கு விருப்பமான ஒட்டகத்தை தானே வைத்துக் கொண்டார். ஓர் அராபியப் பழமொழி சொல்கிறது: - 'உனக்கு விருப்பமான ஒன்றை நீ விட்டுக் கொடுப்பாயானால் அது உன்னிடமே மீண்டு வரும்!'

■ பூவுலகில் மரணித்த மதகுருவானவர் மேலுலகம் சென்ற போது அவருக்கு முன்னால் வேறு ஒருவரை இறைவனின் பணியாள் விசாரித்துக் கொண்டிருந்தார். பூவுலகில் நீ எப்படி உனது வாழ்வைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழித்தாய் என்ற கேள்விக்கு அவன் பதில் சொன்னான். “நான் இலங்கையில் தனியார் பஸ் சாரதியாக இருந்தேன்.” இறைவனின் பணியாள் அவனுக்கு பட்டு நூலில் இணைக்கப்பட்ட தங்கப் பதக்கத்தை அணிவித்து இறைவனின் சந்நிதானத்துக்குப் போ என்று கட்டளையிட்டான். அதன் பிறகு மதகுருவானவர் தன் வாழ்நாளை எப்படிக் கழித்தார் என வினவப்பட்டார். “நான் வாழ் நாள் முழுக்கவும் மக்களுக்கு நல்லதை உபதேசித்தேன்” என்று அவர் சொன்னார். மதகுரு சாதாரண நூலில் இணைக்கப்பட்ட வெண்கலப் பதக்கம் அணிவிக்கப் பட்டு இறைவனின் சந்நிதானத்துக்குப் போகப் பணிக்கப்பட்டார். கேவலம், ஒரு சாரதிக்குத் தங்கப்பதக்கம் மதகுருவானவரான தனக்கு வெண்கலப் பதக்கமா என்று மதகுரு தனது ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

இறைவனின் பணியாள் அவருக்கு இவ்வாறு பதில் தந்தார். “நாங்கள் யாவற்றையும் சரிவரத் தீர்மானித்தே முடிவுக்கு வருகிறோம். நீங்கள் மக்களுக்கு உபதேசித்தது உண்மைதான். உங்கள் உபதேசத்தின் போது அவர்கள் தூங்கி வழிந்தார்கள். ஆனால் அந்தச் சாரதி பஸ்ஸில் ஏறி விட்டாலோ எல்லோருமே நடுநடுங்கி மனமுருகிப் பிரார்த்தித் தார்கள்!”

*28.10.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்குத் தெரு

■ அன்புள்ள சு.மா. அவர்களுக்கு, நலம். நலமே நிறைக. தங்களது 'மரத்தின் மேல் ஒரு வெள்ளைப் பூனை' புதினத்தைப் படித்து முடித்த கையோடு இதனை எழுதுகிறேன். வாசிக்கத் தொடங்கியதும் முடிக்காமல் மூடிவைக்க முடியாது போய் விட்டது. அத்தனை அற்புதமான நடை. தங்களது இந்த நூலைத் தாண்டிய இன்னொரு புதினம் வெளிவருவதற்கு நூறு ஆண்டுகளாவது எடுக்கும் என்பது எனது நம்பிக்கை. உண்மையாகச் சொல்லுகிறேன், புல்லரித்துப் போய் விட்டேன். தமிழ் இலக்கிய உலகத்தின் அழகான அடையாளம் நீங்கள். எவ்வளவு அற்புதமான படைப்பு. இம்மாதிரியான சிந்தனைகள் உங்களுக்கு மாத்திரம்தான் சாத்தியம். உங்களது இடத்தை எந்தக் கொம்பனும் நெருங்கவே முடியாது என்பது எனது அறுதியும் இறுதியுமான தீர்மானமாகும். நீங்கள் வாழும் காலத்தில் வாழ்கிறோம் என்பதே எமக்கெல்லாம் பெருமை....!

இத்துடன் எனது சிறுகதைகள் அடங்கிய 'சீனத்துப் பட்டு' என்ற நூலை அனுப்பி வைக்கிறேன். இது எனது முதல் நூல். பலராலும் பாராட்டப்பட்ட கதைகள். கடந்த இருபது வருடங்கள் எழுத்துலகில் நான் சாதித்தவை. இக் கதைகளைப் படித்த பேராசிரியர் க.மு. அவர்கள் என்னைப் பாராட்டி ஏழு பக்கத்தில் கடிதம் எழுதியிருந்ததை உங்களுக்குச் சொல்ல வேண்டும். உங்கள் நாட்டுக்கு வரும் வாய்ப்புக் கிடைத்தால் அதைக் கொண்டு வந்து உங்களுக்கு நிச்சயம் காட்டு வேன். தாங்கள் நூலை வாசித்து விட்டு தங்களது மேற்பார்வையில் வெளிவரும் 'கோல நடை' சஞ்சிகையில் ஒரு சிறிய குறிப்பை எழுதுவீர்களானால் நான் அதனை வாழ்வில் கிடைத்த பெரும் பேறாகக் கருதுவேன்...... இப்படிக்கு - மு.அ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ அன்புசால் நண்பருக்கு, நானும் எனது குடும்பத்தினரும் நலம். நீங்கள் எப்படி? கடிதம் ஒன்றை எழுதிக் கன நாள் ஆகி விட்டது. வேலைப் பளுவும் தொழில் சிக்கலுமாக ஓடித் திரிந்ததில் மூன்று மாதங்களுக்கு முன் நீங்கள் அனுப்பியிருந்த கடிதத்துக்கு உடனே பதில் எழுத வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் அங்கு வந்த போது நீங்கள் அளித்த உபசாரம் இன்னும் மனசெல்லாம் நிறைந்திருக்கிறது. நமது இலக்கிய நண்பர்கள் எல்லாரும் நலமாயிருக்கிறார்களா? உங்களது இலக்கிய அமைப்பின் இவ்வருட வேலைத் திட்டமெல்லாம் எப்படிப் போகிறது. யார் இல்லாவிட்டாலும் நீங்கள் ஒருவர் போதாதா அதைத் திறம்பட நடத்திச் செல்வதற்கு? உங்களது உற்சாகமும் அயராத உழைப்பும்தான் இன்னும் அந்த இலக்கிய அமைப்பை உயிருடன் வைத்திருக்கிறது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

அங்கு வெளிவரும் 'கோல நடை' சஞ்சிகை கடந்த வருடம் வெளிவந்த சிறந்த சிறுகதைத் தொகுதிகளைத் தெரிவு செய்து பரிசு வழங்கப் போவதாக எழுதியிருந்தீர்கள். போட்டிக்கான அறிவிப்பு எப்போது வெளியாகும் என்று தெரியவில்லை. அதையும் பெரு மனது கொண்டு நீங்கள்தான் தெரிவிக்க வேண்டும். எது எப்படியாக இருந்த போதும் எதிர்வரும் மாதம் 15ம் திகதி அங்கு வருவதற்குத் திட்டமிட்டுள்ளேன். அங்கு வருவதன் முக்கிய நோக்கம் எனது சிறுகதைத் தொகுதியான 'சீனத்துப் பட்டு' என்ற நூலை அங்கு வெளியிட வேண்டும் என்ற ஆர்வமேயாகும். இலங்கையின் இலக்கியத்தின் போக்கை அதன் வேகத்தை அங்குள்ள நண்பர்கள் எனது நூலின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ளும் வாய்ப்பும் உருவாகுமல்லவா? தவிர உங்களது அமைப்பு கடல் கடந்த எம்மைப் போன்ற படைப்பாளிகளைக் கண்ணியம் செய்ததாகவும் அமைந்து விடும். எனவே அதற்கான ஏற்பாடுகளை உங்களது இலக்கிய அமைப்பின் மூலம் மேற் கொண்டு உதவுவீர்கள் என்று அன்புடன் எதிர்பார்க்கிறேன். 'கோல நடை' சஞ்சிகையுடன் நெருக்கமுள்ள இருவரைப் பேச்சாளர்களாகச் சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம். பத்திரிகையாளர்களையும் தவறாமல் அழைத்து விடுங்கள். நான் அங்கு வரவுள்ள வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிக்கான அறிவிப்பு வருமாக இருந்தால் நூலை நேரிலேயே ஒப்படைத்து விட முடியும். தாமதமாகும் பட்சத்தில் உங்களிடம் தந்து விட்டு வந்தால் கொடுக்காமலா விட்டுவிடுவீர்கள்?

எத்தனை முறை அழைத்தும் இலங்கைப் பக்கமே தலை காட்டமாட்டீர்கள் போல் தெரிகிறது. இங்கு அவசியமான நண்பர்களைச் சந்திக்கச் செல்லும்போது தயிர்ப்பானை, விரால் கருவாடு, நெய் மற்றும் தேன் போத்தல்களைக் கொண்டு செல்வது வழக்கம். கடல் கடந்து கொண்டு வரக் கூடியவையா இவை? அங்கு வரவுள்ள சரியான திகதியை அடுத்த மடலில் அறிவிப்பேன். நன்றி. அன்புடன்- மு.அ.

■ சில மாதங்களின் பின் மு.அவின் 'சீனத்துப் பட்டு' பரிசுக்குரிய நூலாகத் தெரிவானதைப் பத்திரிகைகள் செய்தியாகப் பிரசுரித்திருந்தன. 'இளந்தமிழ் இளவரசு' என்ற பட்டம் வழங்கப்பட்டு அயல் நாட்டு இலக்கிய அமைப்பினால் போர்த்தப்பட்ட பொன்னாடையுடன் சிலருக்கு நடுவில் மு.அ. கம்பீரமாகப் போஸ் கொடுத்த படி நின்றிருந்த புகைப்படமும் சேர்த்தே பிரசுரமாகியிருந்தது.

**04.11.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் கோடுகள்

லண்டன் செல்ஸீ பிரதேசத்தின் ஐவ்ஸ் தெருவில் அமைந்திருந்தது குவைத்தின் 'அல் கப்பாஸ்' பத்திரிகையின் பிராந்தியக் காரியாலயம். 1987ம் ஆண்டு ஜூலை 22ம் திகதி அக்காரியாலயத்திலிருந்து வெளியே வரவிருந்த ஒருவருக்காகத் துப்பாக்கியை மறைத்துப் பிடித்தபடி தெருவில் காத்திருந்தான் ஓர் இளைஞன். 50 வயது மதிக்கத்தக்க அந்த மனிதர் தெருவைத் தொட்ட சில நொடிகளில் அவரது முகத்தின் மீது துப்பாக்கிச் சூடு நிகழ்ந்தது. கீழே சாய்ந்த அந்த மனிதர் உலகப் புகழ் பெற்ற கேலிச் சித்திரக்காரரர் நஜி அல் அலி.

அவரது கூடார்ந்த சித்திரங்களைப் பார்க்கும் ஆவலில் எப்போது பொழுது புலரும் என்று மத்திய கிழக்குக் காத்துக் கிடந்ததுண்டு. எழுத்தறிவற்ற அறபிகளின் அரசியல் ஆசிரியனாக, அடக்கு முறைக்குச் சிரம் பணியாத இளைஞர்களின் வழிகாட்டியாக, சமரசஞ் செய்ய நினைக்கும் அரசியல் தலைவர்களுக்கு சிம்ம சொப்பனமாக, அடக்குமுறையாளர்களின் கண்களில் விழுந்த ஒரு கந்தலாக, துரத்தப்பட்ட மக்களின் ஆன்மாவாகவெல்லாம் அவர் தோற்றங் கொண்டிருந்தார். இழந்த மண்ணுக்கான போராட்டத்தை, அதனை அழித்தொழிப்பதற்கான வஞ்சகச் சூழ்ச்சியை, அதன் மீது நடத்தப்பட்ட அரசியலை மிகச் சாதாரண மகனும் புரிந்து கொள்ளும் விதத்தில் கூடார்ந்த சித்திரத்தில் உலகத்தின் உணர்வுக்கும் வாழ் நிலத்தை இழந்தோரின் எதிர்பார்ப்புக்கும் முன்னால் பத்திரிகைகளில் பரிமாறினார். நஜி அல் அலி 'பலஸ்தீனத்தின் மல்கம் எக்ஸ்' என்று சொல்லும் எழுத்தாளர் ஆமினா இஷ்தாயி, பலஸ்தீனர்களின் எண்ணத் துடிப்பாக விளங்கிய அவரை 'இன்றும் மத்திய கிழக்கு மக்களின் இதயத்தில் வாழும் பேறு பெற்றவர்' என்று சொல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹன்ஸல்லா' என்ற ஓர் ஏழைச் சிறுவன் மூலம் உலகத்தின் ஒட்டுமொத்த மனச்சாட்சியையும் பலஸ்தீனத்தின் துயரின்பால் அவரால் திருப்ப முடிந்தது. அவரது கூடார்ந்த சித்திரத்தில் அவன் ஓர் அங்கமாக ஏன், அதன் உயிர்த்துடிப்பாக இடம் பெற்றான். 'ஹன்ஸல்லா அழகானவனோ கெட்டவனோ சத்தூட்டமிக்க சிறுவனோ அல்லன். அகதி முகாம்களில் உள்ள அணிவதற்குச் செருப்புக் கூட இல்லாத ஆயிரக் கணக்கான, சிறார்களில் ஒருவன். நிலவும் எதிர்மறையான சூழலை நிராகரிப்பவன்' என்று, தான் சிருஷ்டித்த அந்தப் பத்து வயதுச் சிறுவனைப் பற்றிச் சொல்லும் நஜி அல் அலி, 'இழந்து போன எனது பிள்ளைப் பருவத்தின் அடையாளம் அவன்' என்று விபரிக்கிறார். ஆனால் அவரது சித்திரங்களைப் பார்ப்போர் உலகத்தின் மனச் சாட்சியாக, ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனாக, துயர்கொண்ட மக்களின் கண்ணீர்த் துளியாக ஹன்ஸல்லாவை அடையாளங் கொள்ள முடியும்.

1938ம் ஆண்டு பலஸ்தீனின் வடபுலத்தில் உள்ள அல் ஷாஜரா என்ற இடத்தில் பிறந்தவர் நஜி அல் அலி. 1948ம் ஆண்டு பிறந்த மண்ணை விட்டுத் துரத்தப்பட்டு லெபனானின் அகதி முகாமுக்குப் பெற்றோருடன் சென்று வாழ நேர்ந்தது. பின்னர் அல் ஜாபரியா கல்லூரியில் வரைதல் கற்பித்த நஜி அல் அலி 1961ம் ஆண்டு நண்பர்களுடன் சேர்ந்து 'அல் ஷர்க்கா' என்ற பத்திரிகையை வெளியிட்டார். எழுத்தாளரும் கவிஞரும் அரசியல் செயற்பாட்டாள ருமான கஸ்ஸான் அல் கனபானி வெளியிட்ட 'அல் ஹூர்ரிய்யா'வில் அலியின் கூடார்ந்த சித்திரம் முதன் முதலாகப் பிரசுரமானது. லெபனானின் சிறைச் சுவர்களில் அலியால் வரையப்பட்ட சித்திரங் களைப் பார்த்து அவருடன் அங்கிருந்த கனபானி அவரை ஊக்குவித்த தாக அலி நன்றியுடன் ஞாபகிக்கிறார். (கனபானி 1971ல் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்)

நஜி அல் அலி 1963ல் குவைத்தின் 'அல் தாலி' பத்திரிகை யிலும் 1968ல் 'அல் சியாஸா' பத்திரிகையிலும் 1974ல் லெபனானின் 'அல் ஸாபிர்' பத்திரிகையிலும் பணிபுரிந்தார். 1982ல் லெபனானில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் பின்னர் 1983ல் மீண்டும் குவைத் சென்று 'அல் கப்பாஸ்' பத்திரிகையில் இணைந்தார். அங்கு தனது உயிருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவாதமற்ற சூழலினால் அப்பத்திரிகையின் சர்வதேச வெளியீட்டில் பணிபுரிய லண்டன் சென்றார். "நான் 'அல் ஸாபிர்' பத்திரிகையில் பணி புரிந்தபோது படையினரின் சுற்றி வளைப்பு, இஸ்ரேலியரின் ஆக்கிரமிப்பு ஆகியவற்றைப் பேனாவுடனும் தூரிகையுடனும் எதிர்கொண்டேன். நான் பயப்படவுமில்லை; சரணடையவுமில்லை" என்று சொல்கிறார் நஜி அல் அலி.

சில காலங்களுக்கு முன்னர் அமெரிக்காவில் வாழும் இணைய எழுத்தாளரான பலஸ்தீனப் பெண்மணி ஒருவருடன் இணையத்தில் உரையாடிக் கொண்டிருந்த போது நஜி அல் அலி பற்றி விசாரித்தேன். அவரை நான் அறிந்திருப்பதையிட்டு அப்பெண் கொண்ட ஆச்சரியத்தை கணனியே தாங்காத டெரா பைட்களாக உணர்ந்தேன். இது என்ன ஆச்சரியம் - நஜி அல் அலியின் சித்திரங்களுக்கு எனது நாட்டில் ஒரு கவிஞர் கவிதைகள் படைத்து நூலாகவும் வெளியிட்டுள்ளார் என்று சொன்ன போது அவர் கொண்ட ஆச்சரியமும் மகிழ்ச்சியும் சொல்லில் அடங்காதவை. நஜி அல் அலியை இங்கு தமிழில் அறிமுகப்படுத்தியவர் நண்பர் கலைவாதி கலீல். எண்பதுகளின் பிற்பகுதியில் வெளிவந்த 'பாமிஸ்' மாசிகையில் அலியின் சித்திரங்களுக்கு அவர் படைத்த கவிதைகளைத் தொகுத்து 1999ம் ஆண்டு 68 பக்கக் கையடக்கக் கவிதை நூலாக வெளியிட்டார்.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர் கோமா நிலையில் இருந்த நஜி அல் அலி 29.08.1987 அன்று காலமானதும் லண்டன் புறநகர்ப் பகுதியில் உள்ள புறூக்வூட் முஸ்லிம் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டார்.

பலஸ்தீனப் பெண் கவி பத்வா துகானின் கவிதைகளைப் படித்த இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த மோஷே தயான் இது இருபது கமாண்டோக்களுக்கு சமமானது என்று ஒரு முறை தெரிவித்தாராம். நஜி அல் அலியின் சித்திரங்கள் அதனை விடவும் தாக்கமானவை என்பதை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

*18.11.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மாவின் காவலர்கள்

சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங் களை வாரிக் குவித்த அமெரிக்க ஓட்ட வீராங்கனை மேரியன் ஜோன்ஸ் தான் ஊக்கமருந்து பாவித்ததை ஒப்புக் கொண்டு அப்பதக்கங்களைத் திரும்ப ஒப்படைத்த விடயம் ஒரு பெரும் சங்கதியாக ஊடகங்களில் உலா வருவதைப் பார்க்கிறோம். தப்புக்களும் தவறுகளும் இல்லாமல் மனித வாழ்வு கிடையாது. ஒரு சாதாரண மனிதன் பற்றிய செய்தி எப்படி ஊடகங்களுக்கு முக்கியம் இல்லையோ அது போலவே அவன் / அவள் குறித்த தப்புக்களும் முக்கியத்துவம் பெறுவதில்லை. ஆனால் பிரபலம் பெற்று விட்ட ஒருவர் தப்பு இழைத்து விட்டால் அவரது கதி என்னவாகும் என்பதற்கு மேரியன் ஓர் எடுத்துக் காட்டு. இவ்வாறான ஓர் சர்ச்சையில் கிரிக்கட் ஆட்டக்காரர் ஷேர்ன் வோன் மாட்டிக் கொண்ட போது அது அம்மா தந்த மருந்து என்று மழுப்பியது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவ்வாறில்லாமல் மேரியன் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதன் மூலம் அவர் தான் உண்மையான ஒரு வீராங்கனை என்பதை நிரூபித்திருக்கிறார்.

குற்றம் நிரூபிக்கப்படும் போது அதை எவ்வாறு ஒப்புக் கொள்ளாமல் விட முடியும் என்று ஒரு கேள்வி எழுவது நியாயமானது. தப்புச் செய்தவர்கள் குற்றங்களை ஒப்புக் கொள்வது மிக அரிது என்பதையும் சில வேளைகளில் குறிக்கப்பட்ட குற்றத்துக்கு எவ்விதத் திலும் சம்பந்தமற்றவர்கள் தண்டனை பெற்று விடுவதையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம். தான் செய்த ஒரு குற்றத்தை மறைப்பதற்கும் தனது பெயரைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் மற்றவர்கள் மீது அதனைப் பாரப்படுத்தித் தப்பித்துக் கொள்ள முயல்வதையெல்லாம் நம்மால் காண முடிகிறது. உலக வரலாற்றில் பெருங் கொடுங்கோலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக விளங்கிய கம்போடியாவின் பொல்பொட்டும் சிலியின் பினோச்சேயும் தாம் மனித குலத்துக்கு எதிராக நிகழ்த்திய குற்றங்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

தனது குற்றத்தை ஏற்றுக் கொள்வதற்கும் தன்னால் ஏற்பட்டு விட்ட ஒரு தவறுக்கு வருந்துவதற்கும் ஒரு மனிதன் தயாராகி விட்டான் என்பது அவன் உயர்ந்த மனோ பக்குவத்தைப் பெற்றுவிட்டான் என்று ஆகிவிடுகிறது. இந்த நிலைக்கு எல்லோராலும் இலகுவில் வந்துவிட முடிவதில்லை. இவ்வாறான ஒரு தீர்மானத்துக்கு வந்துவிடும் ஒருவர் எந்தச் சவாலையும் அவமானத்தையும் எதிர்கொள்வதற்கு அல்லது தாங்கிக் கொள்வதற்கு உடனடியாகவே தன்னைத் தயார்படுத்திக் கொள்பவராகிறார். இன்னொரு வகையில் சொல்வதானால் உண்மை யைச் சொல்வதற்காகவும் உண்மையை எவ்விதத் தயக்கங்களுமின்றி ஏற்றுக் கொள்வதற்காகவும் தனது சுயமரியாதையை இரண்டாம் பட்சமாக, ஒரு துச்சமான அம்சமாகக் கருதி விடுகிறார்.

இந்த வகையில் என்னால் மறக்க முடியாத நபராக விளங்குப வர் தென்னாபிரிக்கக் கிரிக்கற் அணியின் தலைவராக இருந்த ஹன்சே குரென்யே ஆவார். கிரிக்கட்டில் விளம்பரமும் படாடோபமும் பணமும் புரளத் தொடங்கி விட்ட நிலையில் அவர் தன்னை அதில் சம்பந்தப்படுத்திக் கொண்டது தெரிய வந்தபோது எந்தவித மறுப்பும் இன்றி வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டார். கிரிக்கற் சூதாட்டத் தில் சம்பந்தப்பட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட பல கிரிக்கற் ஆட்டக்காரர்கள் அது குறித்து வாயே திறக்காமல் இன்று வரை மௌனமாக வாழ்ந்து வருகிறார்கள். தங்களது செல்வாக்கைப் பயன் படுத்தி மேலும் செய்திகள் பரவ விடாமல் அடக்கி வாசிக்கும்படி செய்திருக்கிறார்கள். ஹன்சே குரேன்யேவுக்கும் அவ்வாறு செய்திருக்க முடியும். அல்லது இல்லை என்று மறுத்துக் கொண்டேயிருந்திருக்க வும் முடியும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. உலகம் முழுக்கவும் அறியப்பட்ட ஒரு விளையாட்டு வீரராக சிறப்பான ஓர் அணியின் தலைவராக விளங்கிய அவர் தனது தலைமைத்துவம் குறித்தோ தனது பெயர் அழுக்குப்படுவது குறித்தோ கவலைப்பட வில்லை. மாறாக உண்மை என்பது தன்னால் அழுக்கடைந்து விடக் கூடாது என்று விரும்பினார். எனவேதான் தனது குற்றத்தை ஒப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்.

அவரது மனோபலம் என்னைக் கவர்ந்திருந்தது. தான் வாழ்ந்திருந்த காலங்களில் வியர்வையும் விடாமுயற்சியும் கொண்டு அவர் பெற்ற உயர்ந்த ஸ்தானத்தை ஒரு நொடியில் உதறிவிடச் செய்தது எது என்று அடிக்கடி நான் சிந்தித்துப் பார்த்ததுண்டு. தன் பெயரை, தனது புகழை இழந்து அவர் தனது ஆத்மாவைக் காப்பாற்றிக் கொண்டார். அதிலேயே உண்மையான பலமும் அமைதியும் இருப்பதாக அவர் உணர்ந்திருந்தார். அதற்காகவே தனது வி.ஐ.பி ஸ்தானத்தை துறந்தார். பணத்துக்காக, புகழுக்காக, பெண்ணுக்காக எவையெவற்றையோவெல்லாம் இழந்த பலரை நாம் வரலாறு நெடுகிலும் கண்டு வந்திருக்கிறோம். ஆனால் உண்மையை, தனது ஆன்மாவின் அமைதியைக் காப்பாற்றுவதற்காக தனது முக்கியத் துவத்தை இழந்தவர்களாக மிகச் சிலரையே நாம் அடையாளம் காணலாம். அவர்களில் ஒருவராக ஹன்சே குரேன்யே நிமிர்ந்து நிற்கிறார். இவற்றையெல்லாம் தாண்டி அவர் என்னில் ஆதிக்கம் செலுத்துவதற்கு மற்றொரு காரணம் குற்றத்தை ஏற்றுக் கொண்ட சில நாட்களில் அவருக்கு விமானப் பயணத்தில் நேர்ந்த துயரம் மிகுந்த மரணம்.

குற்றங்களை சிறியதாக, பெரியதாக எல்லோரும்தான் செய்கிறார்கள். அகப்பட்டவர் மாத்திரம் சுட்டப்படுகிறார். சுட்டுபவர் களெல்லாம் அகப்படாதவர்கள். சுட்டப்படுபவர் குற்றவாளியாகக் குறுகி நிற்கிறார்; சுட்டுபவர் மகாத்மாவாக மாறிவிடுகிறார்.

ஆனால் குற்றத்தை ஒப்புக் கொண்ட ஒருவர் மீது விரல் நீட்டுவது ஊனமுற்ற ஒருவரைப் பழிப்பதற்கு ஒப்பான மனிதாபிமான மற்ற கொடுஞ் செயலாகும்.

*25.11.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை வாசல்

இந்தப் பத்தியை வாசிக்க ஆரம்பிக்கும் யாரொருவரும் இந்தப் பத்தியின் இறுதியில் இருக்கும் கவிதை வரிகளை அவசரப்பட்டு முதலில் வாசித்து விட வேண்டாம் என்று விண்ணப்பம் வைக்கிறேன்.

அண்மையில் வாசித்த ஓர் இலக்கியச் சிற்றேட்டில் ஓர் அம்சத்தில் உள்ளடங்கியிருந்த இரண்டு வரிகள் என் கவனத்தை ஈர்த்தன. 'வேப்பமரத்தடியில் சந்தித்தோம், அது இனிப்பானது. கரும்புத் தோட்டத்தில் பிரிந்தோம், அது கசப்பானது. இந்த இரண்டு வசனங்களும் கவித்துவம் கொண்டவை. இரண்டு வரிகளையும் நான்காகப் பிரித்துப் போட்டால் ஒரு புதுக் கவிதையாக மாறிவிடும். இந்த வரிகளை இன்னும் சற்று வித்தியாசமாகச் சொல்வதானால் இவ்வாறும் எழுதிக் கொள்ளலாம்:-

வேம்படியிலும் இனித்தன
நமது சந்திப்புக்கள்
கரும்புச் சோலைக்குள்ளும் கசந்தது
நமது பிரிவு

சற்று ஓசையுடனான கவிதையாக இதனைப் பின்வருமாறு இலகுவாக மாற்றிக் கொள்ள முடியும்.

கசக்கும் வேம்பின் காலடியே நம்
கண்கள் கலந்ததடி - அக்
காலம் இனித்ததடி
கரும்புத் தோப்பில் கனவு கலைந்தது
கசந்து போனதடி - வாழ்க்கை
கவலை நிறைந்ததடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைப் படைப்பாளிகள் ஒவ்வொருவருக்கும் இயல்பான ஒரு வெளிப்பாட்டு முறை உள்ளது. அவரவருக்கு குறித்த விடயத்தை வெளிப்படுத்த வந்து விழும் சொற்களுக்கும் வெளிப்பாட்டுக்கும் ஏற்ற வகையில் ஒரு கவிதை உருவாகி விடுகிறது. யாப்பிலக்கணக்காரர் ஒருவரிடம் விடயத்தைச் சொன்னால் இதனை ஒரு வெண்பாவில் சொல்லி விட்டு நடையைக் கட்டுவார். இந்த வரிகள் சொல்வதை இனி வெண்பாவில் பார்ப்போம்.

விரும்பி விழிமலர்ந்தோம் வேம்படியில் அன்பால்
அரும்பி இனித்ததுவே காதல் - கரும்புவிளை
தோட்டத்தில் நின்று துயருடன்பின் நாம் பிரிந்தோம்
வாட்டக் கசக்கிறதே வாழ்வு!

மேற்குறித்த வெளிப்பாட்டு முறைகளில் எந்தச் சிக்கலும் இல்லாமல் கவிதை சொல்வதைச் சகலராலும் புரிந்து கொள்ள முடியும். பரந்த வாசிப்புக்கு வசதியாக அதாவது சகல திறத்தாராலும் ரசிக்கக் கூடியதாக ஒரு கவிதை தனது வெளிப்பாட்டைக் கொண்டிருக்குமானால் அது வெற்றி பெற்று விடுகிறது.

நவீன கவிதை என்ற பெயரில் தற்காலத்தில் ஆங்காங்கே வெளிவருபவை ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளும் எல்லைக் குள்ளேயுமே சுற்றிச் சுற்றி வருகின்றன. நாம் மேற்சொன்ன வரிகள் சொல்லும் விடயத்தை ஒரு நவீன கவிதையாளர் எவ்வாறு சொல்வார் என்று பார்ப்போம்.

தித்திப்பு விரியும்
நமதான எதிர்கொள்ளல்கள்
கசப்பு விருட்ச ஸ்படிக நிழலில்
கசந்துருகும் மோனத் தகிப்பில்
உனதும் எனதுமான துயரச் சிறகடிப்பு
சீனித் தோப்பில்

ஆரம்பத்திலே நமது விண்ணப்பத்தை மீறியவர்கள் குழப்பத்துடன் இப்பத்தியை மீண்டும் முதலிலிருந்து வாசிக்கத் தொடங்கியிருப்பார்கள். திரும்பவும் முதலிலிருந்து வாசிக்க நேர்ந்ததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்குஞ் சொல்ல வேண்டாம்.

அப்படிச் சொன்னீர்களானால் நவீன கவிஞர்கள் உங்களுக்குக் கவிதை தெரியாது என்று சொல்லி விடுவார்கள்.

*02.12.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லச் சாகும்...

இலக்கியமும் ஊடகமும் ஏற்படுத்திய இணைப்பில் ஒரே அலை வரிசையில் தொடர்புற்றிருக்கும் நண்பரும் நண்பியும் நானுமாக எனது காரியாலயத்தில் ஓய்வு நாள் ஒன்றில் பலதும் பத்துமாகக் கதைத்துக் கொண்டிருந்தோம். (இலக்கியவாதிகளில் அநேகமானோர் தங்களையே தாங்கள் கருதுவது போல இன்றைய திகதியில் இலங்கை யில் இலக்கியத்தில் எங்கள் மூவரையும் விடப் பெரிய கொம்பு கொண்டவர்கள் வேறு யாரும் கிடையாது என்று எங்களையே நாங்கள் கிண்டலடித்துக் கொள்வது வழக்கம்.) இடையில் இயற்கை அழைப் புக்காக எழுந்து சென்று திரும்பிய நண்பர் சிரித்துக் கொண்டே உங்கள் காரியாலய கழிவறைக்குள் தமிழில் பிழையாக எழுதப்பட்டிருக் கிறதே... நீங்கள் கவனிக்கவில்லையா? என்று கேட்டார். கேள்வி தொடுத்த பாணியிலேயே கிண்டல் இருந்தது.

அக்கழிவறைக்குள் *பாவித்த பின் நீரை அலுத்தவும* என்ற கணனி அச்சு அறிவிப்பு ஒட்டப்பட்டிருந்தது. நண்பர் அதைச் சுட்டிக் காட்டுவதற்கு முன்னர் நான் அதனை அவதானித்த போது அதிர்ந்து போனேன். அதைத் திருத்திச் சரியான முறையில் ஒட்ட வேண்டும் என்று நினைத்துக் கொண்டு வெளியே வந்தாலும் வந்து கதிரையில் அமர்வதற்குள் வேறு விடயங்களில் கவனம் சென்று விடுவதால் மறந்து போய்விடும். மற்றொரு தினம் என்னையே நான் கோபித்துக் கொண்டு பேனாவை உருவி அவ்வெழுத்துக்களில் முனையைப் பதித்தேன். பிழையாக இதைக் கணனியில் தயாரித்தவருக்கு காரமாக ஒரு சொல்லை எழுதி விடு என்று எனக்குள் இருந்த சாத்தான் தூண்டினான். சரியோ பிழையோ கழிவறைக்குள் அவ்வாறு எழுதுவது நல்லவர்கள் செய்யும் காரியமல்ல என்று மனச்சாட்சி சொன்னது. கடைசியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சி வென்றது. குத்திய பேனாவால் 'லு' வை மட்டும் கீறி விட்டு அதைத் திருத்தி எழுதி ஒட்ட வேண்டும் என்று எண்ணியபடி வந்து கதிரையில் அமர்ந்ததும் மீண்டும் மறந்து போனேன்.

நண்பர் அதை ஞாபகப்படுத்திய அடுத்த தினமே இதை ஏற்கனவே கணனி அச்சுச் செய்து ஒட்டிய நபரைப் பிடித்துத் திருத்தி ஒட்டிய பிறகு ஒரு நீண்ட கால முயற்சியில் வெற்றி பெற்று விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. இதே போல பெயர்ப்பலகை ஒன்றைத் திருத்தியது இப்போதும் ஞாபகத்தில் இருக்கிறது. ஆண்டு ஞாபகம் இல்லை. இலங்கையில் முதன் முதலாக சாஃப் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகியிருந்த நிலையில் சுகததாஸ உள்ளக அரங்கு சர்வதேசப் போட்டிகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டு முடிந்திருந்தது. அந்த அரங்கு அமைந்திருந்த பிரதேசத்திலேயே நானும் விடுதியொன்றில் வசித்து வந்தேன். தவிர, நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் பலவற்றுக்குத் தமிழில் நானும் ஒரு நேர்முக வர்ணனையாளர்(?). விழா ஆரம்பமாவதற்கு முதல் தினம் அவ்வீதியால் செல்கையில் புதிதாக அமைக்கப்பட்ட உள்ளக அரங்குக்கான பெயர்ப்பலகை செப்பு எழுத்துக்களால் மிக அழகாகத் தயார் செய்யப்பட்டிருந்தது. அதில் ***சுகததாஸ உள்ளக அரங்கு நீச்சற் தடாகமும*** என்றிருந்தது. இதிலுள்ள பிழையைச் சுட்டிக்காட்டி இது 'சுகததாஸ உள்ளக அரங்கும்' என்று வரவேண்டும் என்று அங்கு தென்பட்ட ஒருவரிடம் நம்பிக்கை யீனத்தோடு சாதாரணமாகத்தான் சொல்லி விட்டு வந்தேன். அது திருத்தப்படும் என்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை.. ஆனால் அடுத்த தினம் விழா ஆரம்பமாகும் நேரம் பார்த்த போது, திருத்தங்கள் நடைபெற்ற வடுவே இன்றி 'சுகததாஸ உள்ளக அரங்கும் நீச்சற் தடாகமும்' என்று அழகாக அமைக்கப்பட்டிருந்தது.

அறிவித்தற் பலகைகள், வீதிகளின் பெயர்கள், பேருந்துகளில் உள்ள ஊர்ப்பலகைகள் போன்றவற்றில் ஏராளமான தமிழ்ப் பிழைகளை நாளாந்தம் கண்டு வருகிறோம். இவற்றைப் பெரும்பான்மையினர் வேண்டும் என்று செய்கிறார்கள் என்று நாம் தப்பான கற்பிதத்தைக் கொண்டுள்ளோம் என்பதே எனது அபிப்பிராயமாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அநேகமாகவும் பெரும்பான்மையினர் எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பேசும் ஒருவரின் உதவியை இவ்விடயத்தில் நாடுவது வழக்கம். அந்தச் சீமானோ சீமாட்டியோ தமக்குத் தெரிந்த தமிழில் எழுதிக் கொடுப்பதனாலேயே பெரும்பாலும் இத்தவறுகள் நேர்கின்றன. தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களாலேயே தமிழ் எப்படிச் சிதைக்கப்படுகிறது என்பதற்கு நான் உதாரணங்கள் தரத் தேவையில்லை.

அண்மையில் ஒரு பஸ் வண்டியின் ஊர்ப் பலகையில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் சரியாக எழுதப்பட்டுத் தமிழில் சம்பந்தா சம்பந்தமற்ற எழுத்துக்களும் குறியீடுகளும் இருந்தன. யாரோ ஒரு மேதாவி கணனியில் ஆங்கிலப் பெயரை அல்லது சிங்களப் பெயரை அப்படியே தமிழ் எழுத்துக்கு மாற்றியிருந்ததனால் வந்த வினை இது. இந்த நாட்டின் இனப்பிரச்சினை ஒரு வேளை தீர்த்து வைக்கப்பட்டு விடலாம். ஆனால் இவ்வாறான பிரச்சினைகளை எப்போதாவது முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்று நான் நம்பவில்லை.

காரியாலயக் கழிவறையில் அறிவிப்பு ஒட்டிய நபரிடம் அப்பிழையைச் சுட்டிக் காட்டித் திருத்தினேன் என்று சொன்னேன் அல்லவா? அவர் அதைச் சரியாகச் செய்து விட்டு என்னிடம் வந்து கேட்டார்: - "பிழை கண்டு பிடித்த நபர் கழிவறையைப் பயன்படுத்தி விட்டு நீரை அழுத்தினாரா என்பதை நீங்கள் அவதானித்தீர்களா?"

*09.12.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லஹில்ல லாஹில்லா...

"முகத்தை எப்போதும் மூடி வைக்காதே - எனது நெஞ்சத்தில் முள்ளைத் தைக்காதே" என்று ஒரு பாடல் காற்றலைகளில் வந்து நம் கவனத்தைக் கவர்கிறது. இந்தி மொழி வசனங்களுடன் ஆரம்பமாகும் இப்பாடல் பற்றி விசாரித்ததில் யுவன் சங்கர் ராஜாவின் இசையில் ஹரிசரண் குரலில் 'தொட்டால் பூ மலரும்' என்ற படத்தில் இது இடம் பெற்றுள்ளது என்றறிய வந்தேன். பாடல் இனிமையாகத்தான் இருக்கிறது. இந்தப் பாடலில் "அரபு நாடே அசந்து நிற்கும் அழகியா நீ - உருதுக் கவிஞன் ஓமர் கையாமின் கவிதையா நீ" என்று இடம் பெற்றுள்ள வரிகள்தாம் என்னை இதைப்பற்றி எழுதத் தூண்டிற்று.

கியாஸூத்தீன் அபுல் ஃபத் ஓமர் இப்னு இப்ராஹிம் அல் கையாமி என்கிற ஓமர் கையாம் பாரசீகத்தின் நைஷாப்பூரில் 11ம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் பிறந்து 12ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மறைந்தவர். அவர் ஒரு சூஃபிக் கவிஞராகத்தான் நம்மிடையே உலா வருகிறார். ஆனால் அவரோ சிறந்த வானவிய லறிஞராகவும் கணித மேதையாகவும் தத்துவ ஞானியாகவும் மிளிர்ந்தவர்.

ஓமர் கையாமின் ருபையாத் உலகப் புகழ் பெற்றது. பாரசீக கவிதை வடிவங்களில் ருபாய் என்பது நான்கடிப் பாவாகும். ருபையாத் என்பது பன்மை. அதாவது நாலடிப் பாக்கள். ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட ருபையாத் வெளிவந்த பின்னர்தான் உலகம் ஓமர் கையாமை அறிந்தது. 1. மகாலத் பில் ஜபர் வல் முகாபிலா 2. முஸதறாத் கிதாப் யுக்லிதாஸ் 3. லவாஸிம் அம்சினா 4. இப்னு சீனாவின் மார்க்கச் சொற் பொழிவுகள் - பாரசீக மொழி பெயர்ப்பு 5. ஸிச் மாலிக் ஷாஹி 6. றிஸாலா கௌன் வல் தக்லீப் 7. அல்வுஜீத் 8. குல்யாத் அல் வுஜீத் 9.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீஸான் அல் ஹிகம் 10. நௌரோஸ் நாமா ஆகியன ஓமர் கையாமின் அறியக் கிடைத்த நூல்களின் பெயர்கள்.

ருபையாத்தை தமிழில் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை (1945), பாலபாரதி ச.து.சு.யோகி, சாமி சிதம்பரனார், தங்கவயல் லோகிதாசன் (1980), இலங்கையைச் சேர்ந்த கவிஞர் அப்துல் காதர் லெப்பை (1965), புவியரசு (1997), ஆ.மா. சகதீசன் (2002), நாகூர் ரூமி ஆகியோர் மொழிபெயர்த்துள்ளார்கள். ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பிட் ஜெரால்ட் மேற்கத்தேயப் பண்பாட்டுச் சூழலுக்கும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை தமிழகச் சூழலுக்கும் ஏற்ப மொழி பெயர்த்துள்ளதாகவும் கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்களே பாரசீக நாட்டுச் சூழலைப் பின்னணியாகக் கொண்டு பாடியுள்ள தாகவும் ஓர் ஆய்வு சொல்கிறது. குறித்துக் கொள்ள வேண்டிய அம்சம் என்னவெனில் ஓமர் கையாம் பற்றிய தகவல்களுடன் ருபையாத்தை வியாசக் கோவை மற்றும் முஸ்லிம்களின் தற்கால நிலைமை ஆகிய நூல்களை எழுதியவருமான வ.மி. சம்சுத்தீன் சாஹிப் என்பவரும் வீ.சி. அருளானந்தம் என்பாரும் இணைந்து தமிழில் மொழி பெயர்த்து 1936ம் ஆண்டு கொழும்பில் வெளியிட்டுள்ளார்கள் என்பதாகும். இத் தகவல்கள் நான் மேலே சொன்ன நூலில் காணப்படுகின்றன.

இந்த நூலை 2007ல் சென்னையில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் சென்னை இஸ்லாமிய இலக்கியக் கழகம் மீள்பதிப்புச் செய்துள்ளது.

கையாம் என்பது காரணப் பெயர். பாரசீகத்தில் செய்யும் தொழிலைக் கொண்டும் ஒருவரை அழைக்கும் பண்பு இருந்து வந்துள்ளது. ஓமர் தனது தொழிலைப் பற்றி இவ்வாறு சொல்கிறார்: - "சாத்திரக் கூடாரங்களைத் தைக்கும் கையாம் திடீரெனத் துக்க சாகரத்தில் வீழ்ந்து எரிந்து போனார். விதியின் கத்தரிக் கோல் அவரு டைய சீவியக் கூடாரக் கயிற்றை வெட்டி விட்டது."

தேசிக விநாயகம்பிள்ளை மொழி பெயர்த்த ஒன்றோ இரண்டோ ருபையாத் அடிகள் நான் படிக்கும் காலத்தில் நமது பாடப் புத்தகங்களில் சேர்க்கப்பட்டிருந்ததாக எனக்கு ஞாபகம் உண்டு. அது ஒரு பழைய பாடலாகவும் அமைந்திருந்தது. படிப்பறிவற்றவர்கள் கூடத் தமது கேள்வி ஞானம் கொண்டு இப்பாடலைச் சொன்னது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஞாபகம் இருக்கிறது.

எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற் செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னாய் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ
அழுத கண்ணீர் ஆறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ.

ஓமர் கையாம் பாரசீகத்தில் எழுதிய பெரும் புலவர் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. இத்தகவல்கள் எல்லாமே ஓமர் கையாம் பாரசீகப் புலவர் என்பதைச் சொல்லிக் கொண்டிருக்க இப்பத்தியின் முதலில் நான் குறிப்பிட்டிருக்கும் லஹில்ல லாஹில்லா பாட்டில் வரும் “உருதுக் கவிஞர் ஓமர் கையாமின் கவிதையா நீ” எனும் வரிகள் என்னைக் குழப்பத்துக்குள் ஒரு கணம் தள்ளி விட்டன. இதில் அடிக் கோடிட்டுக் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் பாரசீகக் கவிஞரான ஓமர் கையாமை உருதுக் கவிஞராகச் சித்தரித்து எழுதி யிருப்பவர் கவிஞர் வாலி என்பதே.

கையாமின் கவிதை வாலியின் திரிப்பையும் மீறி நிற்கும் வரம் பெற்றவை என்ற போதும் கூட வரலாற்றில் ஒரு கட்டத்தில் சர்ச்சைக் குரிய விடயமாக இது மாறிவிடாதா என்பது எனது கவலையாக இருக்கிறது. எது எதற்கெல்லாமோ சர்ச்சையில் ஈடுபடும் தமிழகத்தின் அறிவுக் கொழுந்துகள் இது பற்றி எதுவும் பிரஸ்தாபித்திருப்பதாகவும் தெரியவில்லை.

வாலியின் பாடல் என்பதற்காக வாலைச் சுருட்டிக் கொண்டார்களா என்ன!

**16.12.2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் இல்லம்

"மருத்துவம் என்பது இறைவனின் இல்லங்களுக்கு ஒப்பானது. அன்பின் நண்பர்களே... அங்கு அரசனும் ஆண்டியும் ஏழையும் பணக்காரனும் சம நிலையில் கருதப்படுகிறான்..." இவ்வாறு டாக்டர் முஹ்ஸின் எழுதிக் கொண்டிருக்கிறார். நாளை நடைபெறவுள்ள மருத்துவ சபையின் வருடாந்த மாநாட்டுக்கான பேருரை அது. நள்ளிரவைத் தாண்டி மிகுந்த பிரயத்தனத்துடனும் அவதானத்துடனும் அவர் எழுதிக் கொண்டிருக்கையில் அவரின் வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. ஓர் ஏழை. தனது மகள் பிரசவ வலியால் துடிப்பதாகவும் வந்து பார்க்குமாறும் அழுத கண்களுடன் கெஞ்சுகிறான். கதவு படீரெனச் சாத்தப்படுகிறது. நள்ளிரவு தாண்டிக் கவலையுடன் திரும்பும் அவ்வேழையைச் சந்தேகத்தில் பொலீஸ் பிடித்துச் செல்கிறது. விடிந்ததும் விடுவிக்கப்படும் அவன் வீடு சென்ற போது மகள் இறந்துவிட்டிருந்தாள்.

இது இருபதாம் நூற்றாண்டின் அதிசிறந்த அறபுக் கதாசிரியர்களுள் ஒருவரான மஹ்மூது தைமூர் (1894 - 1973) எழுதிய சிறுகதையொன்றின் சுருக்கம். ஏறக்குறைய **30** ஆண்டுகளுக்கு முன்னர் வாசித்த போது என்னை ஆட்கொண்ட கதை இது. மிகுந்த கலை நேர்த்தியுடன் அறபியில் எழுதப்பட்ட இந்தக் கதை இப்போது சில வைத்தியர்களைச் சந்திக்கும் போது எனக்கு சட்டென்று ஞாபகத்துக்கு வந்து விடுகிறது. டாக்டர் முஹ்சின் தனது டிஸ்பென்சரியில் 'ஏழைகளுக்கு இலவசம்' என்று எழுதி வைத்திருந்தார். இக்கதைக்குரிய தலைப்பும் அஃதே.

மனிதனுக்குள் மரண பயம் எப்போதும் இருந்து வருகிறது. மரணத்தைச் சுமந்த படி வருவது நோய். நோயிலிருந்து தன்னைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கும் இரண்டாவது சக்தியாக ஒரு வைத்தியரையே மனிதன் கருதுகிறான். இதனால் ஒரு வைத்தியரின் வார்த்தைக்கு ஒரு தீர்க்க தரிசியின் வார்த்தைக்குள்ள மரியாதையை மனித குலம் வழங்கி வருகிறது. இம்மரியாதையை கண்ணியமுள்ள வைத்தியர் ஒரு கன்னிப் பெண்ணைப் போல் பாதுகாக்கிறார். கண்ணியமற்ற வைத்தியர் அதைக் கொண்டு காசு பண்ணப் பார்க்கிறார். வைத்தியர்களால் எல்லா ஏழைகளுக்கும் உதவ முடியாது. ஏழைகளுக்கென்று உள்ள ஒரே இடம் அரச வைத்தியசாலைதான். அநேக வைத்தியர்கள் பணத்துக்கு வைத்தியம் பார்க்கச் சென்று விடுவதாலும் மாதத்துக்கு இரண்டு முறை வேலை நிறுத்தம் நிகழ்வதாலும் ஏழைகளின் கதி மஹ்மூது தைமூரின் கதையில் வரும் ஏழைக்குடியானவனின் கதியாகவே தொடர்கிறது.

பொலீஸாரையும் வைத்தியர்களையும் வைத்துத்தான் ஏராள மான நகைச் சுவைக் கார்ட்டூன்கள் வெளிவருகின்றன. சிரிப்பு ஒரு நல்ல மருந்து என்று வைத்தியர்களே சொல்லுகிறார்கள். அதனால் இந்த நகைச்சுவை நக்கல்களை அவர்கள் கண்டு கொள்வதில்லை. எல்லாம் மக்கள் சிரித்துச் சுகமாக வாழ வேண்டும் என்ற ஒரு நல்லெண்ணம் தான். இன்னொரு முக்கியமான விடயம் என்னவெனில் அவர்களில் பலருக்கு இவற்றைப் படிக்க நேரம் இருப்பதில்லை. பல டாக்டர் களுக்கு செய்திகளைக் கூட தொலைக்காட்சியில் பார்ப்பதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதற்குச் செலவிடும் நேரத்தில் நான்கு நோயாளிகளைப் பார்த்து விடலாம் என்கிற மனிதாபிமான உணர்வு. அது பணத்துக்காக அல்ல, நோயாளிகளுக்குச் செய்யும் சேவை. அதாவது மக்கள் சேவை. இந்த மக்கள் சேவையில் இருக்கும் வைத்தியர் கள் உட்கார்ந்தே இருப்பதால் அவர்களுக்கு உடலில் காய்ப்பு வருகிறதோ இல்லையோ கதிரைகளுக்கு வந்து விடுகிறது.

வாய்ப்புண்ணுக்கு மருந்து பெறுவதற்காக அண்மையில் ஒரு பிரபல வைத்தியசாலைக்குச் சென்றேன். அன்றைய முழுத் தினத்துக்கும் அவருக்கு வந்திருந்த நோயாளி நான்தான் போலிருந்தது. மிகுந்த சிரிப்புடன் வரவேற்று மருந்து எழுதித் தந்து விட்டு தனது கைத் தொலைபேசி எண்ணையும் எழுதித் தந்தார். எனக்குச் சிரிப்பு வந்தது. சில டாக்டர்கள் வாயைத் திறந்தால் அவர்களது டாக்டர் பட்டம் ரத்தாகிவிடும் என்று நினைக்கிறார்களோ என்னவோ அதிகம் பேசவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிக்கவோ மாட்டார்கள். நாம் ஏதோ குற்றஞ் செய்து விட்டு வந்திருப்பது போலவும் அவர்கள் எழுதும் மருந்துத் துண்டில் நமது தண்டனையை இல்லாமல் செய்து விடுவது போலவும் இறுக்கமாக முகத்தை வைத்துக் கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு யார் மருந்து கொடுத்துக் குணப்படுத்துவது என்பது என்னிடமுள்ள ஒரு பெரிய்ய கேள்வி.

மகனின் சளிக்காக மருந்து பெற ஒரு டாக்டரிடம் போனேன். கிட்டத்தட்டப் பழக்கமற்ற ஒருவரில் பாயும் அல்ஸேஷனைப் போல அவர் எம்மில் பாய்ந்தார். அவரிடம் நாங்கள் பல மாதங்களுக்கு முன்னரே வந்திருக்க வேண்டுமாம். எனக்குக் கோபம் வந்ததால் உனது மருந்தை கால்நடைகளுக்குக் கொடு என்று விட்டு கட்டிய பணத்தைப் பிடுங்கிக் கொண்டு வந்து விட்டேன். விசாரித்துப் பார்த்ததில் அவருக்கு இரண்டு பொண்டாட்டி என்று சொன்னார்கள்.

நான் மேலே குறிப்பிட்ட மஹ்மூது தைமூரின் கதை 40 அல்லது 50 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்டிருக்கலாம் என்பது எனது அனுமானம். ஆனாலும் டாக்டர் முஹ்ஸின்களால் உலகு நிறைந்து வழிவதால் இன்னும் உயிர்த்துடிப்புடன் இருக்கிறது.

எனது நண்பர்கள் சிலர் டாக்டர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் நல்லவர்கள். இப்படிச் சொல்லவில்லை என்றால் அடுத்த முறை இலவசமாக மருந்து எழுதும் போது எனக்கு உடலில் சொறி, சிரங்கு வருவதற்கு எதையாவது எழுதித் தந்து விடுவார்கள் என்ற பயத்தில் நான் சொல்லவில்லை!

*23.12.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருவாய் மொழி

நாம் தெரிந்திருப்பது போல
தெரிந்திருக்கும் தெரிந்தவைகள் உள்ளன
சில விடயங்களை நாம் தெரிந்திருக்கிறோம் என
தெரிந்துள்ளோம்
மேலும் நாம் தெரிந்துள்ளோம் -
நாம் தெரிந்துள்ள தெரியாதவைகள் உள்ளன
சொல்வதானால்
நமக்குத் தெரியாத சில விடயங்கள் உள்ளன என்பதை
நாம் தெரிந்துள்ளோம்
ஆனால் நமக்குத் தெரியாத தெரியாதவைகளும் உள்ளன
ஒரு முறை நாம் தெரிந்திராதது தெரிந்திராததுதான்

இதை முதன் முதலில் வாசித்த போது தனது சினிமாப் படம் ஒன்றில் டைரக்டரும் நடிகருமான விசு "ஒரு பைத்தியத்துக்கு வைத்தியம் செய்யும் வைத்தியருக்கு பைத்தியம் பிடித்தால்..." என்று பேசும் அந்த நெடிய சிக்கலான வசனம்தான் ஞாபகத்துக்கு வந்தது.

இவ்வாறும் தமிழில் அவ்வப்போது கவிதைகள் வெளி வருவதால் இது ஒரு நவீன தமிழ்க் கவிதை என்று நீங்கள் நினைக்கக் கூடும். ஆனால் உண்மை அதுவல்ல. அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளராகவிருந்து ஈராக் ஆக்கிரமிப்பை வழி நடத்திய மாட்சிமை பொருந்திய ரொனால்ட் ரம்ஸ்பீல்டை மறந்து போயிருக்க மாட்டீர்கள். சாட்சாத் அப்பெருந்தகையின் வசனங்கள்தாம் இவை.

அமெரிக்க மக்கள் அவரை ஒரு விமானியாகவும் நிர்வாக அதிகாரியாகவும் வியாபாரியாகவும்தான் அறிந்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாதிரி கவிதையெல்லாம் சொல்லுவார் என்பதை வெகு சிலரே தான் அறிவார்களாம். அவர்கள் யாரெனில் அமெரிக்கப் பாதுகாப்பு மையமான பென்டகனில் உள்ள ஊடக அதிகாரிகள். ஏனெனில் அவர்களை அழைத்து நடத்தும் பத்திரிகையாளர் சந்திப்பில் யுத்தம், பயங்கரவாதம், மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அவர் திருவாய் மலர்ந்தருளும் வார்த்தைகள் இவ்வாறுதான் வெளிவருமாம். ஊடக அதிகாரிகளும் ராணுவத்தினராக இருப்பதால் அண்ணாச்சி என்னதான் சொல்கிறார் என்று விளக்கம் கேட்டுக் கொள்ள மாட்டார்கள். சி.என்.என்னிலோ பி.பி.சியிலோ கூட உலகத்தின் காதுகளுக்கு இவ்வார்த்தைகள் வருவதில்லை. கேட்பவருக்குப் புரிந்தால் அல்லவா மற்றையோருக்கு விளக்கம் சொல்ல முடியும். அவர்களும் என்னதான் செய்வார்கள். நமக்கென்று வேறு ஒரு கதையை அவ்வப்போது சொல்லி விட்டுப் போய்க்கொண்டே இருப்பார்கள். ரம்ஸ்பீல்டின் இவ்வாறான மயக்கமான நேரடியற்ற வார்த்தை வெளிப்பாட்டை அவருக்குக் கிடைத்த பெருங் கொடை என்று புல்லரித்துப் போயிருப்பவர்களும் உள்ளனர். அதை ஒரு மேதைமை என்று கருதுபவர்களும் உள்ளனர்.

எல்லாத் தேசங்களிலும் இவ்வாறு மக்களுக்கு விளங்காமல் பேசும் முக்கியஸ்தர்கள் உள்ளனர். அது உண்மையில் அவர்களைச் சுற்றி அவர்கள் புத்திசாலித்தனமாக இட்டுக் கொள்ளும் காப்பரண் என்பதை அநேகர் புரிந்து கொள்வதில்லை. குறிப்பாக சில அரசியல்வாதிகள் இதில் கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பார்கள். கேட்டுக் கொண்டிருப்போருக்கு ஏதோ புரிந்தது போலவும் புரியாதது போலவும் இருக்கும். கூட்டிக் கழித்துப் பார்த்தால் அதில் எதுவுமே இராது. அதியற்புதத் திறமைகளும் விசால அறிவும் அதி நவீன ரக இலக்கியப் பரிச்சயமும் அவர்களுக்குள் இருப்பதாக சிஷ்ய கோடிகள் நம்புவதால் தமிழில் இவ்வாறு பேசுவோரும் எழுதுவோரும் கூட ஒரு மேதைமை மயக்கத்தோடுதான் திரிகிறார்கள்.

அமெரிக்கா யுத்தத்தை முன்னெடுத்தமைக்கான நியாயங்கள் எத்தகையன என்பதற்கு ரம்ஸ்பீல்டின் வார்த்தைகள் பொருத்தமான ஆதாரமாக இருக்கின்றன. உண்மையற்ற குற்றச் சாட்டுக்கள், நியாயங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களற்ற படையெடுப்பு, அதுபற்றிப் பேசப்படுபவை புரியாத வார்த்தைகள்! மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் வரிகள் **2002**ம் ஆண்டு பெப்ரவரி **12**ம் திகதி அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மன்றில் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தவை.

இவ்வாறு அவ்வப்போது அவர் தெரிவித்த வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துக் கவிதைகளாகத் தொகுத்து முதன் முதலாக அமெரிக்க மக்களைச் சென்றடையும் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்களாம். ஏற்கனவே ஈராக் யுத்தத்தின் மூலம் வெறுப்படைந்து போயிருக்கும் அமெரிக்க மக்களின் ஒரு பகுதியினருக்கு இது பெருஞ் சோதனைதான். ரம்ஸ்பீல்டின் மேலும் சில கவிதைத் துளிகள் என்னிடம் உள்ளன. அவை யாவற்றையும் இங்கு தந்தால் அவற்றை வாசித்து விளங்க முயற்சிக்கும் தமிழ் வாசகர்களுக்கு ஒரு பெரும் விபரீதம் ஏற்பட்டு விடலாம் என்று கருதித் தவிர்த்து விட்டேன்.

இவற்றைத் தொகுத்திருப்பவர் ஹார்ட் சீலி என்கிற அமெரிக்க எழுத்தாளர். நகைச்சுவை எழுத்துக்கும் பரிச்சயமானவர். டொனால்ட் ரம்ஸ்பீல்ட் அவரிடம் "என்னய வெச்சுக் காமடி கீமடி பண்ணலியே" என்று ஒரு முறை கேட்டுக் கொள்வார் என்று நம்புகின்றேன்.

***30.12.2007***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவிக் கோழியும
# மூன்றாவது முட்டையும்

**வா**ழ்வின் எல்லாக் கட்டங்களிலும் நகைச்சுவை நம்மை மகிழ்ச்சிப்படுத்துகிறது. நமது அன்றாட வாழ்வியலில் சினிமாவில் பத்திரிகை - சஞ்சிகைகளில் நகைச்சுவையும் ஓர் அங்கமாகக் கலந்திருக்கிறது. எல்லாத் திறத்தினருக்கும் பொதுவான ஓர் அம்சமாக நகைச்சுவை அமைந்திருக்கிறது. சிலர் எல்லா விடயங்களையும் நகைச்சுவை கலந்தே பேசுவார்கள். அவ்வாறானவர்களை அநேகம் பேர் விரும்புவதை நாம் பார்க்கிறோம். சிலர் இடக்கு முடக்காக, சிலர் வெகு புத்திக் கூர்மையுடன், சிலர் எழுந்தமானமாக என்றெல்லாம் நகைச்சுவையை வாரி இறைத்து மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்துவார்கள்.

எழுத்து மூலமாக இருந்தாலும் சரி, வாய் மொழி மூலமாக இருந்தாலும் சரி, ஒரு நகைச்சுவைத் துணுக்கின் வெற்றியானது அது சமர்ப்பிக்கப்படும் விதத்திலேயே தங்கியிருக்கிறது. இயல்பாகவே நகைச்சுவையாகப் பேச, சொல்ல முடியாதவர்கள் ஒரு நகைச்சுவைத் துணுக்கைச் சிரிப்பை வரவழைக்கக் கூடிய விதத்தில் சொல்ல வேண்டுமானால் அதற்காக அவர் மிகவும் கவனமெடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதன் மூலம் நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் நகைச்சுவை ஒன்றைச் சொல்வது என்பது சாதாரணமான ஒரு விடயமல்ல என்பதே. புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர்களைக் கேட்டால் அது மிகச் சிரமமான பணி என்று சொல்வார்கள்; சொல்லியுமிருக்கிறார்கள்.

ஒரு பெருஞ் சிரிப்பை வரவழைக்க ஓரிரு வார்த்தைகள் போதுமாயிருப்பதைப் பல வேளைகளில் நாம் அவதானித்திருக்கிறோம். சிரிப்பை இவ்வார்த்தைகள்தாம் உண்டாக்கும் என்ற உத்தி தெரிந்திருப்பவர் சிறந்த நகைச்சுவையாளராகி விடுகிறார். ஒரு சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவைக் கதையை எழுதுவது என்பது என்னைப் பொறுத்தவரை ஒரு நல்ல சிறுகதையை எழுதுவதற்கு ஒப்பான செயல் என்று சொல்வேன். ஏனெனில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் யாவும் தேர்ந்தெடுக்கப்பட்டவையாக இருக்கும். பொதுவாக நகைச்சுவை யைக் கேட்டும் வாசித்தும் சிரித்துவிட்டுப் போகிறோமே தவிர அதன் கலை நயம் குறித்து நாம் சிந்தித்துப் பார்ப்பதேயில்லை. நகைச்சுவை யானது சிரிப்பை, மகிழ்ச்சியை ஏற்படுத்துவதன் காரணமாக அதிலேயே திளைத்து விடுவதால் அது குறித்த வேறு விடயங்களைச் சிந்திக்க நம்மால் முடிவதில்லை. இது நகைச்சுவையின் ஒரு சிறப்பம்சம் என்றும் கூடச் சொல்லலாம். இங்கே ஒரு நகைச்சுவைக் கதையை உங்கள் கவனத்துக்குத் தருகிறேன். படித்துப் பாருங்கள். ஒரு நகைச் சுவைக் கதையாக மாத்திரம் இதைக் கொள்ளுங்கள்.

அவன் வழமையைப் போல கட்டிலில் மனைவிக்கு அருகில் தூக்கத்தில் ஆழ்ந்தான். ஜாமத்தில் அவனருகே ஒரு விசித்திரமான தோற்றத்துடன் வயதான மனிதர் ஒருவர் நிற்கக் கண்டு திடுக்கிட்டான். "ஏய், நீ யார்? எனது படுக்கையறையில் நீ என்ன செய்து கொண்டிருக் கிறாய்?" என்று கேட்டான். அதற்கு அந்த மனிதர் "இது உனது படுக்கையறையல்ல. நானும் நீயும் மேலோகத்தில் இருக்கிறோம். நான் இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றும் பணியாள்" என்று சொன்னார். அவனுக்குப் பதற்றம் ஏற்பட்டது. சற்று உரக்கச் சத்த மிட்டு "என்ன... அவ்வாறானால் நான் இறந்து விட்டேனா? நான் சாகக் கூடாது! எனது வயது சாகும் வயதும் அல்ல!" என்று கிட்டத்தட்ட கதறத் தொடங்கினான். பின்னர், "நான் செத்து விட்டிருந்தால் என்னை உடனடியாக உலகத்துக்கு அனுப்பிவிடு" என்று கெஞ்சினான்.

அவர் அவனது கெஞ்சலைக் கணக்கில் எடுத்துக் கொள்ளா மல் "அது நீ நினைப்பது போல் இலகுவான காரியமல்ல" என்று சொல்லிவிட்டு "நீ மனிதனாக உலகுக்குத் திரும்ப முடியாது. ஒரு கோழியாக அல்லது நாயாக வேண்டுமானால் உலகுக்குத் திரும்ப முடியும். விருப்பமானதை உடனடியாகத் தேர்ந்தெடு" என்றார். அவன் ஒரு கணம் யோசித்தான். நாயாகத் திரும்பி மனிதர்களுக்குச் சேவை செய்தும் கல்லெறி வாங்கியும் வாழும் நாய்ப் பிழைப்பை விட கோழியாகப் போவதே தன் முன்னாலுள்ள மிகச் சிறந்த தெரிவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குப் பட்டது. சேவல்களுடன் சுற்றித் திரிய வேண்டி வருமே தவிர வேறு சிக்கல்கள் இல்லை என்பதால் கோழியாகவே போய் விடலாம் என்று தீர்மானித்தான்.

அதை அப்பணியாளரிடம் சொன்ன அடுத்த கணத்தில் அவன் கோழியாக மாற்றப்பட்டான். இறக்கைகளிலான வால் அழகாக இருந்தது. "நீ இப்போது ஒரு கோழிப் பண்ணையில் இருக்கிறாய்" என்று சொன்ன அவர் "இப்போது எப்படி உணர்கிறாய்" என்று கேட்டார். "பரவாயில்லை... ஆனால் எனது பின்புறம் பாரமாக இருக்கிறது. வெடிக்கப் போவது போல் உணர்கிறேன்" என்று சொன்னான். பக்கத்திலிருந்த சேவல், "அது ஒன்றுமில்லை.. நீ இதுவரை முட்டை போட்டதில்லையல்லவா... அந்த வருத்தம்தான்" என்றது. "முட்டையிடுவது எப்படி?" என்று சேவலைக் கேட்டான். "இரண்டு முறை முக்கிப் பலமாகத் தள்ளி விடு" என்று சொன்னது சேவல். அப்படியே செய்த போது ஒரு முட்டை வெளியே வந்தது. அவனுக்கு அது ஆச்சரியமாகவும் வெகு ஆசுவாசமாகவும் இருந்ததால் மற்றொரு முறை முக்கித் தள்ளினான். என்ன ஆச்சரியம், இன்னொரு முட்டை வெளியே வந்தது.

இன்னும் ஆசுவாசமாக இருந்ததால் மீண்டும் ஒரு முயற்சியில் இறங்கினான். மூன்றாவது முறை அவன் முக்கும்போது "ஏய்... இதென்ன வேலை பாக்கிறீங்க... சின்னப் பிள்ளைமாதிரி... கட்டிலெல் லாம் அசிங்கம் பண்ணிக் கொண்டு...எழும்புங்க... எழும்புங்க..." என்ற அவனது மனைவியின் கோபக் குரல் அவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

*06.01.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் குஞ்சுகளும் பொறாமைக் குஞ்சுகளும்

எண்பதுகளின் கடைசிப் பகுதி. வானொலியில் நிரந்தர அறிவிப்பாளர்களின் பற்றாக்குறையைப் பகுதி நேர அறிவிப்பாளர்கள் நிரப்பிக் கடமை செய்து கொண்டிருந்த கால கட்டம். மூன்று தினங்களில் குறைந்தது இரண்டு செய்தியறிக்கைகளையாவது வாசிக்க முடிந்த நாட்கள். இது போக வெவ்வேறு நிகழ்ச்சிகளை நடாத்திக் கொண்டும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டும் வாழ்ந்த இனிமையான காலம். ஒலிபரப்பில் ஏற்பட்ட ஆர்வம் எனக்குள் இருந்த இலக்கிய ஈடுபாட்டைச் சற்றுத் தளர்த்தி விட்டிருந்தது. இடையில் மூன்று நாள் ஓய்வு கிடைக்க தலை நகரை விட்டுத் தப்பி வந்திருந்த ஒரு பொழுதில் அந்தச் சிரேஷ்ட எழுத்தாளரைக் காத்திராப்பிரகாரம் காண நேர்ந்தது.

வானொலிச் செய்தியறிவிப்பாளராகவிருந்த பூர்ணம் விஸ்வ நாதன் அதை விட்டு வந்து நாடகத் துறையிலும் சினிமாவிலும் ஈடுபட்டுப் புகழ் சேர்த்ததாகவும் நானோ இலக்கியத்தைக் கைவிட்டு வானொலியே தஞ்சம் என்று கிடப்பதாகவும் சஞ்சலப்பட்டார். ஏதோ வானொலி எனது வாழ்க்கையையே சிதறடித்து விட்டது போலவும் எனது தலையில் நானே மண்ணள்ளிப் போட்டுக் கொண்டது போலவும் அவரது பேச்சு அமைந்திருந்தது. அவர் உண்மையில் என்னில் கொண்ட அக்கறையில் அவ்வாறு பேசவில்லை என்பதை உணர்ந்து கொள்ள எனக்கு வெகு நேரம் தேவைப்படவில்லை. பூர்ணம் விஸ்வநாதன் அகில இந்திய வானொலியை விட்டு வெளியேறி நடிகராக மாறினார் என்பது பலரும் அறிந்ததே. வானொலி கொடுத்ததை விடவும் பிரபல்யத்தையும் வாழ்க்கை வசதிகளையும் அவருக்குச் சினிமா கொடுத்தது. எனவே அவரது முடிவு சரியானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இலக்கியம் யாருக்கும் சோறு போட்டதில்லை. ஒரு போதும் ஒரு மகாகவியாக உருவாகப்போவதில்லை என்பதை நன்கு உணர்ந்திருந்த நான் எழுத்தாளர் சொல்வது போல் வானொலி யில் இருந்த தொழிலையும் விட்டு விட்டு வந்து கவிதை எழுதிக்கொண்டிருந்தால் பிச்சை எடுக்கும் நிலைதான் ஏற்பட்டிருக்கும். ஒலிபரப்பு என்பது ஒரு மகத்தான கலை. முத்தமிழையும் காற்றினூடாக வழங்கவும் அனுபவிக்கவும் கூடிய சக்தி மிக்க வழி. ஒலிபரப்பில் ஒரு பெருங் கெட்டிக்காரனாக யாரும் என்னைப் பாராட்டி எழுதவில்லை என்றாலும் கூட (அவ்வாறு எழுதுமாறு நான் யாரையும் கேட்டுக் கொண்டதில்லை) ஒரு மோசமான ஒலிபரப்பாளனாக இருந்ததில்லை. இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை ஏதாகிலுமொரு பத்திரிகையில் கவிதையுடன் வரும் பெயர் ஒரு வட்டத்துக்குள் மாத்திரமே பேசப் படும். ஒலிபரப்பிலோ தினமும் இவன் பெயர் உச்சரிக்கப்பட்டு நாடு முழுவதும் தெரியப்பட்டவனாகி வருகிறான் என்பதே அந்த சிரேஷ்ட எழுத்தாளரின் கவலையாகவிருந்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

இஞ்சிப் பிளேன்ரி அருந்தியபடி அடிக்கடி இலக்கியம் கதைக்கும் வேறு ஒரு சிரேஷ்ட படைப்பாளியுடன் ஒரு முறை பேசிக் கொண்டிருந்தேன். அச்சந்தர்ப்பத்தில் அவர், "ஓட்டமாவடி அஷ்ரப் நின்று நிலைப்பான்; அஷ்ரஃப் சிஹாப்தீன் நிலைக்கமாட்டான்" என்று எந்தவிதத் தயக்கமுமில்லாமல் சொன்னார். (கவிதைகளை ஓட்டமாவடி அஷ்ரப் என்ற பெயரில்தான் ஆரம்பத்தில் எழுதி வந்தேன்) இவருக்கும் அதே நோய்தான் என்பதை நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள். இந்த நோய் தொற்றாத - இளையவர்களைத் தட்டிக் கொடுக்கும் பல சிரேஷ்ட படைப்பாளிகள் இருக்கவே செய்கிறார்கள். இந்நோய்க்கு ஆட்பட்டவர்கள் தங்களது எழுத்திலேயே தாங்கள் நம்பிக்கை இல்லாதவர்கள். வளர்ந்து வரும் ஒரு படைப்பாளி, ஒரு கலைஞன் தன்னை மீறிப் புகழ் பெற்றுவிடுவானோ என்கிற அபத்தமான அச்சம், புதிய வரவுகளில் தாம் பின்தள்ளப்பட்டு விடுவோமோ என்கிற பயம் காரணமாக இவ்வாறு உளறிக்கொட்ட ஆரம்பித்து விடுகிறார்கள். தனது சமகாலப் படைப்பாளியுடன் கூட இவ்வாறு நடந்து கொள்ளும் இளையவர்களும் பழையவர்களும் இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியவாதிகள் மொழியைக் கொண்டு அழகு செய்பவர்கள். மக்களை அதன் மூலம் ரசிப்புக்கும் ஆத்ம தரிசிப்புக்கும் உட்படுத்து பவர்கள். சாதாரண ஒரு மனிதனின் பொறாமையும் சுயநலமும் நான்கு பேருடன் முடிந்து விடுகிறது. எழுத்தைக் கருவியாகக் கொண்டு இயங்குவோர் இவற்றுக்கு ஆட்படும் போது சந்தி சிரிக்கிறது.

2002ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டு ஏற்பாடுகளுக்காக தமிழ் நாடு சென்றிருந்த வேளை டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனும் நண்பர் தாஸீம் அகமதுவும் நானும் எழுத்தாளர் சுஜாதாவை அவரது இல்லத்தில் சந்தித்தோம். பல்வேறு விடயங்களைப் பற்றியும் கதைத்த சுஜாதா, "புதிய படம் ஏதாவது பார்த்தீர்களா?" என்று கேட்டார். இல்லை என்றோம். ஏனென்றால் நமக்கு அதற்கு நேரம் இருக்கவில்லை. அவ்வேளை "கன்னத்தில் முத்தமிட்டால்" மற்றும் தங்கர் பச்சானின் "அழகி" ஆகியன திரையிடப்பட்டிருந்தன. இரண்டையும் இலங்கையில் ஒளித்தகட்டில் நான் பார்த்திருந்தேன். "கன்னத்தில் முத்தமிட்டால் நல்ல படம், பாருங்கள்." என்றார். "அதைவிட என்னைக் கவர்ந்தது - அழகி" என்றேன். எடுத்த எடுப்பில் சுஜாதா, "ச்சே அது என்ன படம்" என்று குறைத்துச் சொன்னார். 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்துக்கு வசனம் எழுதியவர் சுஜாதா!

*13.01.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய் எனும் பொய்

முன்னாள் தமிழக முதல்வரும் நடிகருமான எம்.ஜி.ஆர். தொலைபேசி மணி ஒலித்தால் ரிசீவரைத் தூக்கியதும் "வாழ்க" என்று சொல்லி விட்டு உரையாடலைத் தொடரும் வழக்கமுடையவராக இருந்தார் என்று படித்த ஞாபகம் இருக்கிறது. அவரைத் தொடர்பு கொள்வோரும் அவ்வாறே சொல்ல வேண்டும் என்று விரும்பியிருந் தார். விளக்கம் கேட்டால் "ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும்" என்று பதில் சொல்லுவாராம். சிலர் எப்போதும் எதிர்மறையாகவே பேசும் வழக்கமுள்ளவர்களாக இருக்கிறார்கள். எத்தனைக் கஷ்டத்தில் இருந்தாலும் மங்களகரமாகவும் மகிழ்ச்சிகர மாகவும் பேசும் வழக்கமுள்ளவர்களும் இருக்கிறார்கள். எதிர்மறைப் பேச்சும் சிந்தனையும் கேடு விளை விக்கும் என்பதை அனுபவஸ்தர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். எந்த ஒரு விடயத்திலும் நீரை விட்டுப் பாலைப் பிரித்துண்ணும் அன்னம் போல நல்லதை மட்டும் தேர்ந்தெடுக்கின்றவர்கள் சிக்கலான மனிதர்களாக அடையாளம் பெறுவதில்லை. சிலருக்குக் குறை மாத்திரமே பெரிதாகப் புலப்படும். குறை கண்டே காலத்தைக் கழிப்பவர்களைச் சமூகமும் ஓர் ஆபத்தான வஸ்துவைப் போல் கணக்கில் கொள்கிறது.

இப்படி நடந்து விட்டால் என்று நாம் நினைக்கின்ற சொல்லுகின்ற விடயங்கள் உடனேயே நம்மில் சிலருக்கு நடந்திருக் கலாம். அந்நிகழ்வுகள் வருத்தத்தை, மகிழ்வைத் தருகிற எதிர்பாராதவை யாக அமைந்து விடுகின்றன. இத்தகைய நிகழ்வுகளைச் "சொல்லி முடிப்பதற்குள் நிகழ்ந்து விட்டது" என்று சிலர் சொல்லக் கேட்டு மிருப்பீர்கள். இவற்றில் அநேகமானவை அனிச்சையாக நடந்து முடிபவை. காகம் உட்காரப் பனம் பழம் விழுந்தது போல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவனுக்குக் கரி நாக்கு, சொன்னால் நடந்து விடும்" என்று எனது சிறுவயதில் பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இதில் எந்தளவு உண்மை இருக்கிறது என்று தெரியவில்லை. இது உண்மை யாக இருந்தால் கரிநாக்கு உள்ளவர்களாகப் பார்த்து நாம் பாராளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக ஆக்கி விட்டால் நாட்டில் பாலாறும் தேனாறும் கரை புரண்டு ஓடும். நாடு செல்வத்தை எங்கே கொட்டி வைப்பது என்று தெரியாமல் திக்கு முக்காடும். மத்திய கிழக்கென்ன, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து கூட நமது நாட்டுக்குத் தொழிலுக்காக வருவார்கள்.

மரணம் என்பது நிஜமானது என்பதும் அது எல்லோர்க்கும் நிகழ்வது என்பதும் அச்சம் தரும் உண்மை. ஒரு மரணம் உயிர் வாழ்ந்திருக்கும் மனிதரை, ஆசைச் சிறகு தரித்து அலைந்து திரியும் மனிதரைப் பூமிக்கு அழைத்து வரத்தக்கது. சற்று நின்று நிதானித்துச் செயற்படத் தூண்டுவது. கொண்டு வந்தது எதுவுமில்லை; கொண்டு செல்வதும் எதுவுமில்லை என்ற நிஜத்தை வலிக்கும் வகையில் சொல்லித் தருவது. ஒருவரின் மரணம் எப்போது நிகழும் எவ்வாறு நிகழும் என்பதை எவரும் அறிய மாட்டார்கள். ஆனால் திடீர் மரணங்களுக்குள்ளான சில நபர்கள் மரணம் பற்றி, அல்லது உலகத்தின் நிலையாமை பற்றி, வாழ்க்கையின் முடிவு பற்றித் தமக்கு மரணம் நிகழ்வதற்குச் சில நாட்களுக்கு முன்னரோ சில மணித்துளிகளுக்கு முன்னரோ சில நிமிடங்களுக்கு முன்னரோ கூடப் பேசியிருப்பார்கள். இவ்வாறான சம்பவங்கள் அநேகம் நிகழ்ந்துள்ளன. பொதுவாக மரணம் பற்றிப் பேசுவதற்கு யாரும் விரும்புவதில்லை. நெருப்பு என்று சொன்னால் வாய் சுடுவதில்லை என்று சொல்வது போல மரணம் பற்றிப் பேசினால் உடனே யாரும் மரணித்து விடுவதும் இல்லை. என்றாலும் கூட மரணம் என்பது மனித குலம் விரும்பும் விடயமல்ல.

வாழ்த்து அட்டைகளில் மங்களகரமான வார்த்தைகள் கவிதைகளாக அல்லது கவித்துவம் மிக்க வரிகளாக அமைந்திருப் பதைப் பார்த்திருக்கிறோம். மரணத்தை நினைவுறுத்தி வாழ்த்துக் களைத் தெரிவித்த ஒரு வாழ்த்து அட்டையை நீங்கள் கண்டிருக் கிறீர்களா? இதோ கீழே தரப்பட்டுள்ள கவிதை வரிகளைக் கொண்டு 2008ம் ஆண்டு புதுவருட வாழ்த்து அட்டை ஒன்று பல பிரமுகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் கிடைத்துள்ளது. சிங்களத்தில் பொறிக்கப்பட்டிருந்த கவிதை வரிகளைத் தமக்குத் தெரிந்த தமிழில் சொன்ன நண்பர்களின் உதவியுடன் எனக்குத் தெரிந்த தமிழில் கவிதை பண்ணியிருக்கிறேன். படித்துப் பாருங்கள்.

நல்லொரு காரியம் நாடிச் செய்யின்
நாளும் உலகில் நிலைபே றாகும்
இல்லார்க் கிரங்கி அள்ளிக் கொடுப்பது
நல்லது நமக்கு நன்மை யளிப்பது
வாழ்வாங் கொருவன் வாழ்ந்திட வேண்டில்
வழுவறு நிலைகொண் டொழுகிட வேண்டும்
ஆயிரம் பேருள் அமர்ந்திருந் தாலும்
அழகுறத் தெரிவான் அதிமா னுடனே!

பெருமை கொண்டு பொங்கிட வேண்டாம்
பேர்கொள் நற்குணம் பழுதுபட் டழியும்
பெருகும் கோபம் கொண்டெழ வேண்டாம்
பண்புக ளிழந்து பழியுற நேரும்
வருத்தும் வகையில் வாழ்ந்திட வேண்டாம்
வருத்தப் பட்டோர் இதயம் வலிக்கும்
அரும்பிட வேண்டாம் ஆசைகள் நாமோ
இறந்திடும் மனிதர்! இறந்திடும் மனிதர்!!

*இந்தக் கவிதை வரிகளுடன் கூடிய வாழ்த்து அட்டையை அனுப்பியிருந்தவர் 08.01.2008 அன்று ஜாஎலயில் கிளைமோர்க் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட தேச நிர்மாண அமைச்சர் அமரர் டி.எம். தஸநாயக்க அவர்கள்!*

*20.01.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜா மகளின் ரோஜா இதழ்

■ தெனாலி (திரைப்படம்) வெளிவந்த புதிதில் என்னைச் சூரியனுக்காகப் பேட்டியெடுத்தார்கள். யாரோ ஒரு பெண் தொலை பேசியில் தொடர்பு கொண்டு "தெனாலி பேசுறது ஒரிஜினல் யாழ்ப்பாணத் தமிழ் இல்லைத்தானே பாருங்கோ" என்றார். "அம்மா, நீங்கள் ஒரிஜினல் என்றொரு வார்த்தை சொன்னீர்களே அதுவும் யாழ்ப்பாணத் தமிழ்தானா?" என்று கேட்டேன். "மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறித் தொலைபேசியை வைத்துவிட்டார்.

-பி.எச். அப்துல் ஹமீத

■ நம்பகத் தன்மையோடு பார்க்கக் கூடிய எந்த ஊடகமும் இலங்கையில் இருப்பதாகத் தெரியவில்லை.

- கலாநிதி எம்.ஏ.நுஃமான்

■ ஒரு நாள் பஸ்ஸில் நான் நின்று கொண்டிருந்தேன். கல்லூரி மாணவர்கள் இரண்டு பேர் அமர்ந்திருந்தார்கள். ஒருவன் என்னைப் பார்த்து விட்டான். மற்றவனைத் தட்டிச் சொல்லுகிறான். "அவரைப் பார்த்தால் வானொலியில் 'இன்று ஒரு தகவல்' சொல்பவர் போலிருக் கிறார்" என்று. அதுக்கு மற்றவன் சொல்றான் - "போடா அவர் எப்பேர்ப்பட்ட விஷயமெல்லாம் சொல்றார். இந்த மூஞ்சியைப் பார்த்தா அப்படித் தெரியலடா."

-தென்கச்சி சுவாமிநாதன

■ வேந்தர், அரசர், பேரரசர், கோ, கவிக்கோ - என்றெல்லாம் பல முன்னொட்டுக்கள். தமிழன் அடிமையாக வாழ்கின்ற காலத்தில் இவன் அரசு என்றும் வேந்தன் என்றும் பெயருக்கு முன் பின்னாகப் போட்டுக் கொண்டு அரசை இழந்து நொண்டியாக நடுத்தெருவில் நின்று கொண்டிருக்கிறான்.

- கவிஞர் காசி ஆனந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ கார்ட்டூன் - சிறுவர்களுக்கான சிறப்பு ஒளிபரப்பு. அதில் எவ்வளவு வன்முறை இருக்கிறது என்பதை எத்தனை பேர் புரிந்து வைத்திருக்கி றீர்கள்?

-நடிகை குஷ்பு

■ ஆழ்வார் பாசுரங்கள் படித்திருக்கிறீர்களா? "காண்கின்றனர்களும் கேட்கின்றனர்களும்" என்று எழுதியிருப்பார். காண்கின்றனர் என்பது பன்மைதானே. அதனோடு "கள்" விகுதி சேர்த்திருக்கிறார். தவறாகி விட்டதா? மொழியை இப்படி மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்று எடுத்துக் கொள்வது தவறு.

-சுஜாதா

■ கர்நாடக சங்கீத ரசிகர்களை மற்றெந்த விடயமும் வந்து தடுத்து விட முடியாது. அதன் ரசிகர்கள் மாறவே மாட்டார்கள். மக்களின் தொகைக்கேற்ப அதன் விகிதம் மாறாமலோ அதிகரித்தோதான் செல்லும்.

- கே.ஜே.ஜேசுதாஸ்

■ நாம் வணங்குவதற்காகவா கடவுள் இருக்கிறார்? அவர் வேலையை அவர் பார்க்கிறார்; நம் வேலையை நாம் பார்ப்போம்.

- ஜெயகாந்தன

■ நிலைக்க வேண்டும் என்பதற்காக நிகழ் காலத்தில் விருதுகளுக் காகவும் அல்லது அதிகார வர்க்கத்தின் சலுகைகளுக்காகவும் எழுதுபவ னாக இருந்தால் காலம் அவனை எச்சில் இலையாகத் தூக்கிப் போட்டு விடும்.

- கவிஞர் அறிவுமதி

■ மொழி தோன்றிய காலத்திலிருந்து கவிதைதான் இந்த உலகை ஆட்சி செய்து கொண்டிருந்தது. கவிதைக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுங்கள். உரைநடைப் பக்கம் வாருங்கள் என்று ஒரு குரல் மேற்கிலிருந்து கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

- கவிஞர் வைரமுத்து

■ கவிஞனை 'கவிஞ்சன்" என்பவன், சரியை "செரி" என்பவன், வைத்திருக்கிறார் "வெய்த்திருக்கிறார்" என்பவனெல்லாம் இன்று அறிவிப்பாளன். இவனையெல்லாம் தூக்கிப் பிடிப்பவர்கள் காத்திர மான ரசிகர்களல்ல; கோதுகள். அவர்களைக் கோதுகளின் ராஜாக்கள் என்று சொல்வதே பொருத்தம்.

-கவிஞர் சோலைக்கிளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006ல் வெளியிடப்பட்ட ராஜா மகள் என்கிற லதாவின் "மொழிபெயர்க்கப்பட்ட மௌனம்" என்ற நூலில் அவரால் பேட்டி காணப்பட்ட கலை, இலக்கியவாதிகள் தெரிவித்த கருத்துக்கள்தாம் இவை. இலங்கை மற்றும் இந்திய பிரபல்யங்களின் பேட்டிகள் ஒரு சேர இடம்பெற்ற நூல், ஒரு பெண் பத்திரிகையாளரின் முதலாவது பேட்டித் தொகுப்பு ஆகிய சிறப்பு இந்நூலுக்கு உண்டு. எழுத்தாளர்கள், நடிகைகள், கவிஞர்கள், பாடகர்கள், பத்திரிகையாளர்கள், ஒலி, ஒளிபரப்பாளர்கள் என்று பல்வேறு துறை சார்ந்தவர்களையும் நேர்கண்ட ஓர் வர்ணக் கலவை இது. நமது பேட்டியாளர்கள் வழமையாகக் கேட்கிற கேள்விகளும் பதில்களும் இந்நூலில் இல்லை. சில பேட்டிகள் சுவாரஸ்யமானவை. சில விசாலமான தகவல்களைத் தருபவை.

இந்நூலில் பேட்டி காணப்பட்டுள்ளவர்களுள் ஒருவனான எனது கருத்தையும் இதனுடன் சேர்த்துத் தரவில்லையெனில் என்னுடன் கொண்டுள்ள அன்பு மிகுதியால் நீங்கள் கவலைப்படுவீர்கள். போனால் போகட்டும் என்று இறுதியாக எனது கருத்தையும் சேர்த்திருக்கிறேன். மகிழ்ந்திருங்கள்!

■ மனதைத் திறந்து பேசுவோமானால்- நாம் விமர்சனத்துக்காகவா விழாக்களை நடத்துகிறோம்? புத்தகத்துக்குச் செலவு செய்த தொகையில் நான்கில் ஒரு பங்கேனும் சேர்ந்து விடாதா என்கிற எதிர்பார்ப்போடும் ஏக்கத்தோடுமே விழாக்களை நடத்துகிறோம்; பிரபலங்களை மேடையில் வைக்கிறோம்!

*27.01.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புறுவார் மகிமை

சில நாட்களுக்கு முன்னர் கவிஞர் அல் அஸூமத் அவர்களுடன் அளவளாவிக் கொண்டிருந்தேன். (இந்த அளவளாவுதல் என்ற சொல் பிடிக்காதவர்கள் பொருத்தமான சொல்லைப் போட்டுப் படித்துக் கொள்ளலாம்) அப்போது தேசியத் தமிழ் வார இதழொன்றில் பிரசுரமாகியிருந்த செய்தி ஒன்றை அவர் என் கவனத்துக்குத் தந்தார். மலை நாட்டில் நடந்த ஓர் இலக்கியக் கூட்டத்தில் ஓர் அன்பர் தெரிவித்திருந்த கருத்து அந்தச் செய்தியில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. அரசியல்வாதிகளுக்கு மட்டுமன்றி இலக்கியவாதிகளின் பெயருக்கு முன்னாலும் மாண்புமிகு என்ற சொல் சேர்க்கப்பட வேண்டும் என்பது அந்த அன்பரின் கருத்தாக இருந்தது. இலக்கிய வாதிகள் கண்ணியத்துக்குரியவர்களாகக் கருதப்பட வேண்டும் என்ற அவரது நல்லெண்ணத்தை மிகவும் வரவேற்கிறேன்.

ஆகக் குறைந்தது பிரதி அமைச்சரிலிருந்து அதற்கு மேற்பட்ட அந்தஸ்திலிருப்போருக்குக் கௌரவத்துக்காகச் சேர்த்துக் கொள்ளப் படும் இந்தச் சொல் உண்மையில் அமைச்சர் என்ற அந்த அந்தஸ்துக் காகவே வழங்கப்படுகிறது. மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் என்றுதான் குறிப்பிடப்பட வேண்டுமே தவிர சத்துணவுத்துறை அமைச்சர் மாண்புமிகு சதானந்தம் என்று வருவது பொருத்தமற்றது. ஆனால் அமைச்சர் என்ற சிறப்பு அந்தஸ்தில் உள்ள ஒரு நபர் பின்னர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது முன்னாள் அமைச்ச ராகவோ ஆகிவிட்டால் இந்தச் சொல் அவர்களது பெயர்களோடு சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. எனவே அமைச்சர் என்ற அந்தஸ்திலிருப்போர் எந்த இடத்தில் அந்தச் சொல்லைச் சேர்த்துக் கொண்டாலும் பரவாயில்லை என்று விட்டு விடலாம். மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகளாக வந்து ஒரு துறையை நிர்வகிக்கும் அதிகாரத்தைக் கையில் கொண்டிருப்பதால் ஒரு மரியாதை கருதி அப்படி அழைப் பதில் தவறேதும் இல்லை. (அமைச்சர்கள் என்றாலே பிடிக்காத அதிபுத்திஜீவிகளை நான் கணக்கில் கொள்ளவில்லை. பூவுலகில் வசிக்கும் சாதாரண மனிதனாக நின்று எனது கருத்தைத் தெரிவிக் கிறேன்.)

ஆனால் இலக்கியக் கூட்டத்தில் நண்பர் தெரிவித்திருக்கும் கருத்து அமுலாகி விட்டால் பொது ஜனங்களுக்குப் பெரும் தொந்தரவாகிப் போகும் என்று எனக்குப் பட்டது. ஒரு மனிதனை நேரடியாகச் சண்டையிட்டுத் தாக்குவதை விடச் சகிக்க முடியாத காரியங்களால் அதாவது உறுத்தல் மூலம் தாக்குவது பெரும் ஆபத்தானது. எழுத்தாளர்களுக்கு மாண்புமிகு என்ற சொல் சேர்க்கப் பட்டால் என்னவாகும் என்று சற்று எண்ணிப் பார்த்தேன்.

01. முதிய எழுத்தாளர், முன்னோடி எழுத்தாளர், வளர்ந்து வரும் எழுத்தாளர், வளர்ந்து வரும் முதிய எழுத்தாளர் முதற்கொண்டு நேற்றுப் புதுக்கவிதை ஒன்றை எழுதியவர் வரை மாண்புமிகு என்ற கௌரவத்துக்கு உரித்தாகி விடுவர்.

02. செய்திகள் எழுதுபவர், மற்றும் தொகுப்புக்களை எழுதுவோ ரும் கூட இந்த கௌரவத்தை எதிர்பார்ப்பர். எதிர்பார்ப்பர் என்பதை விடத் தாங்களாகவே போட்டுக் கொள்ளவும் செய்யலாம்.

03. எழுத்து என்று வந்து விடுவதால் கணனியில் பிரதிகளைத் தயாரித்துக் கொடுப்போர் மற்றும் வடிவமைத்துக் கொடுப்போரும் தங்களுக்கும் அது பொருந்தும் என்று முடிவுக்கு வந்து விடலாம். இதனால் ஒரு சிறிய புத்தகத்தின் ஆசிரியர் நன்றியுரையில் ஏகப்பட்ட மாண்புமிகுக்களைக் காண முடியும்.

04. ஒரு புத்தக வெளியீட்டு விழா அழைப்பிதழில் வரவேற்புரை, ஆசியுரை, அறிமுகவுரை, நயத்தல் உரைகள், விமர்சன உரைகள், சிறப்புரை, சிறப்பதிதி உரை, விஷேட அதிதி உரை, பிரதம அதிதி உரை, பதிலுரை, நன்றியுரை ஆகியவற்றை நிகழ்த்தும் அனைவரது பெயருக்கு முன்னாலும் மாண்புமிகு போட வேண்டி வரும்.

05. வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கே மாண்புமிகு சேர்க்கப் பட்டால் பணத்தைக் கொடுத்து முதற் பிரதி, சிறப்புப் பிரதி, விஷேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிகள் வாங்குவோர் பெயருக்கு முன்னாலும் மாண்புமிகு போட்டே யாக வேண்டும். ஏனெனில் அவர்களை நம்பித்தான் நூலை எழுதியவர் விழாவே நடத்துகிறார்.

*06.* மாண்புமிகு என்ற சொல்லைக் கணனியில் தட்டித் தட்டியே கீ போர்ட்டின் குறித்த எழுத்துக்குரிய பட்டன்கள் தேய்ந்து போகும் என்பதால் எதிர் காலத்தில் ஒரே கீயில் 'மாண்புமிகு' என்ற சொல் விழுமாறு ஒரு மென் பொருள் கண்டு பிடிக்கப்பட வேண்டிய நிலை வரும்.

*07.* இலக்கிய விழாக்களில் நிகழும் தற்புகழ்ச்சியும் அறுவையும் தாங்க முடியாமல் இலக்கியக் கூட்டம் என்றாலே அலர்ஜியாக உணரும் பலர் மாண்புமிகு நிறைந்த இலக்கியக் கூட்ட அழைப்பிதழ் களைக் கண்டு மன ரீதியான பாதிப்புக்குள்ளாகவும் நேரலாம்.

*03.02.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே ஒரு ஊரிலே...

எனக்கு அந்த அழைப்பு வந்த போது சும்மா தமாஷ் பண்ணு கிறார்கள் என்றுதான் முதலில் நினைத்தேன். திகதி, நடைபெறும் இடம், மற்றும் ஏனைய விபரங்கள் அழுத்திச் சொல்லப்பட்ட போது விடயம் அப்படி இல்லை என்று தெரிய வந்தது. அது சிறுவர் களுக்கான கதைகள் எழுதுவது சம்பந்தமான நான்கு நாள் வதிவிடக் கருத்தரங்கு. அதில் பங்குபற்றுனர்களில் ஒருவனாக என்னையும் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். சிறுவர் இலக்கியத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? என்னை இதற்கு ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? போன்ற கேள்விகள் எனக்குள் எழுந்தன. அதைக் கேட்டால் பெரியவர் களுக்கான இலக்கியத்தில் எதைத்தான் கிழித்து விட்டீர்கள் என்று திருப்பிக் கேட்டு விடுவார்கள் என்ற பயத்தில் பேசாமல் ஒப்புக் கொண்டு விட்டேன்.

ஆனால் கலந்து கொண்ட பிறகுதான் அதன் பெறுமதி புரிந்தது. சிறுவர்களுக்கான கதைகளை எழுதுவதென்பது ஒன்றும் கஜூக் கொட்டை, பிலாக்கொட்டை விடயமல்ல என்பது தெரிய வந்தது. சிறுவர் இலக்கியத்துக்காகவே இயங்கிவரும் "ரூம் டு ரீட்" அமைப்பு இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. 'வாசிப்பின் மூலம் உலகத்தை மாற்றுதல்' என்பது அதன் குறிக்கோள். வாசிப்பின் மீதான ஆர்வத்தை மிகச் சிறுவயதிலேயே ஏற்படுத்தி விடுவதன் மூலம் உலகில் ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று அவ்வமைப்பு நம்புகிறது. இதை யாரும் மறுக்கவும் முடியாது. நல்ல குறிக்கோள்; வரவேற்கத் தக்க முயற்சி.

'மைக்ரோசொப்ட்' நிறுவனத்தில் பணியாற்றிய அமெரிக்க ரான ஜோன்வூட் என்ற நல்ல மனிதர் தனது லட்சம் டாலர் தொழிலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறந்து வளர்முக நாடுகளின் சிறுவர்களது நலன் பற்றிச் சிந்தித்ததால் இவ்வமைப்புத் தோற்றம் பெற்றது. 2001ல் துவங்கப்பட்ட இவ் வமைப்பு நேபாளம், கம்போடியா, தென்னாபிரிக்கா, லாவோஸ், ஸம்பியா, வியட்னாம், இந்தியா, இலங்கை ஆகிய வளர்முக நாடுகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது. 2007ம் ஆண்டுப் புள்ளி விபரங்களின் படி மேற்குறித்த நாடுகளில் 3600 நூலகங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

காலமெல்லாம் நாம் கேட்டு வந்த, சொல்லி வந்த காக்கா நரி, முயலும் ஆமையும் கதைகளையெல்லாம் பிள்ளைகளுக்கு இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் சொல்லிக் கொண்டிருப்பது? தந்திரம், பொய், களவு என்று பின்னப்பட்ட கதைகளையே நாமும் படித்து நமது பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதுவும் அவ்வாறான கதைகளையே எழுதியும் வருகிறோம் என்பது வும் கருத்தரங்கின் போது உறைத்தது. தவிர தொலைக்காட்சி அலை வரிசைகளில் காண்பிக்கப்படும் கார்ட்டூன்களில் பெரும்பாலானவை வன்முறை நிறைந்தவையாகக் காணப்படுகின்றன. பிழியப்பிழிய அழும் தொடர்களைப் பார்த்துப் புடவை முந்தானையால் அம்மாமார் கண்களைத் துடைத்துக்கொள்ள, பிள்ளைகள் வன்முறை நிறைந்த கார்ட்டூன்களைப் பார்த்துக் குதூகலித்துக் கொண்டிருக்கின்றனர்.

புதிய உலகப் போக்கில் புதிய சவால்களை எதிர்கொள்ளக் காத்திருக்கும் சிறியவர் உலகத்துக்குப் பொருத்தமானவையாக சிறுவர் கதைகள் அமைய வேண்டியிருக்கிறது. சிறுவர் சம்பந்தப்பட்ட அம்சங்களில் கால் நூற்றாண்டாக ஈடுபட்டுவரும் இந்தியரான சுபீர் சுக்ளா இக்கருத்தரங்கை நடத்தினார். சிறார் குறித்தவையும் சிறுவருக் கான கதைகளுமாக 40க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். நமது கலாசாரத்திலிருந்து, நமது பழக்க வழக்கங்கள், பண்பாடுகளிலிருந்து சிறுவர் பார்வையோடு பொருத்தமான கதைகளை எவ்வாறு எழுத வேண்டும் என்று சொல்லித் தந்தார். நான்கு நாள் கற்றவற்றை ஒரு பக்கத்தில் என்னால் சொல்லி முடிப்பது கடினம் என்பதை ஏற்றுக் கொள்வீர்கள். அவர் குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் பார்த்தால் இது வரை வெளிவந்துள்ள சிறுவர் கதை நூல்களில் தொண்ணூறு வீதமானவை பொருத்தமற்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மரத்திலிருந்து மாம்பழம் விழுந்தது. அதைக் கண்ணன் பொறுக்கிப் பார்த்தான். அதில் அணில் கடித்திருந்தது. கண்ணன் மரத்தைப் பார்த்தான். அங்கே அணில் பிள்ளையார் இருந்தார். அணில் பிள்ளையாரே.. அணில் பிள்ளையாரே எனக்கு ஒரு மாம்பழம் பறித்துத் தருவீரோ.." என்ற ரீதியில் அநேகமாக வெளிவரும் உப்புச் சப்பில்லாமல் எழுதப்படும் கதைகளில் எதுவுமில்லை என்கிறார் சுபீர். கருத்தரங்குக்குச் சென்று விட்டு வந்த பிறகு வீட்டில் கிடந்த நம்நாட்டுச் சிறுவர் எழுத்தாளர் ஒருவரின் கதைப்புத்தகம் ஒன்றை வாசித்த போது கதையும் கதைக்குச் சம்பந்தமற்ற பாடல் வரிகளும் இருந்தன. அந்நூலில் சர்வதேசத்துக்கு அமைவாய் அந்நூல் எழுதப்பட்டதாய் வேறு குறிப்பிட்டிருந்தது.

கதையானது சிறுவருக்கான மொழி, வயது அடிப்படையில் திட்டமிட்டுச் சொல்லப்பட வேண்டும். கதாபாத்திரம் ஒரு குறிக் கோளை அடைவதற்கான முயற்சியில் பல இடர்களைச் சந்தித்து முடிவில் வெற்றி பெற வேண்டும். கிட்டத்தட்ட ஒரு சினிமாப் படம் போல. அதற்காக டிஷ்யூம்.. டிஷ்யூம், த்ரிஷா, நமீதா, துப்பாக்கி, அரிவாள், ரீமிக்ஸ் பாடல்கள் எல்லாம் இருக்கக் கூடாது. வன்முறை என்பது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டிய அம்சம். அதே போல் பக்கம் பக்கமாக நீதி போதிக்கக் கூடாது, கதையிலேயே அதனை அழகாகச் சொல்ல முடியும்.

இதற்கு மேல் விபரித்தால் நீங்கள் என்னை மிஞ்சி விடுவீர்கள்!

*10.02.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புத்தான் எனக்குப் புடிச்ச கலரு

அரசியல் என்பது - அது எந்த நாடாக இருந்தாலும் - அது சுழல்வது ஒரே அச்சில்தான். வேண்டுமானால் நாட்டுக்கு நாடு அல்லது கண்டத்துக்குக் கண்டம் வித்தியாசமான வடிவத்தையும் கோணத்தையும் கொண்டிருக்கலாம். நல்லரசொன்றாக இருந்த போதும்கூடச் சில தவிர்க்க முடியாத அரசியல் நடவடிக்கைகள் இடம் பெற்றே வருகின்றன. பல்வேறுபட்ட இயல்பு கொண்ட மனிதர்களை அது இணைப்பதால் அவ்வாறு இயங்கும் அவசியம் அதற்கு உண்டு.

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலில் பொறி கிளம்ப ஆரம்பித்துள்ளது. இம்முறை ஜனநாயகக் கட்சியின் சார்பில் முன்னுக்கு வந்துள்ள பரக் ஒபாமா கலப்பினத்தவர் அல்லது கறுப்பினத்தவர் என்பது இப்பொறிக்கு முக்கிய காரணம். அவர் ஜனாதிபதி ஆவாரேயானால் முதலாவது கறுப்பின ஜனாதிபதி என்ற பெருமைக்குரியவராவார். அதைவிட முக்கியமான விடயம் அவரது முழுப் பெயர் பரக் ஹூஸைன் ஒபாமா என்பதுதான். அடிமைத் தனத்துக்கும் இன வெறிக்கும் எதிராகப் போராடி மடிந்த ஆப்ரஹாம் லிங்கனதும் மார்ட்டின் லூதர் கிங்கினதும் முயற்சிகளின் அறுவடையாக ஒபாமா நோக்கப்படுகிறார். அமெரிக்கர் அனைவருமே கண்ணியவான்கள் என்று ஆபிரிக்க, ஆசிய கறுப்பர் சிவப்பர்களில் ஒரு பகுதியினர் அப்பாவித் தனமாகவும் அசட்டுத் தனமாகவும் கருதினாலும் கூட ஒபாமாவைப் பொறுத்தவரை அவரை ஜனாதிபதியாக ஏற்றுக் கொள்வதில் வெள்ளையினத்தவர் மனதில் ஒரு இக்கன்னா இருக்கவே செய்கிறது. அதில் பெரிய இக்கன்னா அவர் பெயரிலுள்ள ஹூஸைன் என்ற சொல்.

யாரென்று பார்க்காமல் விமர்சனம் செய்யவும் கிண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*லடிக்கவும் துணிந்தவர்கள் மேலைத் தேசத்தவர். பரக் ஒபாமாவைச் சும்மா விட்டுவிடுவார்களா என்ன? அதுவும் தேர்தல் சமயத்தில்? பரக் ஒபாமா பற்றி மக்களைச் சந்தித்து பத்திரிகையாளர்கள் அபிப்பிராயம் பெறுவதை கற்பனை செய்து எழுதியிருக்கிறார் ஓர் அன்பர். அப்பதில் களிலிருந்து பல விடயங்களை நாம் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். நிவ்யோர்க் வீதியொன்றில் இடம்பெற்ற பேட்டி முதலில்.*

*நிருபர்:* பரக் ஒபாமா பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

***நடுத்தர வயது நபர்:*** நாம் அவரைப் பிடிப்பதற்கு மேலும் முயற்சி செய்ய வேண்டும். நாம் ஈராக்கில் எவ்வளவு முயன்றாலும் அவர் அங்கே இல்லை. அவர் இன்னும் அமெரிக்காவுக்கு ஓர் அச்சுறுத்தலாகவே விளங்குகிறார்.

*நிருபர்:* இல்லை. நான் கேட்பது சிகாகோவைச் சேர்ந்த பரக் ஒபாமாவைப் பற்றி. அவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

*நடுத்தரவயது நபர்:* அதாவது அவர் இப்போது சிகாகோவில் இருக்கிறார் என்றா நினைக்கிறீர்கள்? அவர் எப்படி அமெரிக்காவுக்குள் நுழைந்தார். அவர் மெக்ஸிக்கோ ஊடாக வந்தார் என்று மட்டும் எனக்குச் சொல்ல வராதீர்கள். நாம் நமது எல்லைகளைப் பலப்படுத்த வேண்டியிருக்கிறது.

*அற்லாண்டா வீதியில் மற்றொரு நபர் பேட்டி காணப்படுகிறார். நிருபர் இப்போது பரக் ஒபாமாவின் பெயரிலுள்ள ஹூஸைன் என்ற பெயரையும் சேர்த்து உச்சரிக்கிறார்.*

*நிருபர்:* பரக் ஹூஸைன் ஒபாமா பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

***30 வயது நபர்:*** அவருக்கு உரியதைத்தான் அவரால் பெற்றுக் கொள்ள இயலும். அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும். அவர் மனித குலத்துக்கு எதிராகக் குற்றமிழைத்தவர். அதற்குரிய பிரதிபலன்தானே அவருக்குக் கிடைக்கும். அவருக்காக நான் வருந்துகிறேன்.

*நிருபர்:* இல்லை. நான் சிகாகோவைச் சேர்ந்த பரக் ஹூஸைன் ஒபாமாவைப் பற்றிக் கேட்டேன்.

***30 வயது நபர்:*** அவர் சிகாகோவைச் சேர்ந்தவரா? எவ்வளவு தந்திரமாக அவர் ஈராக்கின் ஜனாதிபதியாக வந்திருக்கிறார் என்று பாருங்கள்.

*பரக் ஒபாமா என்பது மிகவும் இலகுவாக உச்சரிக்கக் கூடிய சொல்லாக இருந்தபோதும் அவரது மாநிலத்திலேயே எவ்வாறு பதில் சொல்கிறார்கள என்று அவதானியுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிருபர்:* நீங்கள் யாருக்கு வாக்களிக்கப் போகிறீர்கள்?

***20 வயது நபர்:*** உண்மையில் அந்தாளை விரும்புகிறேன். அவரது பெயர் என்ன... ஆ.... ஒப்ரக் பராமா! (Obrack Barama)

*நிருபர்:* உங்களது அபிப்பிராயம் என்ன?

***19 வயது நபர்:*** யுவர் மமா (Your Mama)

*நிருபர்:* (அதிர்ந்து) என்ன...?

***19 வயது நபர்:*** புரோக் யுவர் மமா. (Broke Your Mama) அவருக்குத்தான் நான் வாக்களிப்பேன்.

*நிருபர்:* மிஸ் நீங்கள் யாருக்கு?

***21 வயதுப் பெண்:*** நான்.... ஆங்.... நான் வாக்களிப்பது... பரோக் அலபாமா! (Baroque Alabama)

*அன்புக்குரியவர்களே... ஒரு வேளை பரக் ஒபாமா ஜனாதிபதி யாகி - எனது நாட்டவன் கிண்டலடித்தான் என்பதற்காக நீ எதற்காகத் தமிழில் வேறு எழுதினாய்? என்று கேட்டு என்னை குவான்டனா மோவுக்கு அள்ளிச் செல்லாமலிருக்கப் பிரார்த்தியுங்கள்.*

***17.02.2008***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுயிர்க் கண்ணம்மா

"**கா**ற்றின் முகத்தில் - ஒரு கடுதாசி எழுதி விடு கண்ணம்மா - காத்திருக்கிறேன்" என்று முடிகிற கவிதையொன்று "போர்க்காலப் பாடல்கள்" என்ற கவிதைத் தொகுதியில் உள்ளது. புத்தகக் குவியல்களுக்குள் இத்தொகுதியைப் பார்த்தால் ஒரு சிட்டுக் குருவி போல் தோன்றும். 1998ம் ஆண்டு வெளியான இந்தக் கவிதைத் தொகுதிக்கு அவ்வாண்டுக்கான சிறந்த கவிதைத் தொகுதிக்கான "விபவி" பரிசு கிடைத்தது ஞாபகமிருக்கிறது. 1995ல் எழுதப்பட்டு தினகரன் பத்திரிகையில் பிரசுரமான அன்பின் கண்ணம்மாவுக்கு என்ற அந்தக் கவிதை பேசும் சமாச்சாரம் சாதாரணமான ஒன்றல்ல.

விடுதலைப் போராட்டத்தின் பின்னணியில் உருவான கவிதைகளிலும் கதைகளிலும் பல்லாயிரம் துயரச் சம்பவங்கள் விரவிக் கிடக்கின்றன. எந்தவித எழுத்துக்கும் உட்படாத ஆயிரமாயிரம் சம்பவங்கள் இன்னும் வெளிவராமலும் உள்ளன. இன முறுகலின் விளைவாக ஏற்பட்ட மேனி சிலிர்க்கும் துன்பியல் விவகாரங்களின் பின்னணியில் மனிதாபிமானம் பேணப்பட்ட சம்பவங்களும் ஏராளம் உள்ளன. போராட்டம், இனவெறி என்பவற்றுக்கெல்லாம் அப்பால் மனிதாபிமானம் முன்னிடம் வகித்த ஒரு சம்பவத்தையே மேற்சொன்ன கவிதை பேசுகிறது.

கல்குடா ரயில் மறிப்புப் போராட்டம் வாழைச்சேனை - ஏறாவூர் ரயில் நிலையங்களுக்கிடையிலுள்ள தேவநாயக புரத்தில் நடந்தது. விடுதலையின் பெயரால் ஆயுதம் ஏந்திய நபர்கள் ரயிலை வழிமறித்து மற்றொரு சிறுபான்மையினத்தாரைத் துரத்திச் சுட்டனர். "நிசப்தத்தைக் கொன்ற நீசர்கள் - எமது பெண்டிர் நெற்றியில் - குருதியால் பொட்டிட்டனர் கண்ணம்மா.... - ......தொலைந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர் - குழந்தைகளாய் - குருதியில் குளித்தனர் மனிதர்" என்று நகர்கிறது கவிதை.

"வெம்பி மணலில் கால் புதைய - நெருஞ்சி முள் கிழித்துக் - குருதி கொப்பளிக்க - மூன்று மைல்கள் மூச்சுப் பிடித்து ஓடிவந்து" ஒரு வீட்டின் வாசலில் விழுந்தான் அந்த முஸ்லிம் இளைஞன். அது தமிழ்க் குடும்பம் வாழும் வீடு. அக்குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளம் பெண் துரத்தி வந்தவர்களிடமிருந்து அவனைக் காப்பாற்றுவதற்காக தனது கால்களுக்கிடையில் தான் அணிந்திருந்த நீள் பாவாடைக்குள் அவனை மறைத்துக் கொண்டு நிற்கிறாள். வந்தவர்கள் சந்தேகப் பார்வையுடன் திரும்பி விடுகிறார்கள். கவிதை தொடர்கிறது... "இந்தப் பிரதேசத்தை - நமது பிரதேசம் என்று - நம்பிக்கையூட்டியவளே - இரத்தம் சொட்டச் சொட்ட - நான் ஓடிவந்த பாதையை வெறித்து - நீயும் என் ரத்தம்தான் என்றாயே"

கடைசியில் ராணுவ முகாமில் அப்பெண் அவனை ஒப்படைத்துத் திரும்பும் போது தூரத்தில் இரு புள்ளிகளாய் யாரோ அவளை நெருங்குவதை அந்த இளைஞன் கண்டான். அப்பெண் குறித்து இரக்கத்துடன் கவிதை வரிகள் பேசுகின்றன. "அப்புறம் - என்ன நடந்தது கண்ணம்மா?"

என்ன நடந்திருக்கும்? அவனுக்குப் பதிலாக கண்ணம்மா உயிரை இழந்திருக்கலாம். இல்லையேல் சித்திரவதை செய்யப் பட்டிருக்கலாம். அவளைத் தண்டித்தவர்கள் சிலவேளை இறந்து விட்டிருக்கலாம். அல்லது ஏதாவது ஒரு மேலைத்தேச நாட்டில் உட்கார்ந்து கொண்டு மனிதாபிமானம் குறித்துக் கவிதை அல்லது கதை எழுதிக் கொண்டிருக்கவும் கூடும். யார் கண்டார்கள்?

இக்கவிதையை எழுதியவர் ஏ.ஜி.எம்.ஸதக்கா. கல்குடாப் பிரதேசத்தில் எண்பதுகளுக்குப் பிறகு தோன்றிய குறிப்பிடத்தக்க படைப்பாளிகளுள் ஒருவர். "இமைக்குள் ஓர் இதயம்" என்ற ஒரு சிறு தொகுதியை 1988ல் வெளியிட்டவர். (இனப் பிணக்குக் குறித்த கவிதைகளை எழுதிய இப்பிரதேசத்தின் ஏனையவர்களுள் வாழைச் சேனை அமர், எஸ்.நளீம், ஓட்டமாவடி அறபாத், பாலை நகர் ஜிப்ரி ஆகியோர் முக்கியமானவர்கள். அமர், "விடுதலையின் நிகழ்வுகள்" என்றொரு சிறு தொகுதியை 1985ல் வெளியிட்டார். இவரது "நீ வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைப் பொழுது" கவிதைத் தொகுதி 2004ல் வெளிவந்தது. எஸ். நளீமின் கவிதைத் தொகுதிகளாவன "கடைசிச் சொட்டு உசிரில்"-2000, "இலை துளிர்த்துக் குயில் கூவும்" - 2008. அறபாத்தின் கவிதை நூல்கள்: - "எரி நெருப்பிலிருந்து" - 1996, "வேட்டைக்குப் பின்" - 2002. ஜிப்ரி இன்னும் கவிதை நூல் வெளியிடவில்லை.)

ஸதக்காவின் கவிதை சொல்லும் கண்ணம்மாவின் மனிதாபிமானம் உன்னதமானது. ஓர் இளம் பெண் தனது அந்தரங்கம் பற்றி ஆதங்கம் கொள்ளாமல் ஓர் அந்நிய இளைஞனின் உயிர் காத்து மறைத்து நின்றாள் என்பது உரக்கச் சொல்லப்பட வேண்டியது. வர்ணங்களுக்கும் வார்த்தைகளுக்கும் அப்பால், அதற்கும் அப்பால் உறைந்த மௌனத்தால் கௌரவிக்கப்பட வேண்டியது. சமாதானம், தியாகம், விட்டுக் கொடுப்பு குறித்துப் பேசும் ஆயிரமாயிரம் புத்தகங்களை விஞ்சி நிற்பது. இந்தக் கவிதை ஏன் மேலெழவில்லை என்பதற்கு விளக்கம் சொல்ல முற்பட்டால் நான் சிலரின் சொல் லெறிக்கு ஆளாக நேரலாம் என்பதால் தவிர்த்துக் கொள்கிறேன். இலக்கிய உலகத் துயரங்களும் சாபங்களும் பற்றி உங்களுக்குத் தெரியாதா என்ன?

மனிதாபிமானம் குறித்துப் பேசப்படும் உரைகளாலும் எழுத்துக்களாலும் சட்டங்களாலுமே மனிதாபிமானம் உயிர் வாழ்கிறது என்றா நினைக்கிறீர்கள்? இல்லை! அது கண்ணம்மா போன்றவர்களால் மாத்திரமே பாதுகாக்கப்பட்டு வருகிறது.

*24.02.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்குச்சிகள்

*மி*ஞ்சினால் முப்பது அல்லது நாற்பது செக்கன்கள் இருக்கும். அது உண்மையில் திட்டமிட்டு எடுக்கப்பட்ட ஒரு குறும்படம் அல்ல. ஓரிடத்தில் நடந்த சம்பவம். ஓர் அறைக்குள் பாதுகாப்புக் கருதிப் பொருத்தப்பட்ட கமராவின் ஒளிப்பதிவு போல் தெரிந்தது. கைத் தொலைபேசி ஒன்றில்தான் அதனைப் பார்த்தேன்.

ஓர் அறையில் முஸ்லிம்கள் கூட்டுத் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இரண்டு வரிசைகள் பூர்த்தியான நிலையில் ஓர் இளைஞன் தொழுகையில் இணைந்து கொள்ள வருகிறான். மூன்றாவது அணியில் தனியே நின்று முன்னால் உள்ள ஒரு பெரியவரைச் சுரண்டுகிறான். இரண்டு முறை சுரண்டிய பிறகு அப்பெரியவர் பின்னால் எட்டு வைத்து இளைஞனருகே வருகிறார். அப்பெரியவர் நின்றிருந்த இரண்டாம் வரிசை இடத்தை அவருக்கு அருகே நின்று தொழுபவர்கள் இடைவெளி குறைத்து நிரப்பிக் கொள்வார்கள். முறைப்படி இளைஞன் அப்பெரியவர் அருகே நின்று தொழ வேண்டும். இளைஞனோ அவருக்கு அருகில் நின்று தொழாமல் சட்டென்று அப்பெரியவர் ஏற்கனவே நின்ற இடத்துக்குச் சென்று விடுகிறான். அதாவது தன்னுடன் நின்று தொழுவதற்கு அழைத்து விட்டு அவரைத் தனிமையாக்கி விட்டு அவர் நின்றிருந்த இடத்துக்குச் சென்று விடுகிறான். அப்பெரியவர் தனது தொழுகையைக் கைவிட்டு அவனை வரிசையிலிருந்து இழுத்தெடுக்கிறார். பளார் என்று அறை விழும் சத்தம் கேட்கிறது. படம் முடிவடைகிறது. அசைவற்ற ஒற்றைக் கமராவின் ஒளிப்பதிவு. வணக்கம் என்ற அடிப்படையிலான தர்க்கங்களுக்கு அப்பால் சட்டெனத் தன்னை மறந்து சிரிக்கத் தூண்டுகிறது இப்படம். இதற்குச் 'சேட்டை' என்று பெயர் வைக்கலாம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியது எனக்கு.

இதைப்பற்றி நான் எழுதுவதற்குக் காரணம் சகோதரர் ஏ.பி.எம். நவாஸ் என் கவனத்துக்குத் தந்த "நிழல்" என்ற சஞ்சிகை. சென்னை ராயப்பேட்டையிலிருந்து ப.திருநாவுக்கரசு என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இந்தச் சஞ்சிகை நவீன சினிமாவுக்கான களம் என்ற உப தலைப்புக் கொண்டிருக்கிறது. தமிழ் சினிமாவைப் பொறுத்த வரை நான் ஒரு காமடி ரசிகன். ஆனால் குறும்படங்களில் எனக்கு நாட்டம் அதிகம். அதை ஏற்படுத்தியவரும் நவாஸ்தான். அவர் இணைந்து செயற்பட்ட "ஸ்கிரிப்ட் நெற்" நண்பர்கள் ஒரு முறை எங்களது ஊருக்கு வந்து சில படங்களைக் காட்டினார்கள். குறும்படங்கள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியன என்பதை அன்றுதான் நான் அறிந்து கொண்டேன்.

இச்சஞ்சிகையில் படத்துக்கான காட்சிகளைத் தொகுத்தல், மற்றும் சிறந்த இயக்குனர்கள் பற்றிய கட்டுரைகள் உள்ளன. தவிர சமீபத்திய 37 இந்தியக் குறும்பட ஆவணப்படங்கள் குறித்து கிறிஸ்டோபர் என்பவரின் விமர்சனங்களும் அவுஸ்திரேலியாவில் நடந்த குறும்படப் போட்டியில் தெரிவான 10 படங்கள் பற்றி லெ. முருகபூபதியின் குறிப்புகளும் டொராண்டோ சர்வதேச திரைப்பட விழாவில் இடம் பெற்ற ஆறு படங்கள் பற்றி ரதன் என்பவரின் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. ஆவணப்படங்களுக்கு நேர வரையறை கிடையாது. ஆனால் ஒரு நிமிடம் முதல் 30 நிமிடம் வரை எடுக்கப்படுவதைத்தான் குறும்படமாக ஜெர்மனி, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய இடங்களில் நடக்கும் குறும்பட விழாக்களில் பின்பற்றுகின்றனர். அரை மணி நேரத்துக்கு மேல் ஒரு மணிவரை எடுக்கும் படங்களை Short Feature என்று அமெரிக்காவில் அழைக்கின்றனர் என்று சஞ்சிகையில் குறிப்பொன்று காணப்படுகிறது.

நண்பர் முருகபூபதி உணர்வு என்ற தலைப்பிலான குறும்படம் பற்றி இவ்வாறு சொல்கிறார். "அங்கதச் சுவையுள்ள வசனமே இல்லாத குறும்படம். மனிதன் தனது காலை உணவில் சிறிது நாய்க்கும் வைக்கிறான். அது விரும்பி உண்கிறது. பகல் உணவும் நாய்க்குப் பகிரப்படுகிறது. மாலையில் பால் தேனீரைத் தானும் அருந்தி நாய்க்கும் தருகிறான். அது விரும்பி நக்கிக் குடிக்கிறது. இரவாகிறது. அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுபானம் அருந்துகிறான். நாய்க்குக் கொடுக்க அது கோபத்தில் குரைக்கிறது. மனிதன் விரும்பும் மதுவை நாய் வெறுப்பதை இக்குறும் படம் துல்லியமாகக் காட்டுகிறது. பார்த்த ரசிகர்கள் அரங்கம் அதிரச் சிரித்தார்கள்."

அங்கதச் சுவையுடனான இரண்டு படங்கள் பற்றியே உங்களுக்குச் சொன்னேன். ஆனால் சில படங்கள் ஒரு சில நிமிடத் துளிகளில் நம்மை ஆச்சரியப்படவும் அதிர்ச்சியடையவும் செய்யக் கூடியவை. ஆனந்த அபேநாயக்க இயக்கியிருந்த "Darkness at dawn" என்ற படத்தைப் பார்த்து விட்டு மூன்று தினங்கள் என்னால் சரியாக உறங்க முடியவில்லை. அது ஒன்றும் ட்ரகுலா படம் அல்ல. யுத்தத் தினால் கால் இழந்த ஒரு சிறுவன் துப்பாக்கியின் வெற்றுத் தோட்டாக் கள் கொண்டு ஊதிகள் செய்து பார்வையற்ற ஊதி விற்பவரிடம் கொடுக்கும் உள்ளத்தைத் தொடும் கதை. சீரியல் போட்டுப் பணம் பண்ணும் நமது தொலைக்காட்சி நிலையங்கள் சமூக அக்கறையுடன் எடுக்கப்படும் குறும்படங்களை அவ்வப்போது ஒளிபரப்பினால் சமூகத்தில் பெரும் தாக்கத்தை உண்டு பண்ண முடியும்.

இவ்வாறான சஞ்சிகைகளை வாசிப்பதால் இத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர்கள் நல்ல கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள லாம். நல்ல முயற்சிகளை மேற்கொள்ளவும் முடியும். மற்றும் வீடியோக் கெசட்டுக்களைத் தூக்கித் திரிபவர்களெல்லாம் அகிறா குறோஸவா மற்றும் சத்யஜித்ரே லெவலுக்குப் பண்ணும் உபதேசங் களுக்குக் காது கொடுக்கும் அவசியமும் இருக்காது.

*02.03.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகையின் சூரியன்

1993ல் அமெரிக்க ஜனாதிபதியாக பில் கிளின்டன் பதவி யேற்ற வைபவத்தை நேரடியாகத் தொலைக் காட்சியில் பார்த்தவர்கள் அப்பெண்மணியை மறந்திருக்க முடியாது. கிளின்டனின் விசேட வேண்டுகோளின் பேரில் "காலை நேரத்தின் நாடித் துடிப்பின் மீது" என்ற தலைப்பில் அவ்வைபவத்தில் ஒரு கவிதையைப் படித்தார் அப்பெண்மணி. கவிஞர், பாடலாசிரியர், எழுத்தாளர், நடனக் கலைஞர், நாடக எழுத்தாளர், மேடை மற்றும் சினிமா தயாரிப்பாளர், நடிகை, பாடகர், இயக்குனர், மேடைக் கலைஞர், நிகழ்ச்சித் தொகுப்பாளர், மனித உரிமைப் போராளி என்று அம்மணிக்கு ஏகப்பட்ட முகங்கள். அவர்தான் அமெரிக்காவுக்கு அப்பாலும் புகழ் பெற்று விளங்கும் மாயா ஏஞ்சலோ. (லூ?)

மாயா சட்டெனப் புகழ் பெற்றவரில்லை. கவிஞராக, நடனக் கலைஞராக, பாடகியாக அறிமுகமாகி வானொலி, தொலைக் காட்சி, சினிமா எனத் தனது சிறகை விரித்தவர். ஹொலிவூட்டில் முதல் கறுப்பினப் பெண் இயக்குனர் என்ற பெருமை பெற்ற அவர் இன்று ஒரு சர்வதேசப் புகழ் பெற்ற பிரமுகர். முப்பதுக்கும் மேற்பட்ட கௌரவப் பட்டங்களைப் பெற்ற மாயா ஒரு கலாநிதி. ஆங்கிலம், பிரெஞ்ச், ஸ்பானிஷ், இத்தாலி, அறபு மற்றும் மேற்காபிரிக்க மொழியான ஃபென்ரி ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் உள்ளவர். அவரது இயற்பெயர் மார்கரிட் ஏன் ஜோன்சன். மாயா என்பது செல்லப் பெயர். அதைச் சிறுவயதிலேயே சூட்டியவர் அவரது ஒரே சகோதரர். மாயாவுக்கு இரண்டு திருமணங்கள். ஒரு புதல்வன். அவரும் ஒரு கவிஞர்.

1928ல் பிறந்த மாயாவின் இளமைக் காலம் துன்பம் மிக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு வயதிலேயே அவரது தாய்க்கு நெருக்கமான ஒருவனால் கற்பழிக்கப்பட்டவர். இச்சம்பவத்துக்குப் பின்னர் ஐந்து வருடங்கள் மௌனமாகவே வாழ்ந்தார். பேசமாட்டாயா? என்று கேட்ட போது "நான் இப்போது வாய் திறப்பேனாகில் அதிலிருந்து வெளிவருவது பலரைக் கொன்று விடும். அதை விட மௌனமாக இருப்பதே சிறந்தது" என்று பதில் சொன்னார். தொலைக் காட்சி நிகழ்ச்சி யொன்றை அவர் தொகுத்து வழங்கிய அழகில் அந்நிகழ்ச்சி சும்மா பிய்த்துக் கொண்டு போனது. உலகம் முழுக்கக் கோடிக் கணக்கான மக்கள் அந்நிகழ்ச்சியில் கட்டுண்டு கிடந்தார்கள்.

அமெரிக்காவின் பல இடங்களுக்கும் வேறு சில நாடு களுக்கும் பல சுற்றுப் பயணங்களை மேற்கொண்ட மாயா 1959ல் மார்டின் லூதர் கிங்கின் இணைப்பாளராகவும் செயற்பட்டார். எகிப்தில் "தி அரப் ஒப்செவர்" பத்திரிகையில் இணை ஆசிரியராகவும் 1962ல் கானாவுக்குச் சென்று கானா பல்கலைக் கழகத்தில் நிர்வாக அதிகாரியாகவும் கடமையாற்றினார். அங்குதான் மல்கம் எக்ஸு டனான நட்பு அவருக்கு ஏற்பட்டது. மல்கம் எக்ஸ் மனித உரிமை அமைப்பை அமெரிக்காவில் ஏற்படுத்துவதற்கு மாயா பெரிதும் உறுதுணையாக இருந்தார். மார்டின் லூதர் கிங் கொலை செய்யப் பட்ட 1968 ஏப்ரல் 4ம் திகதி மாயாவின் பிறந்த தினமாக இருந்தது. அன்றிலிருந்து தனது பிறந்த தினத்தை கொண்டாடுவதை அவர் தவிர்த்துக் கொண்டார். மாயாவின் இயக்கங்கள், அவரது பல்துறைப் படைப்புக்கள், பங்களிப்புகள் மற்றும் அவர் பெற்ற பாராட்டு விருதுகள் அனைத்தையும் இப்பத்திக்குள் எழுதுவதென்பது சாத்தியமானதல்ல. ஒன்றைச் சொல்லி விட்டு மற்றொன்றைச் சொல்லாமல் விட்டு விட முடியாத அளவு அத்தனையும் எடுத் தாளப்பட வேண்டியவை. 1969ல் "கூண்டுப் பறவை ஏன் பாடுகிறது என்றறிவேன்" என்ற முதலாவது நூல் வெளிவந்தது. அதன் பிறகு கவிதை, சரிதம், கதை, நாடகப் பிரதிகள், சினிமாப் பிரதிகள் என்று ஒன்றன் பின் ஒன்றாகப் பல நூல்கள் வெளியாகின.

1. மனிதப் பிறவியின் கடமை அன்பு செய்வதே. 2. நீங்கள் சொல்வதையும் செய்தவற்றையும் மக்கள் மறந்து விடக் கூடும். அவர்களை நீங்கள் எவ்வாறு உணர வைத்தீர்கள் என்பதை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்து விடுவதில்லை. 3. உங்களிடம் ஒரே ஒரு புன்னகை எஞ்சியிருக்குமாயின் நீங்கள் விரும்பும் மற்றவர்களுக்கு அதனைக் கொடுத்து விடுங்கள். 4. நீங்கள் ஒரு விடயத்தை விரும்பவில்லை யானால் அதனை மாற்றி விடுங்கள். அதனை மாற்ற முடியா திருந்தால் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். அதுகுறித்து குறை சொல்லாதீர்கள். இவை மாயாவின் பொன் மொழிகளில் சில. "அதிசயிக்கத் தக்க பெண்" என்ற அவரது கவிதை அவரது அடையாளமாகக் கருதப்படுகிறது. அக்கவிதையின் இரண்டு வார்த்தைகளை மட்டும் தருகிறேன். 1. அது என் கண்களின் நெருப்பு. 2. என் புன்னகையின் சூரியன்.

டி.என்.ஏ. பரிசோதனையில் மாயா மேற்காபிரிக்க "மென்டே" இனத்தைச் சார்ந்தவர் என்று கண்டறியப்படும் அளவு அவரது பிரபல்யம் கொடி கட்டிப் பறக்கிறது. மேல் நாட்டில் எழுத்துலகப் பிரமுகர்கள் இலக்கியச் சுற்றுலாச் சென்று படைப்புக்களைப் பகிர்ந்து கொள்வதையும் உரைகள் நிகழ்த்துவதையும் அறிவீர்கள். மாயா வருடத்துக்கு எண்பதுக்கு மேற்பட்ட இலக்கியக் கூட்டங்களில் கலந்து கொள்கிறார். பிரபலங்கள் விமானப் பயணம் செய்வது பெருந் தொந்தரவு என்பதால் சுற்றுலா வாகனத்தில் தனது பயணத்தை மேற்கொண்டு வருகிறார்.

ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு 43000 டாலர்கள் அவருக்கு வழங்கப்படுகின்றன. நமக்கும் இவ்வாறு வாங்க ஆசைதான். தருவதற்குத்தான் யாருமில்லை.

மாயா பேசினால் காசு வரும். நம்மில் சிலர் பேசினால் வாந்தி வரும்.

*09.03.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவ்வை வழி

சும்மா இருந்த ஒரு பொழுதில் அவ்வையின் நல்வழியை வாசித்தேன். பாடசாலையில் படித்த போது அவரின் நல்வழிப் பாடல்கள் சிலவற்றை மனனம் செய்திருந்தேன். தமிழ்ப் பாட நூல்களில் அவை சேர்க்கப்பட்டிருந்தன என்று நினைக்கிறேன். படிக்கப் படிக்க இன்பந் தரும் அவரது வெண்பாக்களை முன்னரெல் லாம் யாராவது தங்களது உரையின் போது சேர்த்துக் கொள்வார்கள்; உதாரணம் காட்டுவார்கள். இன்று அவ்வாறான உரைகளைக் கேட்கக் கிடைப்பதில்லை.

கவிஞர் இன்குலாப் எழுதிய 'ஔவை' என்ற நாடக நூலில் கள் குடிப்பவராகவும் பரத்தையர் புணர்ச்சி பற்றிப் பேசுபவராகவும் ஔவை சித்தரிக்கப்பட்டுள்ளாராம். இது குறித்து எழுந்த சர்ச்சையின் பின்னணியில் எழுத்தாளர் மாலன் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அவர் சொல்கிறார்:- "உண்மையில் 'ஆத்திசூடி' எழுதிய அவ்வை யாரும் இன்குலாப் குறிப்பிடும் அவ்வையாரும் ஒருவர் அல்லர். கி.பி. 2ம் நூற்றாண்டு என்று கருதப்படுகின்ற சங்க காலத்திலிருந்து 18ம் நூற்றாண்டு வரை ஆறு அவ்வையார்கள் இருந்திருக்கிறார்கள். அத்தனை பேரையும் ஒன்றாகப் பிசைந்து மூதாட்டி வடிவம் கொடுத்துக் கே.பி. சுந்தராம்பாளை நடிக்கச் செய்து நம் மனதில் அவ்வையாரைக் கிழவியாக நிறுத்தி விட்டது சினிமா."

அது எவ்வாறிருந்த போதும் 'நல் வழி' தந்த அவ்வையாரின் சில வெண்பாக்களை இவ்வாரம் எடுத்தாள விரும்புகிறேன். பாடலுடன் கருத்தும் கூடவே எனது வார்த்தைகள் ஒன்றிரண்டையும் சேர்த்துள்ளேன். நல்வழிப் பாடல்களை ஒரு முறை ஞாபகமூட்டுவதும் உங்களுடன் சேர்ந்து ரசிப்பதும் எனது நோக்கமே தவிர அவ்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரைக் கிண்டலடிப்பதல்ல. ஒரு சுவாரஸ்யம் கருதியே எனது வார்த்தைகள் இடம் பெறுகின்றன.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா

*(பொருள்) அழகிய யானை முகங் கொண்ட விநாயகப் பெருமானே, பசும்பாலும் தேனும் வெல்லப் பாகும் பருப்பும் கலந்து உனக்குப் படையல் செய்கிறேன். சங்கம் வளர்த்த இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் எனக்குத் தந்தருள்க.*

☐ *அப்பதான் இந்த மூணையும் வெச்சு எங்களுக்குள்ள நாங்க சண்டை பிடிக்கலாம்!*

ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளுக்(கு) ஏல்என்றால் ஏலாய் - ஒருநாளும்
என்நோவு அறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது.

*பொ-ள்) ஒரு நாள் உணவைத் தவிர்த்து விடு என்றால் மறுக்கிறாய். இரு தினங்களுக்குச் சேர்த்து உண் என்றாலும் மறுக்கி றாய். துன்பம் தரும் வயிறே உன்னோடு வாழ்வது பெருங் கஷ்ட மாயிருக்கிறது.*

☐ *அரிசி விற்கும் விலையில்!*

உள்ளது ஒழிய ஒருவர்க்கு ஒருவர் சுகம்
கொள்ளக் கிடையா குவலயத்தில் - வெள்ளக்
கடல்ஓடி மீண்டு கரையேறி னால்என்
உடலோடு வாழும் உயிர்க்கு

*(பொ-ள்) ஒருவருக்கென அமைத்ததே கிடைக்கும். மற்றோர் போல் அனுபவிக்க விரும்பினால் அது கிடைக்காது. கடல் கடந்து பொருள் தேடி வந்தாலும் உடலில் தங்கியுள்ள உயிருக்கு சுகமா கிடைத்துவிடப் போகிறது.*

☐ *உழைத்துக் கொண்டு வந்து வீட்டுல 'ஏசி' பொருத்தி ரீவியில சீரியல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிறாங்களே அம்மணி!

**இழுக்குடைய பாட்டிற்(கு) இசைநன்று சாலும்**
**ஒழுக்கம் உயர் குலத்தின் நன்று - வழுக்குடைய**
**வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சா**
**தாரத்தின் நன்று தனி**

(பொ-ள்) குற்றமுள்ள பாட்டை விட இசை மேலானது. உயர்ந்த குடும்பம் என்பதை விட ஒழுக்கம் உயர்வானது. தவறுள்ள வீரத்தை விட நோய் நல்லது. எப்பழிக்கும் அஞ்சா மனைவியுடன் வாழ்வதை விடத் தனியே இருப்பது மேல்.

☐ நோ கொமன்ஸ் மேடம்!

*16.03.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் செய்யும் மருந்து

அறிமுகமற்ற ஒருவர் அண்மையில் எனக்கு அனுப்பி வைத்திருந்த கொசுத் தபாலில் (ஈ.மெயில்) வந்திருந்த விடயத்தைத் தங்கள் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டாமோ?

பார்வையற்றவள் அந்த இளம் பெண். தன்னால் இந்த உலகத்தைப் பார்க்க முடியாதிருப்பதற்காகத் தன்னையே அவள் வெறுத்தாள். ஒரே ஒரு நபரைத் தவிர மற்றைய மனிதர்களையும் வெறுத்தாள். அந்த நபர் அவளது காதலன். தனக்குப் பார்வை கிடைத்தால் முதல் வேலையாக அவனைத் திருமணம் செய்து கொள்வதாக எப்போதும் சொல்லிக் கொண்டிருந்தாள். ஒரு நாள் ஒரு சோடிக் கண்களை அவளுக்கென யாரோ அன்பளிப்புச் செய்தார்கள். அவற்றைச் சத்திர சிகிச்சை மூலம் பொருத்திக் கொண்டால் அவளால் எல்லாவற்றையும் பார்க்க முடியும் - தனது காதலன் உட்பட. திருமணம் செய்து சந்தோஷமாக வாழவும் முடியும்.

சில நாட்களில் கண்கள் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டன. அவளருகே வந்த காதலன் அன்பே, என்னை நீ திருமணம் செய்து கொள்வாயா? என்று கேட்டான். அவனை நிமிர்ந்து பார்த்த அந்த இளம் பெண் அதிர்ந்தாள். ஏனெனில் அவனும் பார்வையற்றவனாக இருந்தான். எனவே அவள் ஒரேயடியாக மறுத்து விட்டாள். அவன் கண்ணீருடன் அவளிடம் விடை பெற்றான். பின்னர் அவளுக்கு அவன் ஒரு கடிதம் எழுதினான். "அன்பே, உனக்குப் பொருத்தப் பட்டிருக்கும் எனது கண்களைப் பத்திரமாகப் பாதுகாத்துக்கொள்."

தர்க்க ரீதியாக நின்று சிந்தித்து உயிருள்ள ஒருவர் இரு கண்களையும் அன்பளிப்புச் செய்யலாமா இல்லையா என்றெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதித்துக் கொண்டிருக்கக் கூடாது. நிலை மாறும் போது மனித மனம் எவ்வாறு மாற்றமடைகிறது என்பதை விளக்குவது மட்டுமே இக் கதையின் நோக்கமாக இருக்கிறது.

துன்பம் மிகுந்த காலத்தில் யார் துணை நின்றார்கள், தனது கடந்த காலம் எவ்வாறு இருந்தது என்பதையெல்லாம் மிகச் சிலரே நினைத்துப் பார்க்கிறார்கள். வாழ்க்கையானது ஓர் அருட்கொடை யாகும். நீங்கள் நோகடிக்கும் ஒரு வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு முன்னர் வாய் பேச முடியாத ஒருவரைப் பற்றிச் சிந்தியுங்கள். ருசியற்ற ஓர் உணவைக் குறை சொல்வதற்கு முன்னர் உண்பதற்கென்று எதுவுமே இல்லாதவர்களைப் பற்றி எண்ணிப் பாருங்கள். மனைவியைப் பற்றிக் கணவனும் கணவனைப் பற்றி மனைவியும் குறை சொல்வதற்கு முன்னர் வாழ்க்கைத் துணை இல்லாமல் தனியே வாழ்வோரின் நிலையை நினைத்துப் பாருங்கள். கிடைத்திருக்கும் வாழ்க்கை பற்றி அலுத்துக் கொள்வதற்கு முன்னர் கிடைத்த வாழ்க்கையை, வாழக் கிடைக்காமல் மறைந்து போனவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள். உங்களது பிள்ளை களின் குறைகளை முறைப்பாடு செய்வதற்கு முன்னர் ஒரு குழந்தை கூட இல்லாமல் துக்கித்திருக்கும் தம்பதியரைப் பற்றி எண்ணிப் பாருங்கள். வீட்டுக் குறைபாடுகள் பற்றிக் கவலைப்படுவதற்கு முன்னர் தங்குவதற்கு இடமின்றித் தெருவோரங்களில் படுத்துறங்கும் மனிதர்களைப் பற்றி யோசியுங்கள்.

ஒரு நடைப் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் அதையிட்டுப் புலம்புவதற்கு முன் ஒரு செயற்கைக் காலுடன் அல்லது ஊன்றுகோல் துணையுடன் நடந்தாக வேண்டியவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள். நீங்கள் செய்யும் தொழிலில் அலுப்பு ஏற்படும் போதெல்லாம் அத்தொழிலுக்கு முயன்று அது கிடைக்காமல் போனவர்களைப் பற்றியும் தொழில் கிடைக்காது அலைந்து திரிவோர் பற்றியும் நினைத்துப் பாருங்கள். மற்றொரு நபரைக் குறை சொல்வ தற்காகச் சுட்டு விரல் நீட்டும் போது நாம் யாருமே பாவங்கள் புரியாத பரிசுத்தவான்கள் அல்லர் என்பதையும் நம் அனைவரையும் படைத் தவன் ஒருவனே என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மன உளைச்சல் ஏற்பட்டு உற்சாகம் வடிந்து போகும் தருணங் கள் வரும் போதுங் கூட முகத்தில் அழியாத புன்னகையை வைத்திருங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருப்ப தற்காக இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள். வாழ்க்கை உங்களுக்குத் தரப்பட்டிருக்கும் அருட்கொடை. அனுபவியுங்கள். அதை நிறைவு செய்யுங்கள்.

யாரோ ஒருவர் சொல்கிறார்:-

என்னிடமுள்ள பெருமையை நீக்கி விடும்படி இறைவனைக் கேட்டேன். அவன் மறுத்தான். அது நான் எடுத்துக் கொள்வதற்கானது அல்ல; நீயாகவே துறந்து விடுவதற்கானது என்று சொன்னான். மகிழ்ச்சியை ஏற்படுத்தித் தருமாறு இறைவனைக் கேட்டேன். அவன் மறுத்தான். நான் உனக்கு ஆசிகளை வழங்குகிறேன்; அதிலிருந்து சந்தோஷத்தைப் பெற்றுக் கொள்வது உன்னைப் பொறுத்தது என்று சொன்னான். எனக்குப் பொறுமையைத் தரும்படி இறைவனைக் கேட்டேன். அவன் மறுத்தான். அது பெருந்துன்பங்களின் வழித் தொடர்புடையது. அது வழங்கப்படுவது அல்ல; அடைந்து கொள்ளப்படுவது என்று சொன்னான். வாழ்வின் இன்பங்களை யெல்லாம் அடைவதற்கான சகலதையும் தருமாறு இறைவனைக் கேட்டேன். அவன் மறுத்தான். நான் உனக்கு வாழ்க்கையைத் தந்திருக்கிறேன்; இன்பங்களை அடைவது உன்னைப் பொறுத்தது என்று சொன்னான்.

இறைவன் என்னில் வைத்திருப்பதைப் போல மற்றவர்களில் அன்பு செய்ய உதவுமாறு இறைவனைக் கேட்டேன். இறைவன் சொன்னான். "அப்பிடிப் போடு!"

23.03.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கிரி கதை

படைப்பாளி பக்கிரி வேலை செய்யும் நிறுவனத்தின் சிற்றூழியன் பொதி செய்யப்பட்ட பெருந் தொகைப் புத்தகங்களை இரண்டு கைகளிலும் சுமந்து கொண்டு வியர்வை வழியத் தெருவோரத்தே மாங்கு மாங்கென நடந்து போவதைக் கண்டான் கதை சொல்லி. அவனைப் பெயர் சொல்லி அழைத்து அவனருகே சென்ற கதை சொல்லி எங்கு சுமந்து போகிறாய்? என்று கேட்டான். சிற்றூழியன் சொல்ல ஆரம்பிப்பதற்கிடையில் சில விபரங்களை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

கதைசொல்லிக்கும் படைப்பாளி பக்கிரிக்கும் இடையில் நாலு பேருக்குத் தெரியுமளவு மனக்கசப்பு எதுவும் கிடையாது. தன்னை விடப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே எழுதத் தொடங்கிய கதை சொல்லியைச் சிலாகித்துப் பக்கிரியிடம் யாராவது கதைத்தால் பக்கிரியின் முகம் சுருண்டு விடுவதாகக் கதை சொல்லியிடம் பலர் சொல்லியிருக்கிறார்கள். கதைசொல்லியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் பக்கிரி அதை வெகு லாவகமாகத் தவிர்த்து வருவதை அதற்குப் பிறகுதான் கதைசொல்லி அவதானிக்கத் துவங்கினான். ஆனாலும் கூடப் பக்கிரியுடனான உறவை ஓடும் புளியம் பழமும் போல் கதை சொல்லி பேணி வந்தான். இதற்கான காரணங்கள் குறித்துக் கதை சொல்லி பெரிதாக ஆராய வில்லை. காரணம் பக்கிரியின் குருநாதர். குருநாதர் ஒரு “குண்டக்க மண்டக்க” பேர்வழி. யாராவது தன்னை மிஞ்சுகிறான் என்று குருநாதர் அறிய வந்தாரானால் அவனை ஏதாவது ஒரு வழியில் போட்டுத் தாக்குவதற்குத் துணிந்து விடுவார். அதற்கான சித்து வேலைகளை அவர் நன்கு அறிந்தவர். அவரைப் பற்றி எழுத ஆரம்பித்தால் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் புத்தகமாகி விடும் என்பதால் அவரை இந்த இடத்திலேயே கழற்றி விடுவதற்குக் கதை சொல்லி விரும்புகிறான். அவருடன் தொடர்புள்ள பலரும் செய்வது போல.

பக்கிரி ஒன்றும் மோசமான படைப்பாளி அல்ல. இரண்டு பெரிய புத்தகங்கள், குட்டிக் குட்டியாகச் சில புத்தகங்கள் என்று வெளியிட்டுள்ளார். அவரது சில படைப்புக்கள் மிகச் சிறந்தவை. அவருடைய மிகப் பெரும் பலவீனம் தன்னை ஒரு பெரும் மேதாவியாக நினைத்துக் கொள்வது. தனது படைப்புக்கள் சிலவற்றில் விரல் கொண்டு முழம் போட்டிருக்கும் அரை வேக்காட்டுத்தனம் இருக்கும். உதாரணமாக அவரை நீங்கள் பேட்டி காணுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆன்டன் செக்கோவ், ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கி, அக்மதோவா, வைக்கம் முகம்மது பஷீர், லாங்ஸ்டன் ஹியூஸ், குந்தர் கிராஸ், விஸ்லவா ஸிம்போர்ஸ்கா போன்ற பிற நாட்டுப் படைப் பாளிகள் சிலரது பெயர்களை எடுத்து விட்டு அவர்களது படைப்புக் கள் தன்னை மிகவும் கவர்ந்ததாகச் சொல்லுவார். அதில் தப்பேதும் இல்லைத்தான். அதை அவர் சொல்லும் விதம்தான் நம் காதுகளில் பூ சொருகுவது. அதாவது அவர் குறிப்பிடும் படைப்பாளிகளை அவர்கள் எழுதிய மொழியிலேயே கரைத்துக் குடித்தது போல பிரமை ஏற்படுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்துவதை நீங்கள் அவதானிக்க முடியும்.

நீங்கள் கடந்த காலத்தில் வெளிவந்த சிறு சஞ்சிகைகளின் கடிதம் பகுதிகளைப் படித்துப் பார்க்கும் பழக்கம் உள்ளவராக இருந்தால் இதை இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். ஒரு சஞ்சிகையில் மொரோக்கோ படைப்பாளி மாலிகா ஒஃப்கீர் பற்றிய ஒரு கட்டுரை வெளிவந்தது என்றால் அடுத்த இதழில் மாலிகா பற்றிய பக்கிரியின் கடிதம் பிரசுரமாகியிருக்கும். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் கட்டுரை எழுதியவரை விடப் பக்கிரிக்கு மாலிகா பற்றி அதிகம் தெரிந்திருக்கிறது என்று வாசகர் மயங்குமளவு அதே கட்டுரையின் தகவல்களைப் பின்னணியாகக் கொண்டு சற்று விசேடமான வார்த்தைகளைப் பயன்படுத்தி அக்கடிதத்தை அவர் எழுதியிருப்பார். பக்கிரி அண்மையில் "ஒற்றைத் தென்னையில் ஓலக் குயில்" என்ற தலைப்பில் ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களைத்தான் சிற்றூழியன் சுமந்து கொண்டு தெருவுக்கு வந்திருந் தான். இனிக் கதை சொல்லிக்கும் சிற்றூழியனுக்குமிடையிலான 'உரையாடல்.

***சிற்றூழியன்:*** அதையேன் சேர் கேட்கிறீங்க. புத்தகம் எழுதுறது அவரு. போறது என்ட உசிரு.

***கதை சொல்லி:*** என்ன சொல்கிறாய்? இதெல்லாம் என்ன இலவசப் பிரதிகளா?

***சிற்றூழியன்:*** இலவசமா? இதெல்லாம் போனால் முக்கால்வாசி திரும்பும். கால்வாசிக்குக் காசு கிடைக்கும்.

***கதைசொல்லி:*** என்ன சொல்கிறாய்?

***சிற்றூழியன்:*** இதெல்லாம் வி.பி.பி. பார்சல்.

***கதை சொல்லி:*** ஓ.. இவ்வளவு பேர் புத்தகம் அனுப்பச் சொல்லியிருக்கிறாங்களோ?

***சிற்றூழியன்:*** சேர் உங்களுக்கு ஒரு விசயம் தெரியாது. பக்கிறிக்கிட்ட ஒரு ஃபைல் இருக்கு. பேப்பர்கள்ல வாற பேனா நண்பர் பகுதிகளை வெட்டி அதில் சேகரிச்சு வெச்சிருக்காரு. புத்தகம் வெளியிட்டா அத்தினை பேருக்கும் அவங்க கேட்காமலே வி.பி.பியில் புத்தகம் அனுப்புவாரு. வெளியே யாருக்கும் சொல்லிராதிங்க. நான்தான் மாட்டிக்குவேன்...

கதைசொல்லி சிற்றூழியனை நிமிர்ந்து பார்க்காமல் வேகமாக வரும் வாகனங்களையும் பொருட்படுத்தாமல் தெருவில் இறங்கினான்.

(யாவும் கற்பனை)

*30.03.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்காவின் வெளிச்சம்

2006 ஆகஸ்ட் 17ந் திகதி பிற்பகல் 6.35க்கு டாக்காவில் வாழும் இலக்கியவாதிகளும் அறிவு ஜீவிகளும் ஓர் அதிர்ச்சியான செய்தியை எதிர் கொண்டனர். வங்கக் கவிதையின் மற்றொரு சூரியனின் அஸ்தமனச் செய்தியே அது. ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் பங்களாதேஷின் இலக்கியத்துக்கு மிகப் பெரும் பங்களிப்பை வழங்கியவரான ஷம்ஷூர் ரஹ்மான் என்ற பெருங்கவி அவர்.

அவரது நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களில் கவிதை நூல்கள் மாத்திரம் அறுபது. நாவல், சிறுகதை, வாழ்க்கை வரலாறு, நாடகம், விமர்சனம், மொழிபெயர்ப்பு, பத்திகள், கட்டுரைகள் என்று எல்லாத் துறைகளிலும் துலங்கியவர். 1957ல் ஆங்கில இதழான ‘காலைச் செய்தி’யில் தன்வாழ்வைத் தொடங்கி பாக்கிஸ்தான் வானொலி, மற்றும் பல்வேறு பத்திரிகை, சஞ்சிகைகளில் ஆசிரியராகப் பணி புரிந்தவர். மனித உரிமைப் போராளியாகச் செயற்பட்டவர். பங்களாதேஷில் ஒரு பத்திரிகை ஒரு விஷேட இதழைப் பதிப்பிக்கும் போதோ ஒரு சஞ்சிகை ஆரம்பிக்கப்படும் போதோ ஷம்சுர் ரஹ்மானின் பங்களிப்பில்லாமல் வெளிவர முடியாத ஒரு காலப்பிரிவு இருந்தது என்று குறிப்பிடும் ‘த நியு நேஷன்’ என்ற பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் அவரது மறைவுக்கு அடுத்த தினம் அவரை ‘மனித குலத்தின் பிரகாசம்’ என்று வர்ணித்திருக்கிறது.

1971ம் ஆண்டின் இந்திய - பாக்கிஸ்தான் யுத்தம் மேற்குப் பாக்கிஸ்தானுக்கும் (இன்றைய பாக்கிஸ்தான்) கிழக்குப் பாக்கிஸ் தானுக்குமான (இன்றைய பங்களாதேஷ்) யுத்தமாகக் கருதப்பட வேண்டியது. 26 மார்ச்சில் தொடங்கிய யுத்தம் 16 டிசம்பர் 1971 வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது. அதுவே பங்களாதேஷின் உதயமுமாகும். (இந்த யுத்தம் பற்றிய சர்ச்சைகள் நிறைய உள்ளன.) இந்த யுத்தத்தின் போது தனது எழுத்துக்களால் நாட்டு விடுதலைக்குப் பங்களிப்புச் செய்தவர் ஷம்சுர் ரஹ்மான்.

இக்காலப் பகுதியில் அவர் எழுதிய 'அஸாதின் சட்டை' பிரபல்யமாகப் பேசப்பட்ட கவிதை. அஸாதுக்குத் தாயார் தைத்துக் கொடுத்த சட்டை அது. சகோதரி அழகிய பொத்தான் பிடித்துக் கொடுத்தது. உலர்த்துவதற்காகப் போடப்பட்ட போது காற்றில் பறந்து தொழிற்சாலைகளின் மேலுள்ள பெரிய சிம்னிகளிலும் சந்தி களில் உள்ள மரக் கிளைகளிலும் துண்டு துண்டாகக் கிழிந்து தொங்கும் அச்சட்டை போராட்டத்தின் பதாதைகளாகத் தோற்றமளிப்பதாகச் சொல்கிறது. (எனக்குப் புரிந்த அளவில்.)

மிகவும் வெளிப்படையாகக் கருத்துச் சொல்பவராக இருந்த கவிஞரை 1999ல் ஏதோ ஓர் இயக்க அங்கத்தவர்கள் கோடரியால் தாக்கிய போது தெய்வாதீனமாக உயிர் தப்பினார். உடனிருந்த அவரது மனைவி காயங்களுக்குள்ளானார். பங்களாதேஷ் அகடமி விருது, ஜப்பானிய மிற்சுபிஷி விருது, இந்தியாவின் ஆனந்த புரோஷ்கர் விருது, தென்னாசிய அதிசிறப்பு இலக்கிய விருது ஈறாக ஏராளமான விருது களைப் பெற்றவர் ஷம்சுர் ரஹ்மான். "நாம் யாருமே உலகத்தில் நீண்ட காலம் வாழ வந்தவர்களல்லர்; ஆனால் வங்காள மொழி இப்பூமியில் நிலைத்திருக்கும் வரை ஷம்சுர் ரஹ்மான் நிலைத்திருப்பார்" என்று அவரது மறைவையொட்டி மற்றொரு இலக்கிய நண்பர் தெரிவித்த வார்த்தைகள் மூலம் அவர் எத்தகைய ஒரு தாக்கத்தை வங்காள இலக்கியத்தில் செலுத்தியிருந்தார் என்பது புலனாகிறது. பங்களா தேஷின் மற்றொரு பிரபல்ய படைப்பாளியான ஹுமாயூன் அஸாத், ஷம்சுர் ரஹ்மானின் கவிதைகளை விமர்சனம் செய்து ஒரு நூலை 1993ல் வெளியிட்டுள்ளார்.

"டாக்கா நகரம் ஷம்சுர் ரஹ்மானை ஒரு பெரும் அன்பளிப் பாகத் தந்திருந்தது. குறிப்பாக எமது வங்காள இலக்கியத்துக்கு. எமது மொழிக்குப் பெருங் கீர்த்தியைத் தந்தவர் தாகூர். அதனைச் சிதைவுறாமல் பாதுகாத்துத் தந்தவர் ஷம்சுர் ரஹ்மான். அவரைப் போன்றவர்கள் இல்லாதிருந்தால் எமது மொழியில் நவீன இலக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழைத்தோங்கியிராது" என்று இன்னொரு படைப்பாளி சொல்கிறார்.

'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை மரணச் செய்தியை வெளி யிடும் அளவு பிரபல்யம் வாய்ந்தவராக இருந்த ஷம்சுர் ரஹ்மானை ஆசியாக் கண்டத்திலிருக்கும் நம்மால் பெரிதாக அறிந்து கொள்ள முடியாது போனது ஏன் என்று தெரியவில்லை. அவரது நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டனவா இல்லையா என அறியக் கிடைக்கவில்லை.

படைப்புலகும் படித்தவர் உலகும் பெரிதென மதிக்கும் ஷம்சுர் ரஹ்மானின் இறுதிக் கிரியைகளுக்கு அரச அந்தஸ்து வழங்காமை பங்களாதேஷில் பெரும் சீற்றத்தைக் கிளப்பியிருந்தது. அப்போது ஆட்சியிலிருந்த பிரதமர் பேகம் காலிதா ஸியாவையும் எதிர்க் கட்சித் தலைவி ஷேக் ஹசீனாவையும் நோக்கி பங்களாதேஷ் எழுத்துலகம் ஆவேசத்துடன் சுட்டு விரல் நீட்டிற்று. சுதந்திரத்துக் காகப் பாடுபட்டவர்களின் பட்டியலில் சம்சுர் ரஹ்மானின் பெயர் இல்லை என்று காரணம் சொல்லப்பட்டது. பட்டியல் இட்டவர்கள் அவரைக் கண்டுகொள்ளாதிருந்திருக்கக் கூடும். அல்லது பட்டியலி லிருந்த பெயரை சக்தி மிக்கோரின் மன நெருடலுக்காகத் தூக்கி யிருக்கவுங் கூடும்.

இடுப்புகளில் பட்டாக் கத்திகளைச் சொருகிக் கொண்டு ஆசாமிகள் எல்லா இடங்களிலும்தான் வளைய வருகிறார்கள்!

*06.04.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலீஸார் கதைகள்

எட்டாம் வகுப்புப் படிக்கும் போது பொலிஸாரும் நாமும் என்று ஒரு பாடம் பாடப் புத்தகத்தில் இருந்தது. அநேகமாக அது சூழல் என்ற பாடமாக இருக்க வேண்டும். அதில் பொலிஸார் நமக்கு வழங்கும் சேவைகள் பெருமையோடு குறிப்பிடப்பட்டிருக்கும். தொழில் ரீதியான கிண்டல்களில் டாக்டர், ஆசிரியர், பொலிஸ்காரர், இலிகிதர்கள் என்று புதிது புதிதாக அவ்வப்போது பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு யாராவது எழுதிக் கொண்டேயிருக்கிறார்கள். இங்கே பொலிஸார் பற்றிய மூன்று குறுங்கதைகளைத் தருகிறேன்.

● பூ வியாபாரி ஒருவர் தலை முடி வெட்டுவதற்காகச் சிகையலங்காரக் கடைக்குச் சென்றார். முடி வெட்டிய பின்னர் அதற்கான பணத்தை நீட்டிய போது கடைக்காரர் வாங்க மறுத்து விட்டார். "நான் இதை ஒரு பொதுச் சேவையாகச் செய்கிறேன். பணம் வேண்டாம்" என்று சொன்னார். பூ வியாபாரி மகிழ்ச்சியுடன் விடைபெற்றார். அடுத்த நாட் காலை சிகையலங்காரர் கடையைத் திறக்க வந்தபோது அவருக்கு ஒரு வாழ்த்து அட்டையும் ஒரு பூங்கொத்தும் கடைக் கதவுக்கு முன்னால் இருந்தன. அன்றைய தினம் இறைச்சிக் கடைக்காரர் தலை முடி வெட்டுவதற்காக வந்தார். அவரிடமும் கடைக்காரர் பணம் பெற்றுக் கொள்ளவில்லை. பூ வியாபாரிக்குச் சொன்ன அதே வார்த்தைகளை இறைச்சிக் கடைக்காரரிடமும் சொன்னார். அடுத்த நாட் காலை அவர் கடை திறக்க வந்த போது வாழ்த்து அட்டையொன்றும் எண்ணெயில் வதக்கப்பட்ட இறைச்சித் துண்டுகள் அடங்கிய பொதியும் வைக்கப்பட்டிருந்தன.

அன்று ஒரு பொலிஸ்காரர் சிகையலங்காரம் செய்து கொள்ள வந்திருந்தார். அவரிடமும் அதே வார்த்தைகளைச் சொன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகையலங்காரர். பொலிஸ்காரரர் மகிழ்ச்சியடைந்தார். அடுத்த நாட் காலை அவர் கடைதிறக்க வந்த போது பன்னிரண்டு பொலிஸார் முடி வெட்டிக் கொள்வதற்காகக் காத்திருந்தனர்!

● ஜோர்ஜ் பிலிப்ஸ் மிஸிஸிப்பியைச் சேர்ந்தவர். இரவு அவர் படுக்கைக்குத் தயாராகும் போது தோட்டத்திலிருக்கும் கொட்டிலுக் குள் விளக்கு எரிவதை அவரது மனைவி படுக்கையறை யன்னலூடாகக் காட்டினாள். அக்கொட்டிலுக்குள் அவ்வப்போது தேவைப்படும் பெறுமதியான பொருட்கள் சில இருந்தன. அவர் வீட்டுக் கதவைத் திறந்து கொட்டிலை நெருங்கியதும் அதற்குள் இரண்டு நபர்கள் பொருட்கள் திருடிக் கொண்டிருப்பதை அவதானித்தார். அமைதியாக வீட்டுக்கு வந்து நடமாடும் பொலிஸ் சேவைக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். "வீட்டில் வேறு ஆண்கள் இருக்கிறார்களா?" என்று பொலிஸார் கேட்ட போது பிலிப்ஸ் "இல்லை" என்று பதிலளித்தார். "இப்போதைக்கு எல்லா அவசர சேவை வாகனங்களும் கடமையில் உள்ளன; வந்ததும் அனுப்புகிறோம்" என்று பதில் வந்தது.

சரியாக ஒரு நிமிடத்துக்குப் பிறகு நடமாடும் பொலிஸ் சேவைக்கு மீண்டும் தொடர்பு கொண்டு, "சற்று முன்னர் தொடர்பு கொண்ட பிலிப்ஸ் பேசுகிறேன். திருடர்களைப் பற்றிக் கவலைப்பட ஏதுமில்லை. ஏனெனில் அவர்கள் இருவரையும் நான் சுட்டு விட்டேன்" என்று சொல்லி விட்டுத் தொலைபேசியை வைத்து விட்டார். ஐந்து நிமிடங்களில் பொலிஸ் வாகனம், ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட விசேட பிரிவு, அம்பியுலன்ஸ் வண்டி ஆகியன வந்து சேர்ந்தன. திருடர்கள் பிடிக்கப்பட்டனர். பொலிஸார் பிலிப்ஸிடம் "உண்மையிலேயே சுட்டு விட்டாய் என்று நினைத்து விட்டோம்" என்றனர். பிலிப்ஸ் சொன்னார்: "உண்மையாகவே உங்களிடம் வாகனம் இல்லையென்று நினைத்து விட்டேன்."

● முச்சக்கர வண்டியை போக்குவரத்துப் பொலிஸ்காரரர் நிறுத் திய போது அந்த இளைஞனுக்குத் திக்கென்றது. காரணம் அவனிடம் சாரதி அனுமதிப் பத்திரம் கிடையாது. பொலிஸ்காரரர் அவனை மடக்கினார். அவன் கெஞ்சினான். கடைசியாக தனக்கு 500.00 தந்தால் விடுவிக்கிறேன் என்று சொன்னார். 500.00 ஒற்றைத் தாளை வெளியே எடுத்த இளைஞன் தன்னிடமுள்ள தொகையே அவ்வளவுதான் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோல் போடுவதற்குக்கூட வேறு பணமில்லை என்றும் சொன்னான். அப்படியானால் "அதோ அந்தத் தேனீர்க் கடையில் பணத்தை மாற்றி என்னிடம் தருமாறு 300.00 ரூபாவைக் கொடுத்து விட்டுச் செல்" என்று அவனை விடுவித்தார். தேனீர்க் கடை அவர்கள் நின்றிருந்த இடத்திலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் அமைந்திருந்தது. சற்று நேரத்தில் கடை முதலாளி கடையிலிருந்து வெளியே வந்தார். தூரத்தில் நின்றிருந்த பொலிஸ்காரரைக் கைதட்டிக் கவனத்தை ஈர்த்து மூன்று விரல்களினால் சைகை காட்டி முச்சக்கர வண்டி இளைஞனையும் சுட்டிக் காட்டினார். தலையை ஆட்டி அனுமதித்தார் பொலிஸ்காரர்.

தனது கடமைகள் முடிந்து பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத் தேனீர்க் கடைக்கு வந்த பொலிஸ்காரருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. பொலிஸ்காரர் வாங்கிக் கொள்ளச் சொன்னதாகச் சொல்லிக் கடைக்காரரிடம் 300.00 பணத்தைப் பெற்றுச் சென்றிருந்தான் அந்த இளைஞன். கடைக்காரர் பொலிஸ்காரர் கணக்கில் 300.00 ரூபாய் கடன் எழுதினார்.

மேற்சொன்ன மூன்று சம்பவங்களில் கடைசி இரண்டும் உண்மையில் நடந்தவை. மூன்றாவது சம்பவம் இலங்கையில் நடந்தது. நம்ப மறுப்பவர்கள் 09.01.08 ந்திகதிய 'லங்காதீப' பத்திரிகையைப் பார்க்கலாம். ஆனால் சிங்களம் வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும். மற்ற விடயம் என்னவெனில் பொலிஸ்காரர் யாருடனும் எனக்கு எந்த விதக் கோபதாபங்களும் கிடையாது.

*13.04.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரிக்கப் பழமொழிகள்

01. ஆற்றோரத்தே கிடக்கும் கல் மழைக்கு அஞ்சுவதில்லை.
02. களைப்பாயிருப்பது சோம்பலாயிருப்பதற்கு ஒப்பாகாது.
03. தவளைக்குப் பற்கள் கிடையாது. ஆனால் அதன் வாய்க்குள் விரலை வைத்தால் கடிக்கும்.
04. மகிழ்ச்சியுடைய வாய் நெருப்புப் பற்றவைக்காது.
05. பாசாங்குடைய அறிவீனம் புத்தியை அடைந்து கொள்ளும்.
06. அளிக்கப்படும் ஒரு வாக்குறுதி திருப்ப முடியாத கடனுக்கு ஒப்பானது.
07. பார்வையற்ற ஒருவன் உன்னைக் கல்லால் அடிப்பேன் என்று சொல்வானாகில் அவன் கல்லில் கால் வைத்திருக்கிறான் என்று அர்த்தம்.
08. பைத்தியத்தைக் குணப்படுத்தலாம். ஆனால் மடத்தனத்தைக் குணப்படுத்த முடியாது.
09. மழைக்குத் தப்பி ஓடும் முதலை நீரில்தான் சென்று விழுகிறது.
10. இரண்டு நண்பர்கள் ஒரே இடத்தில் பணம் வைத்திருப்பார் களாயின் அவர்களில் ஒருவர் சிரிப்பார்; மற்றவர் அழுவார்.
11. ஒரு சொல் ஒரு முட்டைக்கு ஒப்பானது.
12. கையில் தடியிருக்கும் போது நாயைக் கூப்பிடாதே.
13. உயிரோடு உள்ள ஒரு பாம்பின் நீளத்தை ஒரு போதும் சரியாக அளக்க முடியாது; ஒரு மனிதனின் பெறுமதியை அவன் மறையும் வரை உணர முடியாது.
14. தூதுவர்கள் யுத்தத்தில் இறப்பதில்லை.
15. வாய் சுவைப்பதற்கு முன்னர் கண் சுவைத்து விடுகிறது.
16. பாடல் முடிந்து விடும்; வார்த்தைகள் நினைவிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. கண்களைத் தாழ்த்துவாயானால் உனது மூக்கைப் பார்க்கலாம்.
18. தேவதைகள் இறைவனை அகௌரவப்படுத்துவதில்லை.
19. தவளை வேலியில் தாவுகிறது என்றால் பூமி சூடாக இருக்கிறது என்று அர்த்தம்.
20. குரங்குகளால் எல்லா மரங்களிலும் தாவ முடியாது.
21. நோயை விட மருந்து கசப்பானது.
22. கறுப்பு ஆட்டை இரவில் கண்டுபிடிப்பது கஸ்டமானது.
23. பயமற்ற ஒரு குழந்தை தாயின் கண்களில் நீரை வரவழைக்கும்.
24. யாருடைய தோளிலேனும் நீ சவாரி செய்தால் பாதையின் நீளம் உனக்குப் புரியாது.
25. வீடு உன்னை விற்காவிட்டால் தெரு உன்னை வாங்காது.
26. இறைவன் எனது பாணுக்கு வெண்ணெய் தருவான்.
27. பைபிளைக் கொண்டு வந்த கப்பலே 'ரம்'மையும் கொண்டு வந்தது.
28. இறைவனுடன் வியாபாரம் செய்த எவரொருவரும் நஷ்டமடைவதில்லை.
29. தாய் இறக்கும் வரை எந்த ஒரு பெண்ணும் தான் திருமணம் செய்திருப்பதை உணர்வதில்லை.
30. மழை பொழியும் போது கழுகு தனக்கென ஒரு வீட்டைக் கட்ட வேண்டும் என்று நினைக்கிறது; சூரியனைக் கண்டதும் மறந்து விடுகிறது.
31. உடலில் அரிப்பை ஏற்படுத்திய இறைவன்தான் சொறிவதற்கு இரண்டு கைகளையும் தந்திருக்கிறான்.
32. ஒரு மரம் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் நீரில் கிடக்கலாம். ஆனால் அது ஒரு போதும் முதலையாக மாறப் போவதில்லை.

மேற்காபிரிக்க நாடான சியரா லியோன் 1961ம் ஆண்டு பிரிட்டன் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. 1991 முதல் 2002 வரை உள்நாட்டு யுத்தத்தினால் சீரழிந்து இன்று நிம்மதியாக இருக்கிறது. கிட்டத்தட்ட தோற்றத்தில் ஆமை வடிவான இந்த நாட்டின் உத்தியோக மொழி ஆங்கிலம். தவிர கிரியோ, தெம்னே, மென்டே தவிர்ந்த மேலும் 15 வட்டார மொழிகள் பேசப்படுகின்றன. 53 வீதமான மக்கள் விவசாயம் செய்கிறார்கள்.

அந்நாட்டில் கிரியோ மொழியில் வழங்கப்படும் பழமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் சிலவற்றை மேலே தந்துள்ளேன். தமிழில் வழங்கும் சில பழமொழிகளுடன் சம்பந்தமுடையதென இவற்றில் ஐந்தினைச் சுட்டிக் காட்டுபவர்களுடன் இரவு 7.00 மணி முதல் 9.00 மணி வரை சுதந்திர சதுக்கத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கச் சம்மதிப்பேன். 50.00 ருபாவுக்கு பக்கோடாவும் ஒரு நீர் போத்தலும் வாங்கி வருவேன்.

பேச்சில் தவிர்க்க வேண்டிய அம்சங்கள்: 1. அரசியல் 2. தனி நபர்களின் தனிப்பட்ட விடயங்கள் 3. பக்கோடா காதர்.

20.04.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் கனவு

1955ம் ஆண்டு பெப்ரவரியில் சென்னை 1 ல் உள்ள 'ஜில்ஜில்' பிரஸ்ஸில் அச்சிடப்பட்ட 48 பக்க நூல் ஒன்று அண்மையில் என் பார்வைக்குக் கிடைத்தது. அவசரப்பட்டு ஏதும் தப்பாக நினைத்து விட வேண்டாம். புத்தகத்தின் பெயர் 'கல்கியின் கனவு.' எட்டு அணா விலை குறிக்கப்பட்டிருந்த இந்த நூலை எழுத்தாளர் கல்கியின் நெருக்கத் துக்குரிய ஒருவரான நவீனன் என்பவர் எழுதியிருந்தார். வானதி பதிப்பகம் நூலை வெளியிட்டிருந்தது.

"அரசியல் தலைவர்கள் அலறுகிறார்கள். மந்திரிமார் மனங் கலங்குகிறார்கள். எழுத்தாளர்கள் ஏங்குகிறார்கள். பேச்சாளர்கள் பேதலிக்கிறார்கள். சங்கீத வித்வான்கள் சஞ்சலப்படுகிறார்கள். நாட்டிய மணிகள் நாயகனை இழந்த நாயகியைப் போல் துடிக்கிறார்கள். பத்திரிகைகள் பதறுகின்றன. சங்கங்கள் சங்கடப்படுகின்றன. இவ்வளவும் ஏன்? திடீரென்று இப்படித் தமிழ் நாடே சோகக் கடலில் மூழ்கக் காரணம் என்ன?" இவ்வாறுதான் அந்தப் புத்தகம் ஆரம்பிக் கிறது. கல்கி கிருஷ்ணமூர்த்தி மறைந்து இரண்டு மாத இடை வெளிக்குள் வெளியான நூல் இது. அவருடன் நூலாசிரியருக்கு இருந்த தொடர்பையும் பற்றையும் கல்கியின் திறமையையும் வெளிக்காட்டும் அந்தக் காலத்து எழுத்து.

■ கல்கி எதையும் நன்றாகப் படித்து மனதிலே உருவகப் படுத்திக் கொண்டு பிறகு கட்டிடம் அமைப்பார். அரசியல், கதை, கட்டுரை, சங்கீதம், விமர்சனம், தொடர் கதை, சரித்திரக் கற்பனை, பிரயாணக் கட்டுரை, பாலர் பகுதி, கலை, சினிமா, நாட்டியம் எதுவாக இருந்தாலும் தெளிவாக அவரால் எழுத முடிந்தது. ■ எழுதிக் கொண்டே போவார். யாருடைய பேச்சும் தொந்தரவும் தலையீடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய பேனா ஓட்டத்தையோ சிந்தனையையோ தடைப் படுத்தி விடாது. அவருடைய எழுத்து, புகழ் அத்துடன் வளர்ந்து வந்த காச நோய் சில சமயங்களில் அவரைக் கொடுமைப்படுத்துவதுண்டு. ஆனால் அதற்குப் பயந்து எழுதுவதை நிறுத்த மாட்டார். இருமுவதையும் நிறுத்த மாட்டார். இருமி விட்டு எழுதுவார்; இருமிக் கொண்டே எழுதுவார். ■ ஆனந்த விகடனில் ஆசிரியராக இருந்த போது இரண்டு தமிழ்ப் படங்களைப் பற்றி விமர்சனம் எழுதினார் கல்கி. 'கௌசல்யா' என்ற படத்தைப் பற்றி எழுதிய போது 'வெள்ளித் திரையில் ஏதோ ஒன்று கறுப்பாகத் தெரிந்தது' என்று எழுதினார். கே.பி. சுந்தராம்பாள் நடித்த 'நந்தனார்' படத்தைப் பற்றி அதில் நடித்த சிறந்த நடிகராக ஓர் எருமை மாட்டைக் குறிப்பிட்டிருந்தார். அந்த விமரிசனம் தமிழ் நாட்டில் பெரும் பரபரப்பை உண்டு பண்ணியது. படத்துக்கு லட்ச ரூபாய் வாங்கிக் கொண்டு லட்சிய நடிப்பு நடித்த சுந்தராம்பாளின் நந்தனாரைப் பற்றி கல்கி இப்படி எழுதலாமா என்று ஒரு சிலர் குதித்தார்கள். அதற்காகப் பேனா மன்னன் கல்கி கலங்க வில்லை. அதற்குப் பல வருஸங்களுக்குப் பிறகு ஜெமினி ஔவையாரில் ஔவையாக நடித்த கே.பி. சுந்தராம்பாளின் நடிப்பைப் பற்றி பிரமாதமாகப் பாராட்டி எழுதினார். ■ காலஞ்சென்ற புதுமைப் பித்தன் கல்கியை ஒரு சமயம் பக்கம் பக்கமாக ஒரு தினப்பத்திரிகையில் திட்டினார். கவிகளாகக் கட்டி ஏசினார். ஆனால் புதுமைப் பித்தனுக்கு நிதி திரட்டித் தரும் பணியில் முன்னணியில் நின்றவர் கல்கி. ■ கல்கி அறிவாளி மட்டுமல்ல; நல்ல பேச்சாளி. சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். சிந்தனைக்கு இடமிருக்கும்படியாகப் பேசுவார். நறுக்குச் சொல்லுக்கும் நகைச்சுவைக்கும் குறைச்சலிருக்காது. ■ ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மூன்று முறை சிறை சென்ற தியாகி இவர். சிறையிலிருந்து வெளியே வரும் போதெல்லாம் சிறந்த சிறு கதைகளையும் தொடர் கதைகளையும் வெளியே கொண்டு வந்தார். இவர் ஒரு தலைசிறந்த அரசியல்வாதி. அறிவாளி. மேதாவி. சொல்லின் செல்வர். தேன் சொட்ட எழுதுபவர். உண்மை உழைப்பாளி. உழைப்பினால் உயர்ந்து காட்டுபவர். 'சுத்த கர்நாடகம்!'

1899 செப்டம்பர் 9ம் திகதி தஞ்சாவூர் மாவட்ட புட்ட மங்கலம் கிராமத்தில் பிறந்தவர் ரா.கிருஷ்ண மூர்த்தி என்ற கல்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் பெயர் கல்யாணி. அப்பெயரிலுள்ள முதல் இரண்டு எழுத்துக்களுடன் தன் பெயரின் முதல் எழுத்தையும் சேர்த்தே கல்கி என்ற பெயரைச் சூடிக் கொண்டார். கல்கி எழுதிய புதினங்களாவன: - 1.கள்வனின் காதலி (1937) 2.தியாக பூமி (1938- 39) 3. மகுடபதி (1942) 4. பார்த்திபன் கனவு (1941 - 43) 5. சிவகாமியின் சபதம் (1944) 6.அபலையின் கண்ணீர் (1947) 7.சோலை மலை இளவரசி (1947) 8. அலை ஓசை (1948) 9. பொன்னியின் செல்வன் (1950 - 55) 10. தேவகியின் கணவன் (1950) 11. மோகினித் தீவு (1950) 12. பொய்மான் கரடு (1951) 13. புன்னை வனத்துப் புலி (1952) 14. அமரதாரா (1954).

இவை தவிர ஏராளமான சிறுகதைகள் மற்றும் பயணக் கட்டுரைகளையும் எழுதியவர். தியாக பூமி எனும் புதினம் திரைப் படமாகத் தயாரிக்கப்பட்டது. ஏட்டிக்குப் போட்டி, சாரதையின் தந்திரம், வீணை பவானி, சங்கீத யோகம், பாரதி பிறந்தார், ஆறுமாதக் கடுங்காவல் போன்ற நூல்களையும் எழுதியதாக இந்நூலில் குறிப்பி டப்பட்டுள்ளது. நவசக்தி, விமோசனம், ஆனந்த விகடன், கல்கி ஆகிய வற்றின் ஆசிரியராகப் பணிபுரிந்தவர் கல்கி. கல்கியின் கனவு என்ற இந்த நூல் வானதி பதிப்பகத்தின் முதலாவது நூல்.

1954 டிசம்பர் 5ந்திகதி காலமான கிருஷ்ணமூர்த்திக்குப் பிறகு கல்கி சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த அவரது புதல்வன் ராஜேந்திரன் எழுத்துத் துறைக்கு வருவதை கல்கி விரும்பி யிருக்கவில்லை. இருந்தும் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது அப்பாவுக்குத் தெரியாமல் சிறுவர் பத்திரிகைக்கு பாலுவின் பிரயாணம் என்ற தொடர் கதையை எழுதி வந்தார்.

அந்தப் பத்திரிகையின் பெயர் 'ஜில்ஜில்!'

*27.04.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிறு' கதைகள்

என்னைக் கவர்ந்த சிறுகதைகளை எழுதியோரில் சாந்தனும் ஒருவர். எழுபதுகளின் பின் வந்த மல்லிகை ஒன்றில் சிறுகதைகள் என்ற அடிப்படையில் அவர் எழுதியிருந்த சின்னஞ் சிறு கதைகள் சிலவற்றையும் படித்துள்ளேன். ஒரு சம்பவத்தைக் குறிப்பதற்கு எந்தளவு வார்த்தைகள் தேவையோ அவற்றை மாத்திரமே பயன்படுத்தியிருப்பார். அப்போதே இது என்னைக் கவர்ந்திருந்தது. இலங்கையில் எழுதுவோரில் இந்தப் பண்பை வேறுயாரிடமும் நான் காணவில்லை. காலத்தின் பயன்பாடு கருதிச் சிறு கதைகளைச் சின்னஞ் சிறுகதைகளாக எழுதும் நிலை எதிர்காலத்தே ஏற்பட்டு விடலாம் என்று நம்புகிறேன். அப்படியெல்லாம் எழுதுவது சிறுகதையாகாது என்று என்னுடன் யாரும் சண்டைக்கு வர வேண்டாம். எழுதுவது அவரவர் விருப்பம். நீண்ட எழுத்துக்களை எதிர்காலம் படிக்குமா என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே நான் இதனைத் தெரிவிக்கிறேன்.

ஆங்கிலத்தில் வெளிவந்த சில கதைகளை இங்கு தருகிறேன். இவை நல்லவையா அல்லவையா என்பதல்ல பிரச்சினை. இப்படியும் கதைகள் வெளிவந்துள்ளன என்பதைக் கவனத்தில் கொள்வதுதான் நோக்கம். 1974 என்ற இலக்கத்தை வைத்துச் சிறிய கதைகளை எழுதுமாறு கேட்கப்பட்ட போது எழுதப்பட்ட கதைகள் இரண்டினை முதலில் பார்க்கலாம்.

■ அதிகக் குளிரும் இருளும் நிறைந்த குளிர் காலத்தில் எமது கிராமத்துச் சனங்கள் ஒரு புதுமையான விடயத்தைப் பற்றிப் புதிய வாய்ப்புக்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். கரடு முரடான எமது கரையோரப் பகுதிகளில் எண்ணெய்க் கம்பனிகள் ஓர் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையை நிறுவப்போகின்றன. இளவேனிற் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே வந்தடைந்தன- ஒழுங்கற்றுக் கிடந்த கரையோரம் முழுவதும் செப்பனிடப்பட்ட பாதைகள், கச்சிதமாய் ஆடையணிந்த மனிதர்கள், மின்சாரம், தொழில்கள், தொலைக்காட்சிகள்! நாங்கள் ஏழைகளாக இருந்தோம் என்பதை அடுத்த குளிர் காலத்தின் போது முதல் முறையாக உணர்ந்தோம். *(இக்கதையை எழுதியிருந்தவர்: டொக் தொம்ஸன் - டப்ளின்)*

■ "ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தைந்து..."

" நீ இன்னமுமா எண்ணிக் கொண்டிருக்கிறாய்?"

"அவை வழுக்கக் கூடியவை. இதற்கு முன் எப்போதாவது தங்கக் கட்டிகளைத் தூக்கிப் பார்த்திருக்கிறாயா?"

"பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. கெதியாக எடுத்து வை. சைரன் ஒலிப்பது கேட்கிறது எனக்கு"

"1973... பொறு, இதோ கடைசி ஒன்று..."

"பொறு. இது தங்கக் கட்டி இல்லை. இது கறுப்பு... கைத்துப்பாக்கி வடிவில்...."

"சரியான ஒன்றுதான்... எனக்கு யாருடனும் இதனைப் பங்கு போட விருப்பமில்லை!"

*(இதனை எழுதியிருந்தவர்: ரொஸ்ஸீ ஃபியோர் - லண்டன்.)*

■ அவன் எப்போதும் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை கொண்டவன். அவன் அளவுக்கு அதிகமாகப் புகைத்தாலும் தான் ஒரு போதும் இதயத் தாக்கினாலோ சுவாசப் புற்று நோயினாலோ இறந்து போகப் போவதில்லை என்று நம்பியிருந்தான். அவனை எப்போது பார்த்தாலும் புகைத்தபடியே இருப்பான். ஒரு நாள் அவனது வீட்டுச் சமையலறையில் 'காஸ்' கசிவு ஏற்பட்டது. அதைச் சரி செய்வது ஒன்றும் பெரிய காரியமில்லை என்பதால் அதைத் திருத்துவதற்கு ஆரம்பித்தான். அவன் நம்பியிருந்தது மிகவும் சரி. அவன் இதயத் தாக்கினாலோ சுவாசப் புற்றினாலோ மரணிக்கவில்லை.

"புகைத்தல் கொல்கிறது" என்ற தலைப்பில் *அலெக்ஸ் கீகன்* என்பவர் எழுதியிருந்த கதை இது.

■ அம்மா வீட்டில் இல்லாத ஒரு தினம். எனது நான்கு வயதுச் சகோதரனும் நானும் அப்பாவும் வீட்டில் இருந்தோம். எனக்கு அப்போது வயது இரண்டு. தவறி விழுந்ததால் ஏற்பட்ட முறிவுக்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் எனக்குக் கட்டுப் போட்டிருந்தது. அண்ணன் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருக்க, அப்பா பிற்பகல் செய்திகளில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார். நான் சுகமாக வேண்டும் என்று எனக்கு அன்பளிப்பாகக் கிடைத்த சிறிய தேநீர்க் குவளையில் நான் அப்பாவுக்குத் தேநீர் கொண்டு வந்து கொடுத்தேன். அது உண்மையில் வெறும் நீர். நானும் கொடுக்கக் கொடுக்க அப்பாவும் தேநீர் அருந்துவது போல் ரசித்து ருசித்து அருந்திக் கொண்டிருந்தார். நான்காவது தேநீரை நான் அப்பாவுக்குக் கொடுக்கையில் அம்மா வீட்டுக்குள் நுழைந்தார். வீட்டுக்குள் வந்த அம்மா அப்பா தேநீரை அருந்துவது போல் நீரை அருந்துவதைப் பார்த்தார். அப்பாவைப் பார்த்துக் கேட்டார்: "ஒரு கையைப் பயன்படுத்த முடியாத ஓர் இரண்டு வயதுப் பிள்ளை நீரைக் கழிப்பறையிலிருந்துதான் அள்ளி வரும் என்பது கூடவா உங்களுக்குத் தெரியாது?" (கதையை எழுதியவர் யார் என்று தெரியவில்லை.)

நமது பத்திரிகை சஞ்சிகைகளில் வரும் பல கதைகளை நான் மேற் சொன்ன கதைகள் அளவுக்குக் குறுக்கிக் கொள்ளலாம் என்பதை இக்கதைகளைப் படித்து முடிந்ததும் நம்மால் உணர முடியும். அதெல்லாம் முடியாது, இது childish தனமாக இருக்கிறதே என்பவர்கள் அவரவர் விருப்பப்படி எழுதி உலகப் புகழடைய எனது வாத்ஸல்ய வாழ்த்துக்கள்.

*04.05.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னை ரசிக்காத நடிகன்

பதினைந்து வருடங்களுக்கு முன்பு வரை அவ்வப்போது ஆங்கிலப் படங்கள் பார்க்கும் பொழுதுபோக்கு எனக்கிருந்தது. அதற்கும் சற்று முந்திய காலத்தில் ஆங்கிலப் படம் பார்ப்பதை ஒழுக்க மீறலான ஒரு செயலாகச் சமூகம் கருதியது என்பதை என் வயதொத்த, என்னை விட மூத்த நண்பர்கள் அறிவீர்கள். நான் அப்படியொன்றும் மோசமான படங்களை நோக்கிச் சென்றதில்லை. சிறு வயதிலேயே எம்.ஜி.ஆர். ரசிகனாக இருந்தபடியால் அடிதடிப் படங்கள் ரொம்பப் பிடிக்கும். தமிழிலும் அடிதடிப் படங்கள் வருகிறதுதானே என்று நீங்கள் கேட்கலாம். அடிதடியைக் கூட ஆங்கிலப் படங்களில் மிகைப்படுத்தாமல் யதார்த்தமாகத்தான் சித்தரிப்பார்கள். சில நாட்களுக்கு முன்னர் பார்த்த தமிழ்ப் படத்தில் துப்பாக்கியிலிருந்து வரும் குண்டுகளைத் தலையைச் சாய்த்து, குனிந்தெல்லாம் கதாநாயகன் தவிர்ப்பதைக் காண திரையைக் கிழிப்பதா தலையை முட்டிக் கொள்வதா என்று தீர்மானத்துக்கு வர இயலாதவனாக அல்லல் பட்டேன்.

'ஜேம்ஸ் பொன்ட்' படங்களை விடவும் என்னைக் கவர்ந்த படங்கள் சார்ள்ஸ் புரொன்ஸனுடையவை. அந்தக் காலத்துக் கதா நாயகர்களுக்கு (ஆங்கிலத்திலும் கூட) அவசியமாகக் கருதப்பட்ட வசீகரங்கள் எதுவுமற்றவர் புரொன்ஸன். தன்னிடம் இருப்பதையே தனது பலமாக மாற்றிய வல்லமை கொண்ட கம்பீரமான மனிதனாக அவர் இருந்தார். அவரது நடிப்பு ஹொலிவூட்டைத் தாண்டி உலகம் முழுதும் லட்சோப லட்ச மக்களால் போற்றுதலுக்குள்ளானது. பிரான்ஸ் நாட்டு ரசிகர்கள் அவரைச் செல்லமாகப் 'புனித அரக்கன்' என்று அழைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ள்ஸ் புரொன்சனுக்கும் தனது தோற்றத்தைப் பற்றிய மதிப்பீடொன்று இருக்கவே செய்தது. 'நான் யாரோ டைனமைட் வைத்து உடைத்த கற்குவியலைப் போன்றவன்' என்று தன்னைப் பற்றி அவரே சொல்லியிருக்கிறார். நடிப்பில் அவரது பார்வை, நடை, கம்பீரம் யாவும் சேர்ந்து அவரது குறைபாடுகளை மறைத்து விட்டன. அவர் ஒரு பெருங் கதாநாயகனாக வலம் வந்தார். 'என்னைப் பொறுத்த வரை நடிப்பு என்பது மிக இலகுவான விடயம். அதனால்தான் அதனையே நான் தேர்ந்து கொண்டேன்' என்று ஒரு சமயம் அவர் சொன்னார். 1970 ம் ஆண்டு 'ரைடர் ஒன் த ரெய்ன்' என்ற படத்தில் நடித்து அதி சிறந்த நடிகருக்கான கோல்டன் குளோபல் விருதைப் பெற்றுக் கொண்டவர் புரொன்சன்.

லித்துவேனியாவிலிருந்து அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்த தாய் தந்தையின் 15 பிள்ளைகளில் புரொன்ஸன் பதினோராவது பிள்ளையாக பென்ஸில்வேனியாவில் பிறந்தவர். அவரது இயற் பெயர் சார்ள்ஸ் பச்சின்ஸ்கி. ஹொலிவூட்டின் பரமௌன்ட் ஸ்ரூடியோவின் வட எல்லை வாயிலின் பெயர் புரன்ஸன் வாயில். அந்தச் சொல்லையே தன் பெயருடன் சேர்த்துக் கொண்டார். இந்தப் பெயரில் அவர் நடித்த முதலாவது படம் 1954ல் வெளி வந்த 'ட்ரம் பீட்.'

16வது வயதில் தந்தையைப் போலவே தனது சகோதரர் களுடன் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்து வந்தார். அவரது தந்தை இறந்த போது புரொன்ஸனுக்கு வயது 10. பின்னர் பிலடல்பியா தியேட்டர் கம்பனியில் அரங்க வடிவமைப்பாளராக இருந்தார். 1950ல் நடிக்கப் புகுந்தார். 1960ல் வெளிவந்த த மெக்னி பிஸன் செவன், த கிரேட் எஸ்கேப் (1963), த டேர்டி டஸன் (1967), டெத் விஷ் (1974) (இப்பெயரில் பின்னர் 3 படங்கள்), டென் டு மிட்நைட் (1983), மெஸன்ஜர் ஒப் டெத் (1988), த வைற் பபளோ (1977), த ஸ்டோன் கில்லர் (1973), மேர்பிஸ் லோ (1986) ஆகியன அவரது முக்கியமான படங்களில் சில. அவர் நடித்த பல படங்கள இன்றும் அலுப்புக் குன்றாமல் பார்க்கக் கூடியவை.

அவரது படங்களில் 90 வீதமான பகுதியை சம்பூர்ணமாக அவர் ஆக்கிரமித்திருப்பார். ஆனால் ரசிகனுக்கு அது ஒரு உறுத்தலாக இருப்பதில்லை. அவரது ஒவ்வொரு அசைவோடும் நம்மை இணைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கொள்ளும் ஆகர்ஷம் அவரிடம் இருந்தது. ஆங்கிலத்துக்கு அப்பால் ரஷ்ய, லித்துவேனிய, கிரேக்க மொழிகளில் சரளமாகப் பேசவல்ல புரொன்ஸன் தனது நடிப்பைப் பற்றிச் சொல்லும் போது 'நான் எனது ரசிகன் அல்லன்' என்று சொன்னார். தன்னளவில் திருப்தி கொள்ளாத மனோ நிலையிலான அவரது முயற்சியே உலகம் முழுக்க அவருக்கு ரசிகர்களைத் தந்திருக்க வேண்டும். அழகற்ற கதாநாயகனின் கவர்ச்சி எத்தகையதென்றால் அவரை நேரிலே கண்டறியாத அவரது தீவிர ரசிகையான ஒரு பெண்மணி 1990ம் ஆண்டு தனது மில்லியன் டொலர் பெறுமதியான வீட்டையும் தோட்டத்தையும் புரொன்ஸ னின் பெயருக்கு எழுதி வைத்து விட்டாள் என்பதுதான்.

அவர் பின்னாளில் நடித்த படங்கள் எதுவும் உள்ளனவா என்று இணையத்தில் தேடினேன். 1998ம் ஆண்டு அவருக்கு இடுப்பில் செய்யப்பட்ட சத்திர சிகிச்சைக்குப் பிறகு நடிப்பதைக் கைவிட்டி ருந்தார். அதை விட எனக்குக் கவலை தந்த விடயம் நியூமோனியாவால் பீடிக்கப்பட்டு எனக்குத் தெரியாமலே 2003 ஆகஸ்ட் 30ம் திகதி தனது 81வது வயதில் காலமாகியிருந்தார்.

சார்ள்ஸ் புரொன்ஸன் விமர்சகர்களைப் பற்றிக் கூறியதை படைப்பாளிகளும் கலைஞர்களும் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். அவர் சொன்னார்: - "நாங்கள் விமர்சகர்களுக்காக படங் களைத் தயாரிப்பதில்லை. தவிரவும் அவற்றைக் கட்டாயம் பாருங்கள் என்று அவர்களுக்குப் பணம் கொடுப்பதுமில்லை!"

*11.05.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்பத்திரி ஜன்னல்

எழுதியவர் பெயர் குறிப்பிடப்படாமல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த இந்தக் கதை என் மனதைத் தொட்டது. படித்துப் பாருங்கள். உங்கள் மனதையும் தொடலாம். தொடாமலும் விடலாம்.

அவர்கள் இருவரும் கடும் நோயாளிகளாயிருந்தனர். வைத்தியசாலையின் ஒரே அறையில் இரண்டு கட்டில்களில் அவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். இருவரும் அனேகமாவும் சுயமாக இயங்குவதற்கு இயலாத நிலையில் இருந்தனர். அவர்களில் ஒருவர் ஒவ்வொரு பிற்பகலிலும் கட்டிலில் ஒரு மணிநேரம் தாதியர் களால் சாய்ந்து அமர்ந்து இருப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும். அவருடைய சுவாசப் பையில் சேரும் திரவத்தை அகற்றுவதற்காக அவ்வாறு அவரை அமர்த்தி வைப்பார்கள். அந்த அறையின் ஒரேயொரு ஜன்னல் அவரது கட்டில் அருகேதான் உள்ளது. மற்றைய நபரோ அனுமதிக்கப்பட்ட நாள் முதல் படுக்கையில் கிடந்தார். இருவரும் ஏறக்குறைய ஒரு மணி நேரம் பேசிக் கொள்வார்கள். அவரவர் குடும்பம், மனைவி, வீடு, அவர்களின் தொழில்கள், இளமைக் காலம், ஓய்வு காலத்தில் மகிழ்வாயிருந்த இடங்கள் பற்றியதாக அவர்களது பேச்சு அமைந்திருக்கும். ஒரு மணிநேரம் உட்காரும் ஜன்னலருகே கட்டில் அமைந்திருந்த நபர் ஒவ்வொரு நாள் பிற்பக லிலும் அந்த ஒரு மணி நேரத்துக்குள் ஜன்னலூடாகத் தெரியும் காட்சிகளைப் பார்த்து படுக்கையில் கிடக்கும் நபருக்கு விபரிப்பார். படுக்கையில் கிடக்கும் நபரோ அந்த ஒரு மணி நேரத்தில் வெளியே விசாலித்துக் கிடக்கும் சுறுசுறுப்பான உலகத்தில் வாழ்வார். வெளியே இயங்கும் உலகையும் அதன் வர்ணங்களையும் நினைத்து மகிழ்ந் திருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன்னலுக்கு நேர் எதிராக குளத்துடன் இணைந்த அழகிய பூந்தோட்டம் ஒன்றிருந்தது. வாத்துகள் அதில் நீந்தி மகிழ்ந்தன. சிறார்கள் சிறிய படகுகளில் பயணித்துக் களிப்படைந்தனர். வான வில்லின் வர்ணங்கள் கொண்ட அழகிய ஆடைகள் உடுத்துக் கைகோர்த்த படி காதலர்கள் அங்கு உலாவி வந்தனர். ஆயிரங் கதைகள் பேசி மகிழ்ந்தனர். மிகப் பெரும் விசாலமான மரங்கள் அப்பூந் தோட்டத்தில் கிளைகள் பரப்பி நின்றன. ஜன்னலூடாக நகரத்தின் அழகிய ஒரு பக்கம் தெளிவாகத் தெரிந்தது.

ஜன்னலோரத்தே கட்டிலமைந்த நபரின் இந்த விபரிப்பில் கட்டிலில் படுக்கையில் கிடந்த நபர் கண்களை மூடிக் கற்பனையில் ஆழ்ந்து விடுவார். எல்லாக் காட்சிகளும் அவரது கற்பனையில் விரிவடைய அதில் அவர் அளவில்லா ஆனந்தத்தை அனுபவித்து வந்தார்.

கவர்ச்சியான உடையமைப்புடனும் ஒழுங்கமைப்புடனும் கூடியதான ஒரு பாண்ட் வாத்தியக் கோஷ்டி செல்வது ஜன்னலூடே தெரிவதாக ஒரு பிற்பகல் பொழுதில் ஜன்னலோரத்துக் கட்டில் நபர் சக நண்பருக்குச் சொன்னார். பான்ட் வாத்தியக் கோஷ்டியின் சத்தம் எதுவும் கேட்காத போதும் நண்பர் அவ்வாத்தியக் கோஷ்டி பற்றி வர்ணித்த விதத்தில் தன்னை மறந்து அதைத் தனது கற்பனையில் கொண்டு ரசித்து மகிழ்ந்தார். நாட்கள் நகர்ந்தன. வாரங்கள் கழிந்தன.

ஒரு நாட் காலை இருவரையும் கழுவித் துடைப்பதற்காக அறைக்குள் நுழைந்த தாதி ஜன்னலோரத்து கட்டில் நபர் உயிரிழந்து போயிருப்பதைக் கண்டாள். இரவுத் தூக்கத்திலேயே அமைதியாக அவர் இறந்து போயிருந்தார். வைத்தியசாலை ஊழியர்களை அவசரமாக அழைத்த தாதி உடலை அப்புறப்படுத்துமாறு கேட்டுக் கொண்டாள். அதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஜன்னலருகே தனது கட்டிலை நகர்த்தித் தருமாறு அறையின் மற்ற நோயாளி தாதியிடம் வேண்டுகோள் விடுத்தார். அவரது வேண்டுகோளை மனமுவந்து நிறைவேற்றத் தாதி இணங்கினாள். அவரை அது மகிழ்ச்சிப் படுத்தும் என்று எண்ணினாள். படுக்கையிலே அவர் இருக்கக் கட்டில் ஜன்னலோரத்துக்கு நகர்த்தப் பட்டது. தாதியும் ஊழியர்களும் சென்ற பிறகு மெதுவாக, வருத்தத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன், தனது முழங்கையை ஊன்றிச் சற்றுத் தலையைத் தூக்கி ஜன்னலூடே பார்ப்பதற்கு முயற்சித்தார். இப்போது யாருடைய வர்ணனையும் இல்லாமல் நேராகவே வெளியே தெரியும் உலகத்தை ரசிக்க முடியும் என்கிற நம்பிக்கை பிறந்தது. கட்டிலில் இருந்தவாறு கையூன்றித் தலையுயர்த்தி ஜன்னலூடாப் பார்ப்பது துன்பம் மிக்கதாக இருந்தபோதும் ஆவல் அவரை உந்தியது. அவர் ஜன்னலூடாக முதன் முதலாகப் பார்வையைச் செலுத்தினார்.

அங்கே பூந்தோட்டம் இருக்கவில்லை. குளம் இருக்க வில்லை. குளத்தில் வாத்துகள் நீந்தவில்லை. படகில் உல்லாசப் பயணம் செய்யும் சிறுவர்கள் இல்லை. வானவில்லின் வர்ணங்களில் ஆடை யணிந்து கைகோத்துத் திரியும் காதலர்கள் இல்லை. கிளை பரப்பிய விசாலமான மரம் இருக்கவில்லை. நகரத்தின் அழகிய ஒரு புறத் தோற்றமும் இருக்கவில்லை. அவருக்குத் தெரிந்ததெல்லாம் ஓர் உயரமான சுவர் மாத்திரமே. ஆம். வெறும் சுவர்!

நோயாளி தாதியை அழைத்தார். கடந்த நாட்களில் நடந்த வற்றை விபரித்தார். ஜன்னலுக்கு வெளியே அழகிய உலகமொன்றைச் சிருஷ்டித்துத் தனக்குக் காட்டுவதற்கு இறந்த நண்பருக்கு உந்துதல் தந்தது எதுவாக இருக்கலாம் என்று கேட்டார்.

"இறந்த நபரால் சுவரைக் கூடப் பார்க்கமுடியாது; ஏனெனில் அவர் பார்வை யற்றவர்" என்று சொன்ன தாதி மேலும் சொன்னாள்: - "அநேகமாக உங்களை உற்சாகப்படுத்துவதற்காக அவர் அவ்வாறு சொல்லியிருக்கக் கூடும்!."

*18.05.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்ற
# கடைசி வார்த்தைகள்

மரணத்துக்கு முன்னர் எல்லா மனிதர்களும் ஒரு சொல்லை, ஒரு வார்த்தையைப் பேசியிருப்பார்கள். மரண தண்டனை விதிக்கப் பட்டவர்கள் அத்தண்டனைக்கு முன்னர் வெளிப்படுத்திய சொல்லோ வார்த்தையோ அத்தருணத்தின் பெறுமதியாலும் அம்மனிதனின் மனோ நிலையினாலும் முக்கியத்துவம் பெற்று விடுகிறது. ஒரு துயரக் கவிதை போல அவ்வார்த்தைகள் சக்தி மிக்கவையாகி விடுகின்றன; வாழும் வரத்தைப் பெற்று விடுகின்றன. வாழ்க்கை என்பது இவ்வுலகில் ஒரே ஒரு முறைதான் வாய்க்கிறது. அதை இழக்கும் கையறு நிலையில் சிலர் சொன்னவற்றை இங்கு தருகிறேன்.

இத்தாலியின் சர்வாதிகாரி பெனிற்றோ முசோலினிக்கு மரண தண்டனை நிறைவேற்றுவதற்காக நிறுத்தப்பட்டவேளை, தனது மேலாடையை விரித்து அவர் சொன்ன கடைசி வார்த்தை 'என் நெஞ்சில் சுடு.' தூக்கிலிடப்பட்ட ஈராக்கின் தலைவர் சத்தாம் ஹுஸைஸன் மரண தண்டனைத் தீர்ப்பு வாசிக்கப்பட்டதும் தனது நெஞ்சில் சுட்டு அதனை நிறைவேற்றுங்கள் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார். அவரது வேண்டுகோளைச் சட்டைசெய்யாமல் தூக்கில் தொங்க விடப்பட்ட போது 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. முகம்மது (ஸல்) இறைவனின் தூதராவார்' என்ற வார்த்தைகளை மொழிந்தார். 1886ல் சிகாகோ குண்டு வெடிப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுத் தூக்கிலிடப்பட்ட ஜோர்ஜ் ஏங்கல் சொன் னார்:- 'அராஜகத்துக்கு வாழ்த்துக்கள். இது எனது வாழ்வின் மிக மகிழ்ச்சியான நேரம்!' அவுஸ்திரேலியாவின் தேசிய வீரர் என மதிக்கப்படும் கவிஞர் ஹரி ஹார்போர்ட் 1902ல் துப்பாக்கியால் சுடப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்:- 'தேவடியாப் பசங்களே, நேராகச் சுடுங்கள். அங்கிங்கு சுட்டு விடாதீர்கள்.' அமெரிக்காவின் தேசிய வீரர்களில் ஒருவராகக் கருதப்படும் நாதன் ஹேல் பிரித்தானியாவில் உளவு பார்த்த குற்றத்துக்காகச் சுட்டுக் கொல்லப்படும் வேளை சொன்னார்:- 'எனது நாட்டுக்கெனத் துறப்பதற்கு ஒரே ஓர் உயிர் மாத்திரமே இருப்பதற்காக வருத்தப்படுகிறேன்.'

முற்காலத்தில் மரண தண்டனை விதிப்பதற்காகப் பயன் படுத்தப்பட்ட கழுத்தை வெட்டும் இயந்திரம் 'கில்லட்டின்' என்று அழைக்கப்பட்டது. இவ்வியந்திரம் மூலம் மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரான்ஸின் 14ம் லூயி, 'நான் அப்பாவியாகச் சாகிறேன். எனக்கேற்பட்ட இந்நிலைக்குக் காரணமானவர்களை நான் மன்னித்து விடுகிறேன்' என்று குறிப்பிட்டார். 1618ல் சிரச்சேதம் செய்யப்பட்ட சேர் வோல்டர் ரலீ என்பார் இவ்வாறு சொன்னார்:- 'இதயம் சரியாக இருக்கிறது. தலை எந்தப் பக்கம் கிடக்கும் என்பதைப் பற்றிக் கவலை யில்லை.'

மின்சாரக் கதிரை மூலம் மரண தண்டனை நிறைவேற்றப் பட்ட இருவரது இறுதி வார்த்தைகள் இரண்டு அர்த்தங்களைத் தருகின்றன. 1928ல் ஜோர்ஜ் அப்பல் 'சரி, கனவான்களே... அவிக்கப்பட்ட அப்பிளைப் பார்ப்பதற்கு நீங்கள் தயாராகிறீர்கள்' என்றார். ஜேம்ஸ் பிரென்ச் என்பவர் கவித்துவமாக மட்டுமல்லாமல் நகைச்சுவையாகவும் சொன்னார் இப்படி:- 'நாளையப் பத்திரிகையில் இப்படித் தலைப்புச் செய்தி இடம்பெறுமாக இருந்தால் எப்படி யிருக்கும்? 'ஃபிரென்ச் ஃபிரைஸ்!'

ஊசி மூலம் விஷம் செலுத்தியும் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது நாம் அறிந்ததே. 1993ல் அவ்வாறு தண்டனை வழங்கப்பட்ட லயனல் ஹெரேராவின் வார்த்தைகள் பரிதாபமானவை. 'நான் அப்பாவி! அப்பாவி!! அப்பாவி!!! எந்தத் தவறும் விட்டவ னில்லை. சமுதாயத்துக்கு நான் நன்றிக் கடன் பட்டவன். உண்மையில் நான் ஓர் அப்பாவி. இந்த இரவில் ஒரு மோசமான தவறு இடம் பெறப் போகிறது.' 1997ல் மாரியோ பென்ஜமின் மேர்பி சொன்ன இறுதி வார்த்தைகள்:- 'இன்றைய தினம் இறப்பதற்கு நல்ல தினம். நான் உங்கள் எல்லோரையும் மன்னித்து விடுகிறேன். கடவுளும் அவ்வாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வார் என்று நம்புகிறேன்.' கார்லா டக்கர் ப்ரவுன் தனக்குத் தண்டனை வழங்கப்படு முன்னர், 'நான் இப்போது யேசு நாதரை நேருக்கு நேர் சந்திக்கப் போகிறேன். நான் உங்கள் அனைவரையும் மிகவும் விரும்புகிறேன். நீங்கள் அனைவரும் அங்கு வரும் போது சந்திப்பேன். நான் உங்களுக்காகக் காத்திருப்பேன்' என்று சொன்னார். 2000ஆம் ஆண்டு டென்னி டெம்ப்ஸ் என்பவருக்குத் தண்டனை வழங்குவதற்கு 33 நிமிடங்கள் எடுத்தனவாம். ஊசி மருந்து செலுத்து வதற்கான சரியான நரம்பைக் கண்டு பிடிப்பதற்கு மட்டுமன்றி மற்றொரு ஊசி மருந்தைத் தயார் படுத்திக் கொள்வதற்குமே இவ்வளவு நேரம் செலவிடப்பட்டதாகக் கூறப்பட்டது. தண்டனை வழங்கப் பட்ட நபர் இழைத்த குற்றம் அல்லது அவரது உடலமைப்புக் குறித்துத் தண்டனை வழங்குவோர் மேற்கொண்ட முன் எச்சரிக்கையாக அது இருந்திருக்கலாம். ஆனால் டென்னிஸ் இவ்வாறு சொன்னார்: - 'எனது அடித் தொடையை, காலையெல்லாம் வெட்டினீர்கள். நான் அதிகம் இரத்தம் சிந்தினேன். இது மரண தண்டனை அல்ல; கொலை!' 1993ம் ஆண்டு ஜேம்ஸ் அலன் ரெட்டுக்குத் தண்டனை வழங்குவதற்கு முன்னர் சொன்ன வார்த்தைகள்: - 'பேபி, நான் வீட்டுக்குப் போகிறேன்.'

ரொபர்ட் ட்ரோ என்பார் தனக்கு தண்டனை வழங்கப்பட்ட போது உறுதிபடச் சொன்ன கடைசி வார்த்தைகள்: - 'ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். மரண தண்டனை என்பது ஒரு படுகொலை யாகும்.' 1989ம் ஆண்டு சீன் பிளான்னகன் என்பாருக்கு தண்டனை யளிப்பதற்குரிய ஊசிமருந்தை ஏற்றியவரைப் பார்த்து சீன் சொன்னார்: - 'ஐ லவ் யூடா... செல்லம்!'

*25.05.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லங்க வினாக்கள்

பாடசாலையில் ஆசிரிய ஆசிரியைகளிடமாகட்டும் வீட்டில் பெற்றோர்களிடமாகட்டும் - சிறியவர்கள் சில வேளைகளில் வில்லங்கமான கேள்விகளைக் கேட்டு விடுகிறார்கள். உண்மையில் கேட்கப்படுவோரை வியப்பிலும் ஆச்சரியத்திலும் தர்ம சங்கடத்திலும் சில வேளை தள்ளி விடும் இக்கேள்விகளை அவர்கள் திட்டமிட்டோ வேண்டுமென்றோ கேட்பதில்லை. தங்களது புரிதலுக்குள் அகப்படாத விடயங்களை அறிந்து கொள்வதே இவர்களது நோக்கமாக இருக்கிறது. சிறுவர் கல்வி குறித்த ஆய்வுகளும் செயல் முறைகளும் இன்று மேம்பட்டு விட்டன. ஆனாலும் மேலை நாடுகளிலிருந்து நம்மை அடையாத பல விடயங்கள் இன்னும் இருக்கின்றன. பிள்ளைகளின் வினாக்களுக்கு எவ்வாறான விடைகளைத் தர வேண்டும் என்று பலர் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அவற்றை அமுல் படுத்துவோருமுண்டு; அசட்டை செய்வோருமுண்டு.

சிறுவர்களின் வினாக்களுக்குச் சொல்ல முடிந்தவற்றைச் சொல்லியும் சொல்ல முடியாதவற்றை ஏதாவது சொல்லிச் சமாளித்தது வுமான அனுபவம் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் இருக்கும். அளிக்கப்பட்ட பதிலிலிருந்து எழுந்த வினாக்கள் முதலாவது கேள்வியை விட வில்லங்கமாகி விடுவதும் உண்டு.

தாயார் சமையலறையில் உணவு தயாரித்துக் கொண்டிருக் கும் போது அம்மாவின் தலை மயிர்களில் சில வெண்ணிறமாக இருப்பதை ஒரு பெண் பிள்ளை அவதானிக்கிறது. 'அம்மா உங்களது தலை மயிர்கள் சில ஏன் வெள்ளையாக இருக்கிறது?' என்று தனது சந்தேகத்தைக் கேட்டது. 'நீ அவ்வப்போது தவறுகள் செய்யும் போதும் என்னைக் கவலைக்குள்ளாக்கி அழச் செய்யும் போதும் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் வெள்ளையாகி விடுகிறது' என்று அம்மா பதில் சொன்னார். மகள் அடுத்த கேள்வியைக் கேட்டாள் இப்படி:- 'அம்மம்மாவின் அனைத்துத் தலை மயிர்களும் வெண்ணிறமாக இருப்பதற்கும் இதுதானா காரணம்?'

ஒரு பையன் தனது தாயாரிடம் மனித இனம் எவ்வாறு தோன்றியது என்று கேட்டான். இறைவன் ஆதாமையும் ஏவாளையும் முதலில் படைத்தார்; அவர்கள் இருவருக்கும் குழந்தைகள் பிறந்தன; அவர்கள் வளர்ந்து மேலும் குழந்தைகளைப் பெற்றார்கள்: இவ்வாறு தான் மனித இனம் தோன்றியது என்று பதில் சொன்னார். அதே கேள்வியை தனது அப்பாவிடம் கேட்டான் அவன். பல நூறு வருடங் களுக்கு முன்னர் வாழ்ந்த குரங்குகளிலிருந்து மனிதன் தோன்றினான் என்று அவர் பதில் சொன்னார். சிறுவனுக்கு இரண்டு பதில்களும் பெருங் குழப்பத்தை ஏற்படுத்தின. மீண்டும் அம்மாவிடம் வந்து, மனித இனம் இறைவனிடமிருந்து தோன்றியதாக நீங்கள் சொல்கிறீர்கள். அப்பா குரங்கிலிருந்து தோன்றியதாகச் சொல்கிறார். இது எப்படிச் சரியாகும் என்று கேட்டான். அம்மா சொன்னாள்:- மகனே, நான் எனது பரம்பரை எப்படித் தோன்றியது என்று சொன்னேன். அப்பா அவரது பரம்பரை எப்படித் தோன்றியது என்பதைச் சொல்லியிருக் கிறார்... புரிகிறதா?

ஆறுமாதக் கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைப் பார்த்து உங்கள் வயிறு ஏன் இவ்வாறு பெரிதாக இருக்கிறது? இதற்குள் என்ன இருக்கிறது என்று ஒரு நான்கு வயதுச் சிறுவன் கேட்டான். அப் பெண்மணி தனது வயிற்றில் குழந்தை இருப்பதாகச் சொன்னாள். பதிலில் திருப்தியுற்ற சிறுவன் விளையாடச் சென்று சற்று நேரத்தில் திரும்பி வந்து அப்பெண்ணிடம் மீண்டும் இக்குழந்தையை நீங்கள் எப்போது சாப்பிட்டீர்கள் என்று கேட்டான். அதிர்ந்து போன அப் பெண் அவனிடம் அவ்வாறு சொன்னது யார் என்று விசாரித்தாள். அவன் விளையாடச் சென்ற இடத்தில் வயிற்றுக்குள் குழந்தை எவ்வாறு வந்தது என்று யாரிடமோ கேட்க பதிலிறுக்க முடியாத ஒருவர் குழந்தையைச் சாப்பிட்டால் வயிறு பெரிதாகும் என்று சொல்லித் தப்பியிருந்தது தெரிய வந்தது.

அமெரிக்கக் கிராமப் புறமொன்றிலிருந்து நியுயோர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகருக்கு ஐந்து வயது மகனுடன் வந்த ஒரு தாய் ஒரு குறிப்பிட்ட இடத்துக்குச் செல்வதற்காக வாடகைக் கார் ஒன்றில் ஏறினாள். நகரூடாக வாகனம் நகர்ந்து கொண்டிருந்தபோது அரை குறை ஆடைகளுடன் சில இளம் பெண்கள் ஆங்காங்கே நின்று வாகனங் களில் செல்வோரைக் கை நீட்டி அழைப்பதைச் சிறுவன் அவதானித் தான். அம்மாவைப் பார்த்து, அம்மா, இவர்கள் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டான். நிலைகுலைந்த தாயோ அவர்கள் தங்களது வழியைத் தவற விட்டு விட்டுத் தாங்கள் போக வேண்டிய திசையை அறியப் பிறரின் உதவியை நாடுகிறார்கள் என்று பதில் சொன்னார். அந்த வேளை வாடகைக் காரச் சாரதி அத்தாயிடம் 'ஏன் பொய் சொல்கிறீர்கள்; பையனிடம் உண்மையைச் சொல்ல வேண்டுமல்லவா?' என்று சொல்லி விட்டு, 'அவர்கள் விபச்சாரிகள்' என்று சிறுவனிடம் சொன்னான். தாயின் முகம் கோபத்தாலும் அவமானத்தாலும் சிவந்து கொண்டிருக்க, சிறுவன் விபச்சாரிகள் என்றால் யார்? அவர்களும் ஏனைய பெண்களைப் போன்றவர்களா? அவர்களுக்கும் பிள்ளைகள் உள்ளனவா? என்று தொடராக அம்மா விடம் கேட்கத் தொடங்கினான்.

சாரதியின் பதில்களால் கோபத்தின் உச்சத்தில் இருந்த அம்மா பதில் சொன்னாள்:- 'ஆமாம். நியூயோர்க் நகரத்தின் வாடகைக் கார் ஓட்டுனர்கள் எல்லோரும் அவ்வாறான பெண்களின் பிள்ளைகள் தாம்!'

*01.06.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீரா(ளா)வோடையூரான்

நாட்டின் கிழக்கில் கடந்த மாதம் கடும் வெப்பம் நிலவியது. தொடர்ந்து வெப்பமான காலநிலை நிலவுகின்ற போது பாம்புகள் தங்களது வசிப்பிடங்களில் இருந்து வெளியேறி உலவும் என்று சொல்கிறார்கள். அது உண்மையாகவும் இருக்கலாம்.

இந்த வெப்பத்தை அனுபவித்தபடி சில நாட்கள் பிறந்தகத்தில் தங்கியிருந்தேன். ஊருக்குப் போனால் அந்தி சாயும் வேளை நண்பர் கலீலின் மோட்டார் சைக்கிளில் அவருடன் பிரதேசம் முழுக்கவும் தினமும் ஒரு வலம் வருவது வழக்கம். இந்தப் பல்நோக்குப் பயணத்தில் வழியில் நண்பர்கள் அகப்படுவதும் நினைவுகள் மீட்டப்படுவதும் சுவாரசியமான அனுபவமாக இருக்கும். மீராவோடைச் சந்தையருகே ஒரு பாதை வளைவு இருக்கிறது. அந்த இடத்தால் பிற்பகலில் செல்லும் போதெல்லாம் அவரைச் சந்திக்காமல் போக முடியாது. அவ்வளைவில் இருக்கும் தேனீர்க் கடை பெஞ்சில் அவர் அமர்ந்திருப்பார். அந்த பெஞ்சில் அவருடன் அமர்ந்திருந்து இஞ்சிப் பிளேன்ரீயுடன் பலதும் பத்துமாகக் கதைத்துக் கொண்டிருப்பதில் ஓர் அலாதிச் சுகம் எனக்கு.

அவர்தான் ஓடையூரான் என இலக்கிய வட்டாரத்தில் அறியப்பட்ட எஸ்.எம். தலிபா. எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து எனக்கு அவருடன் நட்பு இருந்து வந்திருக்கிறது. எழுபதுகளின் நடுப்பகுதியில் புதுக் கவிதை இறக்கை கட்டிப் பறந்தது. நாங்கள் அவற்றின் மேல் பறந்து திரிந்தோம். இயல்பிலேயே இலக்கிய வளம் நிறைந்த பூமி எங்களது. அக்கால கட்டத்தில் எங்களது பகுதியில் அவ்வப்போது இருந்த வட்டங்களைப் போல வேறு எங்காவது இருந்திருக்குமா என்பது சந்தேகமே. நான் இலக்கிய வட்டங்களைச் சொல்கிறேன். 'பாட்டாளிப் பாவலர் இயக்கம்' அதன் போராட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுத் தளரும் வேளை 'கோறளை கலை இலக்கிய வட்டம்' என்று ஒன்றை ஆரம்பித்தோம். இப்போதும் இயங்காத 'கல்குடா கலை இலக்கிய வட்டம்' வைத்திருக்கிறோம். இவ்வாறாக எல்லாக் கலை இலக்கிய வட்டங்களிலும் தலிபா ஓர் அவசியமான அங்கமாக இருந்து வந்துள்ளார்.

எழுபதுகளின் நடுப்பகுதியில் எங்கள் பிரதேசத்தில் மாத்திரமன்றி இலங்கை முழுவதும் தனது கவிதைகளால் பேசப்பட்ட ஓட்டமாவடி ஜுனைத், அவ்வப்போது புதுக்கவிதை எழுதிக் கொண்டிருந்த தன்னை முழுமையாக இலக்கியத்துக்குள் இழுத்து வந்தவர் தலிபாதான் என்று சொல்கிறார். பின்னாளில் பெரிதாகப் பேசப்பட்ட மறைந்த கவிஞர்களான சுபத்திரனும் சாருமதியும் தலிபாவின் நண்பர்கள். இவர்களையும்கூட தன்னிடம் அழைத்து வந்து அறிமுகப்படுத்தியவர் தலிபாதான் என்கிறார் ஜுனைத்.

பாட்டாளிப் பாவலர் இயக்கத்தின் அங்கத்தவர்கள் இடது சாரிச் சிந்தனைகளால் கவரப்பட்டவர்களாயிருந்தனர். எழுத்தோடு மட்டுமன்றிச் சமூக மாற்றம் வேண்டியும் செயல்பட்டனர். ஓர் இயக்கமாக எழுத்தையும் சமூகப் போராட்டத்தையும் இவர்கள் முன்னெடுத்தது போல் பின்னாளில் யாரும் செயற்படவில்லை என்பது குறித்துக் கொள்ளப்பட்ட வேண்டியது. இவர்களில் சாருமதி, எம்.சி. யூசுப், சுபத்திரன், ஓட்டமாவடி ஜுனைத், யூ.அகமட், வீ.ஆனந்தன், ஓட்டமாவடி இஸ்மாயில், பாண்டியூரான், தலிபா ஆகியோர் அங்கம் வகித்ததை யூ.அகமட் ஞாபகப்படுத்துகிறார். இவர்களில் பலரது படைப்புக்கள் இன்னுமொரு தளத்தைத் தாண்டியிருக்கவில்லை. சிலர் எழுத்தைக் கைவிட்டனர். ஆனால் அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பல இலக்கிய அமைப்புகளிலும் ஒரு பங்கை தலிபா வகித்து வந்துள்ளார்.

தலிபா ஒரு பிரமாதமான படைப்பாளியாக இருக்கவில்லை. ஆனால் நேர்மையான சிந்தனையுடனான ஓர் இலக்கிய மனம் அவரிடம் இருந்தது. மற்றவர்களைக் கருவறுக்கும் செயல்பாடும் வஞ்சகப் புத்தியுமாகத் திரிவோரின் பிரமாதமான எழுத்தை விட தலிபாவின் இலக்கிய மனம் உயர்ந்தது; மகத்தானது. நல்ல இலக்கிய ரசிகராகவும் யதார்த்தமான போக்குடையவராகவும் அவர் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது சின்னச் சின்னக் கவிதைகளை ஆங்காங்கே எழுதி வந்தார். ஓட்டமாவடிப் பொது நூலகம், மீராவோடைப் பொது நூலகம் ஆகியவற்றில் நீண்ட காலமாக நூலகராகப் பணிபுரிந்தவர் தலிபா. கடந்த சந்திப்பின் போது அவரது எழுத்துக்களையெல்லாம் சேர்த்துப் பார்க்கும் எனது ஆவலை வெளியிட்டேன். அவரது பதிலிலிருந்து அவரது சொந்த வாழ்க்கை போலவே அவையும் சிதறிக் கிடப்பதை உணர வந்தேன்.

ஓடையூரான் ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு மேல் நடக்க மாட்டார். ஒரு காலை முன் வைக்கும் போது, குனிந்து அந்தக் காலின் முழங்கால் பகுதியில் ஒரு கையை ஊன்றுவார். சிறு வயதிலேயே அவரது ஒரு கால் போலியோவினால் பாதிக்கப்பட்டிருந்தது. சற்றுத் தூரப் பயணங்களுக்கு யாருடையவாவது சைக்கிளில் ஏறிக் கொள் வார். அவர் செல்ல வேண்டிய இடத்துக்கு சைக்கிள் ஒன்றில் பயணம் மேற் கொள்ளும் எவரும் அவரை ஏற்றிச் செல்வது வழக்கம். அவரது இயலாமைக்காக இரங்குவதற்கு அப்பால் அவர் மற்றோருடன் பழகும் விதத்துக்காகவே பலரும் அவரை நேசித்தார்கள்.

கடந்த 27.05.2008 அன்று இரவு 11.53க்கு நண்பர் கலீல், தலிபா மறைந்த செய்தியைக் குறுந்தகவல் மூலம் அறிவித்தார். விசாரித்த போது இரண்டு தினங்களுக்கு முன்னர் அவரது காலில் பாம்பு தீண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகச் சொன்னார்.

நான் எந்தக் காலில் என்று கேட்கவில்லை!

*15.06.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுசொற் கதைகள்

ஏனர்ஸ்ட் ஹெமிங்வேயின் ஆறே ஆறு சொல்லில் அமைந்த கதை உலகப் பிரசித்தி பெற்றது. அவரைப் பற்றிக் குறிப்பிடப்படும் போதெல்லாம் இந்தக் கதை பற்றியும் பேசப்படுகிறது. முதன் முதலாக இக்கதையைப் படித்த போது ஓர் இறந்த குழந்தைதான் சட்டென எனக்கு ஞாபகம் வந்தது. இந்தக் குறிப்பை வாசிக்காமல் அக்கதையை நீங்கள் படித்தால் உங்களுக்கும் ஏதாவது நினைக்கத் தோன்றும். அது எனக்குத் தோன்றியது போல் நிச்சயம் இருக்காது. ஆறு சொல் கதை பற்றி அதிகம் அளந்து கொட்டாமல் அதைச் சொல்லி விடுகிறேன். 'விற்பனைக்கு உண்டு - குழந்தைப் பாதணிகள்; ஒருபோதும் அணியப் படாதவை.'

வாசிக்கும் போது முன்னாலும் பின்னாலும் பல நூறு வரிகளை உருவாக்க அல்லது சிந்திக்கத் தூண்டுபவை இவ்வாறான கதைகள். ஒரு கவிதை வரியைப் போல நமது சிந்தனையை விரித்துக் கொண்டே செல்லக் கூடிய சக்தியுள்ளவை. தமிழில் இவ்வாறான முயற்சிகள் எதனையும் நாம் செய்வதில்லை. நமது பத்திரிகைகள்கூட இவ்வாறான புதிய முயற்சிகள் பற்றிச் சிந்திப்பதுமில்லை. அதற்கு முதற் காரணம் நம்மில் பலருக்கு இவ்வாறான முயற்சிகள் குறித்துத் தெரிந்திருப்பதில்லை. ஆனால் நாம் எல்லோருமே உலகப் புகழ் தரத்துக்குப் போய் விட்டதாக மயங்கிக் கிடக்கிறோம். ஹெமிங்வேயின் கதையை உதாரணமாகக் கொண்டு ஆங்கிலத்தில் ஒரு முயற்சியை ஒரு பத்திரிகை மேற்கொண்டது. பல முக்கிய எழுத்தாளர்கள் முயன்று பார்த்திருக்கிறார்கள். ஹெமிங்வேயைச் சிலர் மாத்திரமே நெருங்கியிருக்கிறார்கள். அவற்றிலிருந்து 24 கதைகளை அல்லது வரிகளைப் பொறுக்கி எடுத்துள்ளேன். சில கதைகள் எனக்குப் புரியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதால் கைவிட்டேன். புரிந்தவற்றிலிருந்தும் இது போதாது என்று நினைத்தவற்றையும் தவிர்த்திருக்கிறேன். ஆறு சொற்களை அநேகர் பயன்படுத்தியிருந்தனர். சிலர் ஐந்து சொற்களிலும் சிலர் ஏழு சொற்களிலும் எழுதியிருந்தனர். முடியுமானவரை முயன்று ஆறு சொற்களில் மொழி மாற்றம் செய்துள்ளேன். சில கதைகளைத் தமிழில் ஆறு சொற்களில் அடக்க முடியவில்லை. இவற்றில் எதையாவது நான் தவறாக விளங்கி மொழி மாற்றம் செய்திருப்பதாகக் கருதினால் முதலில் மன்னியுங்கள்; பிறகு தெரிவியுங்கள். நான் ஆறு சொற்களுக்கு மேல் பயன்படுத்தியவற்றை ஆறு சொற்களில் எழுதிக் காட்ட முடிந்தவர்களுக்கும் இதை விடச் சிறப்பாக ஆறு சொல் கதை தமிழில் எழுதியனுப்புபவர்களுக்கும் ஒரு 'குமிழ் முனைப்பேனா' பரிசளிக்கக் காத்திருக்கிறேன்.

01. அமர்வுக்குத் தவறினான்; புலமைப் பரிசில் இழந்தான்; ரொக்கட்டைக் கண்டு பிடித்தான்............ - *வில்லியம் ஷட்னர்*

02. நான் குட்பை சொன்னேன். இரத்தம் தோய்ந்த கரங்களால்.
- *பிராங்க் மில்லர்*

03. கல்லறை வாசகம்: முட்டாள் மனிதர்; பூமியிடம் ஒரு போதும் தப்ப முடியாது. ......... - *வர்னர் வின்ஜே*

04. மிக அதிகம் செலவாகிறது; மனிதனாக வாழ்வதற்கு. - *புரூஸ் ஸ்டேர்லிங*

05. நாங்கள் முத்தமிட்டோம். அவள் உருகினாள்; தயவுசெய்து துடையுங்கள்.
- *ஜேம்ஸ் பற்றிக் கெல்லி*

06. அது உனக்குப் பின்னால் இருக்கிறது; அதற்கு முன் விரைந்துவிடு.
- *ரொக்னே எஸ். ஓபெனன்*

07. நான் உனது எதிர்காலம்; குழந்தாய் அழ வேண்டாம். - *ஸ்டீபன் பக்ஸ்டர்*

08. மனுக்குலத்தைப் பாதுகாப்பதற்காய் அவர் மீண்டும் மரித்தார்.
- *பென் போவா*

09. நம்பவே முடியவில்லை; அவள் என்னைச் சுட்டாள் என்பதை.
- *ஹோவார்ட் ச்சைக்கின்*

10. அவளைத் திருமணம் செய்யாதே; ஒரு வீட்டை வாங்கு.
- *ஸ்டீபன் ஆர் டொனாட்ஸன்*

11. நேர இயந்திரம் எதிர்காலத்தை அடைந்தது; அங்கு யாருமில்லை.
- *ஹரி ஹரிஸன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கல்லறை வாசகம்: அவன் சாப்பிட்டிருக்கக் கூடாது அதை.

*- பிரையன் ஹேர்பார்ட்*

13. சுவர்க்கம் வீழ்ச்சியுற்றது. விபரம்: பதினொரு மணிக்கு. *-ரொபர்ட் ஜோர்டன*

14. புஷ் உண்மை பேசினார்: நரகம் உறைந்தது. .......... *- வில்லியம் கிப்ஸன்*

15. மூவர் ஈராக் சென்றனர்; ஒருவன் திரும்பி வந்தான்......... *- கிரேம் கிப்ஸன்*

16. கப்பல்களில் தீ. இளவரசி அழுகிறாள்; நட்சத்திரங்களுக்கு நடுவே.

*- சார்ள்ஸ் ஸ்ட்ரொஸ*

17. நாங்கள் எல்லையைக் கடந்தோம்; அவர்கள் எம்மைக் கொன்றனர்.

*- ஹோவார்ட் வால்ட்ரொப்*

18. அணுக் குண்டு போடப்பட்டது; நாங்கள் அனைவரும் இறந்தோம்.

*- ஹோவார்ட் வால்ட்ரொப்*

19. பாலியல் அவதூறு; பெருந்தொகையினர் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றனர்........ *- மார்க் அற்வூட்*

20. அவன் குழப்பத்துடன் வாசித்தான்; தனது மரண அறிவித்தலை.

*- ஸ்டீவன் மேர்ட்ஸ்கி*

21. மரபணுக்கள் வெளிப்பாட்டை வேண்டி நின்றன - மூன்றாவது விழி?

*- கிரெக் பியர்*

22. தயவு செய்யுங்கள், எல்லாமே இதுதான்; சத்தியம் செய்கிறேன்.

*- ஸ்கொட் கார்ட்*

23. அவள்:- குழந்தை உன்னுடையது. அவன்:- மோசமான செய்தி!

*- ஸ்டீபன் மெரட்ஸ்கி*

24. இறுதியாக, அவனிடம் எந்த வார்த்தையும் இருக்கவில்லை.

- கிரகரி மாகிரே

***22.06.2008***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வக்கீல் கதைகள்

வக்கீல்களைப் பற்றிய கதைகள் இவை. இம்மூன்றையும் ஒரு சேர நீங்கள் எங்கும் படித்திருக்க முடியாது. இதில் இரண்டை அல்லது ஒன்றைப் படித்திருக்கலாம். இரண்டைப் படித்தவர்கள் ஒன்றையும் ஒன்றைப் படித்தவர்கள் இரண்டையும் எதையும் படிக்காதவர்கள் மூன்றையும் படியுங்கள். சோடிக்கப்பட்ட கதைகள்தாம். எவ்வளவு அழகாக இந்தக் கதைகளைப் பின்னியிருக்கிறார்கள் பாருங்கள். யாராவது ஓர் அலுப்புக் கேஸிடம் மாட்டிக் கொள்ளும் பட்சத்தில் நீங்களே சிருஷ்டித்த கதைகள் போல ஒவ்வொன்றாக எடுத்து விடுங்கள். நான் ஆட்சேபிக்கவில்லை.

■ நகரத்தின் இளைஞர் புனர்வாழ்வு மையம் சமூக அக்கறை கொண்ட பலரின் நிதியளிப்பில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்தது. முதலாவது வருடம் முடிந்ததும் பங்களிப்புச் செய்தவர்கள் பற்றி ஓர் மீளாய்வு செய்யப்பட்டபோது நகரத்தின் பிரபலமான சட்டத்தரணி எந்தப் பங்களிப்பையும் இதுவரை செய்யவில்லை என்பது தெரிய வந்தது. மையத்தின் தலைவரும் குழுவினரும் சட்டத்தரணியைச் சந்தித்து, எங்களது ஆய்வுகளின் படி உங்களது வருட வருமானம் இரண்டு கோடி ரூபாய்கள் என்று தெரிவிக்கிறது; ஆனால் நீங்கள் எதிர்கால சமூக நலன் கருதி எந்த உதவியையும் வழங்கவில்லை என்பதற்காக எங்களது வருத்தத்தைத் தெரிவிக்க வந்தோம் என்று சொன்னார்கள்.

சட்டத்தரணி தலையைத் தாழ்த்தி தனது மூக்குக் கண்ணாடிச் சட்டகத்துக்கு மேலால் கண்களை உயர்த்தி அவர்களைப் பார்த்து, எனது தாயார் நீண்ட காலமாகச் சுகவீனமுற்றிருந்தார் என்பதையும் அவரது வருமானத்தை விட மருத்துவச் செலவு பல மடங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமானது என்பதையும் உங்கள் ஆய்வு தெரிவிக்கவில்லையா? என்று அமைதியாக ஆனால் அழுத்தமாகக் கேட்டார். புனர்வாழ்வு மையத்தினர் அமைதி காக்க, அவர் தொடர்ந்தார். எனது சகோதரர் எப்படிப்பட்ட திறமைசாலி, அவர் பார்வை இழந்து சக்கர நாற்காலி யில் வாழ நேர்ந்ததே, அது உங்களுக்குத் தெரியாதா? இனி எழுந்து விடுவோம் என்று நகர ஆரம்பிக்க, அவர்களைப் பார்த்துக் குரலை உயர்த்தி அடுத்த கணையை வீசினார் சட்டத்தரணி. எனது சகோதரியின் கணவர் விபத்தில் இறந்த பிறகு அவர்களது பிள்ளைகள் மூவர் சதக் காசுக்கும் வக்கில்லாமல் சிரமப்பட்டார்களே அது கூடவா உங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை? உதவி பெற வந்தவர்கள் 'நீங்கள் எங்களை மன்னிக்க வேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது அவர்களை அமர்த்தித் தனது இறுதி வினாவைத் தொடுத்தார் சட்டத்தரணி. இவர்கள் யாருக்குமே பணம் கொடுக்காத நான் உங்களுக்கு எப்படித் தருவது?

■ ஒரு வயதான மனிதர் இறக்குந் தறுவாயில் தனது வைத்தியரையும் சட்டத்தரணியையும் மதகுருவையும் அழைத்து ஒவ்வொன்றிலும் 25000.00 ரூபாய்கள் அடங்கிய என்வலப்களைக் கொடுத்து, நான் இறந்ததும் எனது உடல் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிக்குள் இவற்றை வைத்து விடுங்கள் என்று கேட்டுக் கொண்டார். அவர்கள் அவற்றைப் பெற்றுச் சென்ற அடுத்த வாரமே மனிதர் இறந்து போனார். மூவரும் அவரது வேண்டுகோளை நிறைவேற்றினர்.

சில மாதங்களுக்குப் பின்னர் மூவரும் சந்தித்துக் கொண்ட போது இவ்விடயம் குறித்து நினைவு கூர்ந்தனர். நான் வைத்த என்வலப்பினுள் 10000.00 ரூபாய்களைத்தான் வைத்தேன் என்று குற்ற உணர்வுடன் தெரிவித்தார் மதகுரு. வீணாகப் போகிறது என்று தெரிந்தும் அவ்வளவு பணத்தையும் ஏன் வைப்பான் என்றுதான் அப்படிச் செய்தேன் என்று சொன்ன மதகுரு, மீதிப் பணத்தை அநாதை விடுதிக்குக் கொடுத்து விட்டு இறைவனிடம் பாவமன்னிப்புக் கேட்டுக் கொண்டேன் என்றார். நான் அதில் 8000.00 ரூபாய்களைத்தான் வைத்தேன். மீதியைப் புற்று நோய் வைத்தியசாலைக்கு அன்பளிப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து விட்டேன் என்று சொன்ன வைத்தியர் அதற்காக நான் வருத்தப் படவில்லை என்றார். நான் என்றால் வாக்கு மாறவே இல்லை; முழுப்பணத்தையும் அப்படியே வைத்து விட்டேன் என்று சொன்ன சட்டத்தரணி ஆனால் அதை எனது சொந்தக் காசோலையாக எழுதி வைத்து விட்டேன் என்றார்.

■ பிரபலமான சட்டத்தரணி ஒருவர் ஓய்வான ஒரு நாளில் தனது காரில் சவாரி போன போது ஆச்சரியமான ஒரு விடயத்தைக் கண்டார். இரண்டு மனிதர்கள் ஒரு மரத்தடியில் இருந்து புல்லைப் பிடுங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். என்ன நடக்கிறது என்று பார்த்து விடுவதற்காகக் காரை விட்டு இறங்கி அவர்களுக்கு அருகில் சென்று ஏன் புல்லைத் தின்கிறீர்கள் என்று கேட்டார். நாங்கள் ஏழைகள். சாப்பிட ஏதுமில்லையாதலால் புல்லைத் தின்கிறோம் என்றான் ஒருவன். அப்படியானால் நீ என்னுடன் வா; உனக்கு நான் சாப்பாடு தருகிறேன் என்று அழைத்தார். அவன் தயங்கியபடி எனது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்றான். பரவாயில்லை, அவர்களையும் அழைத்து வா என்ற சட்டத்தரணி மற்றையவனையும் தன்னுடன் அழைத்தார். அவனும் தயங்கியபடி மனைவியும் மூன்று பிள்ளைகளும் இருப்பதாகச் சொன்னான். எந்தத் தயக்கமுமில்லாமல் அவர்களையும் அழைத்து வந்து காரில் ஏறுங்கள் என்றார். சொகுசுக்கார் பிதுங்கி வழிய தெருவில் நகர்ந்தது.

வழியில் அவர்களில் ஒருவன் சட்டத்தரணியைப் பார்த்து, 'சார் நீங்கள் மிகவும் நல்லவர். கருணை மனம் படைத்தவர்' என்று சொன்னான். சட்டத்தணி சொன்னார்: - 'நான் இதற்காகச் சந்தோஷப் படுகிறேன். எனது இடத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்; அங்கு ஓர் அடி உயரத்துக்குப் புல் வளர்ந்திருக்கிறது!'

*29.06.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலுப்பைப்பூச் சர்க்கரை

தங்கர் பச்சானின் 'பள்ளிக் கூடம்' திரைப்படத்தில் ஒரு ரீமிக்ஸ் பாடல் இடம் பெற்றிருக்கிறது. 'ஆயிரத்தில் ஒருவன்' திரைப்படத்தில் இடம் பெற்ற நாணமோ... இன்னும் நாணமோ... என்ற டி.எம். சௌந்தரராஜன், பி.சுசீலா பாடிய பாடல் மெட்டில் அமைந்த ரீமிக்ஸ் பாடல் அது. ரீ மிக்ஸ் என்பது நேற்று எஞ்சிய வடை, போண்டா ஆகியவற்றை இன்றைய சாம்பாரில் கரைப்பது போன்ற விடயம். கானா உலகநாதன் இயற்றி அவரும் சுசித்ரா என்ற பாடகியும் இப் பாடலைப் பாடியுள்ளனர். கேட்கத் தெவிட்டாத பழைய பாடல் மெட்டு. அப்பாடலின் பல்லவி இப்படி அமைந்துள்ளது.

ஆண்: Rose mary.... நீ ஒரு Juce mary...
உன் Beauty க்கு நான்தான் Surrenderரடி...
நாம் ஜோடி சேர்ந்தால் Superரடி...
பெண்: ராபட்டு... (அடுத்த வார்த்தை புரியவில்லை)
என்ன வலிக்குது உந்தன் பாடிக்கட்டு...
நான் வந்தேனே உன்ன தேடிக்கிட்டு... (உன் பாக்கட்டில் இருக்குது பீடிக்கட்டு என்று கூட இந்த வசனத்தை மாற்றலாம்.)

புழக்கத்தில் உள்ள அநேக ஆங்கில வார்த்தைகள் உள்ள பாட்டு என்பதற்கு அப்பால் இப்பாட்டுக்குள்ளும் மூன்று குறள்கள் சொல்லப்படுகின்றன என்பதற்கு அப்பால் இரண்டு விடயங்கள் பற்றிப் பேச இப்பாடல் என்னைத் தூண்டி விட்டது.

முதன் முதலில் இந்தப் பாட்டை நான் கேட்ட போது என் நினைவுகள் 30 வருடங்கள் பின்னோக்கி நகர்ந்தன. பேருவளையில் எனக்கு அமீன் என்றொரு நண்பன் இருந்தான். எந்த வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை எதிர் கொண்டாலும் அப்போதைய பிரபலமான சினிமாப் பாடலை இதே போல ஆங்கில, சிங்களச் சொற்களைச் சேர்த்துப் பாடுவது மட்டுமன்றி நகைச்சுவை மிக்கதாகவும் மாற்றிப் பாடிக் காட்டுவான். பின்னாளில் அமீன் ஒரு நல்ல புகைப்படக் கலைஞனாகத் திகழ்ந்தான். மேற்குறிப்பிட்ட பாடலைக் கேட்ட போது, அட இதைத் தானே 30 வருடங்களுக்கு முன் அமீன் செய்தான் என்று ஆச்சரியப் பட்டேன்.

இந்தப் பாடல் இன்னொரு புரிதலை எனக்குத் தந்தது என்பது அடுத்த விடயம். கடந்த காலங்களைப் போலல்லாமல் இப்போதெல் லாம் சினிமாவுக்குப் பாடல் எழுதுவது சிரமமான காரியமாக இல்லை என்பதுதான் அது. கடந்த காலங்களில் சினிமாவில் பாடல் ஒரு பிரதான பாத்திரத்தை வகித்தது. பாடல்களுக்காகவே மீண்டும் மீண்டும் ஒரே படத்துக்குச் சென்ற விசிலடிச்சான் குஞ்சுகள் ஏராளம் இருந்தன. சில பாடலுக்குரிய வரிகள் வந்து விழும் வரை இரவு பகல் கவிஞர்களும் இசையமைப்பாளர்களும் முயன்ற சம்பவங்களை யெல்லாம் கடந்த காலங்களில் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். குறிப்பிட்ட சில நடிகர்கள் கூட இதில் மிக அவதானமாகச் செயற் பட்டிருக்கிறார்கள். அந்நாட்களில் ஒரு படம் வந்தால் அதில் பிரபல மாகாத பாடல் ஒன்று அல்லது இரண்டுதான் இருக்கும். இப்போது வரும் பத்துப் படங்களுக்குள் திணிக்கப்பட்டிருக்கும் பாடல்களுள் ஒன்றுதான் பிரபல்யமடைகிறது.

இப்போதெல்லாம் வெளிவரும் படத்தின் கதைகளும் ஒரு வகையில் ரீமிக்ஸ்தான். அவற்றை 2 மணித்தியாலங்களும் 50 நிமிடங்களும் ஓட்டுவதற்காகப் பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது வரும் பாடல்களைக் கவிஞர்கள்தான் இயற்றுகிறார்கள் என்று நம்புவதற்கு எனக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. இக்காலப் பாடல்களைச் சற்றுக் காது கொடுத்து (பாவம் நீங்கள்) அவதானித்தீர்களானால் இது இலகுவாகப் புரியும். இதைக் கணனியில் தட்டிக் கொண்டிருக்கும் போது எனக்குத் தோன்றிய பல்லவி இது. கதாநாயகனும் அவனது நண்பர்களும் நின்றிருக்கக் கதாநாயகியும் பரிவாரமும் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.
இதோ பாடல்: -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் குழு: பொண்ணுங்கடா டோய்...

பெண்கள் குழு: என்னங்கடா டேய்...

ஆண்கள் குழு: கண்ணுங்கடா டோய்...

பெண்கள் குழு: பன்னிங்கடா ஹேய்...

அடுத்த காட்சியில் நூறு ஆண்களும் நூறு பெண்களும் கச்சையோடும் அரைஞாண் கயிற்றோடும் ஒரு குலுக்கல் ஆட்டம் ஆட நிலைமைக்கு ஏற்றவாறு அப்பாடலுக்குச் சரணம் அமையும். பாடலைத் தொடருவோம்.

ஆண்கள் : அரிசி மூட்டை போல ஒன்று அங்கே கிடக்குது
ஆனைக் குட்டி போல ஒன்று அசைந்து வருகுது

பெண்கள்: தேவாங்குக் கூட்டம் ஒன்று தெருவில் ஆடுது
தேறாத கூட்டமிது தெருவளக்குது...

இவ்வாறு பாடலைத் தொடர முடியும். விருப்பமானவர்கள் இதைத் தொடர்ந்து எழுதி யாராவது ஒரு சினிமாத் தயாரிப்பாள ருக்கோ டைரக்டருக்கோ அனுப்பிப் பாடலாசிரியராக முயற்சியுங்கள். '30 நாட்களில் சினிமாப் பாடல் எழுதுவது எப்படி' என்று ஒரு புத்தகம் போடலாம் என்றிருக்கிறேன்.

என் நண்பன் அமீனைப் பற்றிச் சொன்னேன் அல்லவா. சில வருடங்களுக்கு முன்னர் ரமாளான் மாதத்தில் நோன்புடன் பிற்பகலில் உறங்கிய அமீன் மாலை நோன்பு துறப்பதற்கு எழுந்திருக்கவில்லை!

*06.07.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச இறக்கைகள்

சங்கம் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிக் கலந்துரையாடக் கூடிற்று. நாடளாவிய ரீதியில் போட்டிகளை நடத்த வேண்டும் என்றார் ஒருவர். கட்டுரைகளுக்கு வேறாகவும் கவிதைகளுக்கு வேறாகவும் தலைப்புக்களை வழங்க வேண்டும் என்றார் ஒருவர். பல்கலைக்கழக மட்டம், பாடசாலை மட்டம் என்று போட்டிகள் வகைப்படுத்தப்பட வேண்டும் என்றார் மற்றவர். அப்படியாயின் பொதுவான நிலையில் ஒரு போட்டியையும் ஏன் நடத்தக் கூடாது என்று கேட்டார் இன்னொருவர். கேட்டுக் கொண்டிருந்த நான் இந்தப் போட்டிகளை நடத்துவதில் எனக்கு எள்ளளவும் நம்பிக்கை கிடையாது என்று சொன்னேன். மொத்த நபர்களும் கொள்ளைக் கேள்விக் குறிகளை முகத்திலும் கண்களிலும் வைத்துக் கொண்டு என்னை நோக்கினார்கள். அக்கேள்விக் குறிகளை அசட்டை செய்யாமலும் அத்தனை பேரையும் எதிர்த்துப் போராடும் பாவனை இல்லாமலும் மெதுவாக ஆரம்பித்தேன்.

கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி என்று நாம் எதை நடத்தினாலும் அதை பெயர் முகவரி குறித்து அனுப்பியவர்தான் எழுதினார் என்பதை எந்த வகையிலும் உறுதிப்படுத்த முடியாது. நாடளாவிய ரீதியில் மாகாண ரீதியில் பிரதேச ரீதியில் என்றெல்லாம் போட்டிகள் அவ்வப்போது நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. போட்டிகள் முடிந்து பத்திரிகைகளில் பெயர் விபரங்கள் பிரசுரமாகின்றன. முதற் பரிசு முதல் ஆறுதல் பரிசு, சிறப்புப் பரிசு என்று அள்ளிக் கொண்டு செல்கிறார்கள். இந்த பெயர்ப் பட்டியலை நீங்கள் ஓரளவுக்காகவாவது ஞாபகம் வைத்திருப்பீர்களானால் இவர்களில் தொண்ணூறு விகிதம் பேர் புதியவர்களாக இருக்கக் காண்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பிறகு எந்தவொரு பத்திரிகையிலோ சஞ்சிகையிலோ அவர்களது படைப்புக்களைக் காண முடியாது. நேரடியாக ஒரு மண்டபத்தில் நடைபெறும் கட்டுரைப் போட்டிக்கும்கூட யாரோ எழுதியதை மனனம் செய்து கொண்டு வந்து எழுதி விட்டுச் செல்கிறார்கள். எனவே ஒருவரின் எழுத்துத் திறமையை இவ்வாறான போட்டிகளைக் கொண்டு அளவிட முடியாது என்று சொன்னேன். சங்கத்தினர் நல்லவர்கள்; ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் இது பற்றிய அலசல் நெடுநேரம் இடம் பெற்றது.

மாணவர்களுக்கிடையே நடக்கும் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் யாரோ எழுதிக் கொடுத்ததை பேசி அல்லது எழுதி விட்டுப் போவதால் ஒரே ஒரு நன்மை இருக்கிறது. வெற்றியோ தோல்வியோ ஒரு தலைப்பின் கீழ் சில விடயங்களை மாணாக்கர் பாடம் செய்து கொள்கின்றனர் என்பதுதான். சில போட்டிகளில் வேறு யாருடையவும் உதவியற்ற ஒரு மாணவன் எழுதும் நேர்மையான எழுத்தை மற்றொரு மாணவன் பக்கத்து வீட்டு மாமாவின் அல்லது மாமியின் எழுத்தைப் பாடமாக்கிக் கொண்டு வந்து கீழே வீழ்த்தி ஏறி நின்று விடுகிறான். இதனால் கவிதை என்றால் கால் வீசை என்ன விலை என்று கேட்பவர்களும் இரண்டு வரிகளைப் பிழையில்லாமல் எழுத முடியாதவர்களும் கவிஞர்களாகவும் எழுத்தாளர்களாகவும் பரிசுக் கோப்பைகளுடன் பவனி வருகிறார்கள்.

பெரும்பாலும் போட்டிகளின் போது ஆக்கங்கள் தபாலில் வருகின்றன. எழுத்து வன்மையும் உள்ளடக்கமும் சொல்லும் பாணியும் எப்படியிருக்கிறது என்று பார்க்கப்பட்டுப் புள்ளிகள் இடப்படுகின்றன. உண்மையில் வயதடிப்படையிலான போட்டிகளின் போது குறிப்பிட்ட வயதெல்லையும் அவ்வயதின் மொழியும் சிந்தனையும் எப்படியிருக்கும் என்று தீர்மானிக்கப்பட்டே புள்ளிகள் இடப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு எந்தப் போட்டியிலும் பின்பற்றப்படுவதில்லை. பாடசாலை மட்டத்தில் மட்டுமல்ல, பொதுவான திறந்த நிலைப் போட்டிகளிலும் இந்தப் போக்கே காணப்படுகிறது.

கவிதை, கதை என்று நடத்தப்பட்ட இரண்டு போட்டிகளின் முடிவுகளை பத்திரிகைகளில் கண்ணுற்றேன். தொடர்ந்து எழுதி வரும் சிலர் ஆறுதல் பரிசில்களுக்குள் இருந்தார்கள். முதல் நிலைப் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்களின் படைப்புகள் எவற்றையும் இதுவரை நான் படித்த தில்லை. அதாவது அவர்களது பெயர்கள் பரிச்சயமானவையாக இல்லை. தொடர்ந்து எழுதி வருவோர்தான் முதல் நிலைப் பரிசில்களுக்குத் தகுதியானவர்கள் என்பதோ பெயர் பரிச்சயமற்ற வர்கள் எவரும் திறமையற்றவர்கள் என்பதோ என் வாதம் அல்ல. ஆனால் திடீரென இவ்வாறு தோன்றுவோர் பின்னர் ஏன் காணாமல் போய் விடுகிறார்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்ததால் தோன்றியதைச் சொன்னேன். கடந்த காலங்களில் இவ்வாறு முதல் நிலைப் பரிசுகளையும் விருதுகளையும் வென்றவர்களை இப்போது தேடிப் பார்ப்போமானால் சம்பந்தா சம்பந்தம் இல்லாத துறைகளில் அல்லது தொழில்களில் இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

இதற்கெல்லாம் அப்பால் நடுவர் விளையாட்டு என்று ஒன்றிருக்கிறது. தெரிந்தவர், உறவினர், வேண்டப்பட்டவர் என்ற கருதுகோள்களின் கீழ் புள்ளிகளை அள்ளி வழங்கி வெற்றி பெற வைத்துவிடும் ஆட்டம் அது. அண்மையில் பிரபல பாடசாலை ஒன்றுக்குச் சென்றிருந்தேன். சற்றுக் காத்திருந்த நேரத்தில் தாய்மார் அணியொன்று பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. அங்கு கற்பிக்கும் போட்டிகளுக்குப் பொறுப்பான ஆசிரியரின் பிள்ளைகள் இருவர் அதே பாடசாலையில் வெவ்வேறு வகுப்புகளில் கற்கிறார்கள். வருடா வருடம் அவர்கள் பங்கு கொள்ளும் போட்டிகளிலெல்லாம் முதல் நிலை இடங்களுக்கு வந்து விடுவார்களாம். தப்பித் தவறி மூன்று இடங்களில் ஒன்றுக்கு வரத் தவறினால் 3வது பரிசு இருவருக்குக் கிடைக்குமாம். அந்த இருவரில் ஒருவர் குறிப்பிட்ட ஆசிரியரின் புதல்வராயிருப்பாராம்.

பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள் என்பதற்காக அதில் உண்மையில்லை என்று எப்படிச் சொல்வது?

*13.07.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலை மறை பழம்

கவிஞர்களும் கவிதை இரசிகர்களும் தங்களுக்குப் பிடித்த கவிஞர்கள் வரிசை ஒன்றை மனதுக்குள் பட்டியல் போட்டு வைத்திருப்பார்கள். தங்களது பட்டப் படிப்புத் தேவைகளுக்காக பல்கலைக் கழக மட்டத்தில் கவிதை எழுதும் பேராசியர்களைப் புகழ்ந்து அல்லது வெளிநாட்டில் வாழும் இலக்கிய நண்பர் சொன்ன வெளிநாட்டுக் கவிஞர் பற்றிய குறிப்பைக் கொண்டு அவரை முழுவதும் கரைத்துக் குடித்து விட்டதாக ஆங்காங்கே எடுத்து விடுவது போல் உள்ள பட்டியலை நான் குறிப்பிடவில்லை. உண்மைக்குண்மையாக தனது வாசிப்புக்கும் புரிதலுக்கும் உட்பட்ட கவிஞர்களில் தன்னைக் கவர்ந்தவர்கள் என்ற பட்டியலை மட்டுமே நான் குறிப்பிடுகிறேன்.

என்னிடமும் அவ்வாறான ஒரு பட்டியல் உண்டு. அந்தப் பட்டியலில் இருப்பவர்களில் ஒருவர் ஜெயபாஸ்கரன். ஆனந்த விகடனில் சின்னக் கவிதைகளின் போட்டி ஒன்றை சுஜாதா நடாத்திய போது அதில் தெரிவான கவிதைகளில் ஒன்று அவருடையது. அந்தக் கவிதை என்னில் பெரும் அதிர்வை ஏற்படுத்திற்று. கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தற்செயலாக நுழைந்த இணையத் தளமொன்றில் அவரது பெயரைக் கண்டது எனக்கு ஞாபகம் வந்தது. ஆனந்த விகடனில் வெளியான அந்தக் கவிதைதான் ஒரு நல்ல கவிதைக்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடப்பட வேண்டியது என்பது எனது அபிப்பிராயமாகியது. கவிதை நூல் வெளியீட்டு விழாக்கள் மூன்றில் அந்தக் கவிதையை சபைக்கு நான் வாசித்துக் காட்டியுள்ளேன். பெண்ணடிமைத்தனம் பற்றி வெறும் பதினாறே வரிகளில் அந்தக் கவிதை பேசுவதைப் போல் சிறப்பாக, சுருக்கமாக, தாக்கமாகச் சொல்லும் வேறு ஒரு கவிதையை நான் படித்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயபாஸ்கரனின் ஏனைய கவிதைகளைப் படிக்கவும் அவரைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் வேண்டும் என்ற ஒரு பேராவல் நீண்ட காலமாக இருந்து வந்தது. அவரது கவிதையைப் படித்த பிறகு இரண்டு முறை இந்தியா சென்று வரக் கிடைத்தும் கூட அவரைப் பற்றித் தேடாமல் வந்து விட்டதற்காக நான் வருந்தியிருக்கிறேன். அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்த சகோதரி லதா இன்று ஜெயபாஸ்கரனைச் சந்திக்கிறேன் என்று ஒரு குறுந்தகவலை எனக்கு அனுப்பியதும் எனது ஆவலைத் தெரியப்படுத்தினேன். ஜெயபாஸ் கரனின் வீட்டில் இருந்து என்னுடன் தொடர்பு கொண்டு ஆசை தீர அவருடன் பேசுங்கள் என்றார். இலக்கிய வாழ்வின் மறக்க முடியாத அனுபவங்களில் ஒன்றாக அந்தத் தொடர்பாடல் ஆகிவிட்டது. மறக்காமல் அவர் வெளியிட்ட ஒரே ஒரு கவிதைத் தொகுதியையும் ஒரே ஒரு கட்டுரைத் தொகுதி யையும் லதா கொண்டு வந்தார். சினிமாப் பாடல்கள் புகழ் கவிஞர்களது கவிதைகளிலும் பாடல்களிலும் நமது வாசகர்கள் மயங்கிக் கிடப்பதால் ஜெயபாஸ்கரன் போன்றவர்களது புத்தகங்கள் இங்கு வருவதில்லை போலும்.

கவிஞர், பத்திரிகையாளர், சிறுகதையாளர், கட்டுரையாளர், தொலைக் காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர், செய்திப் பட இயக்குனர் என ஜெயபாஸ்கரனுக்குப் பல முகங்கள். ஜெயபாஸ்கரன் கவிதைகள் என்ற அவரது கவிதைத் தொகுதி 2002ம் ஆண்டில் வெளிவந்தது. இடம் பெற்றுள்ளவற்றில் அநேக கவிதைகள் சிறப்பானவையாக, சிந்தையைக் கிளறுவனவாக இருக்கின்றன. என்னை மிகவும் கவர்ந்த நானும் நீயும் என்ற கவிதைதான் இது:-

நாமிருவரும் சேர்ந்து எடுத்த புகைப்படங்களில்
நாற்காலியில் அமர்ந்திருப்பேன் நான்
அடக்கமாக எனக்குப் பின்னால்
நின்றிருப்பாய் நீ

உன் இனத்துக் கற்புக்கரசிகளைச் சொல்லி
உன்னை மிரட்டுவேன் நான்
என் இனத்து அயோக்கியர்கள் பட்டியல் தெரிந்தும்
அமைதியாக இருப்பாய் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எனக்கிருப்பதை பிறர் கேட்டாலொழிய
சொல்லிக் கொள்வதில்லை நான்
நான் உனக்கிருப்பதை ஆதாரங்கள் அணிந்து
பறைசாற்றியாக வேண்டும் நீ

எனக்குப் பிறகு என் நினைவுகளோடு
வாழ வைக்கிறார்கள் உன்னை
உனக்குப் பிறகு உன் தங்கையோடு
வாழ வைக்கிறார்கள் என்னை

*20.07.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீசன் சிறுகதைகள்

■ அனுசூயா உணர்வற்றவள் போல் கட்டிலில் சுருண்டு கிடந்தாள். அவளது பிள்ளைகள் வீட்டின் சிறிய முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். இன்னும் ஒரு நாள் கழிந்தால் தீபாவளி. கணவன் இல்லாத தீபாவளி என்பதை விடத் தனது பிள்ளைகளுக்குப் புதிய உடைகளையாவது பெற்றுக் கொள்ளும் கவலை அவளுக்கு. வாழ்க்கையே வெறுத்துப் போய் இருந்தாள். சில மாதங்களுக்கு முன்னர் வேலைக்குச் சென்ற அவளது கணவனை கிளைமோர்க் குண்டு பலியெடுத்துச் சென்றது. காதலுக்காகக் குடும்பத்தை இழந்தது தவறான முடிவு என்பது அவளுக்கு உறைத்தது. இருந்த நகைகளை விற்று ஒரு தையல் இயந்திரத்தைக் கொண்டு பிள்ளைகளைக் காத்து வந்தாள். அதுவும் கூட தீபாவளி நேரம் பார்த்துச் சிக்கடிக்கத் தொடங்கிற்று, தைப்பதற்கு வந்த உடைகளைத் திருப்பித் தந்து விட்டாள். இயந்திரத்தைத் திருத்துபவர் பண்டிகைச் சமயத்தில் வரவா போகிறார்? கவலை அவளை ஒவ்வொரு நிமிடமும் அரித்தெடுத்தது. கடவுளின் மேல் பாரத்தைப் போட்டாள். விடிந்தது. காலையில் வீட்டு முற்றத்தில் பொதியுடன் ஒரு மனிதர் நின்றிருந்தார். அனுசூயாவிடம், நான் உங்களது கணவனின் நண்பன். கடந்த வாரம்தான் வெளிநாட்டிலிருந்து வந்தேன். கணவர் இறந்ததைக் கேள்விப் பட்டேன். இதை உங்கள் பிள்ளைகளிடம் கொடுத்து விடுங்கள் என்று சொல்லி திண்ணையில் அப் பொதியை வைத்து விட்டுத் திரும்பிச் சென்று விட்டார். எல்லாம் ஒரு நொடிக் கனவு போல் இருந்தது அனுசூயாவுக்கு. தன்னை மறந்து நின்ற அவள் உணர்வு வந்தவளாகப் பொதியைப் பிரித்தாள். அவளுக்கும் அவளது பிள்ளைகளுக்குமான புதிய ஆடைகளும் இனிப்புப் பண்டங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் இருந்தன. அனுசூயா கடவுளுக்கு நன்றி சொன்னாள்.

■ அனீஸா உணர்வற்றவள் போல் கட்டிலில் சுருண்டு கிடந்தாள். அவளது பிள்ளைகள் வீட்டின் சிறிய முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். இன்னும் ஒரு நாள் கழிந்தால் பெருநாள். கணவன் இல்லாத பெருநாள் என்பதை விடத் தனது பிள்ளைகளுக்குப் புதிய உடைகளையாவது பெற்றுக் கொள்ளும் கவலை அவளுக்கு. வாழ்க்கையே வெறுத்துப் போய் இருந்தாள். சில மாதங்களுக்கு முன்னர் வேலைக்குச் சென்ற அவளது கணவனை வாகன விபத்து பலியெடுத்துச் சென்றது. காதலுக்காகக் குடும்பத்தை இழந்தது தவறான முடிவு என்பது அவளுக்கு உறைத்தது. இருந்த நகைகளை விற்று ஒரு தையல் இயந்திரத்தைக் கொண்டு பிள்ளை களைக் காத்து வந்தாள்.அதுவும் கூட பெருநாள் நேரம் பார்த்துச் சிக்கடிக்கத் தொடங்கிற்று, தைப்பதற்கு வந்த உடைகளைத் திருப்பித் தந்து விட்டாள். இயந்திரத்தைத் திருத்துபவர் பெருநாள் சமயத்தில் வரவா போகிறார்? கவலை அவளை ஒவ்வொரு நிமிடமும் அரித்தெடுத்தது. இறைவனின் மேல் பாரத்தைப் போட்டாள். விடிந்தது. காலையில் வீட்டு முற்றத்தில் பொதியுடன் ஒரு ஜோடி நின்றிருந்தது. அது அனீஸாவின் பள்ளித் தோழியும் கணவனும். தோழி அனீஸாவைக் கட்டித் தழுவினாள். கணவர் இறந்ததைக் கேள்விப் பட்டதாகவும் பார்த்துவிட்டுப் போக வந்ததாகவும் கூறினாள். பொதியைத் திண்ணையில் வைத்து விட்டு வேறு ஒரு நாள் வருவதாகக் கூறிவிட்டுச் சென்றனர். எல்லாம் ஒரு நொடிக் கனவு போல் இருந்தது அனீஸாவுக்கு. தன்னை மறந்து நின்ற அவள் உணர்வு வந்தவளாகப் பொதியைப் பிரித்தாள். அவளுக்கும் அவளது பிள்ளைகளுக்குமான புதிய ஆடைகளும் இனிப்புப் பண்டங்களும் அதில் இருந்தன. அனீஸா அல்லாஹ்வுக்கு நன்றி சொன்னாள்.

■ அனிற்றா உணர்வற்றவள் போல் கட்டிலில் சுருண்டு கிடந்தாள். அவளது பிள்ளைகள் வீட்டின் சிறிய முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். இன்னும் ஒரு நாள் கழிந்தால் கிறிஸ்மஸ். கணவன் இல்லாத கிறிஸ்மஸ் என்பதை விடத் தனது பிள்ளைகளுக்குப் புதிய உடைகளையாவது பெற்றுக் கொள்ளும் கவலை அவளுக்கு. வாழ்க்கையே வெறுத்துப் போய் இருந்தாள். சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களுக்கு முன்னர் மீன் பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்ற அவளது கணவன் திரும்பி வரவில்லை. காதலுக்காகக் குடும்பத்தை இழந்தது தவறான முடிவு என்பது அவளுக்கு உறைத்தது. இருந்த நகைகளை விற்று ஒரு தையல் இயந்திரத்தைக் கொண்டு பிள்ளை களைக் காத்து வந்தாள்.அதுவும் கூட கிறிஸ்மஸ் நேரம் பார்த்துச் சிக்கடிக்கத் தொடங்கிற்று, தைப்பதற்கு வந்த உடைகளைத் திருப்பித் தந்து விட்டாள். இயந்திரத்தைத் திருத்துபவர் கிறிஸ்மஸ் சமயத்தில் வரவா போகிறார்? கவலை அவளை ஒவ்வொரு நிமிடமும் அரித்தெடுத்தது. இயேசுவின் மேல் பாரத்தைப் போட்டாள். விடிந்தது. காலையில் வீட்டு முற்றத்தில் ஜோன் ராஜன் நின்றிருந்தான். அனிற்றாவின் கணவனின் நண்பனான அவன் அவளுடன் உடன் பிறவாச் சகோதரனாக நடந்து கொள்பவன். நேற்று அதிக மீன்கள் பிடிபட்டதால் பெரும் லாபம் கிடைத்ததாகச் சொன்னான். அதில் ஒரு பங்கை சந்தோஷமாக வழங்குவதாகச் சொல்லி ரூபாய் நோட்டுக் கட்டு ஒன்றை அவளது கரங்களில் திணித்து விட்டுத் திரும்பிப் பாராமல் நடந்தான். எல்லாம் ஒரு நொடிக் கனவு போல் இருந்தது அனிற்றாவுக்கு. தன்னை மறந்து நின்ற அவள் உணர்வு வந்தவளாகப் பணத்தை எண்ணிப் பார்த்தாள். அதில் பத்தாயிரம் ரூபாய்கள் இருந்தன. அவளுக்கும் அவளது பிள்ளைகளுக்குமான புதிய ஆடைகளும் இனிப்புப் பண்டங்களும் கண்முன்னே விரிந்தது. அனிற்றா இயேசுவுக்கு நன்றி சொன்னாள்.

கதைகளைப் படித்த உங்களுக்கு ஏன் இவற்றை எழுதினேன் என்பது புரிந்திருக்கும். புரிந்து கொள்ள முடியாதவர்கள் இவர் என்ன அர்த்தமில்லாமல் எழுதுகிறார் என்று வாசகர் கடிதம் எழுதித் தபாலிடலாம்.

27.07.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மறி ஆடுகள்

இலங்கையில் இளம்பிள்ளைவாதம் என்கின்ற போலியோ வைத் தடுப்பதில் வெற்றி எய்தப்பட்டுள்ளதை அவ்வப்போது கிடைக்கும் தகவல்களும் செய்திகளும் தெரிவிக்கின்றன. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஒரே தினத்தில் கிழக்காசிய நாடுகள் அனைத்திலும் சிறாருக்கும் குழந்தைகளுக்கும் போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். சர்வதேச விமான நிலையங்களில்கூட இம் மருந்து வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது குறித்து டாக்டர் (கவிஞர்) தாஸிம் அகமதுவைத் தொடர்பு கொண்டு விசாரித்த போது இம்மருந்து கொடுக்கப்பட்ட நாடுகளில் காலாவதியான மருந்துகள் பாவிக்கப் பட்ட இடங்கள் தவிர மற்றப்படி **99.5** சதவீத வெற்றிதான் என்று தெரிவித்தார். செய்தி சந்தோஷமளிக்கக் கூடியதுதான்.

இன்று இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களைக் காண்பது அரிதாகியிருக்கிறதே தவிர ஒரு காலையோ இரண்டு கால்களையுமோ இழந்தவர்களைக் காண்பதற்கு முடியுமாயிருக்கிறது. இதில் சிறுவர் முதற் கொண்டு முதியோர் வரை அடங்குகின்றனர். இவர்களது கால்களைக் கவர்ந்து சென்றவை நம் நாட்டில் நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தம் காரணமாகப் புதைக்கப்பட்டிருக்கும் மிதி வெடிகள். போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட காலப் பிரிவில் மிதி வெடிகளை அகற்றுவதற்காக வெளிநாடு ஒன்றிலிருந்து இலங்கை வந்த குழுவில் ஒருவரைத் தற்செயலாக நான் சந்திக்க நேர்ந்தது. அனுவங்களைப் பற்றிக் கேட்ட போது அவர் சொன்னார்:- 'ஒவ்வொரு மிதி வெடியையும் அடையாளங் கண்டு அகற்றும் போதும் ஓர் உயிரைக் காப்பாற்றி விட்டதான அல்லது ஒருவரின் ஊனத்தை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் சம்பந்தப்பட்டவரது குடும்பத்தில் விளையும் துயரங்களை நான் தடுத்து விட்டேன் என்கிற ஆறுதலும் திருப்தியும் ஏற்படுகின்றன.' மகத்தான அதேவேளை ஆபத்தான அவர்களது சேவைக்காகப் பாராட்டுக்களைத் தெரிவித்தேன்.

அன்றைய தினம் முழுவதும் மிதி வெடிகளும் அது பற்றிய அபாய அறிவிப்புப் பலகைகளும் 'மிதி வெடிகள் உள்ளன' என்று மஞ்சள் நிறப் பட்டிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் இடங்களும் கால்களை இழந்த மனிதர்களும் நினைவில் சுழன்று கொண்டிருக்க அன்றிரவு எனது கவிஞன் விழித்துக் கொண்டான்.

போலியோச் சொட்டருந்தி
விளையாடச் சென்றவனைத்
தூக்கி வந்திருந்தார்கள்
கால் ஒன்றை இழந்திருந்தான்-
மிதி வெடியில்!

இலங்கையில் ஒரு காலத்தில் இந்திய அமைதிப்படை இருந்தது என்பது உங்களுக்குத் தெரிந்ததே. விடுதலைப் புலிகளுட னான மோதலில் மிதி வெடி ஆபத்தை அவர்கள் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. தங்களுக்குப் பரிச்சயம் அற்ற சூழலில் அவர்களில் பலர் கால்களை இழக்கும் நிலை ஏற்பட்ட போது அதைத் தவிர்ப்ப தற்காக ஒரு காரியம் செய்தார்கள். அதில் புத்திசாலித்தனமான இரட்டை நோக்கம் இருந்தது. இந்தியாவிலிருந்து கப்பல் கப்பலாக செம்மறி ஆடுகள் வந்திறங்கின. ஒவ்வொரு இராணுவக் குழுவும் ஒரு செம்மறிக் கூட்டத்தை முன்னால் நடக்க விட்டுப் பின்னால் நடந்தது. முன்னால் செல்லும் ஆடுகள் கண்ணிவெடிகளில் அகப்பட்டால் அவை அக்குழுவினரின் அன்றைய உணவாக மாறியது. ஆடுகள் பொதுவா கவே துரத்தினால் கலைந்து வெவ்வேறு பக்கங்களில் தறி கெட்டு ஓடுவன. ஒன்றைச் சொல்ல வேறு ஒன்றைச் செய்பவனை 'எட செம்மறி' என்று அழைப்பதும் சொன்னதை உடனடியாகப் புரிந்து கொள்ளாத வனை 'இவன் ஒரு செம்மறியடா' என்று திட்டுவதும் யாழ்ப்பாணத்தில் இன்றும் வழக்கத்தில் உள்ளது.

திருமதி பார்பரா வோல்டர்ஸ் சர்வதேச தொலைக் காட்சிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையொன்றின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர். ஆப்கானிஸ்தானில் அரசியல் சிக்கல்கள் மும்முரமடைவதற்கு முன்னர் நிகழ்ச்சிகளுக்காகச் சென்று வந்திருக்கிறார். அந்தக் கால கட்டத்தில் பெண்கள் ஆண்களின் பின்னால் கிட்டதட்ட ஐந்து அடி இடைவெளியில் நடந்து வருவதை அவதானித்திருந்தார். தலிபான்கள் ஆட்சிக்கு வந்து பின்னர் அவர்களது ஆட்சியும் அதிகாரமும் தூக்கி வீசப்பட்டு இன்று அமெரிக்க ஆசீர்வாதத்துடனான அரசு ஆட்சியில் இருக்கிறது. மிக அண்மையில் அங்கு சென்ற பார்பரா பெண்கள் ஆண்களுடன் சமமாக நடந்து வராமல் இன்னும் வழமை போல் பெண்கள் பின்னால் நடந்து வருவதை அவதானித்தார். சொல்லப் போனால் முன்னரை விட மேலும் சில அடிகள் பின்னால் ஆனால் மகிழ்ச்சியுடன் நடந்து வருவதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். ஒரு பெண்ணை அணுகி, 'ஒரு கட்டத்தில் ஆண்களுடன் சரிசமமாக நடந்து செல்லக் கோரிக் கொந்தளிப்பெல் லாம் நிகழ்ந்ததல்லவா..? இப்போது அதற்கு எந்தத் தடையும் இல்லாத போது ஏன் பழைய வழக்கத்தை மாற்றாமல் இருக்கிறீர்கள்?' என்று கேட்டார். அந்தப் பெண் பார்பராவை சில கணங்கள் நேராகப் பார்த்தவாறு புன்முறுவலுடன் சொன்னார்: 'கண்ணிவெடிகள்!'

நீதி: ஒவ்வொரு ஆணின் பின்னாலும் ஒரு புத்திசாலித் தனமான பெண் இருக்கிறாள்!

*03.08.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன உலகின் ஏழைகள்

மனிதனின் ஒரு தேவை நிறைவேறும் போது மற்றொரு தேவை முளை விடுகிறது என்று பொருளியல் சொல்கிறது. அந்தத் தேவை, புதியதாகவும் இருக்கலாம். அல்லது நிறைவேறிய தேவை யிலிருந்தும் தோன்றலாம். மனித குலம் நாகரிக முன்னேற்றத்தைக் கண்டது என்பதன் பின்னணியில் தொனிக்கும் அர்த்தம் அது தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டே நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதுதான். இன்னும் இன்னும் தனது தேவைகளை அதிகரித்துக் கொண்டு சென்று கொண்டிருக்கிறது என்பதுதான்.

தனது பொருட்களைத் தானே காவிச் சென்ற ஆதி மனிதன் மிகப் பாரமான பொருட்களை மரக் குற்றிகளை அடுக்கி அதன் மேல் வைத்து உருட்டித் தள்ளி நகர்த்தினான். சக்கரம் கண்டு பிடிக்கப் படுகிறது. அது மனித நாகரிக வரலாற்றில் ஒரு பெரும் திருப்பு முனை யாக அமைந்து விட்டது. சக்கரங்களைப் பயன்படுத்திப் பொருட் களைத் தானும் இழுத்தான்; மிருகங்களையும் பயன்படுத்தினான். நீராவி இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டதானது மற்றொரு திருப்பு முனையாக அமைந்தது. இன்று மனிதன் தனது வீட்டு அறையொன்றில் அனுபவிக்கும் அதீத சுகத்தை ஒரு வாகனத்துள் பெற்றுக் கொள்ளும் முன்னேற்றம் அடையப் பெற்றிருக்கிறது. இன்றைய நிலையை அடைவதற்கு மனித குலம் நீண்ட காலத்தை இழந்திருக்கிறது. நான் இந்த இடத்தில் சொல்ல வருவது என்னவெனில் தேவைகளை நிறைவு செய்வதற்கான மனித குலத்தின் முயற்சியை. ஒன்றை அடைந்து கொள்வதற்கான உழைப்பை. நான் மேற் குறிப்பிட்ட ஒவ்வொரு விடயங்கள் குறித்தும் சற்று சிந்தித்துப் பாருங்கள். தேவைகள் எவ்வாறானவையாக இருந்தன? அவை எவ்வாறு நிறைவேற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன? அதற்கான முயற்சிகள் எத்தகையதாக இருந்திருக்கும்? அடைவுகளைப் பெறுவதில் இருந்த உழைப்பின் மகத்துவம் எப்படி யானது? எல்லாவற்றையும் விட முக்கியமான விடயம் என்னவெனில் ஒரு தேவையிலிருந்து இன்னொரு தேவை எப்படிப் பிறந்து வந்திருக் கிறது என்பதை அவதானிப்பதுதான்.

இன்று தேவைகள் ஆசைகளாக மாற்றமடைந்திருப்பதைக் காண்கிறோம். நமது வீடுகளில் உள்ள பல பொருட்கள் இல்லாமலே மனித சமூகத்தின் ஒரு தொகுதி வாழ்ந்து மறைந்திருப்பதை நாம் அறிவோம். அவ்வாறு மறைந்து போனவர்களுக்கு அவசியமற்றதா யிருந்த இவை நமக்கு அவசியமானவையாக மாறிப்போயிருக்கின்றன. இவை இல்லை என்றால் வாழ்வு முழுமை பெற்றுவிடாது என்பது போல் ஒரு பிரமை நமக்கு ஏற்பட்டு விடுகிறது. இன்று இவை எதுவும் இல்லாமல் நவீன உலகத்தில் வாழ முடியுமா என்பது ஒரு முக்கியமான கேள்வி. ஏனெனில் தொழில் நுட்பமும் நாகரிகமும் உச்ச நிலையில் இருக்கும் (இந்நிலை இன்னும் 50 வருடங்களில் பின் தங்கிய நிலையாக இருக்கும் என்பது வேறு விடயம்) இக்காலத்தில் வாழ்வதற்குப் போராட வேண்டியிருக்கிறது என்பது வலிக்கும் உண்மை. ஆனால் இந்த உச்ச நிலை உண்மைக்குண்மையாக நமக்குத் திருப்தியைத் தரக் கூடியதுதானா என்பதை விளக்கும் ஒரு சம்பவத்தை இங்கு தருகிறேன்.

ஒரு தந்தை தனது மகனுக்காக சுற்றுப் பயணம் ஒன்றை ஏற்பாடு செய்தார். செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர் கள் அவர்கள். ஏழை மக்கள் கிராமத்தில் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதை மகனுக்குக் காட்டுவது தந்தையின் நோக்கமாக இருந்தது. கிராமத்தின் மிக ஏழ்மையான விவசாயக் குடும்பம் ஒன்றைத் தெரிவு செய்து சில நாட்கள் இரவும் பகலும் தந்தையும் மகனும் அவர்களுடன் கழித்தார்கள். அச்சுற்றுலாவை முடித்துக் கொண்டு நகரத்தை நோக்கித் திரும்பும் வழியில் இந்தப் பயணம் பற்றி உனது கருத்து என்ன என்று மகனைக் கேட்டார் தந்தை. இது ஒரு சிறந்த, பெறுமதியான அனுபவம் என்று மகன் சொன்னான். ஏழை மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதைப் பார்த்தாயா? என்று அவர் மகனிடம் கேட்ட போது அவன் ஆம் என்று பதிலளித்தான். அப்படியானால் இந்தப் பயணத்திலிருந்து நீ அறிந்து கொண்ட விடயங்களை எனக்குச் சொல்ல முடியுமா? என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை கேட்க, மகன் சொல்லத் தொடங்கினான்.

'நமது வீட்டில் ஒரே ஒரு நாய் இருக்கிறது. அவர்களிடம் இருப்பதோ நான்கு. நமது சிறிய தோட்டத்தின் மத்தியில் நமது நீச்சல் தடாகம் அமைந்துள்ளது. அவர்களிடம் எங்கு சென்று முடிவுறுகிறது என்று அறிய முடியாத நீரோடை இருக்கிறது. நமது தோட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கு இரவில் நட்சத்திரங்கள் இருக்கின்றன. நமது வீட்டு முற்றம் முன்னாலுள்ள சுவருடன் முடிவடைகிறது. அவர்களது எல்லை தொடுவானுக்கு அப்பாலும் நீள்கிறது. நாம் வாழ்வதோ சிறியதோர் துண்டு நிலம். அவர்கள் வாழ்வதோ விசாலம் மிகுந்த நிலப் பரப்பு. நமக்குச் சேவை புரிவதற்காக நம்மிடம் வேலைக்காரர்கள் இருக்கிறார் கள். அவர்களோ மற்றவர்களுக்குச் சேவை புரிகிறார்கள். நாம் நமது உணவை பணங் கொடுத்து வாங்குகிறோம். அவர்களுக்குரிய உணவை அவர்களே விளைவித்துக் கொள்கிறார்கள். நம்மையும் நமது பொருட் களையும் பாதுகாப்பதற்காக சுற்று மதில்கள் உள்ளன. அவர்களைப் பாதுகாப்பதற்காக நண்பர்கள் இருக்கிறார்கள்.'

தந்தை பேச்சற்று அமைதியாயிருக்க மகன் சொன்னான்:- 'அப்பா, உங்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். நாம் எவ்வளவு ஏழைகளாக இருக்கிறோம் என்பதை உணர்த்தியதற்காக!'

*10.08.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுந்தகவற் குறும்புகள்

தொலைபேசிகளில் குறுந்தகவல் அனுப்பும் முறை நவீன உலகின் தொழில்நுட்ப வினோதங்களில் ஒன்றாகும். கைத்தொலை பேசியில் அறிமுகமான இந்த வசதி கடிதங்களின் அவசியத்தை மேலும் குறைத்து விட்டது. தவிர, சாதாரணர் ஒருவரையும் ஆங்கிலத்தில் நான்கு வார்த்தைகளைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பையும் வழங்கி யிருக்கிறது. ஓரளவு மொழியறிவு உள்ளவர்கள்கூடக் குறுந் தகவல் மூலம் மிகச் சுருக்கமாகத் தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். மனதைத் தொடுகின்றவை, இலக்கியத் தரம் வாய்ந்தவை, குறும்பு மிக்கவை மற்றும் அறிவைச் சோதிக்கும் வினாக்கள், என்று குறுந் தகவல்கள் இன்னும் கூர்ப்படைந்து வருவதை அவதானித்து வருகிறோம். நண்பர்களிடையே பரிமாறப்பட்டு வருகின்ற குறும்பு வசனங்கள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். இவற்றை வெறும் குறும்புகள் என்று மட்டும் பார்க்காமல் முக்கியமாக அவை வடிவமைக்கப்பட்டிருக்கும் முறையையும் சிறப்பையும் கவனிக்கக் கோருகிறேன். கலை மனம் எல்லாத் திறத்தினரிடமும் இருக்கிறது என்பதற்கு இவை சாட்சியாகின்றன.

☐ ஒரு குழந்தை, தனது கட்டை விரலைச் சூப்புவதற்குப் பயன்படுத்து கிறது. படிப்பறிவற்ற ஒருவன் கைநாட்டு இடுவதற்குப் பயன்படுத்து கிறான். ஒரு வெற்றியாளன் கட்டை விரலைத் தனது வெற்றியைப் பறைசாற்றப் பயன்படுத்துகிறான். ஒரு குரங்கு தனது கட்டை விரலை இந்தக் குறுந்தகவலைப் படிக்கப் பயன்படுத்துகிறது.

☐ ஒரு சிகரட் உனது வாழ்வை இரண்டு நிமிடங்களால் சுருக்கி விடுகிறது. மதுபானம் நான்கு நிமிடங்களால் சுருக்கி விடுகிறது. ஆனால் உனது தொழில் உனது வாழ்வைத் தினமும் எட்டு மணித்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாலங்களால் சுருக்கி விடுகிறது.

☐ பெண்களற்ற உலகத்தை ஒரு கணம் சிந்தித்துப் பார். சந்தைகளில் சத்தமிராது. பாதைகளில் அமைதி நிலவும். பொலிஸ் கைது இருக்காது. கையடக்கத் தொலைபேசி நிறுவனங்கள் நட்டமடையும். குறுந்தகவல் இல்லை. பாவங்கள் இல்லை. மலர்கள் இல்லை. காதலர்கள் இல்லை. காதல் இல்லை. பதட்டம் இல்லை. மெழுகுவர்த்தி இல்லை. வாசனைத் திரவியங்கள் இல்லை. பயணங்கள் இல்லை. எல்லா ஆண்களும் சுவர்க்கத்துக்குச் சென்று விடுவார்கள். இது எப்பிடியிருக்கு?

☐ நான் இன்று சந்தோஷ மனநிலையில் இருக்கிறேன். இன்று மாலை சந்திப்போமா? இலேசாக ஒரு முத்தம்... ஒரு செல்லக் கடி.... சீக்கிரம் பதிலனுப்பவும். இப்படிக்கு... அன்புள்ள நுளம்பு!

☐ உனக்கு உபதேசம் தேவையெனில் எனக்கு ஒரு குறுந்தகவல் அனுப்பு. நண்பர் தேவையெனில் என்னைத் தொலைபேசியில் அழை. உதவிகள் தேவையெனின் ஈமெயில் அனுப்பு. பணம் ஏதும் தேவைப் பட்டால்..... 'நீங்கள் அழைத்த இலக்கத்தை அடைய முடியவில்லை. மீண்டும் முயற்சிக்க வேண்டாம்!'

☐ நோன்பு மாத விடுமுறை சம்பந்தமான விடயங்களைக் கலந்துரை யாடுவதற்காக சாத்தான்களின் ஒன்றியம் வருடாந்தக் கூட்டத்துக்கு அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது. ஒரு சிரேஷ்ட அங்கத்தவர் என்ற வகையில் தங்களை இதில் கட்டாயம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

☐ கனவுகள், யாவற்றையும் சாத்தியமாக்குகின்றன. நம்பிக்கைகள், யாவற்றையும் நடத்தி முடிக்கின்றன. காதல், யாவற்றையும் அழகு படுத்துகிறது. முன் சொன்ன மூன்றையும் ஒரு புன்னகை பெற்றுத் தருகிறது. ஆகவே கட்டாயம் பற்களை விளக்கிக்கொள்!

☐ ஒவ்வொரு வெற்றிகரமான ஆணின் பின்னாலும் ஒரு பெண் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் வெற்றிகரமான ஓர் ஆணுக்குப் பின்னால்தான் ஒரு பெண் செல்வாள் என்ற உண்மையை யாரும் சொல்வதில்லை.

☐ மிருகக் காட்சிச் சாலையிலிருந்து மூன்று குரங்குகள் தப்பி விட்டன. அவசரச் செய்தி..... அவற்றில் ஒன்று தெரு ஓர மரத்திலும் மற்றையது ஒரு கடைக்குள்ளும் புகுந்திருக்கிறது. மூன்றாவது இந்தக் குறுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவலை வாசித்துக் கொண்டிருக்கிறது.

☐ இளம் பெண்ணின் பிரார்த்தனை:- கடவுளே... ஒரு புத்திசாலி ஆணை மணப்பதற்கு அருள் செய்க. கடவுளின் பதில்:- சாத்தியமே இல்லை. புத்திசாலி ஆண்கள் திருமணம் செய்து கொள்வதில்லை.

☐ இருள் சூழ்ந்த இரவு. சந்திரன் மிக உயரத்தில். நான் எனது காரை நிறுத்துகிறேன். ஏன் நிறுத்தினேன் என்று கொஞ்சும் குரலில் கேட்கிறாய். நான் உன்னை நெருங்குகிறேன். நீ வெட்கப்படுகிறாய். அந்த முக்கியமான மூன்று வார்த்தைகளைச் சொல்கிறேன்.... "டயர் பஞ்சராகி விட்டது!"

☐ நீ ஒரு நல்ல மனிதன். ஆனால் காலை எழுந்தவுடன் இரண்டு விடயங்களை நீ செய்ய வேண்டும். ஒன்று, நீ வாழ்வதற்காக இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். இரண்டு, மற்றவர்கள் வாழ்வதற்காக நீ குளிக்க வேண்டும்.

☐ உன்னைச் சந்திப்பதற்கு முன்னர் எனது வாழ்க்கை இருள் சூழ்ந்ததாக இருந்தது. ஆனால் இப்போது வெளிச்சமாக இருக்கிறது. ஏன் தெரியுமா... நீ ஒரு ரியூப் லைட்!

☐ கலிலியோ - கிரேட் மைண்ட். ஐன்ஸ்டைன் - ஜீனியஸ் மைண்ட். பில் கேட்ஸ் - பிரில்லியண்ட் மைண்ட். நான் - மாஸ்டர் மைண்ட். நீ - நெவர் மைண்ட்.

☐ கால நேரம் சரிவரும் போது உனது இதயத்தை ஒருவருக்குக் கொடு. அவர் உனது இதயத்தை உடைக்காதவராக இருப்பார் என்பதை உறுதிப்படுத்திக் கொள். ஏனெனில் உடைந்த இதயங்களுக்கு உதிரிப் பாகங்கள் கிடைப்பதில்லை!

17.08.2008

L.11925



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதறிச் சிதறுதல்

நண்பர்களான இரண்டு இமாம்கள் (வழிகாட்டத்தக்க அறிஞர்கள்) ஓரிடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் அரசினால் நியமிக்கப்பட்ட நீதிபதியாவார். அப்போது தனது கண்ணொன்றைப் பொத்திப் பிடித்தபடி அவ்விடத்துக்கு ஒரு குடியானவன் வேகமாக வந்து சேர்ந்தான். கை விரல்களூடாக இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நீதிபதியைப் பார்த்து ஒரு நபரின் பெயரைக் குறிப்பிட்டு அவன் தனது கண்களில் ஒன்றைக் குத்திக் குருடாக்கி விட்டதாக முறைப்பாடு செய்தான். நீதிபதி முறைப்பாடு செய்தவனை விசாரிக்கத் தொடங்கினார். விசாரணை முடிந்த பின் நீதிபதி நிமிர்ந்து உட்கார்ந்தார். தீர்ப்பை வழங்கி விடுவாரோ என்ற எண்ணத்தில் நண்பரான இமாம் நீதிபதியை சைகையால் அமைதிப் படுத்தினார். பின்னர் 'நீங்கள் இவனுடைய கண்ணைக் குத்தியவனை உங்கள் கண்களால் காணாமல் தீர்ப்பை வழங்கி விட வேண்டாம். ஏனெனில் ஒரு வேளை அவனுடைய இரண்டு கண்களையும் இவன் குருடாக்கியிருக்கவும் கூடுமல்லவா' என்று சொன்னார்.

ஒருவர் பற்றி இன்னொருவர் சொல்ல அதைக் கொண்டு ஒரு தலைப்பட்சமாகக் குற்றப் பத்திரிகை வாசிக்கும் சந்தர்ப்பங்களில் நினைவை விட்டு அகலாத இந்த இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவத்தை நான் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வது வழக்கம். ஒருவர் சம்பந்தமாக மற்றொரு நபர் சொல்லும் விதத்தை நம்பி சில வேளைகளில் அவசரமான முடிவுகளை நாம் எடுத்து விடுகிறோம். அது பின்னர் தவறான முடிவு என்பது தெரிய வரும்போது மனது குமைந்து போகிறது. உண்மைக்குண்மையான நிலைமை என்ன என்பது சிலவேளை ஒரு சில மணித்துளிகளிலோ சில நாட்களிலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களிலோ ஏன் வருடங்கள் கழித்தோதான் தெரிய வருகிறது. நிகழ்வுகளும் சம்பவங்களும் சாதரணமானவையாக அல்லது பாரதூர மானவையாக இருக்கலாம். ஆனால் நியாயம் புரியவருகிற போது மன உறுத்தல் ஆரம்பமாகி விடுகிறது. அப்போது உறுத்தும் மனச்சாட்சி யை அமைதிப்படுத்த நம்மை நாமே திட்டிக் கொள்கிறோம். நாம் பெருந்தன்மை உள்ளவர்களாக இருந்தால் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறான அனுபவம் நம்மில் அநேகமாக எல்லோ ருக்கும் ஆகக் குறைந்தது ஒரு முறையாவது நிகழ்ந்திருக்கும். (நிகழாத வர்கள் இருந்தால் கண்டு கொள்ள வேண்டாம்.) பின்வரும் சம்பவத் தைப் படியுங்கள்.

ரயில் மெதுவாக நகர ஆரம்பித்தது. ரயில் பெட்டிகள் முழுவதும் பல்வேறு வயது கொண்ட மனிதர்களால் நிறைந்து வழிந்தது. அவர்களில் அநேகர் வேலைக்குச் செல்லும் ஆண்களும் பெண்களும் பாடசாலை மற்றும் கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ மாணவிகளுமாவர். ரயிலின் யன்னலோர இருக்கைகள் கிடைப்பது மகிழ்ச்சி நிறைந்த பயணத்தை உறுதிப்படுத்தும் விடயம். அந்தப் பெட்டியின் ஒரு யன்னலோர இருக்கைகளில் வயது முதிர்ந்த தந்தை ஒருவரும் முப்பது வயது மதிக்கத் தக்க அவரது மகனும் அமர்ந்திருந் தனர். ரயில் நகரத் தொடங்கியதும் அப்பெரியவரின் மகன் யன்னலுக்கு வெளியே தெரிந்த காட்சிகளில் லயித்து உற்சாகங் கொள்ளத் தொடங் கினான். "அப்பா, வெளியே தெரியும் பச்சைப் புற்களும் மரம் செடி கொடிகளும் எவ்வளவு அழகானவையாக இருக்கின்றன என்று பாருங்கள்..." என்று சொன்னான்.

முப்பது வயது தாண்டிய மகன் அப்பாவிடம் பேசுகின்ற வார்த்தைகள் அந்த ரயில் பெட்டியில் இருந்தவர்களது கவனத்தைக் கவர்ந்தது. அவனைப் பார்த்தால் ஒன்றும் மூளை வளர்ச்சி குன்றிய வனாகத் தெரியவில்லையாதலால் சூழ இருந்தவர்கள் தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டார்கள். சிலர் உதடுகளில் ஒரு கிண்டல் சிரிப்புத் தோன்றி மறைந்தது. சற்றுத் தள்ளி மனைவியுடன் அமர்ந்திருந்த அனூப் 'இவன் லூசு மாதிரிக் கதைக்கிறான் பார்' என்று தன் மனைவியின் காதுகளுக்குள் குசுகுசுத்தான். திடீரென மழை கொட்ட ஆரம்பித்தது. திறந்திருந்த யன்னலூடாக மழைத்துளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிகளிலும் தெறித்தன. முதியவரைப் பார்த்து அவரது முப்பது வயது மகன், "அப்பா பாருங்கள்... மழை பெய்வது எவ்வளவு அழகாக இருக்கிறது..." என்று சொன்னான். அனூப்பின் மனைவியின் புதிய ஆடையில் மழைத்துளி தெறித்ததால் அவள் எரிச்சலுற்றிருந்தாள். அனூப் கோபத்துடன் அப்பெரியவரைப் பார்த்து, "உன்னுடைய மகன் சரியான உணர்வில்லாதவனாக இருந்தால் அவனை உடனடியாகப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்து விடு. இப்படிப் பொது இடங்களில் பயணிகளுக்குத் தொந்தரவு தருவது நல்லதல்ல" என்று சொன்னான்.

அப்பெரியவர் சற்றுத் தயங்கியவாறு தாழ்ந்த குரலில் பேசினார். "நாங்கள் இப்போது வைத்தியசாலையிலிருந்துதான் வருகிறோம். எனது மகனை இன்று காலைதான் அங்கிருந்து வெளியேற அனுமதித்தார்கள். அவன் சிறு வயதிலேயே பார்வை இழந்தவன். இருவாரங்களுக்கு முன்னர்தான் அவனுக்கு மீண்டும் பார்வை கிடைத்தது. மழையும் இயற்கையும் இந்த வயதில் அவனது கண்களுக்கும் உணர்வுக்கும் புதியவை.. உங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்காக மன்னித்துக் கொள்ளுங்கள்."

இந்தியாவில் நடந்ததாகத் தெரிவிக்கப்படும் இந்தச் சம்பவம் ஒரு படிப்பினையைத் தருவதாக இருந்தால் ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். இங்கு சொல்லப்பட்ட எவற்றிலும் ஏதுமில்லை என்பவர்கள் தங்கள் தங்கள் வேத நூலை எடுத்து அரை மணி நேரம் சத்தமாகப் படிக்கக் கோருகிறேன்.

24.08.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பை மேட்டுக் குடிகள்

இவ்வருடம் ஆகஸ்ட் 3ம் வாரம் மட்டக்குளிப் பிரதேசத்தி லுள்ள கொழும்பு மாநகரின் குப்பை மலை தீயினால் புகை கக்கத் துவங்கியதை ஊடகங்களின் மூலம் அறிந்திருப்பீர்கள். இதைவிடச் சற்றுப் பெரிய ஒரு குப்பைப் பிரதேசம் தாய்லாந்தின் மே சொட் என்ற ஒரு நடுத்தர நகரத்தையொட்டி அமைந்துள்ளது. மியன்மார் என்றழைக்கப்படும் பர்மாவின் எல்லையில் உள்ள தாய்லாந்து நகரம் இது. பிளாஸ்டிக் பைகள், சிதைந்த விளையாட்டுப் பொருட்கள், பற்றறிகள், தகர டப்பாக்கள், கிழிந்த பந்துகள் போன்றவற்றால் நிறைந்து வழியும் இந்தக் குப்பை மேட்டில் முந்நூற்றுக்கும் மேற்பட்ட மியன்மார் நாட்டவர்கள் எல்லை கடந்து வந்து கொட்டில்கள் அமைத்து சட்டபூர்வமற்ற முறையில் வாழ்ந்து வருகிறார்கள். இக்கொட்டில்கள் குப்பை வீடுகள் என்று செல்லமாக அழைக்கப்படு கின்றன. இந்தக் குப்பைகளை வாருவதே இக்கொட்டில்களில் வசிப்போரின் ஜீவனோபாயம். குப்பைகளிலிருந்து பொறுக்கியெடுக் கப்படும் போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், அலுமினியத் தகடுகள் ஆகியவற்றை அவர்கள் விற்றுப் பிழைப்பு நடத்துகிறார்கள். ஒரு பெரிய சாக்கு நிறைய போத்தல்களைச் சேகரித்தால் அதனை தாய்லாந்து நாணயத்தில் 30 பாத்களுக்கு விற்க முடியும். (கிட்டத்தட்ட ஓர் அமெரிக்க டொலர்) சராசரி ஒரு நாளைக்கு ஒன்று முதல் இரண்டு டொலர் வருமானம் பெறும் இவர்கள் அதனைக் கொண்டே தங்களது உணவைப் பெற்றுக் கொள்கிறார்கள். பர்மாவின் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் விசேட வைத்தியர்களின் அரச சம்பளமே தினத்துக்கு இரண்டரை அமெரிக்க டொலர்கள்தாம் என்பதும் கவனத்துக்குரியது.

பர்மாவில் எங்களுக்கு எந்தத் தொழிலும் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்மாவை விட இந்த வாழ்க்கை எவ்வளவோ மேல் என்று தனது முகத்தில் மொய்க்கும் ஈக்களைத் துரத்தியபடி இக்குப்பை மேட்டில் வசிக்கும் ஒரு பர்மியத் தாய் சொல்கிறார். ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக பல குடும்பங்கள் இந்தக் குப்பை மேட்டில் வசித்து வருகின்றன.

பர்மியர்களுக்கு இவ்வாறு துன்பப்படவேண்டிய தலைவிதியை இறைவன் வைத்திருக்கவில்லை. இரத்தினக் கற்களாலும், விலையுயர்ந்த தேக்கு மரங்களாலும், எண்ணெய் வளம் மற்றும் இயற்கை வாயுவாலும் விசாலமான விவசாய நிலப்பரப்பினாலும் ஆசீர்வதிக்கப்பட்ட நாடு பர்மா. உலகில் பயன்படுத்தப்படும் சிவப்பு நிற இரத்தினக் கற்களில் 90 வீதமானவை இங்குதான் கிடைக்கின்றன. தாய்லாந்துக்கான முப்பது சதவீத இயற்கை வாயுவை பர்மாவே வழங்குகிறது. ஏற்றுமதிக்காக தேக்கு மரங்களைச் சுமந்து கொண்டு ஊர்ந்து கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான கனரக வாகனங்களை ரங்கூன் பாதைகளில் காணமுடியும். ஆயினும் 1962ம் ஆண்டிலிருந்து அங்கு நடைபெற்றுவரும் ராணுவ ஆட்சி காரணமாக மக்கள் கண்ணீருக்குள் வாழத் தள்ளப்பட்டுள்ளார்கள். மக்கள் வெகு அபூர்வமாகவே வாய் திறக்கிறார்கள். அவசியமாயின் ஒரு வசனத்தோடு பேச்சை முடித்துக் கொண்டு உதட்டில் விரலை வைத்துக் காட்டியபடி நகர்ந்து கொண்டேயிருக்கிறார்கள். ஒரு பல்கலைக்கழக மாணவன், ‘அமெரிக்காவில் ஒருவர் ஜனாதிபதியாவதானால் ஏராளமாகப் பணச் செலவு செய்ய வேண்டியிருக்கும். இங்கு கம்பீரமான தோற்றமுள்ள ஒருவருக்கு ஒரு துப்பாக்கி இருந்தால் போதுமானது. அதன் பிறகு பணம் தன்னால் வரும்.' என்று அக்கம் பக்கம் பார்த்துச் சொல்லி விட்டு மறைந்து விடுகிறான். நோய்களால் அங்கு தினமும் ஐந்து வயதுக்குட்பட்ட 360 சிறார்கள் இறப்பதாக ‘சேவ் த சில்ட்ரன்’ அமைப்பின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய நாடுகளின் புள்ளி விபரங்களின் படி ஐவரில் ஒருவர் நாற்பது வயதைத் தாண்டி வாழ முடியாத நிலையில் உள்ளார். சராசரி மூன்று சிறுவர்களில் ஒருவர் எடை குறைந்த நிலையில் காணப்படுகிறார்.

அண்ணன் எப்போது போவான்; திண்ணை என்று காலியாகும் என்று மனச்சாட்சியுள்ள மனிதர்களின் உலகு அமெரிக்காவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொண்டிருக்க. பர்மியர்களோ ஜோர்ஜ் புஷ் ஒரு முறை நாட்டுக்குள் படை அனுப்பமாட்டாரா என்று ஏங்குவது தெரிகிறது. இராணுவ அரசை இல்லாமலாக்க அவரால் மட்டுமே முடியும் என்று அங்கு பலர் எதிர்பார்க்கிறார்கள். எண்ணெய் வளம் உள்ள நாடாக இருந்தும் பர்மாவுக்குள் அண்ணாச்சி கைபோடாமல் இருப்பதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கும்.

குப்பை மேட்டுச் சிறார்களுக்கு விளையாட்டுப் பொருட்களும் உணவும் பகிர்ந்தளித்துக் கொண்டிருநத - பர்மாவில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்குப் பிறகு தப்பி வந்திருந்த ஒரு பிக்குவிடம் பர்மாவின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று கேட்கப்பட்ட போது அந்தக் குப்பை மேட்டு வெளியிலும் நாலாபுறமும் பார்த்துவிட்டுச் சொல்கிறார்:- "ஏழை தொடர்ந்தும் ஏழையாக இருப்பதில்லை. பணக்காரனும் தொடர்ந்து பணக்காரனாய் இருப்பதில்லை."

பல முறை பர்மாவுக்குச் செல்வதற்கு வீசாவுக்கு முயன்றும் கிடைக்காததால் ஒரு வியாபாரி போல் தனது ஆவணங்களை மாற்றிக் கொண்டு பர்மாவுக்குள் நுழைந்த பத்திரிகையாளர் ஜாக்கொப் பேன்ஹம் எழுதிய பயணக் குறிப்பின் உதவி கொண்டு இதை எழுதியிருக்கிறேன். ஒரு கட்டத்தில் பர்மாவின் கிராமப்புறமொன்றுக்குச் சென்றிருந்த அவரைப் பொலீஸ் அள்ளிக் கொண்டு வந்து கமராவில் அவர் எடுத்திருந்த அத்தனை புகைப்படங்களையும் கணனியில் பிரதி செய்து கொண்டதாம். அவர் அமர வைக்கப்பட்ட கட்டடச் சுவரில் நாட்டின் தலைவரான இராணுவ ஜெனரலின் படத்துடன் அவரது வார்த்தைகள் பின்வருமாறு ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருந்தனவாம்.

"All Respect, All Suspect."

*31.08.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசனும் செம்படவனும்

நீண்ட காலங்களுக்கு முன்னர் ஓர் ஏழை மீனவன் தனது மனைவி குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தான். அவனிடமிருந்த வலையைக் கொண்டு கடலில் மீன் பிடித்துத் தனதும் தனது குடும்பத்தினதும் ஜீவனோபாயத்தை அவன் நடத்திக் கொண்டிருந்தான். ஒரு நாள் அதிகாலை மீன் பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்றான். அன்று பிற்பகல் வரை அவனது வலையில் மீன்கள் எதுவும் சிக்கவில்லை. கவலையுடன் கடைசியாக ஒரு முறை முயன்று பார்த்தான். அந்த வீச்சில் ஏராளமான சிறிய மீன்களும் அவன் அதுவரை கண்டிராத அளவு ஒரு பெரிய மீனும் சிக்கின. அவற்றை அவன் வீட்டுக்குக் கொண்டு வந்த போது மீனவனின் மனைவி ஆச்சரியப் பட்டாள். சிறிய மீன்களைத் தமது உணவுக்கு எடுத்துக் கொண்டு பெரிய மீனை அரசனுக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு விரும்புவதாக அவன் மனைவியிடம் சொன்னான். அவனது மனைவியும் அவனது விருப்பத்தை ஏற்றுக் கொண்டாள். மீனவன் பெரிய மீனைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு அரச மாளிகைக்குச் சென்றான். காவலர்களின் அனுமதி பெற்று அரசன் முன் நின்று, "மாட்சிமை தங்கிய அரசே, இன்று எனது வாழ்விலே கண்டிராத அளவு பெரிய மீன் ஒன்று என் வலையில் சிக்கியது. அதை எனதும் எனது மனைவி குழந்தைகள் சார்பிலும் தங்களுக்கு அன்பளிப்பாகத் தருவதற்கு எடுத்து வந்துள்ளேன்" என்று சொன்னான். அரசன் முதலில் மீனைப் பார்த்தான். பின்னர் மீனவனைப் பார்த்தான். மீனவன் மீது அரசனுக்கு இரக்கம் உண்டாயிற்று. அன்பளிப்பை ஏற்றுக் கொண்டு தனது அன்பளிப்பாக நூறு தீனார்களை மீனவனுக்கு வழங்கினான்.

ஆனால் நூறு தீனார்களை வழங்கிய அரசரின் செயலை அரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பவில்லை. பணத்தை மீளப் பெற்றுப் பத்து தீனார்களை மட்டும் கொடுக்குமாறு அரசரைக் குடைந்தாள். அரசரால் வழங்கப்பட்டதை மீளப் பெறுவது கண்ணியத்துக்கு இழுக்கானது என்றும் மக்கள் இதை தவறாகக் கதைப்பார்கள் என்றும் அரசன் அரசிக்குச் சொன்னான். அரசி விடவில்லை. அவ்வாறாயின் மீனவனை அழைத்து இது ஆண் மீனா அல்லது பெண் மீனா என்று கேட்கும்படி வற்புறுத்தினாள். ஆண் என்று அவன் பதிலளித்தால் தனக்குப் பெண் மீனே தேவை என்றும் பெண் என்று பதிலளித்தால் ஆண் மீனே தேவை என்றும் சொல்லிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சொன்னாள். மீனவன் அழைக்கப்பட்டு அரசி சொன்னவாறு வினாத் தொடுக்கப்பட்டது.

ஏதோ ஒரு சூழ்ச்சி நடப்பதைப் புரிந்து கொண்ட மீனவன் இம்மீன் ஆணா அல்லது பெண்ணா என்று தனக்குத் தெரியாது என்று சொன்னான். அவனது புத்திசாதுரியமான பதிலை மெச்சி அரசன் மேலும் நூறு தீனார்களை மீனவனுக்கு அன்பளிப்பாக வழங்கினான். கிடைத்தவரை லாபம் என்று கருதியபடி மீனவன் மாளிகையை விட்டு வேகமாகத் திரும்புகையில் அவனது கையில் இருந்த இருநூறு தீனார் பணத்தில் ஒரு தீனார் நாணயம் கீழே விழுந்தது. அதை அவன் அவசரமாப் பொறுக்கியதை அரசி அவதானித்து விட்டு அரசரிடம் "பாருங்கள் கீழே விழுந்த ஒரு தீனாரைக் கூட விட்டு வைக்காமல் எடுத்துக் கொண்டான். அவனை அழைத்து அந்த ஒரு தீனாரை இங்கிருக்கும் வேலைக்காரர்கள் எடுத்துக் கொள்ள விடாதது ஏன் என்று கேளுங்கள்" என்று நச்சரித்தாள்.

அரசர் மீண்டும் மீனவனை அழைத்து ஏன் அவ்வாறு செய்தாய் என்று கேட்டார். "மாட்சிமை பொருந்திய அரசரே... எனது கஞ்சத்தனத்தினாலோ பேராசையினாலோ அதனை நான் எடுத்துக் கொள்ளவில்லை. தாங்கள் பெரு மனது கொண்டு கொடுத்த அன்பளிப்பை மாளிகையில் விட்டுச் செல்வது தங்களை அவமானப் படுத்தியதாகி விடும் என்றுதான் எடுத்துக் கொண்டேன்" என்று பதில் சொன்னான். அவனது பதிலைக் கேட்டு மகிழ்ந்த அரசன் மேலும் நூறு தீனார்களை அன்பளிப்பாக வழங்கி அவனை வழியனுப்பினான்.

ஜெரூஸலத்தில் 1987ல் அரபுக் கற்கைகள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பலஸ்தீனத்தின் பிரபலமான வாய்வழிக் கதைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று இது. இதில் வரும் மீனவன் என்னை மிகவும் கவர்ந்திருக்கிறான். அதற்குக் காரணம் தனக்குக் கிடைத்த அன்பளிப்புப் பொருளை இழந்து விடாதிருக்க அவன் அளித்த புத்திசாதுரியமான பதில்கள்தாம். இக்கதையில் அவதானிக்க வேண்டிய மற்றொரு அம்சம் சிக்கல் படுத்தும் அரசியை அரசன் கையாளும் விதம். இவை இரண்டுக்கு மாகவே இக்கதையை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினேன். இக்கதை பெண்களை அவமதிக்கிறது என்று கருதுவோர் பின்வரும் பந்தியைப் படித்து இன்புறலாம்.

திருமணம் செய்து கொள்ளாத தனது மாமியிடம் ஒரு சிறுவன் நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை என்று கேட்டான். அதற்கு அப் பெண் நான் ஒரு கிளியையும் ஒரு நாயையும் ஒரு பூனையையும் வளர்க்கிறேன் என்று சொன்னாள். திருமணத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று சிறுவன் மீண்டும் கேட்டான். இவை மூன்றும் ஆண்களின் வேலைகளைத்தான் செய்கின்றன. கிளி ஆண்க ளைப் போல அவ்வப்போது ஆணையிடுகிறது. நாய் அவ்வப்போது ஓய்வின்றிக் குரைக்கிறது. பூனை கால நேரம் பார்க்காமல் ஊர் சுற்றித் திரிகிறது என்று பதில் சொன்னாள்.

இப்பெண்மணி சொல்வது பற்றி மேலதிக விபரங்கள் யாருக்காவது தேவை எனில் நாய்கள், பூனைகள் பற்றித் தேடல் செய்வோரிடம் கேட்டால் சொல்லுவார்கள்!

07.09.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திர மருத்துவம்

பெட்டீஸ் சைசில் கைத்தொலைபேசி என்ற ஒன்று கண்டு பிடிக்கப்படும்; அதில் எந்த நாட்டிலிருந்தும் யாருடனும் பேசிக் கொள்ளலாம் என்று இருபது வருடங்களுக்கு முன்னர் எவனாவது நமது நாட்டில் சொல்லியிருந்தால் அவனைக் கல்லால் அடித்துக் கொன்றிருப்போமோ இல்லையோ சொல்லால் அடித்துச் சாகவைத்தி ருப்போம். மாட்டுக்கு நலமடிக்கும் விஞ்ஞானத்தோடு மட்டுப் பட்டிருந்த நமக்கு இரத்தத்தில் இருக்கும் சீனியின் அளவை ஒரே ஒரு இரத்தத் துளியிட்டு உடனடியாக அறிந்து கொள்ள வந்ததே பெரும் ஆச்சரியமாகிப் போய் விட்டது. நமது வாழ்நாளிலேயே ஒரு கணம் கூடக் கற்பனை செய்து பார்க்காத பல அம்சங்களை மிகச் சாதாரண மாக இன்று நாம் பயன்படுத்தி வருகிறோம்.

கடந்த கால நமது கற்பனைக் கதைகளில் யாருடையவாவது ஊத்தைச் சிறுவாலும் உமலும் போடியாரும் புல் கொத்தும் சிறுவனு மாக வந்து போகிறார்கள். இன்றைய கதைகள் ஒப்பாரியும் புலம்பலு மாய் ஓடிக் கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் கதைகள் இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. ஆதர் சி. கிளாரக் போன்ற சர்வதேச விஞ்ஞானப் புனைகதை எழுத்தாளர் வாழ்ந்த நாட்டில் ஒரு முசுப் பாத்திக்காவது எதிர்காலத் தொழில் நுட்ப உலகம் பற்றிய ஒரு சிறு கற்பனையை நாம் முயன்று பார்க்கவில்லை என்று தோன்றுகிறது. மேல் நாடுகளில் அடையப் பெற்றிருக்கும் தொழில் நுட்ப வளங்களை வைத்து நகைச்சுவையாகக் கூட பல்லாயிரம் கற்பனைகள் பின்னப் பட்டுக் கொண்டிருக்க தமிழ்ப் பத்திரிகை, சஞ்சிகைகளில் ஆசிரியர் - மாணவர், ஆபீஸ் அதிகாரி - எழுத்தர், பொலீஸார் - கைதி என்ற பத்தாம் பழசு ஜோக்குகளே வந்து கொண்டிருக்கின்றன. மேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுத் தொழில் நுட்பங்களை அனுபவித்துக் கொண்டு வாழும் நமது கற்பனைகள் இன்னும் நமது கிணற்றுச் சுவர்களைத் தாண்டவில்லை. (என் வாசிப்புக்கு எட்டியவரை)

ஜப்பானில் வீதியில் உள்ள இயந்திரத்தில் பணத்தைப் போட்டு விட்டு ஒட்சிசனைச் சுவாசிக்க முடியும். சில நாடுகளில் உள்ள உடற் பாரம் கணிக்கும் இயந்திரங்களில் நாணயத்தைப் போட்டு விட்டு ஏறி நின்றால் பாரத்தையும் கணித்துக் காட்டி ஒரு பொருத்தமான வாசகத்தையும் எழுத்தில் தரும். மேலும் சிலவற்றில் தமாஷான முன்னறிவிப்புக்கள் கூடத் தரப்படுகின்றன. இலங்கையில் கூட நாணயத்தைச் செலுத்தி ஆணுறை பெறும் இயந்திரத்தை சில காலங் களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தியிருந்தனர். விசேட வைத்தியர்களி டம் சென்றால் இரத்தம், சிறுநீர்ப் பரிசோதனைகளைச் செய்து அறிக்கைகளைப் பார்த்து விட்டே மருந்து எழுதித் தருகிறார்கள். சரியான நோயைக் கண்டு பிடித்து உரிய மருத்துவத்தை வழங்குவதற்கு இப்பரிசோதனைகள் அவசியமாகின்றன. இதை அடிப்படையாக வைத்துப் பின்னப்பட்ட கதை இது:-

தனது முழங்கை நோவு எடுப்பதாக ஜான் தன் நண்பரிடம் சொன்ன போது மருந்துக் கடையில் புதிய கம்பியூட்டர் இயந்திரம் ஒன்று வந்திருப்பதாகவும் அது உடனடியாக நோயைக் கண்டு பிடிக்கிறது என்றும் டாக்டரிடம் போவதை விட இலாபம் என்றும் சொன்ன நண்பன், உனது சிறு நீரை அந்த இயந்திரத்தில் உள்ள குழாயில் இட்டு 10 டொலர்களைச் செலுத்தினால் உனது பிரச்சினை என்னவென்று இயந்திரம் சொல்லிவிடும் என்றான். ஜான் தனது நண்பன் சொன்னவாறு செய்தான். பணத்தைச் செலுத்தியதும் இயந் திரத்திலிருந்து விசித்திரமான சத்தம் வந்தது. சில வர்ண ஒளிச் சமிக்ஞைகள் தெரிந்தன. ஐந்து செக்கன் இடைவெளிக்குப் பிறகு ஒரு கடதாசிச் சிட்டையை வெளியே துப்பியது. அதில் "உனக்கு முழங்கை வீக்கம் உள்ளது. இளஞ்சூட்டு நீரில் தினமும் இரண்டு முறை முழங் கையை கால் மணி நேரம் வைத்திருக்கவும். பாரமான எதையும் தூக்க வேண்டாம். இரு வாரங்களில் குணங் காணும்" என்றிருந்தது.

அன்று மாலை ஜான் இந்த இயந்திரம் பற்றிச் சிந்தித்தான். இவ்வியந்திரம் மருத்துவத்துறைக்கே ஒரு புரட்சியாக அமைந்திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறதே என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் போது இது ஒரு ஏமாற்று வித்தையாக இருக்குமோ என்று ஒரு சந்தேகம் வந்தது அவனுக்கு. இயந்திரத்தை ஒரு முறை பரிசோதித்து விடத் தீர்மானித்தான். தனது வீட்டுக் குழாய் நீர், தனது நாயின் மலம், தனது மகள் மற்றும் மனைவி ஆகியோரின் சிறு நீர், தனது வெண்ணீர் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்தான். மருந்துக் கடைக்குச் சென்று கலவையை இயந்திரத்தில் ஊற்றிவிட்டு 10 டொலர்களைச் செலுத்தினான். முன்னர் போலவே இயந்திரம் செயல்பட்டுச் சிட்டையைத் துப்பியது. அதில் பின்வரு மாறு குறிப்பிடப்பட்டிருந்தது:-

"உனது குழாய் நீர் அடர்த்தி மிக்கது; ஐதாக்கிக் கொள்ளவும். உனது நாயின் வயிற்றில் புழுக்கள் உள்ளன; விட்டமின் மாத்திரை களைக் கொடு. உனது மகள் போதை மருந்து உட்கொள்கிறாள்; புனர் வாழ்வகத்தில் சேர்த்து விடு. உனது மனைவி கர்ப்பமாகியிருக்கிறாள். இரட்டைப் பெண் குழந்தைகள். அவை இரண்டும் உன்னுடையவை அல்ல; சட்டத்தரணியிடம் ஆலோசனை கேள். முக்கியமானது:- இம்மாதிரி குரங்குச் சேட்டைகளைத் தவிர்த்துக் கொள். இல்லை யெனில் உனது முழங்கை ஒரு போதும் குணமாகாது."

சிறப்பாகச் செதுக்கப்பட்ட இச்சிறிய நகைச் சுவைக் கதை மேலை நாட்டு இணையத்தில் கிடைத்தது. தமிழ்த் திரைப்பட மொன்றைப் பார்த்து விட்டு இதை மொழிபெயர்த்து எழுதத் தொடங்கியதால் ஜோன் என்ற பெயரை ஜான் என்று எழுதும் படியாயிற்று.

ஜான் என்று எழுதியிருப்பதைப் பார்த்து விட்டு இது ஏதாவதொரு இந்தியச் சஞ்சிகையில் வந்திருக்கலாம் என்று யாரும் வேலை மினக்கெட்டுப் பழைய சஞ்சிகைகளைப் புரட்ட வேண்டாம்.

*14.09.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தத் தேகத்தைப்போல் வருத்தமில்லை

ரினிடாடும் டுபாகோவும் கரீபியன் தீவுகள்; ஒரு நாடு. ரினிடா டின் 'மெக்பீன்' என்ற கிராமத்தையண்டி, அங்கே பிறந்தவர்களைத் தவிர வேறு யாரும் செல்லாத ஒரு பண்ணைப் பகுதி உண்டு. அங்குதான் 1945ம் ஆண்டு ஏதோ ஒரு தினத்தில் அவன் பிறந்தான். அவனது பெயர் பிறப்புச் சான்றிதழில் 'சோனி' என்ற ஒற்றைச் சொல்லில் இருந்தது. காலனித்துவ அதிகாரம் அவன் 'முறை தவறிப் பிறந்த' குறிப்பையும் அதில் இட்டிருந்தது. அடிமை முறை ஒழிக்கப் பட்ட பின் ஆபிரிக்க அடிமைகளுக்குப் பதிலாக அழைத்துவரப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் வாழும் அப்பண்ணையில் அவன் 'லடூ' என அழைக்கப்படும் குடும்பத்தில் வளர்ந்தவன்.

விதவையான ரேச்சல் சிங் அவனது மனைவி. அவனை விட ஐந்து ஆண்டுகள் வயதில் மூத்தவள். அவள் அவனை ஹரல்ட் என்றே அழைப்பாள். முதற் திருமணத்தில் அவளுக்கு ஐந்து பிள்ளைகள். ரேச்சலின் முதற் கணவரும் அவளது சகோதரனும் கொலை செய்யப் பட்டவர்கள். ரேச்சல் பெற்றெடுத்த தனது இரண்டு குழந்தைகளுடன் ஹரல்ட் கனடாவுக்கு இடம்பெயர்ந்தான். ரேச்சலின் தாயார் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள அவள் பணிப்பெணாக வேலை செய்து வந்தாள். ஹரல்ட் பகலில் தற்காலிக சமையல் வேலைக்கும் டொரான்டோ பல்கலைக்கழக எரின்டேல் கல்லூரிக்கு படிக்கவும் சென்றான். இரவெல்லாம் விழித்திருந்து விடியும் வரை எழுதிக் கொண்டிருப்பான். தினமும் நான்கு மணி நேரம் மட்டும் உறங்குவதை அவன் பழக்கப்படுத்திக் கொண்டிருந்தான். போதிய வருமானமின்மையால் படிப்பதும் குடும்பத்துடன் வாழ்வதும் அவனுக்குப் பெருஞ் சுமையாக இருந்தது. அவன் வாழ்வு போராட்டமாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை நான் முதலில் சந்தித்த போது அவனைப் போல் இருவரைப் புகுத்தக் கூடியதான விலை குறைந்த கோர்ட் ஒன்றை அணிந்திருந்தான். கருஞ் சிகை, ஒல்லியாய் வடிந்த கறுப்பு முகம்; ஊடுருவி நேரே பார்க்கும் பெரிய விழிகள். அவ்வப்போது சிறு கதைகளை எழுதிக் கொண்டிருந்த அவனுக்குக் கவிதைகளின் மீது தீராக் காதல் இருந்தது. தனது கவிதைகளைத் திரட்டி வெளியீட்டு நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைத்த போது 'தெரிந்ததை மட்டும் எழுதுங்கள்' என்ற குறிப்புடன் அந்நிறுவனம் அவனிடம் அவற்றைத் திருப்பிக் கொடுத்தது. ஒரு நாள் ஆறு சிறுகதைகளுடன் என்னைச் சந்திக்க வந்தான். மற்றவை எங்கே என்று கேட்ட போது கவிதைகளுடன் அனைத்தையும் எரித்து விட்டதாகச் சொன்னான். இரண்டு பெரிய சூட்கேஸ்கள் நிறைய இருந்த அவனது கையெழுத்துப் பிரதிகள் அனைத்தும் எரிந்து முடிய பல மணி நேரங்கள் சென்றதாக ரேச்சல் சொன்னாள்.

1972ம் ஆண்டு அவனது முதல் நாவலான 'இந்தத் தேகத்தைப் போல் வருத்தமில்லை' வெளிவந்தது. கரீபியன் தீவுகளில் இந்தியர் வாழும் பிரதேசங்களில் நடக்கும் வாழ்க்கைப் போராட்டத்தை ஒரு சிறுவனின் பார்வையில் சொல்லிச் செல்லும் கதை அது. அவன் உண்மையில் ஒரு மேதாவி. இடக்கு முடக்கானதும் வீட்டுப் பொருட்களால் நிறைந்ததுமான நெருக்கடியான அறைக்குள்ளிருந்து கொண்டு பணக் கஷ்டம், படிப்பு என்பவற்றைத் தாண்டி அவன் தீவிரமாக எழுதினான். 1974ல் 'நேற்றைய நாட்கள்' என்ற இரண்டாவது நாவல் வெளியாயிற்று. ஹிந்து மதச் செயற்பாடுகளை கனடாவுக்குள் நடைமுறைப்படுத்தும் ஒருவனின் முயற்சி பற்றிய கதை அது. அவனது நாவல்களால் கவனிப்புக்கு உள்ளானானே தவிர அவனது பொருளாதாரம் மேம்படவில்லை. தனது கலைமாணிப் பட்டத்தைப் பெற்றும் கூட ஒரு நல்ல தொழிலை அவனால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அவன் பெருமைப்படத்தக்கதாக அவனது நூல்கள் பற்றி விமர்சனங்கள் வெளியாயின. ஆனால் நூல் விற்பனையில் கிடைக்கும் பணம் அவனுக்குப் போதவில்லை.

கனடாவின் 'நெஷனல் ஆர்ட் சென்டர்' அவனை ஒரு முறை அவனது எழுத்துக் குறித்துப் பேச அழைத்தது. பேச்சு முடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனத்தின் முக்கியஸ்தரான நயீம் கத்தானுடன் அவன் உரையாடிய அழகை மற்றொரு முக்கிய எழுத்தாளரான டென்னிஸ் லீ மலைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். மூன்றாம் உலகின் நாடியோட்டமாக அவனது உரையாடல் அமைந்திருந்தது. அவன் உண்மையில் படைப் பாளியாகவே பிறந்தவன் என்று சொல்வேன். ஒருநாள் அவனது அன்புக்குப் பாத்திரமான தாயாரின் உடமைகள் யாவும் சிலரால் ஏமாற்றிப் பெறப்பட்டுள்ளதாகவும் தாயார் தெருக்களில் பிச்சை எடுப்பதாகவும் ரினிடாடிலிருந்து செய்தி வந்தது. 'நான் உடனே அங்கு போக வேண்டும்' என்ற அவனை விமான நிலையத்துக்கு அழைத்துச் சென்ற போது கடந்த நாட்கள் முழுவதுமே வாழ்வதற்கான போராட் டத்தினை எதிர் கொண்ட ஆயாசத்தை அவனது முகத்தில் கண்டேன். விடைபெறும் போது என்னைப் பார்த்து, 'பீற்றர்... சில வேளை நான் திரும்பி வராமலே போய்விடுவேன்' என்று சொன்னான். 'பைத்தியம் மாதிரிப் பேசாதே. இன்னும் ஆறு வாரங்களில் நீ இங்கிருப்பாய்' என்று பதில் சொன்னேன்.

ஒரு வாரத்துக்குப் பின்னர் அதிகாலை இரண்டு முப்பதுக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அநேகமாகவும் நேரங்கெட்ட நேரத்தில் என்னை அழைப்பது அவன் மட்டுமே. அவன் திரும்பி வந்து விட்டான் போலும் என்று எண்ணிக் கொண்டே தொலைபேசியை எடுத்தால் அடுத்த முனையில் ரேச்சல்! 'பீற்றர், ரினிடாடில் ஹரல்ட் கொலை செய்யப்பட்டுள்ளார். யாரோ தலையில் அடித்துக் கொன்று கானில் தள்ளி விட்டுப் போயிருக்கிறார்கள்' என்றாள். நான் அதிர்ச்சி யில் ஒரு கணம் உறைந்து போனேன். எனக்கு அவனது முகத்தைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. ரேச்சல் இரண்டாவது முறையாக வும் விதவையாகியிருந்தாள்.

குறிப்பு: டொரன்டோ பல்கலைக்கழக ஆங்கிலப் பிரிவு (எரின்டேல் கல்லூரி) தனது முன்னாள் மாணவனும் படைப்பாளியுமான ஹரல்ட் சோனி லடுவின் ஞாகார்த்தமாக படைப்பிலக்கிய விருது ஒன்றை வழங்கி வருகிறது.

*(Peter Such ன் கட்டுரையைத் தழுவியும் கனடா ஏஷியன் ஹெரிடேஜ் தகவல்களைக் கொண்டும்)*

**21.09.2008**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுந்தகவற் கொழுந்துகள்

சில வாரங்களுக்கு முன்னர் குசும்புத்தனமான குறுந்தகவல்கள் சிலவற்றை இப்பகுதியில் தந்திருந்தேன். சிந்தைக்கு விருந்தான குறுந்தகவல்களும் உள்ளன என்று தெரிவித்து ஒரு தொகுப்பை (ஆங்கிலத்தில்) எனது ஈமெயில் முகவரிக்கு ஒரு வாசகி தந்திருந்தார். அவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு அவற்றில் சிலவற்றை இங்கு தருகிறேன்.

☐ உறங்கும் போதும் அழும் போதும் எதையாவது கற்பனை செய்யும் போதும் முத்தமிடும் போதும் எமது கண்களை ஏன் நாம் மூடிக் கொள்கிறோம்? ஏனெனில் நம்மால் காண முடியாதவையே இந்த உலகின் மிக அழகான அம்சங்களாகும்.

☐ எதாவது ஓரிடத்தை அடைவதற்கு நீ விரைவாகச் செல்லுவாயாகில் அவ்விடத்தை அடைவதில் உள்ள மகிழ்ச்சியை இழந்து விடுவாய். வாழ்க்கை என்பது ஒரு பந்தயம் அல்ல. எனவே அதை மெதுவாக அணுகு. பாடல் முடிவதற்கு முன்னர் இசையை அனுபவித்துவிட வேண்டும்.

☐ வாழ்க்கை என்பது சூரிய ஒளியினதும் மழையினதும் - கண்ணீர்த் துளியினதும் சிரிப்பினதும் - மகிழ்ச்சியினதும் வருத்தத்தினதும் கலவையாகும். சூரிய ஒளி ஊடுருவ முடியாத மேகம் கிடையாது என்பதை ஞாபகம் வைத்துக் கொள்.

☐ காதல் புன்னகையுடன் ஆரம்பிக்கிறது. முத்தத்துடன் வளர்கிறது. கண்ணீரில் முடிவடைகிறது.

☐ நீ பிறந்த போது சூழ இருந்தவர்கள் புன்னகைத்துக் கொண்டிருக்க நீ அழுது கொண்டிருந்தாய். சூழ இருப்போர் அழ, புன்னகையுடன் இறப்பதற்கான வாழ்க்கையைத்தான் நீ வாழ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ கவனக் குறைவான ஒரு சொல் ஒரு பெருஞ் சண்டையை ஏற்படுத்தி விடும். கடுமையான ஒரு சொல் வாழ்க்கையைத் தகர்த்து விடும். அன்புமிக்க ஒரு சொல் உற்சாகத்தையும் ஆசீர்வாதத்தையும் கொண்டு வரும்.

☐ வாழ்க்கை என்பது ஒரு புத்தகம். ஒவ்வொரு தினமும் ஒரு புதிய பக்கத்துக்கு ஒப்பானது. அசைபோட்டுச் சொல்லுவதற்கான சாதனை நிகழ்வுகளும் துணிகரமான செயற்பாடுகளும் கொண்ட அதிகமாக விற்பனையாகும் புத்தகமாக உங்கள் புத்தகம் அமையக் கடவது.

☐ புன்னகையானது குழந்தையால் கூடப் புரிந்து கொள்ளத்தக்க மொழியாகும். ஒரு புன்னகைக்கென்று எதுவுமே செலவாவதில்லை. ஆனால் அது ஏராளமான நன்மைகளைக் கொண்டு தருகிறது. ஒரு மின்னல் கணத்தில் அது நிகழ்ந்தாலும் அதன் நினைவுகளோ காலாதி காலம் நின்று நிலைக்கிறது. எனவே புன்னகைத்துக் கொண்டிருங்கள்.

☐ ஒரு மகிழ்ச்சிகரமான மனிதன் தன் வாழ்வில் யாவற்றையும் அதிசிறப்பானவையாகப் பெற்றிருப்பதில்லை. அவன் தன் வாழ்வில் எதிர் கொள்ளும் யாவற்றையும் சிறப்பானவையாக மாற்றியமைத்துக் கொள்வதன் மூலமே மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்கிறான்.

☐ வாழ்வின் அழகு நீ எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறாய் என்பதைப் பொறுத்ததல்ல. உன்னால் எந்தளவு மற்றவர்கள் மகிழ்ச்சியாய் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அது அமைகிறது.

☐ ஒரு மனிதனை அவனது இதயமே செல்வமுள்ளவனாக மாற்றுகிறது. அவன் எப்படிப்பட்டவன் என்பதைப் பொறுத்து அச்செல்வம் அமைகிறதேயொழிய அவனிடம் என்ன இருக்கிறது என்பதைப் பொறுத்து அல்ல.

☐ காதல் என்பது ஒரு பட்டாம்பூச்சியைப் போன்றது. நீ எந்த வேகத்தில் அதைத் துரத்துகிறாயோ அதே வேகத்தில் அது லாவகமாக நழுவிச் செல்கிறது. அதைத் தன்பாட்டில் நீ பறக்க விடுவாயாகில் அது பற்றிய குறைந்த எதிர்பார்ப்பு உள்ள வேளை உன்னிடம் மீண்டும் திரும்பி வரும்.

☐ சொற்களில் காதலை வாசிக்க முடியும். செயற்பாடுகளில் காதலை அளக்க முடியும். ஆனால் ஆழ்ந்த அமைதியிலும் காதலைக் கேட்க முடியும் என்பதை மற்றவர்கள் அறிய மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ எந்த ஒரு மனிதனாலும் பின்னோக்கிச் சென்று ஒரு புதிய ஆரம்பத்தை மேற்கொள்ள முடியாது. ஆனால் இப்போதிருந்தே ஆரம்பித்து ஒரு மகிழ்ச்சியான முடிவை எட்ட எல்லோராலும் முடியும்.

□ உனது இதயத்தில் ஒரு கனவு கருக்கொள்ளுமாக இருந்தால் அதை அழித்து விட அனுமதிக்காதே. கனவுகள்தாம் அழகிய நாளைய தினங்களை வளர்க்கும் சிறிய விதைகளாயிருக்கின்றன.

□ நீ அழுவதற்கான நூறு காரணங்களை உனது வாழ்க்கை ஏற்படுத்தலாம். ஆனால் புன்னகைப்பதற்கான ஆயிரங் காரணங்களை உன்னால் வாழ்க்கைக்கு வழங்க முடியும்.

ஆதாரமில்லையென்றால் படிக்க மாட்டோம் என்பவர்கள் இதைப் படிக்க வேண்டாம். காலம் கெட்டுக் கிடப்பதால் இவற்றை அனுப்பியிருந்த வாசகி தன்னையோ தனது ஈமெயில் முகவரியையோ வெளிப்படுத்த வேண்டாம் என்று என்னைக் கேட்டுக்கொண்டுள்ளார். அதெல்லாம் சரிவராது என்று இட்டுமங்காட்டுபவர்கள் பின்வரும் வசனத்தை வைகைப் புயல் வடிவேலு பாணியில் வாசித்துப் பார்க்கவும்.

*"என்னங்கடா இது சின்னப்பிள்ளத் தனமா இருக்கு!"*

*28.09.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயத்தை அசைக்கும் இசை

**தா**ய்மொழிக்கு அடுத்தபடியாக உங்களுக்கு விருப்பமான மொழி எதுவென நமது நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தினரிடம் கேட்டால் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் ஹிந்தி என்று பதிலளிப்பார்கள். ஹிந்தித் திரைப்படங்கள் குறிப்பாக ஹிந்திப் பாடல்கள் இன்னும் அவர்களுக்குள் ஆதிக்கம் செலுத்துவதை சற்று ஆழக் கவனித்தீர்களானால் கண்டு கொள்ள முடியும். இதற்கு சிங்கள மொழிக்கும் சமஸ்கிருத்துக்கும் இருக்கும் தொடர்பும் ஒரு காரணமாக இருக்கலாம். வட இந்திய உன்னத இசையின் ராகங்களில் ஹிந்திப் பாடல்கள் உயிர் பெறுகின்றன. ரசிகர்களுக்கேற்றவாறான படங்களின் தன்மைக்கு ஏற்ப பாடல்களை உருவாக்குவதற்குப் பொருத்தமான ராகங்களை இசையமைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். ஒரு திரைப் படத்தில் பாடல்களுக்கு மட்டுமன்றி படம் முழுவதும் இசை ஆக்கிர மிக்கிறது. 'உரையாடல் முடியும் போது இசை பேச ஆரம்பிக்கிறது' என்பது புழக்கத்தில் உள்ள ஒரு வாசகம்.

கடந்த காலங்களில் நெளஷாத் அலி, சலில் செளத்ரி, என். சிதல்கர் ராமச்சந்திரா, ஓம்பிரகாஷ் நையார், அல்லாரக்கா குறைஷி, சித்ரகுப்த், கையாம், உஷா கன்னா, சச்சின்தேவ் பேர்மன், சரஸ்வதி தேவி, எஸ்.என்.திரிபாதி, அனில் பிஸ்வாஸ், மதன் மோகன், ஜி.எஸ். கோலி, புலோ சி. ராணி, ஜெயதேவ், ஹேமந்த் குமார், ஆர்.சி. போரல், வசந்த் தேசாய், ஹன்ஸ்ராஜ் பெஹல், வினோத், ஸ்னேஹல் பாஸ்கர், கியான் தத், குலாம் ஹைதர், அவின்ஸ் வியாஸ், குலாம் மொஹமட், ரவீந்திர ஜெய்ன், மாஸ்டர் மொஹமட், சங்கர் ராவ் வியாஸ், சோனிக் ஓமி, ராகுல் தேவ் பேர்மன் ஆகியோர் தனித்தனியாகவும் ஹன்ஸ்லால் - பகட்ரம், ஷங்கர் - ஜெய்கிஷன், லக்ஷ்மிகாந்த் - பியாரேலால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாண்ஜி - ஆனந்ஜி ஆகியோர் இணைந்தும் ஹிந்திப் பாடல்களுக்கு இசையமைத்து ரசிகர்களின் இதயங்களில் அசைக்க முடியாதவாறு குடியிருந்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் தனக்கென ஒரு பாணியை வகுத்திருந்தார்கள். சிலர் குறிப்பிட்ட சில இசைக் கருவிகளை மட்டும் பயன்படுத்தியவர்கள். இவர்களுள் சிலர் சாஸ்திரீய சங்கீதத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டும் சிலர் நாட்டார் இசை கலந்தும் இசையமைத்தனர். காலம் செல்ல மேநாட்டுப் பாணியையும் சிலர் தழுவிச் செல்ல ஆரம்பித்தனர். அவர்கள் பணியாற்றிய திரைப் படத்தின் தேவைக்கேற்ப மேநாட்டு உள்நாட்டு வாத்தியக் கருவிகள் என்று பாராமல் தமக்குத் தேவையான இசையைப் பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்தினர். இதன் பயனாக ரசிகர்கள் பெரிதும் ஹிந்திப் பாடல்கள் நோக்கி ஈர்க்கப் பட்டார்கள்.

ஹிந்தி மொழியானது கவித்துவமானதும் தாள லயத்துடனுமான மொழியாகும் என்று இம்மொழி ஆர்வலர்கள் குறிப்பிடுவதுண்டு. (மொழிப்பற்றுள்ள மாற்று மொழிக்காரரும் தங்கள் தங்கள் மொழி பற்றி இப்படித்தானய்யா சொல்கிறார்கள்) ஆனால் 'உருதுவிலிருந்த அரபி, பார்சி மொழிச் சொற்களைக் களைந்தெடுத்து சமஸ்கிருதச் சொற்களைப் புகுத்திப் படித்தவர்களால் செயற்கையாக உருவாக்கப்பட்டதுதான் இன்றைய ஹிந்தி' என்கிறார் கவிக்கோ அப்துல் ரகுமான். இந்தித் திரைப்படம் என்று கூறப்பட்டாலும் திரைப்பட உரையாடல், பாடல் எல்லாம் உருது மொழியில்தான் எழுதப்படுகின்றன. ஆனால் சான்றிதழில் ஹிந்தி என்று போட்டால் தான் அனுமதிப்பார்கள் என்று சொல்லும் கவிக்கோ வடக்கே இந்துக்கள் ஹிந்தி என்று பேரில் பேசுவது உருதுதான் என்று அடித்துச் சொல்கிறார்.

அந்த நாட்களில் ஹிந்தித் திரைப்படங்களுக்கு கவித்துவமும் அழுத்தமும் கொண்ட பாடல்களை ஸாஹிர் லூதியானவி, மஜ்ரூஹ் சுல்தான்பூரி, ராஜேந்திர கிருஷ்ணன், ஷகீல் பதாயுனி, ஆனந்த் பக்ஷி, ஷைலேந்திரா, ஹஸ்ரத் ஜெய்ப்பூரி, எஸ்.எச்.பிஹாரி, பாரத் வியாஸ், டி.என்.மதூக் ஆகியோர் எழுதினார்கள். இந்தப் பாடல்களைப் பாடியவர்கள் புகழின் உச்சத்துக்குச் சென்றார்கள். இவர்களில் ஆஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ஸ்லே, மொஹமட் ராபி. மஹேந்திர கபூர் ஆகியோர் பாடும் திறமையால் மட்டுமன்றி தமது அற்புதமான உச்சரிப்பினாலும் உயர்ந்து நின்றார்கள் என்று ஹிந்தி மொழி அறிவுள்ள ரசிகர்கள் குறிப்பிடுகிறார்கள். குந்தன்லால் சஹேகல், நூர்ஜஹான், சுரையா, ஸொஹராபாய் அம்பாவலி, அஷோக் குமார், ஷம்ஸாத் பேகம், லதா மங்கேஸ்கர், மொஹமட் ராபி, கீதா தத், சுமன் கல்யாண்பூர், முகேஸ் சந்த் மதூர், தலாத் முஹம்மத், மன்னாடே, ஆஷா போன்ஸலே, சந்தியா முகர்ஜி, ஹேமந்த் குமார், சி.எச். அத்மா, கிஷோர் குமார், உஷா மங்கேஷ்கர், மகேந்திர கபூர் ஆகியோர் தமது வசீகரம் மிக்க குரலினால் 1930லிருந்து மக்களை மகிழ்வித்தவர்கள். இப்பாடகர்களில் சிலர் குறிப்பிட்ட உணர்வுகளுக்கேற்ப பாடுவதில் வல்லவர்களாக இருந்தனர். ஆஷா போன்ஸ்லே காதல் மற்றும் போதையூட்டும் பாடல் களுக்குப் பொருத்தமான குரல் இனிமை கொண்டவராகவும் முகேஷ் வேதனை வெளிப்படுத்துதல் மற்றும் மிருதுவான உணர்வுக்குரிய பாடகராகவும் முத்திரை பதித்தவர். கஸல் சக்கரவர்த்தி எனப் போற்றப் பட்ட தலாத் மொஹமட் அமைதி உணர்வுப் பாடகராகவும் கிஷோர் குமார் நகைச்சுவைப் பாடல்களுக்குப் பெயர் பெற்றவராகவும் விளங்கி னார். மொஹமட் ராபியோ அமைதியான நதியோட்டம் போல தங்கு தடையின்றி ஆண்மை மிக்க குரலாக ஒலித்தார்.

ஹிந்திப் பாடல்கள் இன்று வரை தமிழ் மற்றும் சிங்கள மொழி உட்படப் பல்வேறு மொழிகளிலும் தயாரிக்கப்படும் திரைப்படப் பாடல்களில் ஏதோ ஒரு விதத்தில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டேயிருக்கிறது. அதன் வேர்கள் வலிமையாகவும் ஆழமாகவும் இருப்பதே அதற்குக் காரணமாக இருக்க வேண்டும். பிரபலமான இசை யமைப்பாளர் நௌஷாத் அலி ஒரு முறை அமெரிக்கா சென்றிருந்த போது 'உங்களது இசைக்கும் எங்களது இசைக்குமிடையிலுமுள்ள வித்தியாசம் என்ன?' என்று ஓர் அமெரிக்கர் கேட்டார். அதற்கு அவர், 'உங்களது இசை உடலை அசைக்கும் சக்தி கொண்டது; எங்களது இசையோ இதயங்களை அசைக்கும் சக்தி கொண்டது' என்று பதில் சொல்லியிருந்தார்.

*05.10.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வராத வாப்பாவும
# வற்றாத நதிகளும்

ஓர் இலக்கியக் கலந்துரையாடலின் போது முழுச் சபையினதும் கவனத்தைக் கவர்ந்து நண்பர் அஸீஸ் நிஸாருத்தீன் ஒரு சிறுகதை குறித்துச் சிலாகித்துப் பேசிய போது எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. அக்கதை வெளி வந்த காலப் பகுதி, வெளிவந்த பத்திரிகை பற்றி அவருக்குச் சரியான தெளிவு இல்லாதிருந்த போதும் அக்கதை முழுவதையும் சபைக்கு ஒப்புவித்து ஒரு குறுந் திரைப் படத்துக்கு மிகவும் பொருத்தமான கதை என்று சொன்னதோடு அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. முதன் முதலில் அக்கதையைப் படித்த போது அது தன்னை ஸ்தம்பிக்க வைத்து விட்டது என்றும் இன்றும் அக்கதையைத் தன்னால் மறக்க முடியவில்லையென்றும் கூடச் சொன்னார். அதிர்ஷ்டவசமாக கதையின் தலைப்பும் படைப்பாளியின் பெயரும் அவருக்கு ஞாபகம் இருந்தது. என்னைப் போன்று அவருக்கு ஞாபக மறதி இல்லை என்பதற்காகவும் சக இலக்கியப் படைப்பாளியின் திறமையை இருட்டடிப்புக் குணம் இன்றிப் பகிரங்கமாகப் பாராட்டிய அவரது பண்புக்காகவும் அவருக்கு நான் வாழ்த்துக்களைச் சொல்ல வேண்டும். நான் கதையைத் தேடிப் படிக்க வேண்டும் என்று எண்ணினேன்.

கைக்கெட்டும் தூரத்தில் இருந்த படைப்பாளியுடன் தொடர்பு கொண்டு பிரதியைத் தேடிக் கண்டு பிடித்து எடுப்பதற்குள் மூன்று மாதங்கள் சென்று விட்டன. கதையின் தலைப்பு: 'வாப்பா வருவார்.' வெளிவந்த பத்திரிகை 'பாமிஸ் - மார்ச் 1988'. டெப்ளொயிட் அளவில் வெளிவந்த இந்தப் பத்திரிகை முக்கியமான சில பதிவுகளைச் செய்திருக்கிறது என்பது வரலாறு. இப்பத்திரிகையை இயக்கிவர்களுள் எம்.எம். ஸுஹைர், எம்.எச்.எம். ஷம்ஸ், அபுல் கலாம், கலைவாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலீல், ரஸீன் மாஸ்டர் ஆகியோர் முக்கியமானவர்கள். கதை பத்திரிகையின் பத்தாம் பக்கம் முழுமையாகப் பிரசுரமாகியிருந்தது.

"பொறு.. இண்டைக்கி வாப்பா வரட்டும்... ஒன்ட முதுகுத் தோல உரிச்சிக் காட்டுறன்..." என்ற தாயாரின் எச்சரிக்கையுடன் கதை ஆரம்பமாகிறது. அவ்வீட்டின் வறுமையை மறைமுகமாக எடுத்துச் சொல்லியபடி அடுத்த வசனம் வருகிறது. 'கிழிந்து போன கொப்பிகளை உடைந்து கிடந்த கதிரையில் வீசி விட்டு சட்டையைக் கழட்டும் போது உம்மா சொன்ன வார்த்தைகள் உதுமானின் காதுகளில் விழுந்தன.' ஆம்! பதினொரு வயதான உதுமான்தான் இக்கதையின் பிரதான பாத்திரம். பாடசாலையில் தன் நண்பனுடன் சண்டையிட்ட மாணவன் ஒருவனுக்கு உதுமான் தலை புடைக்குமளவு எதிர்த்தாக்குதல் நடத்தி விட்டான். செய்தி வீட்டுக்கு வந்தது. தாயார் அவனை வைதபடியே இருக்கிறாள். வாப்பா வந்தவுடன் சொல்லிக் கொடுத்து அடி வாங்கிக் கொடுப்பதாக வேறு சொல்வதால் அந்தப் பயத்தில் வாப்பாவின் வருகையை பதட்டத்துடன் எதிர்பார்த்திருக்கும் அவனது மனப்போராட்டத்தில் கதை நகர்கிறது. அந்தப் பயத்திலிருந்து தன் எண்ணத்தை மறக்க டயர் உருட்டுவதும் வேறு ஒரு இடத்தில் மாங்காய் பறிக்கப் போவதும் பாடசாலைக்குச் சென்று புறாப் பிடிக்க முயல்வதுமாக நேரத்தைக் கடத்துகிறான் உதுமான். கிழக்கு முஸ்லிம் கிராமச் சூழலில் வாழும் சிறுவன் ஒருவனின் செயற்பாடுகளோடு இணைத்துப் பின்னப்பட்டுள்ளது கதை. ஊர் ஊராக ஐஸ்பழம் விற்பதற்காக துவிச்சக்கர வண்டியில் சென்ற வாப்பா திரும்பி வரவே இல்லை. அவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டு விட்டார். வாப்பா வந்து விடுவாரோ என்ற உதுமானுடைய பயப் போராட்ட மனது வாப்பா இனி வரவே மாட்டார் என்ற நிலையில் அவர் வர வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் உருகிக் கண்ணீர் சிந்துகிறது.

இன்றைய நிலையில் பலநூறு சம்பவங்களோடு இதுவும் ஒன்றாக இருக்கலாம். ஆனால் இக்கதை படைக்கப்பட்ட காலப் பகுதியில் படிப்பவர் மனதைக் கரைக்கும் கதையாக இது அமைந்து விட்டிருக்கிறது. அதனால்தான் இருபது வருடங்கள் சென்று விட்ட போதும் நண்பர் நிஸார்தீன் போன்றவர்களின் மனதில் நின்று நிலைத்திருக்கிறது. தவிர, இக்கதையை ஒரு சிறுவனின் பார்வையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்த்திச் சென்றிருப்பதானது படைப்பாளியின் கூர்ந்த கண்ணோட்டத்தை எடுத்துச் சொல்கிறது. இன்று புதிதாக வாசிப்பவருக்கும் ஒரு மனத் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. இனப்பிரச்சினையின் பின்னணியில் முஸ்லிம் சமூகப் பாதிப்பினை எடுத்துச் சொல்லும் முதலாவது கதையாக இது இருக்கலாம் என்பது எனது கணிப்பு. இத்திகதிக்கு முன்னரான இவ்வாறான இனப் பிரச்சினையை மையப்படுத்திய கதைகளை யாராவது எழுதியிருந்தால் எழுதியவரோ அறிந்த வாசகர்களோ (தயவு செய்து பொய்ப் பெயர்களில் வாசகர் கடிதம் மூலம் தாக்குதல் நடத்த முனையாமல்) எனது கவனத்துக்குத் தர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாழைச்சேனை அமர்தான் இக்கதையின் ஆசிரியர். இவர், "விடுதலையின் நிகழ்வுகள்" என்றொரு சிறு தொகுதியை 1985ல் வெளியிட்டார். இனமுரண்பாடு எரியத் தொடங்கிய காலகட்டத்தில் அதுபற்றிப் பேசிய கவிதைகள் கொண்ட தனி நபரின் முதல் தொகுப்பாகவும் அநேகமாக இதுவே இருக்கக் கூடும். இவரது "நீ வரும் காலைப் பொழுது" கவிதைத் தொகுதி 2004ல் வெளிவந்தது.

அமர் எழுதிய கதை ஒன்றுதான்; எழுதப்படாத கதைகள் ஆயிரமாயிரம் உள்ளன. வீட்டிலிருந்து வெளியே சென்று திரும்பாத வாப்பாக்களதும் அப்பாக்களதும் பிள்ளைகளின் கண்ணீர் அன்று முதல் இன்று வரை வற்றாத நதிகளாக ஓடிக் கொண்டேயிருக்கின்றன.

இதற்கு அப்பால் தந்தையரின் முகமே அறியாமல் எப்போது வருவார் என்று காத்திருக்கும் பலநூறு பிள்ளைகள் உள்ளனர் என்பதையும் நீங்கள் அறிவீர்களா?

*12.10.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது கண்

அருகிலுள்ள மாணவனை நோண்டுதல், காதை முறுக்குதல், முழங்கையால் இடித்தல், பென்சிலால் அடித்தல், தலையில் கொட்டுதல், ஆசிரியர் வராத பாட வேளைகளில் அனைவரையும் வளைத்து இருத்தி எங்காவது யாராவது சொன்ன படக் கதைகளைக் கேட்டு வந்து அரை குறையாகச் சொல்லுதல் போன்ற இன்னோரன்ன பாவங்களுக்காக அந்நாட்களில் ஆசிரியர்கள் சிலர் மாணவர்களை பிரம்பால் அடித்து வந்திருக்கிறார்கள். ஆனால் படக் கதை சொல்வதைத் தவிர மாணவர்கள் செய்த தண்டனைக்குரிய குற்றங்கள் அனைத்தையும் அவ்வாசிரியர்கள் மாணவர்களுக்குச் செய்து வந்திருக்கிறார்கள். துயரம் பாருங்கள், அதே ஆசிரியர் கரங்களில் இறைவன் பிரம்பை வைத்திருக்கும் பாக்கியத்தை வழங்கியிருந்தான். இவை தவிர முழங்காலில் நிற்பாட்டுதல், பெஞ்சில் நிற்பாட்டுதல், வெய்யிலில் நிற்பாட்டுதல், முழுப் பள்ளிக் கூடமும் பார்த்துச் சிரிக்க கட்டடத்தைச் சுற்றி ஓடும்படி விரட்டுதல் போன்ற மேலும் பல அநியாயங்களை அவர்கள் மாணவர்களுக்குச் செய்து வந்திருக்கிறார்கள். பிறக்கும் போதே கவச குண்டலங்களோடு பிறந்து வந்த புராணக் கதை நாயகர்களைப் போல சில ஆசிரியர்கள் பிறக்கும் போதே பிரம்போடு பிறந்தார்களா என்ற சந்தேகத்தை மனதில் உண்டு பண்ணியிருக்கிறார்கள். இன்றைய சினிமா வில்லன்கள் அரிவாளை வைத்து மிரட்டும் ஸ்டைலுக்குச் சற்றும் குறைவில்லாமல் சில ஆசிரியர்கள் தமது பிரம்பினைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இந்தப் பயங் காட்டல்களில் தப்பி ஏதோ மனிதர்களாக நாம் உலா வருவதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

இன்றைய மாணவர்கள் கொடுத்து வைத்தவர்கள். கையடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத் தொலைபேசியிலேயே கடலை போடுகிறார்கள். நெற் கஃபே களிலே சிநேகிதனும் சினேகிதியும் தேடுகிறார்கள். எஸ்.எம்.எஸ். மூலம் எண்ணங்களை (அது சரியோ பிழையோ) பகிர்ந்து கொள்கிறார்கள். ஆசிரியர்கள் பெற்றோரும் அறிய முடியாமல் குற்றங்களைக் கூடப் புரிந்து விடுகிறார்கள். இறைவன் வேறு ஆசிரியர்கள் கைகளிலிருந்து அங்குசத்தைக் களைந்து விட்டான். கொடுத்து வைத்தவர்கள்.

உண்மையில் நான் எழுத ஆரம்பித்தது வெள்ளைப் பிரம்பு பற்றி. பிரம்பு என்று எழுதத் தொடங்கினால் ஒரு நல்ல துவக்கம் இருக்க வேண்டாமா? அதனால்தான் மஞ்சள் பிரம்பு பற்றி முதலில் சொல்லி விட்டுப் பின்னர் வெள்ளைப் பிரம்புக்குப் போகலாம் என்று தீர்மானித்தேன். வெள்ளைப் பிரம்புக்கு ஒரு வரலாறு இருக்கிறது. ஐக்கிய ராச்சியத்தின் பிரிஸ்டல் நகரில் வாழ்ந்த புகைப்படப் பிடிப்பாளரான ஜேம்ஸ் பிக் 1921ல் ஒரு விபத்தில் பார்வை இழந்தார். அவர் தனது சூழலில் தனியே சென்று வருவதற்காகவும் மற்றவர்களுக்கு தனது நிலை புரிய வேண்டும் என்பதற்காகவும் தனது கைத்தடியில் வெள்ளை வர்ணத்தைப் பூசிக் கொண்டார். 1930 ல் பிரான்சில் பார்வை யற்ற ஒருவர் பாதையைக் கடக்கத் தடுமாறுவதை லயன்ஸ் கழக அங்கத்தவர் ஒருவர் கண்டார். பார்வையற்றவர்களுக்கு வெண்ணிறம் பூசப்பட்ட தடிகளை வழங்குவதற்கான ஒரு செயற் திட்டத்தை லயன்ஸ் கழகம் அங்கு செயற்படுத்த ஆரம்பித்தது.

அமெரிக்காவில் முதலில் இல்லினொயிஸ் மாநில நிர்வாகம் 1930ல் பார்வையற்றவர்கள் பற்றி அவதானத்தை மேற்கொண்டது. அவர்களுக்குப் பாதையில் சரியான பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியதோடு வெள்ளைப் பிரம்பு பற்றி விழிப்பு(?) உணர்வையும் ஏற்படுத்திற்று. 1964ல் அமெரிக்க காங்கிரஸ் அனுமதியுடன் வெள்ளைப் பிரம்பு பாதுகாப்பு தினம் என்று பிரதி வருடமும் ஒக்டோபர் மாதம் 15ம் திகதியைப் பிரகடனப் படுத்தினார் ஜனாதிபதி லின்டன் ஜோன்சன். இன்று வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவர்களின் அடையாளமாக ஆகிவிட்டிருக்கிறது. உலகம் முழுக்கப் பார்வையற்ற ஆயிரக் கணக்கான மனிதர்கள் வெள்ளைப் பிரம்பின் உதவியுடன் நடமாடி வருகிறார்கள். வெள்ளைப் பிரம்புகள் பற்றிய ஏற்பாடுகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. ஐக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராச்சியத்தில் பார்வைப் புலனும் கேள்விப் புலனும் அற்றவர்களது வெள்ளைப் பிரம்பில் இரண்டு சிவப்புப் பட்டைகள் இருக்குமாம். அமெரிக்காவில் மாநிலத்துக்கு மாநிலம் சட்ட ரீதியான ஏற்பாடுகளில் வித்தியாசம் இருப்பதாகக் குறிப்புகள் சொல்கின்றன. பார்வையுள்ள ஒருவர் வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றச் செயலாகச் சில இடங்களில் கருதப்படுகிறது. இல்லையெனில் வெள்ளைப் பிரம்புக்குள்ளேயே கஞ்சாவும் அபினும் கடத்தி விடுவார்கள்.

வெள்ளைப் பிரம்புகளைப் பயன்படுத்தி வந்த பார்வையற்ற வர்கள் தமது வசதிக்கு ஏற்றவாறு இன்று அதனை மாற்றியமைத் திருக்கிறார்கள். பாரமானவையாக இல்லாமலும் அதே வேளை உறுதியானவையாகவும் அவை மாற்றியமைக்கப்பட்டுள்ளன. சாத்தி வைத்து விட்டு அதைப் பயன்படுத்த நினைக்கும் போது தேடித் தடவ வேண்டி ஏற்படுவதால் வெள்ளைப் பிரம்பை மடித்து எடுத்துக் கொள்ளத் தக்கதாக வடிவமைத்திருக்கிறார்கள். 1970ம் ஆண்டுக்குப் பின்னரே இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நாம் பொதுவாக வலது குறைந்த ஒருவர் செல்வதை உன்னித்துப் பார்ப்பதில்லை. அது நமது ஆத்மா இரக்கத்திலிருந்தும் மனிதாபிமானத்திலிருந்தும் பிறழ்ந்து சுத்த சுயநலமாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளம். அடுத்த முறை வெள்ளைப் பிரம்புடன் செல்லும் ஒருவரைக் கவனியுங்கள். வைத்தி ருக்கும் பிரம்பை அவர் மடிக்கின்ற அல்லது நீட்டி விரிக்கின்ற லாவகத்தை அவதானியுங்கள்.

நம்புங்கள், அந்த அழகில் ஆய கலைகள் அறுபத்து நான்கும் தோற்றுப் போய்விடும்!

*19.10.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான விரல்கள்

நாம் வாழும் உலகம் மிகவும் வினோதமானது. வினோத மான மனிதர்கள், வினோதமான செயற்பாடுகள் என பலவற்றைப் பார்க்கவும் கேட்கவும் செய்கிறோம். அவ்வப்போது கிடைத்த உண்மையாக நடந்த வினோதமான தகவல்கள் சிலவற்றை இன்று பகிர்ந்து கொள்ளலாம். இவற்றை சின்னக் கதைகளாகவே நான் பார்க்கிறேன்.

☐ எகிப்தில் ஒரு கழுதைக்கு 24 மணி நேர சிறைத் தண்டனை தீர்ப்பாக வழங்கப்பட்டுள்ளது. நைல் நதி தீரத்தில் சோளம் திருடி யதுதான் கழுதை செய்த குற்றம். கிராம விவசாய ஆராய்ச்சிப் பயிற்சி நிலையத்துக்குரிய சோள வயலில் நீண்ட நாட்களாக சோளம் திருட்டுப் போவது பற்றி நிலையத்தின் பணிப்பாளர் முறைப்பாடு செய்திருந்தார். விசேட சோதனைப் படை நிறுத்தப்பட்டதன் மூலமே இத்திருட்டுக் கண்டுபிடிக்கப்பட்டது. அகப்பட்ட கழுதையின் வாயில் ஒரு சோள நெட்டி இருந்ததாம். கழுதைக்கு மட்டுமே ஒரு நாள் ஜெயில் தண்டனை. கழுதையின் உரிமையாளருக்கு ஒன்பது டாலர் அபராதம். ஒரு நாள் முழுக்க ஜெயிலர்கள் கழுதைக்குச் சேவகம் செய்திருப் பார்கள். நாயடித்துப் பீ சுமப்பது என்பது இதைத்தான்!

☐ வியாபார நிறுவனங்கள் நுகரவோரைக் கவரும் வண்ணம் தங்களது விளம்பரங்களில் பல்வேறு நுணுக்க யுக்திகளைக் கையாள் வது வழக்கம். வெனிசுவேலாவில் உள்ள ஒரு பியர் கம்பனி தனது விளம்பரத்தில் ஒரு வசனத்தைப் பொறித்தது. 'மனைவிக்கும் காதலிக்கு மிடையில் 30 கிலோ வித்தியாசம்' என்பது அந்த வசனம். இந்த வசனம் பெண்களை அவமானப்படுத்துகிறது என்றும் பியர் கம்பனி மன்னிப் புக் கோர வேண்டும் என்றும் அங்குள்ள பெண் உரிமை அமைப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் குரலெழுப்பின. ஒரு நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லாத வரை மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் கிடையாது என்று கம்பனிப் பேச்சாளர் பத்திரிகைகளுக்கு விளக்கம் சொன்னார். அவர் தனது கம்பனியின் முடிவைச் சொல்லி விட்டு கடைசியாகச் சொன்னார்:- "பெண்களுக்காகப் பேசும் இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் எல் லோரும் நிச்சயமாக ஆகக் குறைந்தது 30 கிலோ கூடுதல் நிறை கொண்டவர்கள்; நான் பந்தயம் கட்டுவேன்!"

☐ இந்தியாவின் பரோடா நீதிமன்றத்தின் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தான் நாஸிர். திருட்டுக் குற்றத்துக்கான விசாரணை நடந்து கொண்டிருந்தது. திடீரென கூண்டிலிருந்து பாய்ந்து வெளியேறிய நாஸிர் தனது செருப்பைக் கழட்டி நீதிபதி நோக்கி எறிந்து விட்டான். விசாரணை இழுபட்டுக் கொண்டு போவதால் விரக்தியுற்றே தான் அவ்வாறு செய்ததாக அவன் சொன்னான். இதற்கு முன்னரும் இரண்டு முறை விசாரணைகளின் போது இவ்வாறு நீதிபதிகளை நோக்கிச் செருப்பை எறிந்தவன் நாஸிர். அந்த இருமுறையும் நீதிமன்றத்தை அவமானப்படுத்திய குற்றத்துக்காக தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இம்முறை அவன் செருப்பை எறிந்தபோது தனது மேசையில் இருந்த பேப்பர் வெயிட்டைத் தூக்கி நாஸிரை நோக்கி வீசினாராம் நீதிபதி. உடனடித் தீர்ப்போ?

☐ கம்போடியாவில் 18 வருடமாக கணவன் மனைவியாக வாழ்ந்த ஒரு ஜோடி விவாகரத்துப் பெற்றுக் கொண்டு பிரிந்துவிட்டது. பயன்படுத்திய பொருட்களை இரண்டாகப் பிரித்து எடுத்துக் கொண்டார்கள். கம்போடியாவின் கிராமப்புற வீடுகள் முழுக்கவும் மரங்களினால் ஆனவை. இவர்களுக்கும் அவ்வாறு ஒரு வீடு இருந்தது. கணவர் அவ்வீட்டில் தனக்குரிய பாதியைப் பிரித்து எடுத்துக் கொண்டு சென்று விட்டார். இப்போது பாதி வீடு பரிதாபமாகத் தோற்றமளிக் கிறது. பலகை வீடாக இல்லாமல் கல்வீடாக இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் என்று இச்செய்தியை உலகுக்கு வெளிப்படுத்திய நிருபர்கள் கணவரை ஒரு வார்த்தை கேட்டுச் சொல்லியிருக்கலாம். பலருக்கும் உதவியாக இருந்திருக்கும்!

☐ டோக்கியோ பொலீஸார் 51 வயதான அகிரா ஹினோ வைக் கைது செய்தார்கள். பெண்களின் கீழ் உள்ளாடைகளைத் திருடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார் என்பது குற்றச்சாட்டு. விசாரித்ததில் தனது 18 வயதிலிருந்து சலவைத் தொழிலாளர்கள் உடை காயப்போடும் இடங்களில் இத்திருட்டைப் புரிந்து வந்திருக்கிறார். அவரது வீட்டிலிருந்து ஐநூற்றுக்கும் மேற்பட்ட உள்ளாடைகள் கண்டெடுக்கப்பட்டன. தூண்டில் மூலம் மீன் பிடிக்கும் வழக்கமுள்ள அகிரா மீன் பிடிக்கச் செல்லும்போது சில உள்ளாடைகளை பத்து அடி நீளமான தனது தூண்டில் தடியில் இழுத்துச் சுற்றிவிடுவாராம். பெண்களின் உள்ளாடைகளைக் கண்டு ஜப்பானிய மீன்கள் அதிகமாகவே வந்து மாட்டிக் கொள்ளுமாக்கும்!

☐ அவுஸ்திரேலியாவின் ஹோபார்ட் நகரில் உள்ள அதி யுயர் பாதுகாப்பு ஜெயிலில் 20 கைதிகள் ஒன்றிணைந்து ஒரு காவலரைப் பணயக் கைதியாகப் பிடித்துக் கொண்டார்கள். 24 கோரிக்கைகளை அவர்கள் விடுத்தார்கள். நிர்வாகம் பணிய மறுத்தது. 48 மணித்தியாலங்களின் பின் 15 பிட்ஸாக்களைத் தந்துவிட்டு ஆளை மீட்டுக் கொள்ளுங்கள் என்றார்கள் கைதிகள். அதை ஏற்றுக்கொண்டு காவலரை விடுவித்தது நிர்வாகம். சில வேளைகளில் ஓர் அரச அதிகாரியின் பெறுமதி சில பிட்ஸாக்களுக்குச் சமனாகி விடுகிறது!

☐ தொம்பே என்பது அவன் பெயர். சூடானின் கிராமத் தலைவர்களின் நியாயச் சபையான பஞ்சாயத்துக்கு அவனைக் கொண்டு வந்திருந்தார்கள். கிராமமே அங்கு திரண்டு நின்றது. அலிபி என்பவர் ஒரு பெட்டை ஆட்டுடன் வந்து நியாயங் கோரி நின்றார். தொம்பே தனது ஆட்டுடன் புணர்ந்ததைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டார் அலிபி. தொம்பே நஷ்டஈடாக அலிபிக்கு 15,000 தீனார்களைக் கொடுக்க வேண்டும் என்றும் அந்த ஆட்டையே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியது பஞ்சாயத்து. நல்ல காலமாக அலிபியிடம் இருந்தது யானையாக இருக்கவில்லை!

*26.10.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணியிலா மனிதனாய்த் துடித்தல்

தலைப்பைப் பார்த்ததும் பழங்காலச் செய்யுள் ஒன்றைப் பற்றி எழுதப் போகிறேன் என்று நினைப்பீர்களானால் அது தப்பு. நான் கனியைப் பற்றிப் பேசப்போகிறேன். கனி என்றால் பழம். நாகூர் கனி என்ற பழம். நாற்பத்தைந்து வருட காலம் கலை, இலக்கியத் துறையில் கனிந்த பழம். இந்தப் பழத்தைப் பாராட்டி அண்மையில் ஒரு விழா தலை நகரில் இடம்பெற்றது. கோப்பு சைஸில் மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

எஸ்.ஐ. நாகூர் கனி ஒரு பன்முக ஆளுமை. எழுத்தைச் சமூக மாற்றத்துக்கான ஆயுதமாக நேரடியாகப் பயன்படுத்தியவர். தினபதி, சிந்தாமணிக் காலம் அவரது பொற்காலமாக இருந்தது. அன்றைய தமிழ் இலக்கியத் தளத்தில் ஒரு முக்திய புள்ளியாக விளங்கியவர். சிறுகதை, நாவல், கட்டுரைகள், வானொலி, தொலைக்காட்சி, மேடை நாடகங்கள், பத்திரிகைத்துறை, சமூக சேவை என்று பல தளங்களில் மிகச் சுறுசுறுப்பாக இயங்கியவர். நான் அவரது வாசகர்களில் ஒருவன். அவர் எழுதிய ஜிலேகா - சுலைஹா கதையில் கரைந்தவன்.

எந்தக் கூட்டத்திலாவது கலந்து கொண்டு பேசவோ கவிதை படிக்கவோ நாகூர்கனி எழுந்து நின்றால் "வணங்கத் தலையும் வாழ்த்த நாவும்... என்று துவங்குவார். அந்த வசனம் 'வாழை வளாகம்' பற்றிப் பெருமை சொல்லி முடியும். தான் பிறந்த வாழைத்தோட்டத்தின் மீது அளவற்ற பாசமும் நேசமும் அவருக்குண்டு. 'குணசிங்கபுரம் என்று இன்று அழைக்கப்படும் கொழும்பு வாழைத்தோட்டம் ஒரு தமிழ்ப் பண்ணையாகத் திகழ்ந்தது என்று சொல்லும் கலைஞர் கம்பளைதாசன் இலங்கையின் முதல் தமிழ் செய்திப் பத்திரிகையான 'தினத்தபால்' (1928), 'தோழன்', 'முஸ்லிம் லங்கா', 'இனமுழக்கம்', 'இஸ்லாமிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரகை' பின்னர் 'தாரகை', 'தினபதி', 'சிந்தாமணி' இவை யாவும் வாழைத்தோட்டத்திலிருந்தே வெளிவந்தன என்கிறார். இலங்கையின் முதல் தமிழ்ச் சிறுகதைத் தொகுதியான 'ஐதர்ஷா கதைகள்" (1935) இங்கிருதே வெளிவந்தது. தவிர மேடை நாடகக் கலைஞர்களான சுஹைறுல் ஹமீட், கம்பளைதாசன், கே.ஏ. ஜவாஹர், கலைச் செல்வன், எஸ்.அழகேசன், டி.கலைதாசன், எஸ்.சிவராமன், கே.எம்.ஏ.சுபியான் போன்றவர்களும் இம்மண்ணைச் சேர்ந்தவர்களே என்று சொல்லும் கம்பளைதாசன் முத்தாய்ப்பாக இப்பண்ணையின் 'சகலகலா வாரிசு' என்று நாகூர்கனியைக் குறிப்பிடுகிறார்.

மறைந்த பத்திரிகைப் பயிலரங்கமான எஸ்.டி.சிவநாயகம் அவர்களின் குருகுலத்துச் சிஷ்யர்களின் பட்டியலில் உள்ள முதலணி யில் கனி இருக்கிறார். தன்னைப் பட்டை தீட்டி எழுத்துலகில் பிரகாசிக்க வழிகாட்டியவர் சிவநாயகம் என்று மட்டுமன்றி அதற்கு அப்பாலும் பேணப்பட்டு வந்த உறவு குறித்து என்றும் சொல்லிக் கொண்டிருப்பார். சிவநாயகத்தின் வழிகாட்டலும் அவர் ஆசிரியராக இருந்து நடத்திய பத்திரிகைகளுடன் இருந்த மிக நெருக்கமான தொடர்பும் சிவநாயகத்தின் மறைவுக்குப் பின்னர் அற்றுப் போக, நாகூர் கனியின் எழுத்து வாழ்வில் மிகப் பெரும் இடைவெளி விழுந்து விட்டதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. தமிழ்ச் செல்வன், முஸாபிர், முஸல்மான், அமுதன், இதயக்கனி, இப்னு இஸ்மாயில், நிஹார் மணாளன், சதுர்ச் செல்வன் என்ற புனைப் பெயர்களில் இவர் பல ஆக்கங்களை எழுதி வந்திருக்கிறார். ஆனால் அவரை இளைய வர்கள் செல்லமாக 'கனி காக்கா' என்று அழைக்கிறார்கள். நேரடி விமர்சனம், பொறுப்பெடுத்த பணிகளில் அதீத, தீவிர ஈடுபாடு ஆகிய அவரது பண்புகள் அவருக்கு நிறைய எதிரிகளையும் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது. இதை அவருக்குக் கிடைத்த வெற்றியாகக்கூட அவர் கருதலாம்.

நமது நாட்டின் மூத்த படைப்பாளிகள் சிலர், வளர்ந்து வருவோரைக் கவனத்தில் கொள்வதோ கண்டுகொள்வதோ கிடை யாது. அவ்வளவு ஏன், தனது காலப் பிரிவில் எழுதுவோருடன் கூட நல்லதொரு நட்பைப் பேணுவது கிடையாது. நாகூர்கனி இக்குணங் கள் எதுவுமற்றவர். மிகவும் வெளிப்படையானவர். புதிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துலகுக்கு வரும் ஒருவரது படைப்பையும் கூட வாசித்துத் தனது கருத்தை அல்லது பாராட்டைத் தெரிவிக்கும் தன்மை அவரிடம் உள்ளது. இன்றும்கூட இலக்கியம் சம்பந்தமான அல்லது பொது விடயம் சம்பந்தமான எந்த நிகழ்வுக்கு யார் அழைத்தாலும் ஆஜராகி விடுவார். அதில் தானும் ஒரு பங்கை ஏற்றுச் செயல்பட முன்னிற்பார். இந்த எளிமை மிகுந்த பண்பானது மலிவைச் சுட்டுவது அல்ல, மலர்வைச் சுட்டுவது; விசாலமான மனதைச் சுட்டுவது.

இலக்கியத்துக்கு அப்பால் அவரது மனிதாபிமானம் எப்படி யிருந்தது என்பதை விளக்குகிறது கவிஞர் அல்அஸூமத் பாராட்டு மலரில் எழுதியிருக்கும் கவிதை. 'தனியனாய் இடறித் தலையூர் வந்தேன் - கனியெனும் நாகூர்க் கனியெனைக் கண்டனன்...' என்று அக்கவிதை நகர்கிறது. அதை முழுவதும் படித்த பிறகு அல் அஸூமத் திடம் இப்படி எழுதியிருக்கிறீர்களே... என்று கேட்டேன். 'நான் கொழும்பு வந்து தவித்துக் கொண்டிருந்த போது, நாகூர் கனி எனக்குச் செய்த உதவிகளை மறக்க முடியாது. மிகச் சிரமப்பட்ட ஒரு கட்டத் தில் தனது கஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் தான் சேமித்த உண்டிய லை உடைத்து அப்படியே எனக்குத் தந்து உதவியவர் அவர். இது போல பல விடயங்கள் உள்ளன. அதனால்தான் அப்படி எழுதினேன் என்கிறார். எப்படி எழுதினார்? அந்தக் கவிதை சொல்கிறது... 'கனியிலா வாழ்வினைக் கற்பனை செயின் நான் - துணியிலா மனிதனாய்த் துடித்தலே காண்கிறேன்!'

நாகூர்க் கனியின் இலக்கியம் ஒருபுறம் இருக்கட்டும். ஓர் உண்மையான மனிதனாக அவர் வாழ்கிறார் என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரங்கள் வேண்டும்? என்னைப் பொறுத்தவரை அவருக்கு யார் என்ன பரிசு கொடுத்தாலும் அது ஒரு போதும் இந்த வார்த்தைகளை விஞ்சப்போவதில்லை!

*02.11.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம் இழந்தவர்கள்

நஜிம் ஆபித் ஹஜ்வால் ஈராக்கியர். அவரது ஒரு கை எக்ஸ்ரே படம் ஒன்றைப் பற்றிப் பிடித்திருந்தது. சில வருடங்களுக்கு முன் ஈராக்கின் அல் மன்ஸூர் பகுதியில் அழகிய வீடு ஒன்று அவருக்கிருந்தது. தவிரவும் தோல் பதனிடும் தொழிற்சாலை, கோழிப் பண்ணை, ஒரு பயிர்த் தோட்டம் என்பவற்றுக்கும் சொந்தக்காரராக இருந்தவர். அவருடன் அவரது 16 வயது மகன் நின்றிருந்தான். கூரையில் ஏறி அன்ரெனா திருப்பப் போய் தவறி விழுந்து ஏதோ ஓர் எலும்பு விலகலுக்குள்ளானவன் அவன். ஜோர்தான் வைத்தியசாலை இரண்டாயிரம் ஜோர்தான் டாலர்களை மருத்துவச் சிகிச்சைக்குக் கேட்கிறது. இத்தொகை 2800 அமெரிக்க டாலர்களுக்குச் சமனானது. ஹஜ்வால் சில மாதங்களுக்கு முன்னர்தான் தனது பி.எம்.டபிள்யூ காரை விற்றுவிட்டு வாடகைக்கு வீடு பிடித்தவர். மகனின் மருத்துவச் சிகிச்சைக்கு உதவி கோரி ஜோர்தானின் கிழக்கு அம்மானில் அமைந்துள்ள கத்தோலிக்க தர்ம நிதி ஸ்தாபனத்தில் நின்று கொண்டிருக்கிறார். 'ஈராக்கில் என்னிடம் 30 பேர் வேலை செய்தார்கள் தெரியுமா? தோல் பதனிட்டு இத்தாலிக்கும் துருக்கிக்கும் ஏற்றுமதி செய்தவன் நான். இப்போது என் நிலையைப் பாருங்கள். உதவி கோரி நின்று கொண்டிருக்கிறேன்' என்று கவலையுடன் பேசுகிறார் ஹஜ்வால். இப்போது அவர் ஜோர்தானில் வாழும் ஈராக்கிய அகதி.

ஈராக் ஆக்கிரமிக்கப்பட்டது முதல் இன்று வரை ஜோர்தானுக்கும் சிரியாவுக்கும் அகதிகளாக வந்த ஈராக்கியர் தொகை இருபது லட்சத்துக்கும் மேல் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரையும் திருப்பி அழைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை ஈராக் அரசு தற்போது மேற்கொண்டுள்ளது. திரும்பி வரும் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக்கும் பத்து லட்சம் தீனார்களைத் (840 அமெரிக்க டாலர்கள்) தருவதற்கும் இலவச போக்குவரத்தை வழங்குவதற்கும் தயாராக உள்ளது. ஆனால் திரும்பிச் செல்வது சாத்தியம் என்ற நம்பிக்கையுடைய ஓர் ஈராக்கியரைத்தானும் காண முடியாதிருப்பதாகக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. திரும்பிச் செல்வதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை என்கிறார் நாதியா அப்பாஸ் என்ற பெண்மணி. ஷியா இனத்தவரான இவரது கணவர் சுன்னி இனத்தவர். என்னால் ஷியா பிரதேசத்தில் வாழ முடியாது. ஏனெனில் எனது கணவர் கொல்லப்படுவார். சுன்னிப் பிரதேசத்திலும் வாழ முடியாது. ஏனெனில் நான் கொல்லப்படுவேன் என்கிறார்.

எகிப்தில் நடைபெறும் கல்வியியலாளர் மாநாட்டுக்குச் சென்ற பஸிம் ஸவிதான் கெய்ரோ விமான நிலையத்தில் நிறுத்தப் பட்டுக் கேள்விகளால் துளைத்தெடுக்கப்படுகிறார். 'எனக்குக் கோபம் வந்தது. நான் பக்தாத் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர். என்னிடம் அழைப்பும் நுழைவு வீசாவும் இருக்கின்றன' என்று சத்தமிட்டேன். என்னுடன் வேறு நாடுகளிலிருந்து வந்தவர்கள் எந்த விசாரணையுமின்றி அனுமதிக்கப்பட்டார்கள். எம்மைப் பாதுகாப்பதற்கு எம்மிடம் ஒரு நாடும் அரசும் இருக்கிறது என்று அவர்கள் அறிந்திருந்தால் இவ்வாறு என்னை நடத்தியிருக்க மாட்டார்கள் என்று சொல்லும் இப் பேராசிரியர் அவ்வாறு எதுவும் கிடையாது என்பதை அவர்கள் தெரிந்திருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார். ஜோர்தானில் அகதியாக வாழும் மற்றொரு ஈராக்கியரான வஹத் தீன் பழுல், சதாமின் ஆட்சியில் ஒவ்வொரு ஈராக்கியனும் பெருமையுடனிருந்தான். அவன் எங்கு சென்றாலும் அவனுக்கு எல்லோரும் மரியாதை கொடுத்தார்கள் என்று சொல்கிறார்.

நஜிம் ஹஜ்வால் ஜோர்தானிலுள்ள ஈராக் தூதரகத்தில் புதிய கடவுச்சீட்டு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்திருந்தார். பிழையான பெயரில் அவருக்குக் கடவுச் சீட்டு வழங்கப்பட்டிருக்கிறது. சதாமின் காலத்தில் எல்லாம் ஒழுங்காக இருந்தது. இப்போது பணம் இருந்தால் மட்டும் எதையும் செய்து கொள்ளலாம். ஒரு தேவைக்காகச் செல்லும் நம்மை நிறுத்தி வைக்கிறார்கள் என்றால் அதன் அர்த்தம் அவர்களுக்குப் பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுகிறது என்பதுதான் என்று சொல்லும் ஹஜ்வால் ஈராக் அரசு பச்சை வலயத்துக்குள் மட்டுமே அரசாங்கமாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்கிறார். சதாமின் காலத்தில் அவர் நாட்டின் நாலா புறங்களுக்கும் சென்று மக்களது நிலையை அவதானித்தார் என்றும் சொல்கிறார்.

மேற்குறிப்பிட்ட நாடுகளில் அகதிகளாக வாழும் ஈராக்கியருக்கு தொழில் செய்து பிழைக்கும் சட்ட அனுமதி கிடையாது. அவ்வாறு அனுமதிக்கப்படுவதானது வேற்று நாட்டவர் தமது நாட்டின் வளங்களைச் சுரண்டுவதற்கு ஒப்பானது என்று அவை கருதுகின்றன. பெரும்பாலும் ஆண்கள் தொழில் புரிவது ஆபத்து என்பதால் பெண்களும் சிறுவர்களும் சிறு சிறு தொழில்களைப் புரிந்து வருகிறார்கள். இந்நிலை கூட இக்குடும்பங்களில் உளவியல் ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகச் சொல்லும் சர்வதேச உதவி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் தங்களால் குடும்பத்தின் பசி தீர்க்க முடியாத நிலையையிட்டு ஆண்கள் தத்தளிப்பதாகக் குறிப்பிடுகிறார்.

ஒரு சமூகத்தின் தலைவனை ஒழிப்பதன் மூலமோ அதன் கலாசாரச் சின்னங்களைச் சிதைப்பதன் மூலமோ ஓர் இனத்தை அழித்து விட அல்லது பணிய வைத்துவிட முடியாது என்பதை ஈராக் இன்றும் இரத்தத்தால் எழுதி உலகத்தின் கண்களுக்குக் காண்பித்தபடி இருக்கிறது. யாரோ சிலரின் ஆதிபத்திய உணர்வுகளின் பின்னணியில் உலகம் முழுக்கவும் இடம் பெறும் சண்டைகளில் அகப்பட்டு எப்போதும் அப்பாவிகளே அல்லலுற்றும் அகதிகளாக அலைந்தும் திரிகிறார்கள்.

பேராசிரியர் பஸிம் ஸவிதான் வருத்தம் தோய்ந்த குரலில் சொல்கிறார்: "நான் எனது தேசத்தை இழந்து விட்டேன்."

*(பத்திரிகையாளர் மத்தியு ப்ரௌனின் செய்தி அறிக்கை உதவியுடன்)*

**09.11.2008**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத
# மரபுக் கவிதைகள்

ஒரு தேவை நிமித்தம் வீட்டில் இருந்த ஒரு கடதாசிப் பெட்டியைப் பிரிக்க, கிண்ணியா அமீர் அலி, சில வருடங்களுக்கு முன்னர் என்னிடம் தந்த இரண்டு பேரேடுகள் கிட்டத்தட்ட சிதைவடைந்த நிலையில் வெளியே வந்தன. 1983 முதல் 85 வரை 'சிந்தாமணி'யில் வெளிவந்த தனக்குப் பிடித்த மரபுக் கவிதைகளை யெல்லாம் வெட்டியெடுத்து அவற்றில் ஒட்டிச் சேமித்து வைத்திருந் தார் அமீர் அலி. 'குப்பையாக இருக்கிறது.. வீசி விடலாம்' என்ற என் மனைவியின் கருத்தை மறுத்துக் காரியாலயத்துக்குக் கொண்டு வந்து ஒளித்து வைத்திருந்து அண்மையில் புரட்டிப் படிக்க ஆரம்பித்தேன்.

இருபது வருடங்களுக்கு முன்னர் கவிதை இலக்கியம் மிகவும் செழிப்பாக இருந்திருக்கிறது என்பதற்கு இந்த மரபுக் கவிதைகள் சான்று பகர்கின்றன. இடக்கு முடக்காக எழுதி அனுப்பினாலும் கூட அதைச் சீர் செய்து சிறப்பான கவிதையாக மாற்றிப் பிரசுரித்து வந்தன தினபதியும் சிந்தாமணியும். கிட்டத்தட்ட ஒரு வேள்வியாகவே இப்பணியைச் செய்து வந்தார் எஸ்.டி.சிவநாயகம். இன்றும் கூட எழுதியனுப்பினால் பிரசுரிக்க நமது பத்திரிகைகள் காத்திருக்கின்றன. மரபுக் கவிதைகளை எழுதுவோரைக் காண்பதுதான் மிக அரிதாக இருக்கிறது. ஆகக் குறைந்தது இம்மரபுக் கவிஞர்களைப் பதிவு செய்து வைத்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் சிந்தாமணிக் கவிதை களுடனும் சிவநாயகத்துடனும் நெருக்கமாக இருந்தவரான கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனைத் தொடர்பு கொண்டு விசாரித்தேன். திரு. சிவநாயகத்தின் ஆலோசனையின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளை நூலுருப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொண்டதாகவும் பத்திரிகை நின்றுபோனதுடன் அம்முயற்சி கைவிடப்பட்டதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்த அவர், அவை தட்டச்சுச் செய்யப்பட்டு நூல்வடிவாகத் தன்னிடம் இருப்பதாகவும் தெரிவித்தார். அவரிடமிருந்து அதனையும் பெற்றுக் கொண்டேன். பார்த்தால் சிந்தாமணியில் மாத்திரம் மரபுக் கவிதை எழுதிய ஒரு பட்டாளமே இருந்தது.

எம்.எஸ்.சுப்ரமணியன், எம்.ஏ.செய்யத் யாஸீன், ரா.வாணி, மலைமதி சந்திரசேகரன், வி.நடராஜா, வி.எஸ். பாலா பாலச்சந்திரன், வீ.எம்.எஸ்., சம்மாந்துறை ஆ.அஸீஸ், இளங்குமரன், ப.சண்முகம், ஆர்.கிருஷாந்தன், இராணி இளையதம்பி, எம்.எல்.இஸ்மாயில், தமிழழகன், சா.மணியரசன், அகிலாசுதன், ஆர்.எஸ்.கிருஷ்ணன், ஜெயசீலன், அண்ணாதாசன், சாந்தி ராஜரட்ணம், ச.ஜெகதீஸ்வரி, இரா.மணிசேகரன், ம.பார்வதிநாதசிவம், வி.காளிதாசன், எஸ்.பி.மணி· மாறன், கி.அருளம்பலம், ஏ.இக்பால், ஸ்ரீதேவகாந்தன், வி.ரி.ரி.மலரரசி, மு.சாறு, பொ.தங்கராஜன், சோமபதி, ப.க.மயில்வாகனம், ஏ.கே.ஏ. சமது, க.வேலாயுதம், எஸ்.எல்.எம்.சாலிஹ், அன்பு முகைதீன், சிவா பத்மநாதன், முத்து வெங்கடேசன், செ.மகேந்திரன், ஆ.துரை, எச்,எம். இக்பால்கான், எம்.எம்.ஜமால்தீன், சண்முகப்பிரியா, இரா.கௌரி நாதன், கிண்ணியா அமீர்அலி, என்.கே.தயாள குணசீலன், பரிபூரணன், தங்கம், அபூசிறாஜ், ம.மு.உவைஸ், சாந்தி சேதுராமன், கண்டி எஸ்.மனோகரன், எஸ்.எம்.எஸ்.மணியம், தமிழோவியன், சிவ.சந்திர மோகன், பொன்னிவளவன், கலைநதி, சி.அழகுப்பிள்ளை, மு.வே. யோகேஸ்வரன், கே.நடராஜா, எம்.வை.எம்.லாபிர் யூஸுப், ஏ.ஜீ.எம். ஸதக்கா, செ.மகேந்திரன், சங்கர் கைலாஷ், எம்.ஐ.எல். இஸற்.ஆப்தீன், எம்.எஸ்.மஜீத், வீ.எம்.சுந்தரம், த.சித்திரவேல், இரா.குலமணி, ஏ.ஆர். ஏ.லத்தீப் ஆகியோர் அமீர் அலி சேமித்த கவிதைகளுக்குரியவர்கள்.

ஜீவா ஜீவரத்தினம், நயீம் ஷரிபுத்தீன், நீலாபாலன், எம்.வை. எம். அலி, எம்.ஸீ.எம்.ஸுபைர், சிகண்டிதாசன், சத்தார் எம்.அஸாத், அகிலா குணராஜா, என்.நஜ்முல் ஹுஸைன், அப்துல்ஹை, ஹிதாயா மஜீத், ஜின்னாஹ், இரா.செல்வராஜன், கி.குலசேகரன், ஐதுரூஸ். ஏ.ஹாஸன், எம்.எஸ்.ஏ.மஜீத், எஸ்.முத்துமீரான், ரீ.பாக்கியநாயகம், பதியதளாவ பாரூக், குறிஞ்சித் தென்னவன், கே.எம்.இக்பால், வித்துவான் க.ஞானரத்தினம், த.யுவராஜன், சடாட்சரம், தாமரைத் தீவான், எஸ்.ஐ.நாகூர்கனி, எம்.ஐ.எம்.ஜாபீர், செ.மகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் தொகுப்பில் உள்ளவர்களில் சிலர்.

குறிஞ்சிவாணன், அ.கௌரிதாசன், நிலாதமிழின்தாசன், ஏ.எம்.எம். அலி, நியாஸ்.ஏ.சமத், சோமலிங்கம், பொன்.சிவானந்தன், த.மாசிலா மணி, செ.குணரத்தினம், அஷ்ரபா நூர்தீன், எம்.எல்.எம். அன்ஸார், ரீ.எல்.ஜௌபர்கான், க.ப.லிங்கதாசன், எம்.ஐ.எம்.சுபைர், இ.அன்பழகன் ஆகியோர் மேற்சொன்ன இருவரதும் தொகுப்பில் அடங்கியுள்ளவர்கள்.

இருவரது பத்திரப்படுத்தலில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் பதிவில் வைக்கப்பட்ட பட்டியல் இது. சிலரின் பல கவிதைகளும் உள்ளன. இப்பட்டியலில் தனது பெயர் இல்லை என்றோ 'நான் மகா கவிஞன்; என் பெயரை முதலில் எழுதாமல் எப்படி இடையில் எழுதலாம்' என்றோ யாரும் சண்டைக்கு வர வேண்டாம். என் அறிவுக்கு எட்டியவரை கூட இப்பட்டியலில் இல்லாத பலர் இருக்கிறார்கள். இது தவிர தினபதி கவிதா மண்டலத்தில் கவிதை தந்தவர்களும் இருக்கிறார்கள். கடந்த கால மரபுக் கவிதைகள் பற்றி ஓர் ஆய்வு செய்வது இன்றைய தேவையாக இருக்கிறது. ஆவணக் காப்பகத்துக்குச் சென்று தினபதி, சிந்தாமணிப் பத்திரிகைகளைப் புரட்டினால் அள்ளிக் கொண்டு வரலாம்; ஆய்வும் செய்யலாம். பல்கலைக் கழக மட்டத்தில் செய்வதானால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஆனால் அந்நாளில் இப்பத்திரிகைகளில் மரபுக் கவிதை எழுதியவர்கள் இன்று பேராசிரியர்களாக இல்லாதவிடத்து இம்முயற்சியில் யாராவது ஈடுபடுவார்களா என்பதுதான் கேள்வி!

*16.11.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுகு சிறிதானாலும்...

என்னைப் போலவே நீங்களும் பி.கே. பாறக்கடவு என்ற படைப்பாளியை இதற்கு முன்னர் தெரிந்து வைத்திருக்க வாய்ப் பில்லை. ஏனெனில் அவர் மலையாள மொழி எழுத்தாளர். அம்மொழி யின் இன்றைய நவீன எழுத்தாளர்களில் உச்ச நிலையில் இருப்பவர். அவரது படைப்புக்கள் ஹிந்தி, மராத்தி, ஆங்கிலம், அறபு மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளனவேயொழிய இன்னும் தமிழில் வரவில்லை. 'மாத்யமம்' என்ற பிரபல்யம் மிக்க மலையாளப் பத்திரிகையில் சிரேஷ்ட உதவியாசிரியராகக் கடமையாற்றி வருகிறார். நாவலாசிரியர் தோப்பில் மீரான் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தபோது பாறக் கடவுவின் மலையாள மொழியிலான சிறுகதை நூலொன்றைத் தமிழில் மொழிபெயர்க்குமாறு கூறிக் கவிஞர் அல் அஸூமத் அவர்களுக்குக் கொடுத்ததை நான் கண்டேன். அதில் 92 சிறுகதைகள் இருப்பதை அவர் எனக்குக் காண்பித்தார். 'அவள் பொழிகிறாள்' என்பது இந் நூலின் தலைப்பு. அத்தனையும் சின்னச் சின்னக் கதைகள். நான் ஏற்கனவே இப்பத்தியில் 'சின்னஞ் சிறு கதைகள்' மற்றும் 'அறுசொற் கதைகள்' பற்றி எழுதியதை எனக்கு ஞாபகமூட்டின இக்கதைகள்.

பாறக்கடவுவின் எழுத்து மொழி அற்புதமான மொழி. கவிதையின் சூட்சுமமும் நளினமும் இழையோடும் மொழி. ஒரு வரியில் நூறு வரிகளைப் புரியவைக்கும் எழுத்து. வாசிக்க வாசிக்க காட்சிகளை விரித்துச் சென்று இறுதி வரியில் திகைப்பையூட்டி நிமிர வைக்கும் எழுத்து. வெறும் மூன்றே வரிகளில் ஓர் அற்புதமான கதையை கண்முன் விரித்துவிடுகிறார். எதிர்காலத்தில் மொழியானது மிகச் சொற்பமாகவே பயன்படுத்தப்படும் என்பதைக் கட்டியம் கூறுகிறது அவரது எழுத்து. இந்தக் கதைகளை அவசரப்பட்டு நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கக் கூடாது. அப்படி வாசிக்கவும் முடியாது. ஒவ்வொரு வசனத்தையும் ஒரு பந்தியாகக் கொள்ளவேண்டும். பாறக்கடவுவின் மொழியும் உணர்வும் சிதறாமல் இக்கதைகளை மொழிபெயர்த்திருக்கிறார் அல் அஸூமத். அவரிடமிருந்து நான் இப்பத்திக்காகப் பெற்றுக்கொண்டவற்றில் ஏழு கதைகளை மாத்திரம் இங்கு தருகிறேன்.

☐ தலைப்பு:- 'பெண்' - திருமணத்தின்போது பாதுகாவலர்கள் பெண்ணுக்குக் கொடுத்தது நூறு பவுண்கள். கழுத்திலும் காதிலும் அரையிலுமாக நிறைய ஆபரணங்கள். அவர்கள் ஒன்றை மறந்து போயிருந்தார்கள் - பாதசரம்! நிர்வாணமான கணுக்காலைப் பார்த்து வரன் வினவினான்:- "காலில் அணிய ஒன்றும் தரவில்லையா?" நாணத்தில் விரிந்த சிரிப்போடு அவள் சொன்னாள்:- 'இல்லை!' அவன் சொன்னான்:- 'பரவாயில்லை!' பிறகு அவன் பத்திரப்படுத்தி வைத்திருந்த பெரிய சங்கிலியிட்டு அவளைப் பிணைத்தான். பெண்ணானால் அவள் சர்வ அலங்காரியாக இருக்க வேண்டுமல்லவா?

☐ தலைப்பு:- 'அவளைப் பற்றிய கவிதை' - அவளது தலையில் இரும்புக் கம்பியால் அன்பின் தடவுதல். முடிச்சுருள்களில் இப்போது குருதி படிந்தொரு பனி நீர்ப்பூ! அவளது வாயில் சிநேகத்தின் பட்டுத் துவாலை. இருதயம் நிறைந்திருக்கும்போது சொற்களுக்குப் பஞ்சம். அவளது சொற்கள் வெளிவருவதில்லை! அவளது மனோகரமான கழுத்தில் ஆறுதலின் தாலி. ஆகாயத்திலிருந்து ஆடிக்கொண்டு அவள் பூமியில் பாவங்களைப் பார்க்கிறாள். பனி நீர்ப்பூ குறித்தும் பட்டுத் துவாலை குறித்தும் கட்டிய தாலி குறித்தும் இனி நாம் பாடலாம். இனி நான் அவளைக் குறித்துக் கவிதைகள் எழுதுவேன்!

☐ தலைப்பு:- 'தூரிகை' - காய்கறி அரிந்து கொண்டிருப்பதற்கிடையில் அடுக்களையிலிருந்து மனைவி அவனை அழைத்துச் சொன்னாள்:- 'இந்தக் கத்தியில் அடியோடு கூர்மையில்லை.' படிக்கும் அறையிலிருந்து இறங்கி வந்து அவன் தனது பேனையை அவளிடம் நல்கினான்.

☐ தலைப்பு:- 'நீதி' - முதலில் பிள்ளையின் சோற்றுப் பாத்திரத்தை நாங்கள் எடுத்தோம். சோமாலியாவில் பட்டினி. உணவு உண்ணாமலேயே உயிர் வாழ இப்போதே படிக்க வேண்டாமா? பிறகு பிள்ளையின் விளையாட்டுக்களை நாங்கள் கவர்ந்தோம். வளரும் போது இந்தக் களியாட்டங்களை ஆயுதமாக்குவார்கள் என்றார்கள் உளவியலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்! முடிவில் அவனுடைய அப்பாவையும் அம்மாவையும் நாங்கள் கொன்றோம். சொந்தக்காலில் நிற்க அவன் கற்க வேண்டாமா? பிறகு அவன் வாய்விட்டுக் கத்திய போது எங்கள் உறக்கம் கலைந்ததற்காக அவனுக்கெதிராக வழக்குத் தொடுத்தோம்!

☐ தலைப்பு:- 'வித்தைக்காரனின் சோற்றுறுண்டை' - இது மனிதனின் குடல்மாலை. மனத்தில் பாரமில்லாத முத்து மாலை. 'இவை தோண்டி யெடுக்கப்பட்ட கண்கள்- பிள்ளைகளுக்கு 'கோலி' விளையாடு வதற்காக.' 'விலா எலும்புகள் புதிய வீட்டுக்கான சாளரங்கள்!' கொலையை வினோதமாக்கிய அவனை ஆராதிப்போர் ஆச்சரியத் தோடு பார்த்திருக்க, அவன் உடைப் பைக்குள் கைவிட்டு ஒரு வெண் புறாவை வெளியிலெடுத்து ஆகாயத்தில் பறக்க விட்டான்.

☐ தலைப்பு:- 'ஆணிண் நிலை' - நீ பிறந்த போது எனக்கு எனது விலாவெலும்பு நஷ்டமாகியது. நீ நீட்டிய கனியைத் தின்ற போது எனக்குச் சொர்க்கம் நஷ்டமாகியது. ஒன்றாக வாழத் தொடங்கிய போதோ எனக்குப் பூமியும் நஷ்டமாகியது.

☐ தலைப்பு:- 'வாக்கு' - கவிதை எழுதிக் கொண்டிருப்பதற்கிடையில் பொருத்தமான ஒரு சொல்லுக்காக கவிஞன் நிறையவே சிந்தித்தான். ஒரு சொல்லுக்காக வேண்டி மௌனம் கொண்டு அவன் தவம் மேற்கொண்டான். பொருத்தமான ஒரு சொல்! பகலிரவுகள் அவனைக் கடந்து போயின. அவ்வாறாக, உறக்கம் அவனைக் கைவிட்ட ஓர் அதிகாலையில் அவன் எழுதும் தாளில் ஆகாயத்திலிருந்து ஒரு நட்சத்திரம் அடர்ந்து வீழ்ந்தது!

அல் அஸூமத் மலையாளப் பின்னணி கொண்டவர் என்பதை அறிவேன். மலையாள லிபியை வாசித்து மொழிபெயர்க்கும் வல்லமை யும் அவருக்குண்டு என நான் அறிய வந்ததானது இக்கதைகள் தருவதைப்போன்ற இன்னொரு திகைப்பை என்னில் ஏற்படுத்தியது.

23.11.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவன் வார்த்தை பொய்யா

பழங்காலத்தில் நமது புலவர்கள் அறம் பாடுவதில் வல்லமை யுள்ளவர்கள். அதாவது அவர் வாய்ச் சொல் பலிக்கும். அவர்கள் இந்த சக்தியை நல்ல விடயத்துக்கும் பயன்படுத்தினார்கள். தமக்குச் சினம் ஏற்பட்ட போது சாபமிடவும் பயன்படுத்தினார்கள். துரதிர்ஷ்ட வசமாக மற்றவர் வருத்தத்தில் சுகங்கண்டு வருதலே அதிகமானோரின் ஆசையாக இருந்ததால் சாபமிடப்பட்ட சம்பவங்கள் சற்று அதிகமாகப் பதிவாகியிருப்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. பதினேழாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியத்தின் அடையாளம் எனக் கருதப்பட்ட ஔவாதுப் புலவர் அறம்பாடுவதில் வல்லவராகயிருந்தார் என்று வாசித்திருக்கிறேன். புலவன் வாக்குப் பொய்யாது என்றும் வழங்கி வந்திருக்கிறது.

கறுப்பின மக்கள் காலங்காலமாக உதாசீனப்படுத்தப்பட்டு வந்துள்ளதை நாம் அறிவோம். அடிமைகளாக வாழ்ந்த அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டதும் சீரழிக்கப்பட்டதும் வரலாற்றுப் பக்கங்களில் காயாத கண்ணீராக இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறது. அவர்களது இலக்கியம் நிற, இன வேறுபாடுகளை எதிர்த்து மிகவும் ஆக்ரோஷமாகப் பேச ஆரம்பித்த போது உலகம் ஆச்சரியத்துடன் பார்த்தது. இந்த இலக்கியத்தை எய் மீ சீசர் என்ற கவிஞர் 'நீக்ரோவியம்' (Negritude) என்று குறிக்கிறார். கறுப்பின மக்களின் அவலங்களையும் அதற்கெதிரான கிளர்ச்சிகளையும் பிரதிபலித்தன அவர்களது இலக்கியம். அவர்களது இசை, பாடல்கள் கூட இதையே அடிநாத மாகக் கொண்டிருக்கின்றன. பல்வேறு நாடுகளிலும் வாழும் அவர்களது செழுமை மிக்க இலக்கியம் பல்வேறு மொழிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு உலகளாவிய இலக்கியப் பிரியர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடப்பட்டு வருகிறது. இலங்கையிலும் இந்தியாவிலும் தமிழில் இவர்களது இலக்கியப் படைப்புகள் கொண்டுவரப் பட்டுள்ளன.

அண்மையில் இரண்டு ஆபிரிக்கக் கவிஞர்களது கவிதை களைப் படித்தேன். 'சில நேரங்களில் ஒரு டாக்ஸி கிடைப்பது சிரமம் - நீங்கள் கறுப்பர் எனில்' என்று சொல்லும் பெஞ்சமின் ஸபானியா ஜமைக்காவில் பிறந்து பிரிட்டனில் குடியேறியவர். எண்பதுகளில் கலகக் கவிஞராகப் பிரபல்யம் பெற்றவர். 'நாங்கள் சுதந்திரம் பெறும் போது' என்ற அவரது கவிதை இப்படி அமைந்திருக்கிறது:-

கறுப்பு நகைச்சுவையால்
எங்கள் காயங்களை மூடுங்கள்
எங்கள் ஒலிம்பிக் தங்கங்களை
சொந்தம் கொண்டாடுங்கள்

.................. ........................................

உங்கள் மகுடங்களில்
எங்கள் கற்களை ஒளித்துக் கொள்ளுங்கள்
எது கைநழுவிப்போனதோ
அது மீண்டும் வரும்
காத்திருப்போம் நாங்கள்

கறுப்பின இலக்கியத்தின் சிறப்புக் குரல் என அடையாளம் பெற்றவர் லோங்ஸ்டன் ஹியூஸ். அமெரிக்காவில் கற்றவர். 'அடிமை யாக வாழ்வதை விட மேலானது சுதந்திரமானவர்களாக இறப்பது' என்று எழுதியவர். 'நீக்ரோ நதிகளைப் பற்றிப் பேசுகிறான்' என்ற அவரது முதல் கவிதையே அவரைப் பிரபல்யப்படுத்திற்று. அவரது 'நானும்' என்ற கவிதை இது:-

அமெரிக்காவே நானும் பாடுகிறேன்
நான் உனது கறுத்த சகோதரன்
நண்பர்கள் வந்த போது
அவர்கள் என்னை அடுப்பங்கரையில்
சாப்பிடச் சொன்னார்கள்

.................................. ..........................

நாளை நண்பர்கள் வரும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசையருகில் இருப்பேன்
அப்போது
'அடுப்பங்கரைக்குப் போய்ச் சாப்பிடு'
என்று சொல்ல
யாருக்கும் துணிச்சல் இருக்காது

.............................. ..............................

அமெரிக்கா என்பது நானும்தான்!

*புலவன் வார்த்தை பொய்யாது என்பது கறுப்புப் புலவனுக்கும் பொருந்தும் அல்லவா? அதை அவர்கள் பராக் ஒபாமா வடிவில் பெற்றுக் கொண்டார்கள் என்கிறேன் நான். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?*

***30.11.2008***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தைக்கு விருந்தான சம்பவங்கள்

**வாழ்**வில் ஒவ்வொருவருக்கும் பல்வேறு உணர்வுகளை ஏற்படுத்தக் கூடியவையும் மறக்க முடியாதவையுமான பல சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. அவற்றில் சில சம்பவங்கள் சுவையானவையாகவும் நல்ல அனுபவப் பதிவுகளாகவும் மனதில் தங்கி விடுகின்றன. இவ்வாறான சம்பவங்கள் சாதாரண மனிதரில் நிகழ்வதுடன் முடிந்து போகின்றன. எழுத முடிந்தவர்கள் அவரவர் தன்மைக்கேற்ப எழுதி விடுகிறார்கள். இவற்றைப் பத்திரிகைகளில் நமக்கு வாசிக்கக் கிடைக்கிறது. ஓர் எழுத்தாளன் தகுந்தவற்றை ரசித்துப் படிக்கத்தக்க சிறுகதையாக்கி விடுகிறான்.

பிரபல்யம் மிக்க 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' சஞ்சிகை பற்றி அறிவீர்கள். நாற்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் முப்பது மில்லியனுக்கும் மேற்பட்ட பிரதிகள் அச்சிடப்பட்டு உலக நாடுகள் பூராகவும் படிக்கப்படும் சஞ்சிகை. இலங்கையில் ஆசியப் பதிப்பின் இன்றைய விலை **300.00**. இந்தச் சஞ்சிகையிலும் கூட நான் மேற்சொன்ன சம்பவங்கள் வெளிவருகின்றன. எவ்வளவு பெரிய சம்பவமாக இருந்தாலும் ஆகக் கூடியது மூன்று, நான்கு வரிகளுக்குள் அதை நனவை செய்து பிரசுரிக்கிறார்கள். அதாவது சுருக்கமாக அதே நேரம் சொல்லப்படும் விடயத்தை வாசகன் புரிந்து கொள்ளத் தக்கதாக மாற்றியமைத்து விடுகிறார்கள். ஒரு கவிதையைப் போல என்று கூடச் சொல்லலாம். ஒரு வசனம் நமக்கு அச்சம்பவம் பற்றிய காட்சியைத் தோற்றுவித்து விடும். கடந்த காலங்களில் அச்சஞ்சிகை பிரசுரித்த பலநூறு சம்பவங்களில் அயிம்பதினை ('அயிம்பது' உபயம் - கவிஞர் ஏ.இக்பால் மணிவிழா மலர்) தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை உங்களுக்குத் தருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. உள்நோயாளர் வெளியேறுகையில் சக்கர நாற்காலி வழங்கப் படுதல் வைத்தியசாலை விதி. ஒரு மாணவத் தாதியாக வேலை செய்கையில் அந்த அறைக்குள் நுழைந்த போது உடையணிந்து காலடியில் பயணப் பொதியுடன் தயாராகக் கட்டிலில் அமர்ந்திருந்த வயதான மனிதர் தான் வெளியேற எனது உதவி தேவையில்லை என்று மறுத்தார். வைத்திய சாலை விதி குறித்து அவரிடம் நீண்ட நேரம் விளக்கிச் சொல்லி, ஒருவாறு சமாளித்து அவரை லிப்டில் கீழ் மாடிக்கு இறக்கிக் கொண்டிருக்கையில் அவரது மனைவி பற்றிக் கேட்டேன். 'அவள் இன்னும் மேலேதான் இருக்கிறாள், பாத்ரூமுக்குள் நின்று வைத்தியசாலை உடையை மாற்றிக் கொண்டிருக்கிறாள்' என்றார்.

- பெற்சி ஆர். டான்ஸி

02. இறைச்சி பொதி செய்வதுதான் முதலில் நான் செய்த தொழில். ஒரு நாள் வேலை முடிந்து நிலையத்தை விட்டு வெளியேறப் பிரதான வாயிலை நெருங்கும்போது எனக்குப் பின்னால் பெண்ணொருத்தி வந்ததைக் கண்டேன். வாயிற் பாதுகாப்பு ஊழியர் நின்ற அறையைக் கடக்கையில் அவளது ஆடைக்குள்ளிருந்து ஓர் இறைச்சிப் பார்சல் கீழே விழுந்தது. அதைக் கண்டு பாதுகாப்பு ஊழியர் உசாராவதற்குள் அவள் பெருங்குரலில் சத்தமிட்டாள்:- 'எவண்டா இறைச்சிப் பார்சலால் எனக்கு எறிந்தது?'

-ரொஜர் ஸ்கோன்

03. நானும் ஐம்பது வயதான எனது நண்பியும் அவளது தாயாருக்கு இணையத்தின் புதுமைகளை விளங்கப்படுத்தத் தீர்மானித்தோம். எத்தகவலைக் கேட்டாலும் பதில் சொல் லும் ஒரு இணையத் தளத்தைத் திறந்து, 'அம்மா, ஏதாவது ஒரு கேள்வியைக் கேள்' என்றாள் நண்பி. எனது கைகள் கீ போர்ட்டில் தயாராக இருந்தன. சற்று அமைதியாயிருந்த அம்மா, 'லிலியன் மாமி சுகமாயிருக்காளா?' என்றாள்.

- கத்தரின் பேர்ண்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. செய்தித்தாள் ஆசிரியர்கள் பிழை திருத்துவதில் கவன முள்ளவர்கள். நியு மெக்ஸிக்கோவின் 'த சில்வர் சிற்றி' பத்திரிகையில் வெளியான திருத்தம்:- தொழில் நுட்பக் கோளாறினால் செவ்வாய்க்கிழமை கவனக்குறைவாக விடு பட்ட 7ம் பக்கம் திங்கட் கிழமை 7ம் பக்கத்தில் இடம்பெறும். இன்றைய 5ம் பக்கம் செவ்வாய்க் கிழமை முன்பக்கத்தில் இடம் பெறும் அதே வேளை செவ்வாய்க் கிழமையின் 6ம் பக்கம் சரியான 7ம் பக்கமாகவிருக்கும்.

- றொபின் ஷெட்லர்

05. தொழிலின்றித் தவித்து ஒருவாறு இணையம் மூலமாக ஒரு தொழிலைத் தேடிக் கொண்டேன். அது கழிவு நீர் அகற்றும் சாதனத்தை இயக்கும் தொழில். இத்தொழிலுக்கு விண்ணப் பிக்கக் கோரப்பட்டிருந்த தகுதிகளில் ஒன்று:- 'விண்ணப்ப தாரி நீச்சல் தெரிந்திருக்க வேண்டும்.'

- மிச்சேல் வீமன்ஸ்

06. எனது கணவர் வெளிநாட்டில் தொழில் புரிகிறார். எமது நான்கு வயது மகள் தம்பிப் பாப்பா வேண்டும் என்று கேட்டு என்னைத் தொந்தரவு படுத்தினாள். 'அப்பா வீட்டுக்கு வரும் வரை காத்திருக்க வேண்டுமென்பது உனக்குக் கொஞ்ச மாவது புரியவில்லையா?' என்றேன். மகள் சொன்னாள்:- 'ஏன் நாம் அவரை ஆச்சரியப்படுத்தக் கூடாது?'

- கே ச்மிட்

07.12.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபாற்காரர் கதைகள்

இப்பத்தியின் வாசகர்கள் சிலர் அவ்வப்போது நகைச்சுவைக் கதைகளைத் தருமாறு கோரிக்கை விடுத்து வருகிறார்கள். வாழ்வின் இறுக்கங்களிலிருந்து தம்மை விடுவித்துச் சில கணங்களாவது மனம் விட்டுச் சிரிக்க யாருக்குத்தான் விருப்பமிராது? இங்கே நகைச்சுவை சம்பந்தமான வெவ்வேறு இணையங்களில் கிடைத்த தபாற்காரர் சம்பந்தப்பட்ட இரண்டு கதைகளைத் தருகிறேன்.

□ தபாலகத்தில் தபால்களைப் பிரித்துப் பொதியிடும் பகுதிக்குப் பொறுப்பான நபரின் மேசையில் ஒரு கடிதம் வைக்கப்பட்டது. முகவரி தெளிவற்றவை, சந்தேகத்துக்கிடமானவை ஆகியவற்றைத் தனது பார்வைக்குத் தர வேண்டும் என்று அவர் பணிப்புரை விடுத்திருந்தார். நடுங்கும் கைகளால் எழுதப்பட்ட அக்கடிதம் இறைவனுக்கு முகவரியிடப்பட்டிருந்தது. ஒரு புன்னகையுடன் அதைப் பிரித்தார் அந்த அதிகாரி. அந்தக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

'அன்புள்ள கடவுளுக்கு.... எனக்கு 83 வயதாகிறது. கிடைக்கும் சிறிய பென்சன் தொகையில் வாழ்ந்து வருகிறேன். நேற்று எனது பணப்பையை யாரோ திருடி விட்டார்கள். அதற்குள் எனது பென்சன் தொகையான இரண்டாயிரம் ரூபாய் இருந்தது. அடுத்த மாத பென்சன் வரும் வரைக்கும் அந்தத் தொகையில்தான் என் காலம் நடக்கும். ஒரு வாரத்தில் எனது அம்மாவின் நினைவு தினம் வேறு வருகிறது. அன்றைக்கு வீட்டுக்கு வருமாறு எனது சிநேகிதிகள் இருவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறேன். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நீ கருணை மிக்கவன். உன்னை மட்டும்தான் நம்பியிருக்கிறேன்...'

அக்கடிதத்தை வாசித்ததும் அதிகாரிக்கு அக்கிழவி மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சாதாபம் பிறந்தது. தனது சக ஊழியர்களை அழைத்து அதனை வாசித்துக் காட்டினார். எல்லோரும் ஒன்றிணைந்து ஒரு தொகைப் பணத்தை அக்கிழவிக்கு அனுப்பத் தீர்மானித்தார்கள். அப்பொழுதே அவ்விடத்திலேயே தங்களால் கொடுக்க முடிந்த பணத் தொகையைச் சேர்த்தெடுத்தபோது மொத்தமாக ஆயிரத்து அறுநூறு ரூபாய்கள் சேர்ந்தன. அவற்றை ஓர் உறையிட்டு அக்கிழவியின் முகவரிக்கு அன்றே அனுப்பி வைத்தார்கள். இரண்டு வாரங்களின் பின் ஊழியர்கள் எல்லோரும் சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கையில் அதிகாரியின் மேசைக்குக் கிழவியின் மற்றொரு கடிதம் வந்து சேர்ந்தது. ஆவலுடன் விரித்துப் படித்தார் அதிகாரி. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. ‘அன்புள்ள கடவுளுக்கு.... உனக்கு எப்படி நன்றி சொல்வதென்று தெரியவில்லை. உனது கருணையால் என் தாயாரின் நினைவு நாளை நண்பிகளுக்கு விருந்தளித்துக் கொண்டாடினேன். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. உனது உதவியை நண்பிக ளுக்குக் கூடச் சொன்னேன். முக்கியமான விடயம் என்னவெனில் நீ அனுப்பியிருந்த பணத்தில் நாநூறு ரூபாய் குறைவாக இருந்தது. நான் நினைக்கிறேன்... தபால் காரியாலயத்திலுள்ள திருட்டுப் பயல்கள்தான் அதை எடுத்திருக்க வேண்டும்...’

☐ நவீனமயப்படுத்தப்பட்ட அந்த வைத்தியசாலைக்குள் நுழைந் தனர் அத்தம்பதியினர். நிறைமாதக் கர்ப்பவதியான அப்பெண்ணுக்கு பிரசவ வலி ஆரம்பித்திருந்தது. அனுமதிக்கப்பட்ட பின்னர் வைத்தியர் தனது பரிசோதனையை முடித்துக் கொண்டதும் அப்பெண்ணின் கணவனை அழைத்தார். ‘மருத்துவம் இன்று உச்சத்துக்குப் போய் விட்டது. எங்களிடம் ஒரு புதிய இயந்திரம் உள்ளது. இந்த வைத்திய சாலைதான் முதன் முதலில் இந்த இயந் திரத்தைத் தருவித்திருக்கிறது. ஏற்கனவே பரீட்சித்து உறுதிப் படுத்தப்பட்டும் உள்ளது. உங்களுக்கு விருப்பமானால் மனைவியின் பிரசவ வருத்தத்தை நீங்கள் விரும்பிய வீதத்தில் பகிர்ந்து கொள்ளலாம். ஒரு தந்தைக்குரிய புதிய அனுபவமாக இது இருக்கும். நாங்கள் பலவந்தப்படுத்தவில்லை; உங்கள் விருப்பம் போல் முடிவெடுக்கலாம்’ என்றார். அத்தம்பதிக்கு இத்தகவல் புதுமையாக இருந்தது. கணவனுக்கு ஆர்வம் மிகுந்ததால் சம்மதத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்தார். ஓர் இயந்திரத்தின் இரண்டு வயர்களில் ஒன்றை மனைவியின் வயிற்றிலும் மற்றொன்றை கணவனின் மணிக்கட்டிலும் பொருத்தினார் வைத்தியர். கணவனின் இணைப்புக்குரிய வாசிப்பைப் பத்து விகிதத்துக்கு வைத்து விட்டுச் சில நிமிடங்களில் வலி எப்படியிருக்கிறது? என்றுகேட்டார். தனக்கு வலியின் அடையாளம் கூட விளங்கவில்லை என்றார் கணவர். வைத்தியர் வலியின் மீற்றர் வாசிப்பு அளவை 20 வீதமாகக் கூட்டினார். ஆனால் தனக்கு இது சுகமாக இருக்கிறதே தவிர வருத்தமாக இல்லை என்றார் கணவர். சந்தேகமடைந்த வைத்தியர் கணவரின் இதயத் துடிப்பையும் இரத்த ஓட்டத்தையும் அளவிட்டார். திருப்தியடைந்த அவர் மீற்றர் வாசிப்பை 50 வீதமாக உயர்த்தினார்.

பிரசவ வலியின் சிறிய பாதிப்புக் கூடத் தன்னை அண்ட வில்லை என்பதாலும் மனைவி இலகுவாகக் குழந்தையைப் பிரசவித் துக்கொள்ள வேண்டும் என்பதாலும் பிரசவ வலியை முற்றாகத் தனக்கே செலுத்தும்படி கணவர் வைத்தியரிடம் வேண்டுகோள் விடுத்தார். வைத்தியர் இயந்திரத்தில் அதற்கான சமிக்ஞைகளைத் தட்டி விட கணவரில் பொருத்தப்பட்ட மீற்றர் வாசிப்பு 100 வீதத்தைக் காட்டியது. சற்று நேரத்தில் எவ்வித வருத்தமுமில்லாமல் மனைவி அழகிய குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள். அவர்களில் ஆச்சரியமும் பரவசமும் படர்ந்திருந்தது. தம்பதியர் இரண்டாம் நாள் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர். கேற்றைத் திறந்த போது-

அங்கே,

வழமையாக வரும் தபாற்காரன் முன்வாசலில் செத்துக் கிடந்தான்!

*14.12.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வை. சேர்

1992ம் ஆண்டு டிசம்பர் 26ம் திகதி கிழக்கின் ஒரு கோடி இருளில் இருந்தது. அன்றைய காலைப் பொழுதில் மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் உள்ள மீயான்குளச் சந்தியில் நிலக் கண்ணி யொன்று வெடித்தது. ஜீப் வண்டியிலிருந்த ஐவரும் சிதறி விழ, உயிருடன் இருந்தவர்களை நோக்கிச் சூழ இருந்த துப்பாக்கி நபர்கள் ரவைகளைச் சிதற விட்டனர். செய்தி கிடைத்த போது பிரதேச மக்கள் அச்சத்தில் உறைந்து போயினர். பேச வார்த்தைகள் வராமல் ஊமை களாக ஊர்ந்தனர். வீசிய காற்று பல கணங்களாக ஒரேயிடத்தில் தரித்தது.

ஏழாம் அல்லது எட்டாம் வகுப்புக் கற்கின்றபோது தமிழ்ப் பாட நூலில் 'நதியைத் தேடிவந்த கடல்' என்று ஒரு கவிதை இருந்தது. உரிய ஆசிரியர் அன்று வருகை தராத காரணத்தால் அப்பாட நேரத்தில் வகுப்புக்கு வந்து அக்கவிதையை மிகத் தெளிவாக அவர் படித்துத் தந்தது எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. நான் அவரிடம் பாடசாலையில் கற்றது அது ஒன்றுதான்; அதற்கப்பால் அவருடனான தொடர்பில் நான் கற்றுக் கொண்டவை அநேகம். அவர்தான் வை.சேர் என்று அன்பாகவும் சுருக்கமாகவும் நாங்கள் அழைக்கும் வை.அஹ்மத் அவர்கள். வை.சேர் ஆசிரியராக இருந்தது முதல் மேலதிக அரச அதிபராக உயர்ந்தது வரை எனக்கு ஓர் ஆசிரியராக இருந்தார் என்பதை விட ஒரு நல்ல நண்பராக இருந்தார் என்பதே மிகப் பொருத்தமாகும்.

இலக்கியக் கண்விடுப்பு நிகழ்ந்த கால கட்டத்தில் எனக்கு முன்னால் படைப்பாளிகளாக மூவர் கம்பீரமாக நின்றிருந்ததை நான் கண்டேன். அவர்களில் ஒருவர் வை.அஹ்மத். மற்றவர்கள் எஸ்.எல்.எம். ஹனிபாவும் ஓட்டமாவடி ஜுனைத்தும். இவர்களில் எஸ்.எல்.எம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனிபா, சிறுகதைகளோடும் வீ.ஏ.ஜுனைத், கவிதைகளோடும் தரித்துக்கொள்ள வை.சேர் சிறுகதை, நாவல், நாடகம், ஆய்வு, சமூகவியல் செயற்பாடுகள் என்று தன் தளத்தை விரித்துப் பறந்தார். பிரதேசத்தின் கல்வி வளர்ச்சி குறித்து அவர் ஆற்றிய சேவைகளையும் சமூகவியல் முன்னேற்றச் செயற்பாடுகளையும் இன்றைய நிலையில் சீர் தூக்கிப் பார்க்கையில் எனக்கு ஆச்சரியம் மேலிடுகிறது. அவர் உருவாக்கிய 'இக்பால் இளைஞர் முன்னேற்றக் கழகம்', 1989ல் அவர் ஏற்படுத்திய 'சமூக சேவைகள் அமைப்பு' ஆகியவற்றின் மூலம் அவர் மேற்கொண்ட செயற்றிட்டங்களின் பின்னணியில் அவரது பாரிய தியாகம் இருப்பதைக் காண்கிறேன்.

ஓர் இலக்கியப் படைப்பாளியாக அவர் தனித்து விளங்கு கிறார். புதிய தலைமுறைகள் என்ற அவரது நாவல் 1976ல் வீரகேசரிப் பிரசுரமாக வெளியாகி சாஹித்திய விருதைப் பெற்றது. அன்றைய காலப் பிரிவில் அது ஒரு மகத்தான சாதனையாகவும் கருதப்பட்டது. இவை தவிர, 'கிராமத்துப் பெண்', 'மறுபடியும் அவள்', 'முடிவுகள் நிச்சயமல்ல ஆகிய நாவல்களும் 'நிலவின் நிழலில்' (1968), 'தரிசனங்கள்' (1992), 'புரட்சிக் குழந்தை' ஆகிய குறுநாவல்களும் அவரால் படைக் கப்பட்டன என்று வை. பற்றிய கட்டுரையொன்றில் ஏ.ஜி.எம்.ஸதக்கா குறிப்பிடுகிறார். எம்.ஏ.ரஹ்மானின் 'இளம்பிறை' சஞ்சிகையில் 'அடித்த கரங்கள்' என்ற சிறுகதையோடு ஒரு படைப்பாளியாக அறிமுகமான வை. சேர், பின்னால் அபூதாலிப் அப்துல் லதீபின் 'இன்ஸான்', தென்னிந்தியாவில் வெளிவந்த 'மணிவிளக்கு', 'பிஸ்மி' ஆகிய சஞ்சிகைகள் ஈறாக இலங்கைப் பத்திரிகைகளிலும் சிறந்த சிறுகதைகள் பலவற்றைப் படைத்தளித்துள்ளார்.

வை. சேரின் 26 கதைகளைத் தொகுத்து 'முக்காடு' எனும் தலைப்பில் 'உயிர்ப்பைத் தேடும் வேர்கள்' பதிப்பகம் வெளியிட்டது. அவரது 'தரிசனங்கள்', 'நிலவின் நிழலில்' ஆகிய இருகுறுநாவல் களையும் கூட இப்பதிப்பகம் நவம்பர் 2000த்தில் வெளியிட்டுள்ளது. ஏ.ஜி.எம் ஸதக்கா குறிப்பிடும் 'புரட்சிக் குழந்தை' குறுநாவலைத் தேடிய போதும் அது கிடைக்கவில்லை என்று சகோதரர் ஏ.பி.எம். இத்ரீஸ் தாம் பதிப்பித்த குறுநாவல்கள் நூலில் குறிப்பிட்டுள்ளார். அப்படி ஒரு குறுநாவலை வை.சேர் எழுதியது உண்மை. ஏனெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப் பதிப்புக்குக் கொடுப்பதற்காக மீள் பிரதி பண்ணித் தருமாறு அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிரதிபண்ணி நானே அவரிடம் ஒப்படைத்திருந்தேன். அது 70களில் நாட்டில் இடம்பெற்ற சேகுவேரா குழப்பம் என அழைக்கப்பட்ட புரட்சி குறித்துப் பேசும் ஓர் அற்புத மான நாவலாகும். அந்நாவல் யாருடையவாவது முன்னுரைக்காக அல்லது இறுதிப் பார்வைக்காக வழங்கப்பட்டிருக்கலாம் என்று நான் நம்புகிறேன்.

அவருடைய படைப்புகளின் கலை நயங்களையும் தாண்டித் தனித்துத் தெரியும் விடயம் என்னவெனில் தான் வாழும் சூழல் பற்றிய அவரது பூகோள அறிவு. தனது சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனையும் மிக நுணுக்கமாகப் படித்து வைத்திருந்தார். ஒரு சமூகத்தை மற்றொரு சமூகம் ஆள்வதைத் தவிர்த்துத் தம்மைத் தாமே ஆள வேண்டும் என்ற கருத்துடைய படைப்பாளியாகவும் சமூகவியற் செயற்பாட்டாளராகவும் அவர் மிளிர்ந்தார். இது குறித்து அவர் முன்வைத்த ஒவ்வொரு பாத அடிகளும் இன்றைய அளவில் ஒவ்வொரு மைல் கல்லாகும். ஒரு படைப்பாளியாக மட்டுமே வாழ்ந்து விட்டுப் போகாமல் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த ஒரு பெரும் ஆளுமையாகவும் அவர் இன்று எம்முன் தோற்றம் பெற்று நிற்கிறார்.

அவரது தன்னலங் கருதாத போக்கே அவரது காலடியில் ஒரு கண்ணி வெடியைப் புதைத்தது; அவரது நெஞ்சுக்கு நேரே ஒரு துப்பாக்கியை வெடிக்கச் செய்தது.

*21.12.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர் வினைகள்

குறிப்பு - 01

கவிஞர் அஷ்ரஃப் ஷிஹாப்தீன் எழுதும் தீர்க்க வர்ணத்தின் தீவிர ரசிகன் நான். கடந்த 01.06.2008 அன்று பிரசுரமாகியிருந்த அவருடைய 'வில்லங்க வினாக்கள்' சுவாரஸ்யமாக இருந்தது. சுவையான 'விருந்து.' அதைப் படித்த பொழுது எங்கள் வீட்டுக் குழந்தைகளின் சில வில்லங்க வினாக்கள் நினைவுக்கு வந்தன. அவற்றை எழுதினால் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

■ என்னுடைய மச்சான் இப்னு அஸூமத்தின் மகன் டில்சான் முதலாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு நாள் அதிபர் காரியாலய முன் வாசலில் போய் நின்றானாம். அதிபர், என்ன தம்பி, என்ன விஷயம் என்று கேட்டாராம். "முந்தாநாள் நான் ஸ்கூல் வரல்லேன்னு டீச்சர் எனக்கு அடிச்சாங்க... இன்னிக்கு எங்கட டீச்சர் ஸ்கூலுக்கு வரல்ல... நாளைக்கு டீச்சர் வந்த ஒடனே அவங்களுக்கு நல்லா அடிங்க சேர்" என்றானாம் டில்சான்.

■ எங்களுடைய மகன் முகம்மட் ரியாட் ஐந்து வயதாக இருக்கும் பொழுது 'டிப்பி டிப்' வாங்கித் தரும்படி அடம்பிடித்தழுதான். நான் வாங்கிக் கொடுக்கவில்லை. அழுதான். அடித்தேன். கீழே விழுந்து புரண்டு அழுதான். பாவமாக இருந்தது. 'டிப்பி டிப்' வாங்கிக் கொடுத்தேன். அழுகையை நிறுத்திச் சிரித்துச் சொன்னான்: - "இதை அடிக்கும் முதல்ல வாங்கித் தந்திருக்கலாமே!"

■ என்னுடைய தந்தையாருக்கு இப்பொழுது 73 வயதாகிறது. 67 வயதுடைய ஓர் அமைச்சர் மரணித்த சேதி கேட்டு சகோதரியின் இளைய மகன் எனது தந்தையாரிடம் போய்க் கேட்டானாம்:- "67 வயதான அவரே செத்துட்டார். அப்பாச்சி... நீங்க இன்னும் சாகல்ல...?"

■ என்னுடைய மகள் பாத்திமா நஸ்லியா இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு நாள் காலையில் மழை பெய்து கொண்டிருந்தது. 'மகள்.. மழையில் நனையாதீங்க..' என்றாள் மனைவி, பானு.

"மழை பெய்யுதா... இல்லையே... பிள்ளேள் அழுவுறாங்க.." என்றாள் மகள் நஸ்லியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளேள் அழுவுறாங்களா....?"

"ஆமாம் பிள்ளேள்தான் அழுவுறாங்க..."

"யாரு பிள்ளைகள்?"

"நட்சத்திரம்"

"நட்சத்திரமா?"

"ஆமா... நட்சத்திரப் பிள்ளேள்தான் அழுவுறாங்க.."

"ஏன் அழுவுறாங்க?"

"உம்மா அடிச்சாங்க.."

"யாரு உம்மா?"

"நிலா உம்மா"

"ஏன் அடிச்சாங்க?"

"விடிஞ்சிட்டு... வெளியே போய் விளையாடாதீங்கன்னு.. அடிச்சாங்க"

**- கிண்ணியா அமீர் அலி**

22.06.2008

குறிப்பு - 02

தினகரன் வாரமஞ்சரியின் நீண்ட கால வாசகன், பல அறிவுக் கினிய கட்டுரைகளைத் தாங்கி வரும் அதனை கருத்தூன்றி படித்து வரும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். குறிப்பாக கூராயுதம் பக்கத்தில் வெளிவரும் இலக்கிய செய்திகள் கட்டுரைகள் அண்மைக் காலமாக தரமுள்ளதாக அமைந்துள்ளன. எனினும் அதில் அஷ்ரப் சிஹாப்தீன் எழுதிவரும் தீர்க்க வர்ணம் பகுதி உப்புச்சப்பில்லாத ஒரு பகுதியாக இருப்பதுடன் பிரயோசனமான எந்தத் தகவலும் அதில் இடம்பெறுவதில்லை.

உண்மையில் படிப்பதற்கு தகவல் உள்ள ஒரு பகுதியாக அதனையும் மாற்றி வாரமஞ்சரியின் இலக்கியத் தரத்தைப் பேணுவீர்கள் என திடமாக நம்புகிறேன். என்போன்ற இலக்கிய ஆர்வமிக்கவர்களுக்கு தீர்க்க வர்ணம் போல் பத்திகள் பிரயோசன மளிக்காது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். எனவே, தயவு செய்து தனிநபர் முகஸ்துதிக்கு அப்பால் நின்று இப்பகுதியை திருத்தி வாசிப்பதற்கும் பயனுள்ளதாக மாற்றியமைக்குமாறு தங்களை வினயமுடன் வேண்டிக் கொள்கிறேன்.

**- ஏ.எம். அம்மார் - வாழைச்சேனை**

06.07.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு - 03

## அறுசொல் மொழிவுகள்

'தீர்க்க வர்ணம்' குறித்த எனது நிலைப்பாட்டை எழுத வேண்டும் என்ற நீண்ட நாள் விருப்பு 'அறுசொற் கதை'களைப் படித்த பிறகு பிடரி பிடித்தே உந்தியது எனலாம். 'பத்தி எழுத்து' எனப்படும் இத்தகு வரைவுகள் வாழ்வியத்துக்கு (இலக்கியத்துக்கு) மிகவும் உறுதுணை யானவை என்பதில் ஐயமில்லை. இவ்வகை எழுத்தும் வாழ்வியமே என்று கூட ஒரு வரையறையும் உண்டு.

அஷ்ரஃப் சிஹாப்தீன் நிறையப் படிக்கிறார் என்பது தெளிவா கிறது. அவற்றைச் சுவைஞருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பின் வெளிப்பாடே 'தீர்க்க வர்ணம்.' நமக்குக் கிடைக்காத அல்லது கிடைக்கப் பிந்துகிற பல அரிய செய்திகளையும் பட்டறிவு களையும் அவர் நகைச்சுவையாகச் சில வேளைகளிலும் ஆழமாகச் சில வேளைகளிலும் தருவது மகிழ்வூட்டுகிறது. முதற்கண் அவருக்கு நன்றி. அண்மையில் பிரிவுற்ற சுஜாதாவின் 'கணையாழிக் கடைசிப் பக்க'மும் 'கற்றதும் பெற்றதும்' எவ்வளவு தேவைப்பாடுடையவை என்பது, அவற்றைப் படிப்பவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியதாகும்.

இந்த 'அறுசொற் கதைகள்' என்ற தலைப்புக்கு தனித் தமிழில் நான் 'அறுசொல் மொழிவுகள்' என்பேன். எத்தனையோ பொருள்களைத் தரலாம். ஆங்கிலத்தில் அது Six Words Stories அல்லது Six Worded Stories என்றிருப்பது ஒரு பொருளையே தந்தாலும் தமிழிலான அதன் பெயர்ப்புக்குப் பல பொருள்கள் கொள்ள இயலும்.

01. ஆறு சொற்களுள்ள மொழிவு (கதை).
02. நமது உள்ளத்தையும் நினைவையும் அல்லது உணர்வையும் அறுக்கும் மொழிவு.
03. அறுதியான - இறுதியான மொழிவு. (தீர்க்க வர்ணம்' தலைப்புக்கும் இயைபுடையதாகின்றது.)
04. அறம் வைத்த சொற்களுள்ள மொழிவு.
05. முருகனின் ஆறு வாய்களும் உதிர்த்த சொற்களுள்ள மொழிவு என்றொரு புதிய பகுதியையும் இயற்றலாம்.
06. அறுவகைச் சுவைவகளின் சொற்கள் கொண்ட மொழிவு என்னொன் றும் பிறக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்க்கும் போது ஆறு சொற்களேதான் வரவேண்டும் என்பதில்லை. கூடலாம்; குறையலாம். ஒரு குறை எனக்குப் பட்டது. ஆங்கிலத்திலுள்ள அவ்வாறு சொற்களையும் அவர் தந்திருக்கலாமே என்று. எனது 'சில சொல் மொழிவு'களுள் சிலவற்றைச் சுவைஞரோடு பகிர்ந்து கொள்ளவும் இவ்வாய்ப்புப் பயன்படுவதாக:-

01. அகர முதல எழுத்து; ஆதம் முதல மாந்தர்.

02. ஒருத்தியின் கண்ணீர் மதுரைக்கு; ஆயிரத்திகளின் கண்ணீர்..?

03. அமெரிக்கா வறிய நாடுதான்; மத்திய கிழக்கில் கொள்ளையே.

04. நெற்றியை வழித்தெறிந்தான் தென்னிந்தியன்; மகாவலியிற் பெருக்கு கூடியது.

05. குமரி மூழ்க இமயம் எழும்பத் தமிழ் வையமெல்லாம் பரந்தது.

06. தமிழன் செய்யாவிடின் அரசு செய்யலாம். 'உலகெலாம் பரவும் வகை'

07. பிரிகையில் Good bye : எறிகையில் குப்பை.

08. கோட்சே என்றுதான் சொன்னார்கள்; பாட்ஷா என்றிருந்தால்...?

09. கலைஞரா, தலைஞரா? தலைகேட்கிறார்களே...!

10. சீதன மாப்பிள்ளை செத்தால்தான் மனைவிக்குத் திருமண வாழ்வோ?

சுவைஞர்களே, பழமொழிகளைப் போலவோ ஹைக்கூவைப் போலவோ இருக்கிறதா? 'சிறுகதை' என்பதை இனி 'அணுக்கதை' எனலாமா?

- அல் அஸூமத்

20.07.2008

குறிப்பு - 04

## நிழல்களினூடே ஒரு நிஜம்

ஒரு பாடசாலை நாளின் இடைவேளை நேரம். கூராயுதத்தில் விடாது விரும்பி வாசிக்கும் தீர்க்க வர்ணத்தில் வக்கீல்களின் வண்டவா ளங்களுக்குள் லயித்திருந்த வேளை. "அதிபர் இரிக்காரா?" நிமிர்ந்து பார்த்த போது அலுவலக வாயிலில் வொயில் சாரியிலும் ஹபாயாவிலுமாக இரு பெண்கள். விசாரித்தபோது போதைப் பொருள் வழக்கில் 4மாதமாக கூண்டுக்குள் தவிக்கும் தன் கணவரை விடுவிக்கும் ஆதாரங்கள் தேடியபடி மாமியாரோடு வந்திருக்கும் மருமகள். தன் மகன் இங்கு படிப்பதாகவும் அந்தப் பையனின் உடல், உளப் பாதிப்பு மற்றும் வறுமை காரணமாகக் குறைவடைந்த பாடசாலை வரவு, கல்வி நிலையில் பின்னடைவு பற்றி யெல்லாம் அதிபரின் கையொப்பமிட்ட கடிதம் வாங்கிப்போக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கிறார்கள்.

அட இப்போதுதானே நிழல் வக்கீல்கள் பற்றி வாசித்துக் கொண்டிருக்கிறோம். நிஜத்தில் வக்கீல்கள் எப்படி? என்பதை இந்தப் பெண்களைக் கேட்டு அறிந்து கொள்ளலாமே என்ற சிந்தனை பொறிதட்ட "வக்கீல் பீஸ்" என மெதுவாகப் பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன். "நம்ம பெருக்கிராசய்யா (வக்கீலுக்குத்தான்) கேக்குறீங்க. தங்கமான புள்ள. 'இப்ப நீங்க இருக்கிற நெலமையில ஒங்கட புள்ளங்க, ஊட்டு நிலைமையப் பார்த்துக்குங்க. ஒங்கட கணவர் வெளியில வந்தாப்புறம் என்னோட பீஸ் தந்தாப் போதும்' அப்படீன்னுட்டாரு. நாங்கதான் நமக்காக இப்புடிப் பாடுபடுறாரே பெற்றோல் செலவுக்காவது உதவட்டுமென்று கொஞ்சமா கையில குடுத்தேன். இப்ப கூட இந்தக் கடிதத்த வாங்கிட்டு வாங்கன்னு அவர்தான் ஆலோசனை சொன்னாரு. எப்படியும் இந்தத் தவணையோடு வெளியே எடுத்துடுவாரு" என்று முழு நம்பிக்கையோடும் நன்றியுணர்வோடும் கூறிக்கொண்டிருந்தார் அந்தப் பெண்.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த அருகிலிருந்த மற்றொரு ஆசிரியையும் பலரின் சட்ட, சமூகப் பிரச்சினைகளை, வழக்குகளை வருமான நோக்கமின்றி சேவை மனப்பாங்கில் செய்து வருவதை பல எனக்குத் தெரிந்த வழக்குகளை உதாரணமாக்கி விளக்கிக் கொண்டிருந் தார். இதுகாலவரை ஒரு கவிஞனாக மட்டுமே அவரை அடையாளப் படுத்தி வைத்திருந்த எனக்கு அட, இப்படியுமா எனப் பெரும் வியப்பு. தொடர்ந்து வந்த இரு நாட்களில் எனக்குக் கிடைத்த அந்த வக்கீல் தொடர்பான தகவல்கள்.

புதுக்கவிதை புனைவதில் விற்பன்னர். கதை, கவிதை, கட்டுரை களிலும் வெளுத்துக் கட்டுவார். இதுவரை தான் எழுதிய ஆக்கங்களில் நட்டத்துறையில் தான் பெற்ற பட்டத்தையோ அல்லது தனது தொழிற்பெயரையோ தன் பெயரோடு இணைத்துக் கொள்ளாதவர். தனது மாத வருமானத்தில் ஒரு பங்கினை நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வாங்குவதற்காகச் செலவிடுவார். படித்துவிட்டு உட்கார்ந்திருக்கும் இளைஞர்களுக்கு சட்டத்துறை, ஆங்கிலக் கல்வி, கலை இலக்கியத்துறை தொடர்பாகத் தொடர்ச்சியாக வழிகாட்டல்களை மேற்கொண்டு வருபவர். தற்போது யாத்ரா, பெருவெளி, நீங்களும் எழுதலாம் போலவே தனியே கவிதைக்கான இருமாத இதழை வெளியிட்டு இளங் கவிஞர் களுக்கும் கவிதைப் பிரியர்களுக்கும் களம் அமைக்கக் காத்திருப்பவர்.

இதுமாத்திரமன்றி, எந்தவொரு இலக்கிய நூல் வெளியீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவையும் தவற விடாது கலந்து கொண்டு எழுத்தாளர்களைக் கௌரவிப்பார். வக்கீல் அல்லது சட்டத்தரணி என்றாலே இரக்க சிந்தையற்றவர், பணப்பிசாசு, சந்தர்ப்பவாதி என்ற பொது உலக வழக்கினின்றும் மாறுபட்ட ஈரமான இதயங்களும் எம் மத்தியில் உண்டு என்பதை விளக்கவே இதனை எழுதினேன்.

இனிமேல் அஷ்ரஃப் சிஹாப்தீன் தம் 'வழக்குரை காதை'யினை 3ம் படலத்தோடு மட்டும் முடித்துக்கொள்ள முடியாது.

- கிண்ணியா ஸனே

*03.08.2008*

குறிப்பு - 05

**மண்ணையே மறக்கச் செய்யும் இசை**

தினகரன் வாரமஞ்சரியில் வாரந்தோறும் பளபளக்கும் அஷ்ரப் சிஹாப்தீனின் 'தீரக்க வர்ணம்' பகுதியைப் படித்து வருவோரில் நானும் ஒருவன். சென்றவாரம் (05.10.2008) 'இதயத்தை அசைக்கும் இசை' எனுந் தலைப்பில் ஹிந்தித் திரையிசைப் பாடல்கள் மக்கள் மனங்களை எந்தளவு அசைத்தன என்பது பற்றி சகோதரர் அஷ்ரஃப் சிஹாப்தீன் அழகாகத் தொட்டுக் காட்டியிருந்தார். அவருக்கு மகிழ்ச்சிப் பூக்களை நன்றியாக சமர்ப்பிப்பேன்.

பிரபல இசையமைப்பாளர் நௌஷாத் அலி, அமெரிக்கர் ஒருவருக்கு அளித்த பதிலில், 'உங்கள் இசை உடலை அசைக்கும்; ஆனால் எங்களது இசையோ இதயங்களை அசைக்கும்' என்றாரே அந்த இசை மண்ணையே மறக்கச் செய்யும் அளவிற்கு மக்களைக் கிறங்கச் செய்யும் வண்ணம் அன்றைய ரசிகர்களை எந்தளவு பாதித்திருக்கிறது என்பதைக் கீழ்வரும் தகவல் உறுதி செய்யும்.

ஹிந்தித் திரையிசைத் துறையில் பிரபலமாகி, கொடிகட்டிப் பறப்பவர் லதா மங்கேஷ்கர். இவரது வருகைக்கு முன் கொடி கட்டிப் பறந்து புகழ் உச்சியைத் தொட்டவர் நூர்ஜஹான் என்ற பாடகி. பாக்கிஸ்தான் தோன்றுவதற்கு முன் பரந்த பாரதம் முழுவதையும் தன் குரல் வளத்தினால் கட்டிப் போட்டவர் இந்த நூர்ஜஹானே என்றால் பழைய தலைமுறை மறுத்துரைக்காது.

பாக்கிஸ்தான் பிரிவினை நிகழ்ந்த காலம். வட இந்திய முஸ்லிம்கள் பலர் பாக்கிஸ்தான் செல்ல, இன்றைய பாக்கிஸ்தானில் பிறந்த இந்துக்கள் பலர் இந்தியாவுக்கு வரலாயினர். இன்றைய இந்தியாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க் கட்சித் தலைவர் திரு.அத்வானி கூட பாக்கிஸ்தானில் பிறந்து இந்தியா வந்தவர்தான் என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

பிரிவினையைத் தொட்டு எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டன. சில பகுதிகள் இந்தியா வசமாயின. அவ்வாறே சில பகுதிகள் பாக்கிஸ்தானுக்காயின. பாக்கிஸ்தானியருக்கு விருப்பமான சில பகுதிகள் இந்தியாவுக்குப் போய்விட்டதைப் பிரஸ்தாபித்து வருத்தம் தெரிவிக்கப்பட்டபோது, பாக்கிஸ்தான் பக்கம் போய்விட்டவர்கள், 'அதற்கென்ன நமக்குத்தான் நூர்ஜஹான் கிடைத்துவிட்டாரே' என்றார்களாம்.

நூர்ஜஹானின் குடும்பம் பிரிவினையை அடுத்து பாக்கிஸ்தான் சென்று விட்டது. இதை மனதில் கொண்டுதான் நமக்குத்தான் நூர்ஜஹான் கிடைத்து விட்டாரே எனக் கூறி மகிழும் அளவிற்கு நூர்ஜஹானின் குரல் வளம், ஹிந்திப் பாடல் இசை அன்றைய ரசிகர்களை மண்ணையே மறக்கும் படியாகக் கிறங்கச் செய்திருந்தது என்றால் பிரபல இசையமைப்பாளர் நௌஷாத் அலி அமெரிக்கருக்குச் சொன்ன பதில் நூற்றுக்கு நூறு சதவீதம் மெய்யேதான்.

- கலாபூஷணம் எஸ்.ஐ.நாகூர் கனி

*12.10.2008*

குறிப்பு - 06

## தீர்க்க வர்ணத்தின் தெளிவான சிந்தனை செயலுருப் பெறுமா?

கடந்த வாரம் தினகரனில் கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீனின் 'தீர்க்க வர்ணம்' பத்தி எழுத்தைப் படிக்க முடிந்தது. வழக்கம்போல தேடுதலோடு கூடிய பயன்மிக்க அவரது பத்தியில் தினபதி, சிந்தாமணிப் பண்ணைக் கவிஞர்கள் பற்றியும் அவை தனித்து மீண்டும் பதிவு பெறவேண்டியதோடு ஆய்வுக்கும் உட்பட வேண்டும் என்பது போன்ற கருத்துக்கள் தொனிக்க எழுதியிருந்தார். காலங் கடக்குமுன் அவர் சுட்டும் இந்நற்பணி செயலுருப் பெற்றால் நலிவடைந்து வரும் தமிழின் மரபுக் கவிதைப் பாரம்பரியம் புத்துயிர் பெறும் வாய்ப்புண்டாகும் என்பது திண்ணம்.

சிந்தாமணியில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை - அதில் வெளியாகும் மரபுக் கவிதைகளைப் பொருத்தங் கண்டும் தேவையேற் படின் சிறு சிறு திருத்தங்கள் செய்தும் சிந்தாமணிக்குப் பொருந்துமெனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிபார்சு செய்யும் பொறுப்பை அவற்றின் ஆசிரியர் ஐயா. எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் எனக்களித்திருந்தார்கள். அக்கால கட்டத்தில்தான் அதில் வெளியான கவிதைகளை நான் தொகுத்தெடுத்து நூலுருவாக்க முயற்சித்தேன். அதற்கு ஐயாவே தூண்டுதலாக இருந்தார். தொகுப்புக்கான அழகிய அட்டைப் படத்தை இந்தியாவின் பிரபல ஓவியர் ம.செ. (மணியன் செல்வன்) வரைந்திருந்தார். இருப்பினும் 'தவச' நிறுவகம் பத்திரிகை அச்சிடுவதை நிறுத்தியதும் அவ்விரு பத்திரிகைகளும் நின்று போயின.

இந்நிலையில் 'தவச' நிறுவனத்தால் சூடாமணிப் பத்திரிகை அவருடைய பொறுப்பில் வெளிக்கொணரப்பட இருப்பதாகவும் அதுவரை நூலுருவாக்கத்தைத் தாமதிக்குமாறும் ஐயா என்னைக் கேட்டுக் கொண்டார். இக்கால கட்டத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த சிந்தாமணிப் பண்ணைக் கவிஞர்கள் சிந்தாமணிக் கவிதைகள் எனும் பெயரில் ஒரு தொகுப்பை வெளியிட்டிருந்தனர் என்பது வரலாறு. தினபதியின் கவிதா மண்டலமும் சிந்தாமணியுமே பல நூற்றுக் கணக்கான கவிஞர்கள் உருவாகக் காரணமாயின. என்னோடு அஷ்ரப் சிஹாப்தீன் போன்ற பலர் அவற்றுள் அடங்குவர்.

யாப்பிலக்கண அறிவும் சிறந்த படைப்பாற்றலும் கவிதை விற்பன்னருமான எஸ்.டி.சிவநாயகம் ஐயா அவர்கள் சிறந்த படைப்பாளி களை இனங்கண்டு வளர்க்கக் காரணமானார். அவரால் வளர்க்கப்பட்ட வர்களே இன்றுள்ள பல சிறந்த கவிஞர்கள்.

கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீன் அவர்களின் தீர்க்க வர்ணத் தூண்டுதல் செயலுருப்பெறுமாயின் மீண்டும் மரபு வழிக் கவிதைகள் புத்துயிர் பெற்றுத் தமிழ்க் கவிதைக்கு உரமளிப்பதோடு, புதிதாகப் பல இளைய தலைமுறைக் கவிஞர்கள் உருவாகவும் வாய்ப்புண்டாகும்.

- ஜின்னாஹ் ஷரிபுதீன்
*23.11.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அஷ்ரஃப் சிஹாப்தீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் பிற நூல்கள்

காணாமல் போனவர்கள் - 1999
(கவிதைகள்)

உன்னை வாசிக்கும் எழுத்து - 2007
(நெடுங் கவிதை - மொழிபெயர்ப்பு)

புள்ளி - 2007
(சிறுவர் கதை)
ரூம் டு ரீட் நிறுவன வெளியீடு

என்னைத் தீயில் எறிந்தவள் - 2008
(கவிதைகள்)
(அரச சாஹித்திய தேசிய விருது பெற்றது)

கறுக்கு மொறுக்கு - முறுக்கு - 2009
(சிறுவர் கதை)
ரூம் டு ரீட் நிறுவன வெளியீடு

ஸ்ரீலங்காவிலிருந்து
ஸ்ரீரங்கப்பட்டணம் வரை - 2009
(பயண அனுபவங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L.11925

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

LENDING SECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகைக் குணக் கலவைகளை
வெளிக்காட்டும் இப்பத்திகள் சில என்னை
லயிக்க வைத்துள்ளன.
சில அதிர்ச்சியைத் தந்தவையாய்
அமைந்தன.
சில இன்துயரைக் கவியவைத்தன.

வாழ்க்கையின் இன்பம், துன்பம் என்கின்ற
இந்த இருநிலைப்பட்ட பொருதலுக்கிடையே
இவற்றின் கலவையான
வாழ்க்கையின் தொடரோட்டம் தீர்க்க வர்ணம்
மூலம் எமக்குத் தரிசனமாகிறது.
இதைத் தரிசிக்க வைப்பவர்
தரமான கலை, இலக்கியவாதியாக
இருப்பதால் பல கலை, இலக்கியச் செய்திகள்
மூலமாகவே இதைக் கலாபூர்வமாகவே
செயற்படுத்துகிறார் எனலாம்.

இங்கே ஆசிரியர் பல்வகையான
போக்குடைய கதைகளை அறிமுகப்படுத்தி
எம்மைச் சிரிக்கவைக்கிறார்;
சிந்திக்க வைக்கிறார். ஆனால்
இவரால் எழுதப்பட்டுள்ள உண்மைக் கதைகள்
இக்கதைகளையெல்லாம் ஓரந்தள்ளி
மேலெழுகின்றன.

மொத்தத்தில் இந்நூல்
ஒருவர் சலிப்புற்றிருக்கும்போது தன்னை
உயிர்ப்புறவைக்கப் படிக்கவேண்டிய நூல்.

**- மு. பொன்னம்பலம்**

ISBN: 978 - 955 - 8448 - 04 - 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org